கம்பநாடர் - புதிய வெளிச்சம்



முனைவர் தெ. ஞானசுந்தரம்

கம்பநாடர் – புதிய வெளிச்சம்

புலமைச் செல்வமே
பண்பு நலமே
நிறைந்த
கவிஞர் திரு சே. சிதம்பரம்
அவர்களுக்கு
அன்புடன்
[signature]
6.9.2011

முனைவர் தெ. ஞானசுந்தரம்,
எம்.ஏ.,பிஎச்.டி.,டிப்.வடமொழி.,
மேனாள் தமிழ்த் துறைத் தலைவர்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.

தாயம்மை பதிப்பகம்
149, பூங்காச் சாலை
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சென்னை – 600 101

நூல் தலைப்பு	கம்பநாடர் – புதிய வெளிச்சம்
ஆசிரியர்	முனைவர் தெ.ஞானசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி., டிப். வடமொழி
மொழி	தமிழ்
வெளியிட்டோர்	தாயம்மை பதிப்பகம் 149, பூங்காச்சாலை அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் சென்னை – 600 101
பதிப்பு	14.4.2002 சித்திரபானு, சித்திரை முதல்நாள்
பதிப்பு விவரம்	முதல் பதிப்பு
உரிமை	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	வெண்ணெய்த் தாள்
நூலின் அளவு	டெம்மி 1/8
பக்கம்	
அச்சு எழுத்து அளவு	11 புள்ளி
நூலின் விலை	ரூ. 60/–
நூலின் கட்டுமானம்	தையல்
பொருள்	இலக்கிய ஆராய்ச்சி
படிகள்	1000
அச்சிட்டோர்	அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ் 9, அய்யா முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை – 14.

பொருளடக்கம்

'கல்விக்கடல்' எஸ்.கே. இராமராசன்
மேனாள் பதிப்பாசிரியர்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

அணிந்துரை

"கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்றும்

"எல்லையொன்றின்மை எனும் பொருளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சி கருதியும்"

என்றும்

"கம்ப நாடன் கவிதையைப் போல்
கற்றோர்க் கிதயம் களியாதே"

என்றும் பாரதி முதலான சான்றோர்களால் புகழப்பெற்ற கவிச்சக்கரவர்த்தி கம்பரின் சிறப்புக்கள் மேன்மேலும் பெருகிவருவது கண்டு பூரிப்படைகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்.

சில மாதங்களுக்குமுன்பு நண்பர் முனைவர் ப. சுப்பிரமணியன் அவர்கள் 'கம்பரின் கடவுட் கோட்பாடு' என்னும் நன்னூலை விவரித்திருந்தனர். அதனைக் கண்டு மகிழ்ச்சியுற்ற எளியேன் 'கம்பநாடர் – புதிய வெளிச்சம்' என்னும் இந்நூலைக் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நண்பர் முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் உயர்ந்தவர்க்கு உதவிய உதவியொப்ப மேலும் மேலும் வளர்ந்து வருவதைக் காண்கிறேன்; மகிழ்கிறேன்; வாழ்த்துகிறேன்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனுடைய காலத்தைப் பலரும் பலபடியாக ஆராய்ந்துள்ளனர். அதற்கு முடிவே இல்லை. அவ்வப் புலவர்களின் விருப்பு வெறுப்பே அதற்கு முடிவு என்க.

ஆயின் இந்நூலாசிரியர் (தெ.ஞா) அவர்கள் கம்பர் வாழ்ந்த காலத்தை ஆராய்வதை விடுத்து இராமாயண நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தை ஆராய்ந்திருப்பது புதிய முயற்சியாகும். அம் முயற்சியின் பயனை அனுபவிப்பது தமிழரின் கடமையாகும்.

கம்பனின் காப்பியத்தை வடமொழிக் காப்பியமாகிய வான்மீகி ராமாயணத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ள திறம் போற்றுதற்குரியது.

இந்நூலாசிரியர் வடமொழியினை நன்கு கற்றவராதலின், வான்மீகியின் காவியத்தைக் கம்பநாடன் காவியத்துடன் ஒப்பிட்டு ஆய்வு செய்திருப்பது நமக்குப் பேருவகையினைத் தருகிறது.

ஞாயிறு தோன்றியவுடன் மற்றைய ஒளிகளெல்லாம் தம் பெருமையினை இழப்பது போலக் கம்பநாடன் காவியத்திற்குமுன் அதற்கு முன்பு தோன்றிய இராம காதைகளும், மற்றைய இலக்கியங்களும் ஒளியிழந்தன என்பதை 'என்புகழ் கின்ற தேஎழை....' என்னும் கம்பராமாயணப்பாடலையே மேற்கோளாகக் காட்டி விளக்கியுள்ள திறத்தினை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

கம்பநாடனுக்கு வான்மீகி முனிவரிடம் ஆரா அன்பும் தீரா மதிப்பும் உண்டு என இவ்வாசிரியர் 'செய்தவன்', 'தெய்வமாக்கவி', 'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்' ஆகிய மேற்கோள்களைக் காட்டி அறிஞர்களை வியப்பில் ஆழ்த்துகிறார்.

> ''வான்மீகிராமாயணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு; கம்பராமாயணத்தில் அமைந்திருக்கும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு. ஒரே நிகழ்ச்சியை வெவ்வேறு கால எல்லைக்குள் நிகழ்ந்ததாக இருவரும் குறித்துள்ளனர். வான்மீகி முனிவர் பலநாள் நிகழ்ந்ததாகக் காட்டும் நிகழ்ச்சியினைச் சில நாளில் நிகழ்ந்ததாகவும், சிலநாள் நடந்ததாகக் காட்டும் நிகழ்ச்சியினைப் பல நாள் நடந்ததாகவும் கம்பநாடர் சித்திரித்துள்ளார்'' (ப.26)

என்னும் இந்நூலாசிரியரின் கூற்று இந்நூலின் மையக்கருத்தை நமக்குத் தெள்ளிதின் உணர்த்துகிறது.

இராமனின் திருமண வயதினை இந்நூலாசிரியர் தெ.ஞா அவர்கள் பதினாறாண்டுக்கு உட்பட்டது என்பதைக் கம்பன் பயன்படுத்தியுள்ள நம்பி, செம்மல், அண்ணல், ஐயன், சிங்கஏறு முதலான சொற்களும் தொடர்களும் குறிப்பதாகக் கூறுவது ஆராய்ச்சியின் நுட்பத்தினைக் காட்டுகிறது. 'ஊந ஷோடச வர்ஷ:' என்னும் வடமொழித் தொடர் 'பதினாறாண்டகவையான்' எனப் பொருள்படும் என்று எடுத்துக் காட்டியிருப்பதும், தம் கூற்றுக்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில் பெரியவாச்சான் பிள்ளையின் விளக்கத்தினைத் தந்துள்ளமையும் சிறப்பாக அமைந்துள்ளன. சீதையின் திருமண வயதில் வான்மீகியும் கம்பனும் வேறுபடுகின்றனர். சீதையின் திருமணத்தின் போது அவளது

வயது ஆறு என்பது பொருத்தமாக இல்லையென்பதை இந்நூலாசிரியர் எடுத்துக் காட்டுவதோடு, அவளின்வயது பன்னிரண்டு ஆண்டுக்கு உட்பட்டது என நிறுவுகிறார். இராமனின் பிறப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இராமனுக்குப் பதினைந்து ஆண்டும் பதினோரு மாதமும் ஆறுநாளும் ஆகியபோது திருமணம் நிகழ்ந்தது என அறுதியிட்டுக் கூறியிருப்பது இவரின் நுண்மாண் நுழைபுலத்தினையும், சிறந்த ஆராய்ச்சித்திறனையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

சீதையின் திருமணத்தைத் தசரதனுக்குத் தெரிவிக்கச் சென்ற தூதர்களைப்பற்றிக் கம்பன் குறிப்பிடுகையில்,

"கடுகிய தூதரும் காலின் காலின்சென்று
இடிகுரல் முரசுஅதிர் அயோத்தி எய்தினார்"

என்பான். இதற்கு வை.மு.கோ விரைந்து போக எண்ணிய தூதர்களும் தமது கால் வலியினால் காற்றுப் போல் விரைந்து சென்று என்று பொருள் கூறியுள்ளார். ஆனால் இந்நூலாசிரியர் 'காலின் சென்று' என்பதற்குத் 'தேரில் சென்று' என்று பொருள் கொள்வதே சிறப்புடையதாகும் எனக் கூறுவது நயமாக உள்ளது. 'கடல் ஓடாக் கால்வல் நெடுந்தேர்' என்னும் திருக்குறள் ஈண்டு நோக்கத் தக்கது.

நீட்டலளவையில் குரோசம், யோசனை ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு கூறியுள்ளார். குரோசம் என்பது கூப்பிடு தூரத்தைக் குறிக்குமென்று அகராதிகள் சுட்டுவதைக் காட்டியுள்ளார். மேலும் குரோசம் என்பது 500 தண்டம் என்று கொண்டு, 1 யோசனை என்பது 2 மைல் 2 பர்லாங்கு 40 கெஜம் என்று வரையறை செய்வதே தக்கதாகும் என்று ஆசிரியர் கூறியிருப்பது மேலும் ஆய்தற்குரியது.

கம்பநாடன் குரோசம் என்பதனையே காதம் என்று குறிக்கிறான் என்பதும், காதம் என்பது காவதம் என்னும் சொல்லின் திரிபு என்பதும் குரோசம் என்பது அரைமைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவு என்பதும், கவ்யூதம் என்பது ஒருமைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவு என்பதும், தமிழில் காதம் என்பது கவ்யூதம் என்பதற்கு நிகராகச் சில இடங்களில் பயன்படுத்தப் பட்டுள்ள போதிலும், கம்பநாடன் அதனைக் குரோசம் என்பதற்கு நிகராகவே பயன்படுத்தியுள்ளான் என்பதும் ஆசிரியர் அழுத்தமாக வற்புறுத்தும் செய்திகளாகும்.

வான்மீகி இராமாயணக் காலநிரல், இராமாயண சார சங்கிரகக் காலநிரல், கம்பராமாயணக் காலநிரல் ஆகிய மூன்றையும் எடுத்துக்காட்டி, அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டினையும், மாறுபாட்டினையும் புலப்படுத்தியுள்ள திறம் போற்றற்குரியது.

வான்மீகிமுனிவர் இராமபிரான் முனிவருடன் தங்கிய திதி சஷ்டி என்றும், சார சங்கிரக ஆசிரியர் துவிதியை என்றும், கம்பன் அமாவாசை என்றும் கூறுவதாகக் குறிப்பிடுகிறார். இம்மூவரையும் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது இவரின் பேருழைப்பைப் புலப்படுத்துகிறது.

இராமாயணக் காலநிரல்களை ஆராயப்புகுந்த ஆசிரியர் காப்பியப் போக்கில் வான்மீகி, கம்பன் ஆகியோருக்கிடையேயுள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடத் தவறவில்லை. காட்டிற்குப் புறப்படுவதற்கு முன் இராமன் தசரதனை இருமுறை சந்தித்தாக வான்மீகிமுனிவர் சொல்லியிருக்கக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஒருமுறை கூட இராமன் தசரதனைச் சந்திக்கவில்லை என்பதை உணர்த்துவதன் மூலம் சோகத்தை மிகுதிப்படுத்துகிறார் என்று கூறுவது ஆய்வின் நுட்பத்தைப் புலப்படுத்துகிறது.

சீதை சிறைப்பட்டதை நூலாசிரியர் நுண்ணிதின் ஆராய்ந்து இளவேனிற் பருவம் எனக் குறிப்பிட்டுள்ளார். சூர்ப்பணகை இராமன்பால் காதல்கொண்டு புலம்புவதும், இராமனால் கரன் முதலானோர் வதைக்கப்படுவதும் பின்பனிக்காலத்தில் நிகழ்ந்தவை என ஆசிரியர் தகுந்த ஆதாரங்களுடன் குறிப்பிடுவது ஆராய்ச்சியின் நுணுக்கமான பகுதிகள்.

சீகாமரம் என்னும் பண் விடியற்காலத்தில் பாடப்படுவது என்றும், அனுமன் பொழிலிறுத்தபோது சீகாமரம் பாடிக் கொண்டிருந்த வண்டுகள் சிதறி ஓடின என்றும், இதனால் இராவணன் சீதையைச் சந்தித்தது இரண்டாம் யாமத்தின் முடிவில் என்றும், அனுமன் பிராட்டியைச் சந்தித்தது மூன்றாம் யாமத்தின் இறுதியில் என்றும், அனுமன் பொழிலை அழித்தது நான்காம் யாமத்தின் இறுதியில் என்றும் குறிப்பிடுவது அறிஞர்களுக்குப் பெருவிருந்தாகும்.

அனுமன் இலங்கைமாநகரில் தங்கிய நாட்கள், பல என்று கற்போர்க்குத் தோன்றும்படி அமைந்துள்ளன. ஆனால் இரண்டு நாளில் அனுமனின் இலங்கைப் பயணம் முடிவுற்றது எனக் காட்டியிருப்பது அரியதோர் செய்தியாகும்.

இராமராவணப் போர் ஐந்து நாள்கள் நடைபெற்றதாகக் கூறும் அமரர் க.கு.கோதண்டராமக் கவுண்டரின் முடிவினை இந்நூலாசிரியர் ஏற்றிருப்பது இவரின் சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது எனலாம். ஆனால் கருத்து முரண்பாட்டையும் ஆசிரியர் விளக்கத் தவறவில்லை.

இந்திரசித்தன் இலக்குவனுடன் புரியும்போர் ஆறுநாட்கள்

நிகழ்ந்ததாக வான்மீகி சொல்லக் கம்பன் இரு பகல்கள் இரு இரவுகளில் இந்திரசித்தன் வீழ்த்தப்பட்டான் எனக் காட்டுவது செறிவும் தெளிவும் மிக்கதாக அமைந்துள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுவது பொருத்தமாக உள்ளது.

'உவா' என்ற சொல்லை ஆசிரியர் திறம்பட ஆராய்ந்துள்ளார். உவா என்ற சொல் அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரண்டையும் குறிக்குமென்றும், இடைஉவா என்பது வளர்பிறை அட்டமியையும். கடையுவா பௌர்ணமியையும் குறிக்குமென்றும் ஆசிரியர் சுட்டுவது அரியதோர் ஆய்வின் முடிவாகும். உரையாசிரியர் அனைவரும் 'உவா' என்பதற்குக் கொண்ட பொருள்கள் யாவற்றையும் மறுத்து விலக்கியிருக்கும் திறம் போற்றுதற்குரியது.

இந்நூல் அரியதோர் ஆராய்ச்சியின் விளைவு என்பதை நன்கு உணரமுடிகிறது. இவரின் மும்மொழிப் புலமையும், அழியா நுண்ணுணர்வின் மாட்சியும் இந்நூலில் புலப்படுகின்றன. இத்தகைய நூல்கள் பலவற்றை எழுதி மேன்மேலும் சிறப்படைய அம்பலத்தாடும் அமலனும், அரங்கத்தில் கண்துயிலும் பெருமானும் திருவருள் புரிய வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

நூலாசிரியர் சைவராயிருப்பினும் வைணவ சமயத்தில் ஊற்றம் கொண்டு 'பெரிய திருமொழி'க்கு எழுதிய விரிவுரையும், 'காப்பிய விருந்து' என்னும் அரிய நூலும், 'குறுந்தொகைத் தெளிவு' என்னும் நன்னூலும் இவரின் விரிந்த புலமையை நமக்குத் தெரிவிப்பன.

நூலாசிரியர் எல்லாச் சிறப்புக்களையும் பெற்று வாழத் திருவருள் புரிய வேண்டுமாய்ப் பரம்பொருளை இறைஞ்சுகிறேன். கம்பன் புகழ்வாழ்க! கன்னித் தமிழ்வாழ்க!

கம்பன் நிலையம் — அன்புடன்

திருவரங்கம் — **S.K. இராமராசன்**

4.4.2002

டாக்டர் அ.அ.மணவாளன்
பேராசிரியர் – தலைவர் (ஓய்வு)
தமிழ்மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆய்வுரை

'கம்பநாடர் – புதிய வெளிச்சம்' என்னும் இந்த அரிய ஆய்வுநூலைத் தமிழாய்வு உலகிற்கு அளித்துள்ள நண்பர் டாக்டர் தெ. ஞானசுந்தரம் பாராட்டிற்குரியவர். சென்ற நாற்பது ஆண்டுகளாகக் கம்பரின் இராமகாதையோடு இரவு பகலாக அறிவுநிலையிலும் ஆன்மீக நிலையிலும் உறவாடி வரும் தமிழ்ப் பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் வடமொழியும் பயின்றவர்; எனவே 'தேவபாடையின் இக்கதை செய்த மூவரானவர் தம்முளும் முந்திய' நாவினராகிய வான்மீகியின் காப்பியத்தை நேரிடையாகவே படித்துணரும் வாய்ப்புப் பெற்றவர்; அதனால் முதனூலும் வழிநூலும் இணைந்தும், விலகியும் செல்லும் இடங்களை இனங்காணும் பேறு பெற்றவர்; கம்பரைப் படித்தும், படிப்பித்தும் அனுபவிப்பதோடு அமையாமல் ஆழ்ந்து அகழ்ந்து ஆராயும் பக்குவமும் அடைந்தவர். இவ்வாறு பலதிறப்பட்ட பயிற்சியும் ஆய்வார்வமும் உடைய நல்லறிஞர் தெ. ஞானசுந்தரம் கம்பரின் காப்பியத்தை ஒரு புதிய கோணத்தில் பார்க்க விழைந்ததன் விளைவாக இந்த ஆய்வுநூல் மலர்ந்துள்ளது.

கால ஆராய்ச்சி என்பது இலக்கிய உலகில் மிகப் பழங்காலத்தொட்டு நடைபெற்றுவரும் இலக்கியத் திறனாய்வுப் பார்வைகளுள் ஒன்று. இலக்கியப் படைப்புகள், குறிப்பாகக் காப்பியம் நாடகம் போன்றவை தோன்றிய காலத்தை ஆராய்ந்து காணுதல், அல்லது இத்தகைய நூல்களைப் படைத்தளித்த கவிஞர்களின் காலத்தை ஆராய்ந்து காணுதல் என்னும் திறனாய்வுப் பார்வை கால ஆராய்ச்சியில் மூத்தது. இது ஆய்வுக்குட்பட்ட நூல்களிற் காணப்பெறும் அகச்சான்றுகள், அவை தோன்றிய காலத்திற்குரிய அரசியல், சமுதாய, பண்பாட்டுச் சூழல்கள் தொடர்பான புறச்சான்றுகள் ஆகிய இருவகைத் தரவுகளின் அடிப்படையில் செய்யப் பெறுவது; இலக்கிய உலகில் இந்த ஆய்வுக்குட்படாத புகழ்பெற்ற நூல்களோ கவிஞர்களோ இல்லை என்னும் அளவிற்கு இத்தகைய கால ஆராய்ச்சி மிகவும் புகழ்பெற்றது.

இனிக் கால ஆராய்ச்சியில் மற்றொருவகைப் பார்வையும் உண்டு. அதாவது, ஒரு காப்பியத்தின் அல்லது கதை தழுவிய ஓரிலக்கியத்தின் கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலவரம்பினைக் கணக்கிட்டு ஆராய்வது. இவ்வகையான கால ஆராய்ச்சிக்கு அவ்வந் நூலுள்

காணப்படும் குறிப்புகள் மட்டுமே தரவாக அமையும். பிற புறச்சான்றுகள் அடிப்படைத் தரவுகளாக அமையா. முதனூல், சார்பு நூல் என்பவற்றோடு ஒப்பிட்டுக் காணினும், அறுதியான முடிபுகளைக் கணித்தறிய அவை பயன்படா. இந்த வகையான கால ஆராய்ச்சி மிகப் பரவலாகச் செய்யப்படுவதில்லை. மிக அருகிய, அரிதான முயற்சியாக நடைபெறும் ஓர் அகழ்வாய்வாக இது நடைபெறுகிறது. ஹோமரின் காப்பியங்களான இலியதம், ஒதீசியம், வெர்ஜிலின் காப்பியமான ஈனிதம், இந்திய இதிகாசங்களில் மிகப் பெரியதும் ஐந்தாம் வேதம் எனக் கருதப்படுவதுமான மகாபாரதம் ஆகிய பழம்பெரும் நூல்கள் இத்தகைய கால ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன. இந்த அரிய ஆய்வுப் பார்வையின் வரிசையில் எழுந்துள்ளதுதான் டாக்டர் தெ. ஞானசுந்தரத்தின் இந்த அரிய ஆய்வுநூல்.

இராமாயணத்தின் கதை நிகழ்ச்சிகளைக் காலமுறைப்படி வரிசைப்படுத்தி அவை நிகழ்ந்த காலக்கூறுகளை நிரல்படுத்தி ஆராய்ந்து, அளந்து ஒரு கால அட்டவணை தயாரிப்பதுதான் இந்த அரிய ஆராய்ச்சியின் நோக்கம். இராம காதை என்பது ஒரு தொன்மம் (myth). அதனை வடமொழியில் முதலில் காப்பியப்படுத்தியவர் வான்மீகி முனிவர். தமிழில் பெருங்காப்பியமாகச் செய்தவர் கவிச்சக்கரவர்த்தி எனப் புகழ்பெற்ற கம்பநாடர். இவர்கள் இருவருமே இராமகாதை நிகழ்ச்சிகளின் உடன்காலத்தவர் அல்லர். நிகழ்ச்சிகளுக்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றியவர்கள். எனவே தாம் கேட்டறிந்தவாறும், நூல்கள் வழிக் கற்றறிந்தவாறும் பெற்ற வெளிச்சத்தில் தத்தம் கலையுணர்விற்குப் பொருத்தமெனத் தோன்றியவாறு காப்பிய நிகழ்ச்சிகளைக் காலஅடைவுபடுத்திப் பாடியுள்ளனர். இந்த இருபெரும் கவிஞர்களின் கால நிரல்படுத்தும் முயற்சியை,

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே....

(புறம்–30/1–7)

என்னும் சங்க காலப் புலவர் பெருமகனாரின் கூற்றில் வைத்து நோக்கினால், இந்த மகாகவிகளின் மேதைமைத் தன்மை புலப்படும். இந்தப் பணியின் அருமையை நாம் உணர்ந்ததுமே, இந்த ஆய்வின்

ஆழமும், நுட்பமும், இதனை நிகழ்த்திய அறிஞரின் கடினமான உழைப்பும், ஆய்வுப்பொருளின்பால் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் தெற்றெனப் புலப்படும். டாக்டர் தெ. ஞானசுந்தரம் அவர்களின் நுனித்து ஆயும் காலக் கணிப்பிற்கு யோசனை, குரோசம், காவதம், காதம் ஆகிய காலமானிகளைக் கணக்கிட்டுப் பொருந்துமாறு காட்டியிருப்பதைச் சான்றாகக் கூறலாம் (ப.57-68). இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் முற்றிலுமே வரலாற்றடிப்படையில் நிகழ்ந்தனவல்ல. காப்பிய நிகழ்ச்சிகளைக் கதைப் பின்னலாக்கி அதன் கட்டுக்கோப்பினை (architectonics) அமைக்குமிடத்து, முருகியலின்பமும் நிகழ்தற்பாங்கும் (aesthetic probability) அமையப் படைத்துக் காட்டுவதில் காப்பியக் கவிஞர்கள் தனிக்கவனம் செலுத்துவர். எனவே கதைக்கரு ஒன்றாக இருப்பினும் இத்தகைய பார்வையில் வேறுபடுதல் இயற்கை. வான்மீகியும் கம்பரும் இம்முறையில் சிற்சில வேறுபாடுகளுடன் தத்தம் காப்பிய நிகழ்ச்சிகளை அடைவுபடுத்தியுள்ளனர். இந்த இலக்கிய நியதியை நண்பர் டாக்டர் தெ. ஞானசுந்தரம் முழுமையாக உணர்ந்துள்ளார் என்பதைக் கீழ்வரும் பகுதிகள் தெரிவிக்கின்றன:

இராமாயணத்தின் பெரும் பகுதி பதினான்கு ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளில் விளக்கம்... பால காண்டம் நீங்கலாக ஏனைய ஐந்து காண்டங்களும் இராமன் வனவாசம் செய்த ஏழிரண்டு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளைப் பாரித்து விளக்குகின்றன....

காப்பியம் நாட்குறிப்பு அன்று; வரலாறும் அன்று; சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு.... காப்பியக் கவிஞர்கள் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளையே தேர்ந்து தொடுத்துக் கோவைப்படுத்துவர். (ப.25)

முதல்நூல் ஆசிரியரும் வழிநூல் ஆசிரியரும் இராமனுடைய பதினான்கு ஆண்டுக் கானுறை வாழ்க்கையை விளக்குவதில் ஒன்றுபட்ட போதிலும், சில நிகழ்ச்சிகள் நடைபெற்ற பொழுது, அவற்றின் கால அளவு ஆகியவற்றில் வேறுபடுகின்றனர்...

நிகழ்ச்சிகளின் கால அளவினைப் பொறுத்தமட்டில் கம்பநாடர் வான்மீகிமுனிவரை விட்டுத் தாராளமாக விலகிச் சென்றுள்ளார்...

வான்மீகிராமாயணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு; கம்பராமாயணத்தில் அமைந்திருக்கும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு (ப.26)

எனவே கம்பராமாயணத்தை வான்மீகிராமாயணத்தையோ வேறு வடமொழி நூல்களையோ கருவியாகக் கொண்டு விளக்க முற்படுவது பொருத்தமாக அமையாது; நேரிய ஆராய்ச்சி நெறிமுறை ஆகாது. கம்பநாடரின் கைவண்ணத்தை அறியக் கம்பராமாயணமே உற்ற துணை (ப.29)

இத்தகைய தெளிவான ஆய்வுப் பார்வையை இந்நூலாசிரியர் கைவரப் பெற்றிருப்பது மகிழ்தற்குரியது; கைவரப்பெறாதோரால் பின்பற்றத் தக்கது.

இராமாயணக் கதைநிகழ்ச்சிகளின் காலநிரலை இந்தப் பார்வையை அடியூற்றாகக் கொண்டு இந்நூல் ஆராய்கிறது. கதை நிகழ்ச்சிகளைக் காண்டங்களின் அடிப்படையில் பகுத்துக்கொண்டு அவற்றின் நிகழ்ச்சிப் பாங்கினை நாள்களாகக் குறிப்பிட்டுச் செல்கிறது. ஆய்வில் கண்ட முடிபுகளின் அட்டவணைகள் இந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

காலஆராய்ச்சிக்குப் பொதுவாக மேற்கொள்ளப் பெறும் சூரியமான ஆண்டினை (Solar calendar) மேற்கொள்ளாமல், காப்பியக் கவிஞர்களின் குறிப்புகளின் அடிப்படையில் சந்திரமான (Lunar calendar) ஆண்டினை ஆதாரமாகக் கொண்டு டாக்டர் தெ. ஞானசுந்தரம் இந்த ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். இந்திய மரபுப்படி இதுவே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. தற்போது மராட்டிய ம்ாநிலம் – பூனாவில் வாழ்ந்துவரும் பொறியியல் – வானவியல் அறிஞரான திரு. விஸ்வநாத் கைரே (Vishvanath Khaire) என்பவர் இராமாயண மூலக்கதையை (Proto-Ramayana) இவ்வாறு சந்திரனை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்துள்ளார். இராமன் முதலான பல இராமாயணப் பாத்திரங்களைச் சந்திரனைக் கொண்டே விளக்கியுள்ளார். தமிழ்மொழியிலும், தமிழ்மொழியின் சொற்பிறப்பியல் துறையிலும் பயிற்சி பெற்றுள்ள இவர் இராமன் என்பதற்கு, இரா–இரவு, மன்–அரசன்; அதாவது இரவிற்கு அரசனான சந்திரன் என்று விளக்கம் அளித்துள்ளார். அவருடைய ஆய்வு முடிவுகளில் பல இன்னும் விவாதத்திற்கு உரியனவாகக் காணப்படினும், சந்திரனின் இயற்கை, இயக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இராமாயண ஆய்வுகள் நடத்துவருகின்றன என்பதே நான் இங்கே குறிப்பிட விரும்பும் செய்தி. எனவே டாக்டர் தெ. ஞானசுந்தரத்தின் சந்திரமான ஆண்டுக் குறிப்புகள் எளிதில் புறக்கணிக்கத் தக்கவையல்ல; ஆழ்ந்து சிந்திக்க வேண்டியன என்று கருதுகிறேன்.

கம்பராமாயணக் கதை நிகழ்ச்சிகளுக்குரிய காலக் குறிப்புகளைக் கணிப்பதில் முருகியலின்பமும் நிகழ்தற்பாங்கும் இவ்வாய்வில்

காரணிகளாகச் செயற்பட்டுள்ளன என்பதைக் கீழ்க்காணும் குறிப்புகள் உணர்த்துகின்றன:

1. ''வான்மீகி முனிவர் இராவணன் மகுடச்சிதைவினை முன்னிரவு நிகழ்ச்சியாகக் காட்டக் கம்பநாடர் அதனை முற்பகல் நிகழ்ச்சியாகக் கம்பநாடர் காட்டியுள்ளார்.'' (147)

2. ''வான்மீகத்தின்படி இந்திரசித்தன் முதல்நாள் நாகபாசத்தை வீசியும் இரண்டாம் நாள் பிரமாத்திரத்தைச் செலுத்தியும், மூன்றாம் நாள் மாயாசீதையை வெட்டியும், அதன்பின் மூன்று இரவு பகல்கள் தொடர்ந்து போரிட்டும் போர் தொடங்கி ஆறு நாள்களுக்குப் பின் வீழ்ந்தான் என்று ஆகிறது. போர் நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு ஏதுமின்றி வறிதே மூன்று இரவு பகல்கள் போரிட்டதாகக் குறிப்பது சுவைக்குறைவாக அமைகிறது. இவ்வாறன்றிக் கம்பநாடர், இந்திரசித்தன் இரண்டாம்நாள் களம்புகுந்து பிற்பகல் முதல் இரவு வரையிலும் போரிட்டுத் திரும்பினான் என்றும், மூன்றாம் நாள் பிற்பகல் தொடங்கி நான்காம் நாள் விடியும் வரையிலும் போரிட்டு வீழ்ந்தான் என்றும் காட்டுவது செறிவும் தெளிவும் மிக்கதாக அமைந்துள்ளது.'' (165–166)

3. ''இராவணவதத்திற்குப் பின்னைய நிகழ்ச்சிகளான மண்டோதரி புலம்பல் முதல் அயோத்திக்குப் புறப்படுவதற்கு முன்பு வரை உள்ள நிகழ்ச்சிகள் ஒரே நாளில் (அமாவாசையில்) நடந்தன என்றும், அதன்பின்னர்ச் சித்திரை மாத வளர்பிறைச் சதுர்த்திவரை அங்கேயே தங்கியிருந்து பஞ்சமியில் புறப்பட்டான் என்றும் கொள்வதே சிறப்பு. கம்பநாடர் இவ்வாறே அமைத்துள்ளார். சீதையின் பிரிவால் ஏங்கித் தவித்த இராமன் இராவண வதத்திற்குப் பின் உடனே அவளைக் கண்டான் என்பதே அவன் இயல்புக்குப் பொருத்தமாக இருக்கும்.''(176–177)

தொய்வற்ற, செறிவான கதைப்பின்னல் எல்லாவகை இலக்கியங்கட்கும் வேண்டப்படுவதாயினும், நாடகத்திற்கு அது மிகமிக இன்றியமையாத கலைப்பண்பாக அமைகிறது. காப்பியக் கவிஞராக இருப்பினும் கம்பரின் கலையுள்ளம் நாடகப் பாங்கு மிக்கது என்பதை அவர்தம் காப்பியம் முழுவதிலும் காண்கிறோம். மேற்சுட்டிய இந்நூலின் எடுத்துக்காட்டுகள் கம்பநாடரின் இந்தப் பண்பினை அடியொற்றியவை என்பது எளிதில் புலப்படும்.

இந்த ஆய்வினால் சில துணைப்பயன்களும் விளைந்துள்ளன. தமிழிலக்கிய வரலாற்றில் நிலவிவரும் சில ஆதாரமற்ற கருத்துகளை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய திறனாய்வுக் கட்டாயத்தை ஆசிரியர் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். சான்றுக்கு ஒன்று கூறலாம்: (ப.149–152)

"ஒன்பதிற்று இரட்டி என்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
(நீர்ப்படைக் காதை8-9)

என்னும் பகுதிக்கு உரைவகுத்த சிலப்பதிகார அரும்பத உரைகாரர் பதினெட்டு மாதங்கள் நடந்தது இராமாயணப் போர் என்று குறித்துள்ளார். அன்றுமுதல் இன்றுவரை இராமராவணப் போர் 18 மாதங்கள் நடந்தது என்ற கருத்து நிலவிவருகிறது. இதன் பொருத்தமின்மையை டாக்டர் தெ. ஞானசுந்தரம் எடுத்துக் காட்டுவதோடு சிலப்பதிகாரப் பாடங் குறித்த தமது ஐயத்தையும் புலப்படுத்தியுள்ளார். உரையாசிரியர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தால் அவர்தம் கூற்றுக்கு ஆதாரம் எதுவாக இருக்கக்கூடும் என்பது மேலும் சிந்திக்கத் தக்கதாக அமைகிறது.

இந்த ஆய்வில் கம்பராமாயணத்தை ஆராயுமிடத்து ஒப்புமைக்காக வான்மீகிராமாயணத்தை ஆய்வாளர் எடுத்துக்காட்டுகிறார். இது ஏற்கத் தக்க ஆய்வியல் நெறிதான். வான்மீகிராமாயணத்தை 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ந்து பதிப்பித்த அறிஞர் குழாம், ஓலைகளின் நம்பகத்தன்மையையும் வேறு சில ஆதாரங்களையும் கொண்டு வடபுல வழக்கு வான்மீகம், தென்புல வழக்கு வான்மீகம் (Northern and Southern Recension of the Valmiki Ramayana) எனப் பாகுபாடு செய்துள்ளனர். இதில் தென்புல வழக்கு வான்மீகம் மிகுதியான இடைச் செருகல்களையும், திருத்தங்களையும் கொண்டுள்ளதாக அக்குழு எடுத்துக்காட்டியுள்ளது. கோரக்பூர் பதிப்பும், தர்மாலயா பதிப்பும் தென்புலவழக்கு வான்மீகத்தைக் கொண்டுள்ளன. டாக்டர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் இந்த இரண்டில் ஒன்றினைப் பயன்படுத்தியுள்ளார் எனக் கருதுகிறேன். எனவே அவர் காட்டும் வான்மீகச் செய்திகள் பல வடபுல வான்மீக ஏடுகளில் இல்லை. சான்றாக,

1. இராமன் சித்திரைத்திங்கள் வளர்பிறை நவமியில் கற்கடக லக்கினத்தில் பிறந்தான் (ப.31)

2. பரத்துவாசரின் ஆசிரமத்தைவிட்டுப் புறப்பட்ட மூவரும் (இராம, இலக்குவ, சீதை) சித்திரகூட மலையில் வான்மீகிமுனிவரைக் கண்டு வணங்கி அவர் சொற்படி அங்குத் தங்கினர். (ப.93)

என்னும் இரண்டையும் குறிப்பிடலாம். தசரதனுடைய மக்கள் நால்வரும் பிறந்த காலத்துக்குரிய கிரக நிலைகள் வடபுல வான்மீகத்தில் கூறப்படவே இல்லை. தென்னக ஏடுகளில் மட்டுமே காணப்பெறும் செய்தி.

மேலும், வான்மீகத்தில் காணப்பெறவில்லை என ஆய்வாளர் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் (ப.75,80,127) வடபுல வான்மீகத்தை ஆய்ந்தால் இடம்பெற்றிருக்கவும் கூடும். எனவே அதனை ஒப்பிட்டு நோக்கினால் அன்றி மேற்கூறிய நிகழ்ச்சிகளைக் கணிக்க இயலாது.

மேலும் இதுவரை கூறப்பெற்ற செய்திகளைத் தொகுத்துக் காணுமிடத்து, ஓர் அரிய இராமாயண ஆய்வுநூலைப் படித்து மகிழ்ந்த இனியதோர் உணர்வு தோன்றுகிறது. நெருடல் அற்ற, நெகிழ்ந்த, இனிய தமிழ்நடையை இந்த ஆய்வு நூல் பெற்றிருப்பது, இருபத்தோராம் நூற்றாண்டில் இன்னும் நல்ல தமிழில் ஆய்வுநூல்கள் எழுதலாம், எழலாம் என்னும் நம்பிக்கையை எனக்கு ஊட்டியது. இந்த வாய்ப்பினை எனக்களித்த நண்பர்க்கு நெஞ்சார்ந்த நன்றி. நிலைத்த பயன்தரும் ஆய்வுகள் அருகிவரும் இந்நாளில், இத்தகைய பயனுடைய கம்பரின் கவிதைச் சிறப்பினைப் புதியதொரு கோணத்தில் ஆராய்ந்து தமிழ் உலகிற்குப் படைத்தளித்த அறிஞர் டாக்டர் தெ. ஞானசுந்தரத்தின் முயற்சியை அறிஞர் பெருமக்கள் வரவேற்று வாழ்த்துவார்கள் என்று நம்புகிறேன். நாரணன் அருளை நினைந்து நானும் வாழ்த்துகிறேன்.

''கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?''

– நம்மாழ்வார்.

எம் 3/6 இரண்டாவது அவென்யூ
இந்திரா நகர், அடையாறு,
சென்னை – 600 020.

அன்புடன்
அ.அ. மணவாளன்
8.4.2002

முன்னுரை

'கம்பநாடர்–புதிய வெளிச்சம்' என்னும் இந்நூல் நீண்ட நாள் ஆராய்ச்சியின் விளைவாக எழுந்ததாகும். ஆய்வு இருவகை. ஒன்று, சில முடிவுகளை எடுத்துக்கொண்டு அவற்றை நூலோடு பொருத்திக் காண்பது. மற்றொன்று நூலினைக் கற்கும்போது சிக்கல் தோன்றி அதற்கு விடை தேடிச்சென்று சிலமுடிபுகளைக் காண்பது. இஃது இரண்டாவது வகையைச் சார்ந்த ஆய்வாகும்.

எங்கள் அழுந்தூர் மண்ணில் தோன்றிய கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர்மீது ஆர்வம் கொள்ளும்படி என்னைக் கம்பன்மேடைக்கு அறிமுகப்படுத்தியவர் 'கல்விக்கடல்' எஸ்.கே. இராமராசன் ஆவார். 1966 ஆம் ஆண்டுமுதல் கம்பன் கழக விழாக்களில் பேசத் தொடங்கினேன். கோபிச்செட்டிப்பாளையம், கள்ளிப்பட்டி, திருப்பத்தூர் (வட ஆர்க்காடு), புதுச்சேரி, கோவை, வேலூர், புதுக்கோட்டை, கண்டாச்சிபுரம், காரைக்குடி, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் உள்ள கம்பன் கழகங்கள் என்னை அவ்வப்பொழுது பேச அழைத்து என் கம்பராமாயண ஆராய்ச்சிக்கு உரமிட்டன. சென்னைக் கம்பன் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து 1992 ஜூன்வரை அதன் துணைச் செயலாளராக இருந்தேன். அதன்தலைவர் மாண்புமிகு நீதிபதி மு.மு. இஸ்மாயீல் அவர்கள் என்மீது காட்டிய பரிவு என்னைப் பலகால் நெகிழச் செய்தது. அது கம்பநாடரை மேலும் முனைப்புடன் கற்கத் தூண்டியது. 1976 இல் சென்னைக் கம்பன் கழகம் வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்புக் குழுவில் என்னையும் ஓர் உறுப்பினராக அமைத்தார். அதனால் அமரர் தெ.பொ.மீ., அமரர் கி.வா.ஜ., அமரர் மு.அ. (அருணாசலம்), அமரர் மு. சண்முகம்பிள்ளை, பேராசிரியர் அ.ச.ஞா. ஆகியோர்களோடு சேர்ந்து கம்பராமாயணப் பாடல்களை ஒப்புநோக்கும் பெரும்பேறு வாய்த்தது. அக்குழுவில் இளைஞனாக இருந்த எனக்குப் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் மேற்பார்வையில் அடிக்குறிப்பு எழுதும் பணி அளிக்கப்பட்டது. அதனால், கம்பராமாயணம் முழுவதையும் வை.மு.கோ., அண்ணாமலை பல்கலைக் கழகத்தார், உ.வே.சா. நூல் நிலையத்தார் ஆகியோர் வெளியிட்டுள்ள பதிப்புகளோடு படிக்கும் நிலை உருவாயிற்று.

இந்த நிலையில், 1984 ஆம் ஆண்டு ஒருநாள் இந்திரசித்து வதைப்படலத்தைப் படித்த போது போரின் நடுவே சூரியன் தோற்றம் பாடப்படுவதனைக் கண்டேன். அவ்வாறு புனைந்துரை இடையில் வருவது ஏன் என்று சிந்திக்கலானேன். கம்பநாடர் அந்த நிகழ்ச்சி நடந்த காலத்தைக் காட்ட அவ்வாறு பாடியுள்ளார் என்று கண்டேன்.

தொடர்ந்து, சுந்தரகாண்டத்தில் சீதை ஒரு திங்களுக்குள் தன்னை மீட்க வேண்டும் என்று அனுமனிடம் தெரிவித்தற்கு ஏற்ப அக்கால எல்லைக்குள் மீட்கப்பட்டாளா என்று ஆராயத் தொடங்கினேன். பல நாள் ஆய்வுக்குப் பின் அதற்கு விடை கண்டேன். வனவாசத்தின் கடைசியாண்டு நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைக் கண்டறிந்தேன். கம்பநாடர் வான்மீகத்தினின்றும் வேறாக நிகழ்ச்சிகளின் காலத்தைக் காட்டுவதை உணர்ந்தேன்.

1991 ஆம் ஆண்டுக் கோவைக் கம்பன் விழாமலரில் பாலகாண்டத்து நிகழ்ச்சிகளை வான்மீகத்தோடு ஒப்பிட்டுக் கட்டுரை எழுதுமாறு வேண்டினர். அக்கட்டுரையில் இரு நூல்களுக்குமிடையே நிகழ்ச்சிகள் நடந்த கால அளவு வேறாக இருத்தலை விளக்கினேன்.

1992 ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் நாள் திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 'கம்பரின் மேதைமை' என்னும் தலைப்பில் அருள்திரு சி.கே. சாமி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்திய போது அதில் வனவாசத்தின் கடைசியாண்டு நிகழ்ச்சிகளின் காலம் குறித்தும் விளக்கினேன். அது பலருக்குப் புதுமையாக இருந்தது.

1993 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் கோவைக் கம்பன் விழாவில் சிறப்புரை நிகழ்த்தும் வாய்ப்புக் கிட்டியது. பெருந்தகை திரு ஜி.கே. சுந்தரம் அவர்கள், ''தலைப்புத் தரவேண்டா; அவர் விழைந்த பொருளில் சுந்திரமாகப் பேசட்டும்'' என்று கூறியதாகச் செயலாளர் திரு க.மீ. வேங்கடேசன் தெரிவித்தார். யான் கம்பராமாயணத்தில் உள்ள காலக் குறிப்புகள் குறித்து விரிவாகப் பேசினேன். அப்பேச்சினைக் கேட்ட முனைவர் ம.ரா.போ.குருசாமி, அமரர் புதுக்கோட்டைக் கிருஷ்ணசாமிச்செட்டியார், அமரர் அருணாசலக் கவுண்டர் போன்ற அறிஞர்கள் பெரிதும் பாராட்டினர். அதனையே புதுக்கோட்டை, நாமக்கல், திருப்பத்தூர், புதுவை ஆகியவிழாக்களிலும் பேசிய போது நல்ல வரவேற்பு இருந்தது.

1993–94 ஆம் ஆண்டு வெளிவந்த பச்சையப்பன் கல்லூரி 150–ஆவது ஆண்டு மலரில் "The treatment of time element in the Kambaramayana" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு விரிவான கட்டுரை எழுதினேன். அதனைப் பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப்பேராசிரியர் முனைவர் எஸ். சுப்பிரமணியன் பெரிதும் பாராட்டினார். அதனைப் படித்த தத்துவப் பேராசிரியர் பெரியார்தாசன் என் அறைக்குத் தேடிவந்து பாராட்டியது எனக்கு வியப்பாகவும் ஊக்கமளிப்பதாகவும் அமைந்தது.

கொல்கத்தாப் பாரதி தமிழ்ச் சங்கத்தில் 1995 டிசம்பர் 19 ஆம் நாள் 'புதிய வெளிச்சம்' என்னும் தலைப்பில் அதனைப் பேசினேன். அப்பொழுது கொல்கத்தா வானொலி நிலைய இயக்குநராக இருந்த திரு.பி.ஆர்.குமார் அவர்கள் சென்னை வானொலி நிலையத்திற்கு மாற்றலாகி வந்த பின் அப்பேச்சை நினைவில் கொண்டு அந்தக் கருத்துகளையே 1998 ஜனவரி 2ஆம் நாள் 'காலமும் கருத்தும்' என்னும் தலைப்பில் ஒலிப்பதிவு செய்வித்து ஒலிபரப்பச் செய்த போது அவருடைய இலக்கிய ஆர்வமும் புதுமையைப் போற்றும் பண்பும் என்னை வியப்பில் ஆழ்த்தின.

இராஜபாளையத்தில், கம்பன் கழகச் செயலாளர் என். எஸ். முத்துகிருஷ்ணராஜாவோடு பேசிக்கொண்டிருந்த போது அவர் கோவைக் கம்பன் கழக 1984 ஆம் ஆண்டு மலரில் திரு. க.கு.கோதண்டராமக்கவுண்டர் எழுதியிருந்த 'கம்பனில் ஒரு காலக் குறிப்பு' என்னும் கட்டுரையைத் தேடி எடுத்து வந்து தந்தார்.

நாமக்கல் கம்பன் விழாவில் கலந்துகொண்ட போது பெரியவர் ஒருவர் இராமாயண நிகழ்ச்சிகள் நடந்த காலம் குறித்து மனப்பாடமாகச் சொன்னார். அக்குறிப்பு யான் கண்ட முடிபுகளுக்கு மாறாக இருந்த போதிலும் அதனை ஆய்தல் வேண்டுமென்று கருதினேன். அவரோ அதனை எழுதிக்கொள்ள இசையவில்லை. நாமக்கல் கம்பன் கழகத்தலைவர் திரு சுந்தரராஜுரெட்டியார் அவர்கள் பின்னர் அதனை அப்பெரியவர் அறியாவண்ணம் மிகுந்த முயற்சி எடுத்துப் பதிவுசெய்து தந்தார். (ஆனால் அது வடமொழியில் வழங்கும் கருத்துகள் அடிப்படையில் அமைந்து, சில இடங்களில் நிகழ்ச்சிகள் நடந்த முறை மாறாடி இருந்தது. அதனால் எந்தப் புதிய விளக்கமும் கிடைக்கவில்லை)

என்னிடம் இல்லாத ராவ்பகதூர் பி.எஸ். கிருஷ்ணஸ்வாமிஐயர் வான்மீகிராமாயண அயோத்தியா காண்ட மொழிபெயர்ப்பு நூலினைத் தந்துதவியவர் முனைவர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் ஆவார்.

திரு.எஸ். சாம்பமூர்த்திசாஸ்த்ரியின் வால்மீகிராமாயணம் தமிழ் உரைநடை என்னும் நூலினையும், திரு அ.வீ. நரஸிம்ஹாசாரியரால் மொழிபெயர்க்கப்பட்ட 'ஸ்ரீராமாயணம்' தமிழ்வசனம் என்னும் நூலினையும் தந்துதவியவர் நண்பர் முனைவர் அருணை. பாலறாவாயன் ஆவார்.

2000 ஆம் ஆண்டு மே மாதம் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் கம்பராமாயணம் முழுவதிலும் உள்ள காலக்குறிப்புகளைத் திரட்டினேன். கம்பராமாயண உரைகாரர்கள் எல்லோரும்

வான்மீகத்தையொட்டிப் பாடல்களுக்கு விளக்கம் தந்துள்ளமையால் வான்மீகத்தோடு ஒப்பிட்டு வேறுபாட்டினை விளக்கவேண்டுவது அவசியமாயிற்று. 1986 ஆம் ஆண்டு வான்மீகத்தையும் கம்பநாடரையும் ஒப்பிட்டுக் 'காப்பிய விருந்து' என்னும் தலைப்பில் 'உலகத் தமிழ்க் கல்வி இயக்க'த்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றினேன். அதனை முனைவர் எஸ்.வி.சுப்பிரமணியன் அவர்கள் நூலாக வெளியிட்டார். முன்பே வான்மீகத்தோடு ஓரளவு தொடர்பு இருந்த நிலையில் அப்பணியில் மீண்டும் முனைந்து இருநூல்களையும் ஒப்பிட்டுக் காண்பதில் ஈடுபட்டேன்.

உரையாசிரியர்கள் சில பாடல்களில் இடம் பெற்றுள்ள காலக்குறிப்பினை இராமாயண சார சங்கிரகம் என்னும் நூலினையொட்டி விளக்குவதனைக் கண்டேன். அவ்வடமொழி நூலினைப் பெறுவது அரிய முயற்சியாயிற்று. எங்கெங்கோ தேடிக் கடைசியாக மயிலைக் குப்புசாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிறுவன நூலகத்திலிருந்து சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் வடமொழிப் பேராசிரியர் முனைவர் சுந்தரம் அவர்கள் உதவியினால் அது கிடைத்தது. அதனை வைணவக் கல்லூரி முன்னாள் வடமொழிப் பேராசிரியர் முனைவர் திருவேங்கடத்தான் அவர்கள் உதவியோடு படித்தறிந்தேன்.

கம்பநாடர் நிலவின் தோற்றத்தைப் புனைந்து அதுகொண்டு காலத்தை உணர்த்தியுள்ளார். அவற்றை அறிந்துகொள்ள வானத்தை இரவு நேரங்களில் நோக்கலானேன். வானம் எனக்குப் போதிமரமாயிற்று. கம்பநாடரை உணர்ந்துகொள்ள வானவியல் அறிவு எவ்வளவு அவசியம் என்பது எனக்கு விளங்கிற்று. வான்மீகிமுனிவரும் கம்பநாடரும் சந்திர ஆண்டினைப் பின்பற்றியுள்ளனர் என்பதை அறிந்த போது பல ஐயங்கள் பகலவன் முன் பனியாயின. அவ்வாண்டு பற்றிய தெளிவினைப் பெற யான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுதெல்லாம் சலித்துக் கொள்ளாமல் விளக்கம் தந்தவர் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் வடமொழிப் பேராசிரியர் வெங்கோபராவ் ஆவார். அது குறித்துத் தெலுங்குப் பஞ்சாங்கம் அறிந்தவரிடம் கேட்டறிந்து விளக்கம் பெற உதவியவர் அண்டை வீட்டுக்காரர் திரு. கோக்கலை ராஜன் ஆவார். பாடி 'உழவாரத் தொண்டர்' சுப்பிரமணியஐயர் பஞ்சாங்கம் அறிந்த ஒருவரிடம் என்னை அழைத்துச் சென்று உதவினார்.

கம்பநாடர்மீது பத்திமை கொண்ட 'கல்விக்கடல்' எஸ். கே. இராமராசனார் 'கம்பராமன்' என்னும் பிறிதொரு பெயரும் கொண்டவர். இவர் படிக்காத நூல் இன்னும் பதிப்பிக்கப்படாத நூல்

மட்டுமே என்னும் வண்ணம் ஓயாப் படிப்பாளியாகத் திகழ்பவர்; மரபுக்கவிதை படைக்கும் படைப்பாளியாகவும் விளங்குபவர். காயசண்டிகையின் பசி போன்றது இவர்தம் கல்விப்பசி. அகவையிலும் அறிவிலும் மூத்த இப்பெருந்தகை அரிய அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார். அவர் குரலைத் தம்விரலால் வடிவமைத்தவர் பேராசிரியர் டாக்டர் ப. சுப்பிரமணியன் ஆவார்.

பேராசிரியர் டாக்டர் அ.அ. மணவாளன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித்துறைத் தலைவராகப் பணிபுரிந்து அப்பதவிக்குப் பெருமை சேர்த்தவர். இவர் பன்மொழிப் புலமையும், பரந்த அறிவும், சிறந்த பண்புநலனும், ஆழ்ந்த ஆய்வுப் பார்வையும் ஒருங்கே அமையப்பெற்ற பேராசிரியப் பெருந்தகையர் வரிசையில் முன்னிற்பவர். இவர்தம் ஆய்வு முடிவுகள் சான்றுகள் வலிமையால் கல்வெட்டுகள் போல நிலைபேறுடையன. இவர்தம் ஆய்வுரையால் இந்நூலின் மதிப்பு மிகுந்துவிட்டதாகவே கருதுகிறேன்.

இந்நூலினை நல்லமுறையில் அச்சிட்டுதவியவர் மலர்ந்த முகத்துக்கும் கனிவுக்கும் சொந்தக்காரரான அலமு அச்சக உரிமையாளர் திரு. இராமநாதன் அவர்கள். கணிப்பொறியில் தட்டச்சுச் செய்தவர் செல்வி எல். கிரிஜா ஆவார். அச்சுப்படித் திருத்தத்தில் உதவியவர் வேலூர் எஸ். மார்க்கபந்து ஆவார். இவர்களுக்கெல்லாம் என் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீதை சிறையிருந்த காலம், இலங்கையிலிருந்து திரும்பிய நாள் இவை பற்றி முடிவுசெய்யப் பெரிதும் உசாத்துணையாயிருந்து உதவியவர் என் துணைவியார் புலவர் தி.மணிமேகலை ஆவார். அமெரிக்காவில் இருந்தவாறே இந்நூல் வருவது குறித்து அடிக்கடி வினவி என் இளைய மருமகள் திருமதி சுபாஷிணி மாதவன், போர்ச்சுகலில் இருந்தவாறே வினவி ஊக்கப்படுத்தினாள். இவர்களுக்கு என் வாழ்த்துக்கள்

கம்பராமாயணமே யான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டநூல் எனினும் அங்கங்கே வான்மீகத்தையும் ஆராய வேண்டுவதாயிற்று. அதன் விளைவாக வான்மீகம் குறித்தும் சில புதிய முடிபுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. காலத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அணுகுமுறையால் கம்பராமாயண உரையாசிரியர்கள் கண்ட பொருளுக்கு மாறாகப் புதிய பொருள் சில பாடல்களுக்குக் காணப்பட்டுள்ளது. எவர்கள் கருத்துகள் மறுக்கப்பட்டுள்ளனவோ அவர்கள் என் வழிபாட்டிற்கு உரியவர்கள். யான் பெற்றுள்ள கம்பராமாயண அறிவு வை.மு.கோ.இட்ட பிச்சை. அவர் கருத்தை

மறுக்கும் போது அக்கருத்துதான் மறுக்கப்படுகிறதே தவிர அவரல்லர். 'ஆள் மறுப்பு நாகரிகமற்ற செயல்; கருத்துமறுப்பு நாகரிகத்தின் அடையாளம்' என்பதை உளத்தில் கொண்டு அவற்றை அணுகப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

19.5.2002 அன்று, இந்நூலைத் தங்கள் விழாவில் வெளியிட்டு இதனை அறிஞர் உலகத்திற்கு அறிமுகப்படுத்தும் கோவைப் பெரிய கோவிந்தசாமி அறக்கட்டளைக்கும், கோவைக் கம்பன் கழகத் தலைவர் பெருந்தகை திரு ஜி.கே. சுந்தரம் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினைக் கம்பநாடரின் புகழைப் பரப்புவதேபணியாய்ப் போதுபோக்காய் வாழ்ந்த அமரர் 'கம்பனடிப்பொடி' சா.கணேசன், என்னை முதன்முதலில் தாம் எடுத்த கம்பன் விழாவில் மேடையேற்றி வளர்த்த 'கொங்குக்கம்பர்' அமரர் க.கு.கோதண்டராமக்கவுண்டர், திருப்பத்தூர்க் கம்பன் விழாவினைத் தம் வீட்டு விழாப்போல முன்னின்று நடத்திய அமரர் கா.அ.ச.பத்மநாபன், கா.அ.ச.ரகுநாயகன், கம்பன் தொண்டோடு 'கம்பன் கூழ்' என்று நல்விருந்து படைத்த அண்ணன் அமரர் புதுச்சேரி அருணகிரி, சென்னைக் கம்பன் கழகப்பதிப்பு வருவதற்கு மிகுந்த முயற்சி எடுத்த அமரர் கி.மு.அழகர்சாமி ஆகிய பெருமக்கள் அறுவரின் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கி நன்றியோடு வணங்கி மகிழ்கிறேன்.

'கலையகம்'
149, பூங்காச்சாலை,
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சென்னை – 600 101
☎ 6543303

அன்பன்
தெ. ஞானசுந்தரம்
14–4–2002

1. தவமுனியும் கவியரசும்

இந்திய இலக்கியச்செல்வம்

இராமாயணமும் பாரதமும் இந்திய நாட்டின் பழம்பெரும் இலக்கியச் செல்வமாகும். இவ்விரு காப்பியங்களையும் 'அறியாதார் அறியாதாரே'. இவை இரண்டும் முதன்முதலில் வடமொழியில் தோன்றியவை. இராமாயணம் வான்மீகிமுனிவரின் அருட்கொடை. பாரதம் வேதவியாசரின் அரிய படைப்பு. இவை இந்தியமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சில மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் இருக்கின்றன. வான்மீகிமுனிவரின் இராமாயணமே இந்தியநாட்டில் தோன்றிய முதல் காப்பியம். அவரை ஆதிகவி என்று போற்றுவர். அப் பழம்பெருங் காப்பியத்தைத் தமிழில் தந்தவர் கம்பநாடர். பாரதத்தைப் பெருந்தேவனார், வில்லிபுத்தூரார் ஆகியோர் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். இதுபோல இராமாயணத்தையும் மொழிபெயர்க்கும் முயற்சியில் கம்பநாடருக்கு முன்னே சிலர் ஈடுபட்டிருத்தல் கூடும்.

தமிழில் வழங்கிய இராமகாதை

தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாக இராமாயணச் செய்திகளைக் கொண்ட இரு பாடற் பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றைக்கொண்டு கம்பநாடருக்கு முன்பு ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயணம் ஒன்று தமிழில் வழங்கியது என்கிறார் அறிஞர் அ.ச.ஞா. ''இராமகாதை, வெண்பாவும் ஆசிரியமும் பெருகி வளர்ந்திருந்த காலத்தில் ஒரு முழுநூலாகவே இத் தமிழ்நாட்டில் வழங்கியிருக்க வேண்டும். அத்தகைய நூல் இன்று கிடையாமல் போனது பெரிதும் வருந்தற்குரிய ஒன்றாகும்.''* என்பது அவர் கூற்று.

அம்மொழிபெயர்ப்பு நூல் கம்பராமாயணம் தோன்றிய பின் தன் செல்வாக்கினை இழந்து மறைந்தது எனலாம். கதிரவன் ஒளியின் முன்னே மற்றைய ஒளிகள் மங்கி மறைவது இயற்கையன்றோ? இராமனை அரியணையில் அமர்த்துவதற்காக அழைக்க வந்த பரதனைக் குகன் முதலில் இராமனுக்குத் தீங்கு செய்ய வந்ததாக ஐயுற்றான். பின்பு உண்மை யறிந்து தெளிந்தான். அந்நிலையில் அவனை வணங்கி,

---

* *அ.ச.ஞானசம்பந்தன், கம்பன் – புதிய பார்வை, 1993, ப.14.*

''என்புகழ் கின்றது ஏழை
எயினனேன்? இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்
உயர்குணத்து உரவுத் தோளாய்'' (2338)

என்று கொண்டாடினான். இப்பாட்டு இதனைப் பாடிய கம்பநாடருக்கும் பொருந்தும். கம்பநாடரின் படைப்புக்கு முன்னே முன்னைய இராமகாதைகள் ஒளியிழந்தன. தம் முன்னோர் புகழ்களை எல்லாம் தம் புகழ் ஆக்கிக்கொண்டார் கம்பநாடர்.

வித்தகவிரல்

கம்பநாடர் தமிழன்னை ஈன்ற தவப்புதல்வர். அவரது காப்பியம் தமிழுக்குத் தனி ஏற்றம் தந்தது. அவர் கல்விப்பெருமையாலும் கவிதையழகாலும் கற்பனைவளத்தாலும் கதைசொல்லும் முறையாலும் காப்பியக் கவிஞர்களுள் பெருஞ்சிறப்போடு ஒளிர்கிறார். காப்பியக்கூறுகள் எல்லாவற்றிலும் கம்பநாடரின் மணிவிரல் வித்தகத்தைக் காணலாம்.

அவர் வான்மீகத்தைக் கற்றுத் தேர்ந்து காகுத்தன் கதையைத் தமிழில் வரைந்த போதிலும் அங்கங்கே தாம் விரும்பிய திருத்தங்களைத் தாராளமாக மேற்கொண்டுள்ளார். அவை காப்பியத்திற்குப் புதுப் பொலிவினையும் தனிச்சுவையினையும் சேர்க்கின்றன. ஆசிரியரின் படைப்பினை விஞ்சும் மாணாக்கரின் படைப்புப் போல, மூல நூலாசிரியர் வான்மீகிமுனிவரை விஞ்சும் வகையில் கம்பநாடர் காப்பியம் பல இடங்களில் தலைநிமிர்ந்து நிற்கிறது. ''வான்மீகத்தைக் கற்றோர்க்குக் கம்பநாடர் கூறும் கதைப்பகுதி அனைத்தும் தெரிந்திருக்கும். ஆனால் கம்பராமாயணத்தைக் கற்கும் போது 'வான்மீகி முனிவர் வனைந்த அதே வரைபடம்! அவர் பயன்படுத்திய அதே மூலப்பொருள்! ஆனால் எத்தனை தனியழகோடு திகழும் கலைக்கோயில்!' என்று வியப்படைவர்'' என்கிறார் அறிஞர் வ.வே.சு.ஐயர்.* இஃது 'உண்மை வெறும்புகழ்ச்சி இல்லை.'

வான்மீகி வணக்கம்

கம்பநாடர் தம் காப்பியத்தில் செய்துள்ள மாற்றங்களால் அவர் வான்மீகிமுனிவரை மதிக்காதவர் என்று எண்ணுதல் கூடாது. அவருக்கு

* V.V.S. Aiyar, Kambaramayana A study, 1965, p37.

வான்மீகிமுனிவரிடம் ஆரா அன்பும் தீரா மதிப்பும் உண்டு. அம் முனிவருக்கு வணக்கம் செலுத்தியே தம் எழுத்தாணியைக் கையில் எடுத்துள்ளார்.

'செய் தவன்'(5)

'தெய்வமாக்கவி' (6)

'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகி என்பான்' (32)

என்று நூலின் முகப்பில் போற்றியுள்ளார். நூலின் பிற்பகுதியிலும்,

'இயம்புவான் மீகன் என்னும் நல்நான் மறையாளன்' (8025)

என்று அவரை நினைந்து சொல்மலர் தூவித் தொழுதுள்ளார். இக்குறிப்புகள் அம்முனிபுங்கவர் கம்பநாடரின் நெஞ்சில் கோயில் கொண்டிருந்தார் என்பதற்கு அடையாளம். வழிநூல் செய்யும் ஆசிரியன் தேவையான விகற்பங்களைச் செய்துகொள்ளலாம் என்பது இலக்கணம். இவ்இலக்கணம் தந்த உரிமையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டவர் கம்பநாடர்.

காப்பியமும் காலக்கூறும்

இராமாயணமும் பாரதமும் ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் நடந்த நிகழ்ச்சிகளையே விரித்துரைக்கின்றன. இராமாயணத்தின் பெரும்பகுதி பதினான்கு ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளின் விளக்கம். பாரதத்தின் பெரும்பகுதி பதிமூன்று ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளின் விரிவு. இராமாயணத்தில் பால காண்டம் நீங்கலாக ஏனைய ஐந்து காண்டங்களும் இராமன் வனவாசம் செய்த ஏழிரண்டு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளையே பாரித்து விளக்குகின்றன. அந்தக் கால எல்லையிலும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் சில நாள்களிலேயே நிகழ்ந்துள்ளன.

காப்பியம் நாட்குறிப்பு அன்று; வரலாறும் அன்று; சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு. எவர் வாழ்விலும் எல்லாநாளும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறுவது இல்லை. ஆதலின் காப்பியத்தில் ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகளும் இடம் பெறா; பெறுதலும் கூடாது. காப்பியக்கவிஞர்கள் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளையே தேர்ந்து தொடுத்துக் கோவைப்படுத்துவர். அப்படித் தொடுக்கும் போது அந்நிகழ்ச்சிகள் நடைபெற்ற பெரும்பொழுது, சிறுபொழுது, நிகழ்ச்சிகளின் கால அளவு ஆகியவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்துவது பெருங்கவிஞர்களின் இயல்பு. இம்முயற்சியில் அவர்களுக்குப் பருவ காலங்களின் மாற்றம், கதிரவன், நிலவு இவற்றின் தோற்ற மறைவுகள் முதலியவை கைகொடுக்கின்றன. காப்பியங்களில் மலை, கடல், நாடு, நகர், பருவம், ஞாயிறு

நிலவுகளின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய புனைந்துரைகள் இடம் பெற வேண்டும் என்பது இலக்கணம்.

"மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம்என்று இனையன புனைந்து"
(பொதுவணியியல், 8)

என்பது தண்டியலங்காரம்.

பெருங்கவிஞர்கள் தம் காப்பியங்களில் இருசுடர்த் தோற்ற மறைவுகளை வெறும் அலங்காரமாக மட்டும் பாடிச் செல்வதில்லை. இலக்கணவிதியை நிறைவு செய்வது மட்டுமே நோக்கமாகக் கொண்டு அவற்றைப் புனைந்துரைப்பது இல்லை. அதற்கு மேலாக அப்புனைந்துரைகளால் நாளின் தொடக்கத்தையோ முடிவையோ காட்டி நிகழ்ச்சிகளின் கால எல்லையைப் புலப்படுத்துவர். அவற்றை வெறும் அலங்காரப்புனைவுகளாக மட்டும் கருதினால் அவற்றில் கவிஞர்கள் புதைத்துவைத்திருக்கும் அழகுகளைக் காணாமல் இழக்க நேரிடும். கதிரவனும் நிலவும் 'காலமானிகள்'. முதல்நூல்ஆசிரியரும் வழிநூல்ஆசிரியரும் இராமனுடைய பதினான்கு ஆண்டுக் கானுறை வாழ்க்கையை விளக்குவதில் ஒன்றுபட்ட போதிலும் சில நிகழ்ச்சிகள் நடைபெற்ற பொழுது, அவற்றின் கால அளவு ஆகியவற்றில் வேறுபடுகின்றனர்.

இருவேறு காலநிரல்கள்

வான்மீகிராமாயணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு; கம்பராமாயணத்தில் அமைந்திருக்கும் நிகழ்ச்சிகளின் கால அட்டவணை வேறு. ஒரே நிகழ்ச்சியை வெவ்வேறு கால எல்லைக்குள் நிகழ்ந்ததாக இருவரும் குறித்துள்ளனர். வான்மீகிமுனிவர் பல நாள் நிகழ்ந்ததாகக் காட்டும் நிகழ்ச்சியினைச் சில நாளில் நிகழ்ந்ததாகவும், சில நாள் நடந்ததாகக் காட்டும் நிகழ்ச்சியினைப் பல நாள் நடந்ததாகவும் கம்பநாடர் சித்திரித்துள்ளார். இதற்குச் சான்றுகளாகக் கீழ்வரும் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

குறுக்கலும் விரித்தலும்

கவிஞர்கள் இருவரும் இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் பங்குனி உத்தரத்தில் நிகழ்ந்ததாகத் தெரிவித்துள்ளனர்*. வான்மீகத்தில்

* வான்மீகிமுனிவர், 'பல்குந்யாம் உத்தரே' என்று குறித்துள்ளார். உத்தர பல்குநி என்பது உத்தர நட்சத்திரத்தின் பெயராகவும், பங்குனி மாதத்தின் பெயராகவும் வடமொழியில் வருகிறது. அதனால் திரு என். நரசிங்கராவ் இத்தொடருக்கு வைகாசி மாதத்து உத்தரம் என்று பொருள் கொண்டுள்ளார். ஆனால் வான்மீகிமுனிவரின் செய்யுளில் தனியே

தசரதன் மிதிலையை அடைந்த நான்காவது நாள் பங்குனி உத்தரத்தில் திருமணம் நிகழ்ந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

''தோளாற்றல் மிக்கவனே, இன்று மகவிண்மீன்
கூடியநாள். ஐயனே, மூன்றாவது நாள் பங்குனி உத்தரம்
கூடிய நாள். அன்று திருமணச்சடங்கினைச் செய்வாய்''
(பா.71:24)

என்று சனகன் தசரதனிடம் வேண்டிக்கொண்டான். அதற்குத் தசரதன் இசைவு தர, மூன்றாவது நாள் திருமணம் நிகழ்ந்தது. ஆனால் கம்பராமாயணத்தில் தசரதன் மிதிலையை அடைந்த அடுத்த நாளே திருமணம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. தசரதன் விவாமித்திரனிடம் ஏற்ற நாளை உரைத்திடுமாறு வேண்டினான். அவன் மறுநாளே தக்க நாள் என்றான்.

''வாளைஉக ளக்கயல்கள் வாவிபடி மேதி
மூளைமுது கைக்கதுவ மூரியவ ராலமீன்
பாளைவிரி யக்குதிகொள் பண்ணைவள நாடா
நாளைஎன உற்றபகல் நல்தவன்உ ரைத்தான்'' (1157)

இவ்வாறு திருமணவுறுதி செய்யப்பட்டதற்கும் திருமணத்திற்கும் இடையே கம்பநாடரால் ஒரு நாள் இடைவெளி குறைக்கப்பட்டுள்ளது.

இராமன் இலங்கைக்குச் செல்ல வழிவேண்டிக் கடலரசனை நோக்கித் தவங்கிடந்தான் என்பதனை இருவரும் தெரிவித்துள்ளனர். நிகழ்ச்சியில் மாற்றம் இல்லை; நிகழ்ச்சியின் கால அளவிலேயே வேறுபாடு உள்ளது. வான்மீகிமுனிவர் இராமன் மூன்றுநாள் தவங்கிடந்தான் என்கிறார்.

''அந்த இராமன் ஊக்கங்கொண்டு நோன்பு தவறாமல்
மண்ணில் தருப்பைப் படுக்கைமீது படுத்திருந்தான்.
மூன்று இரவுகள் கழிந்தன'' (யு.21:10)

என்பது வான்மீகம். கம்பநாடர் இராமன் தவங்கிடந்த கால அளவினை ஏழுநாளாக நீட்டிக் கூறியுள்ளார். ''புற்படுக்கையில் கருணைக்கடலான இராமன் கருங்கடலை நோக்கித் தவங்கிடந்தான். விதிப்படி வருணமந்திரத்தை உருவேற்றினான். இளமங்கையாகிய சீதையை மீட்பதற்கு வழி தருமாறு வேண்டினான். அவன் திருமேனியில் புழுதி படிந்தது; அழகிய முகத்தில் கொடிய கதிரவனின் கதிர்கள் பட்டன. அவனுக்கு ஒரு நாள் ஓர் ஊழி போல இருந்தது. அப்படி ஏழுநாள்கள் சென்றன. கடலரசன் வந்து தோன்றினான் அல்லன்'' என்கிறார் கம்பநாடர்.

மாதப்பெயர் வைகாசி என்னும் குறிப்பு இல்லை. எனவே பங்குனியில் உத்தர நட்சத்திரம் என்று பொருள் கொள்வதே சரி. கம்பநாடரும் அப்படித்தான் பொருள் கொண்டுள்ளார்.

''தருண மங்கையை மீட்பதுஓர் நெறிதருக என்னும்
பொருள் நயந்துநல் நூல்நெறி அடுக்கிய புல்லில்
கருணை அம்கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி'' (6593)

''பூழி சென்றுதன் திருஉருப் பொருந்தவும் பொறைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்
ஊழி சென்றன ஒப்பன ஒருபகல் அவைஓர்
ஏழு சென்றன வந்திலன் எறிகடற்கு இறைவன்'' (6594)

இத்தவங் கிடந்த நிகழ்ச்சியில் கம்பநாடரால் நான்கு நாள்கள் கூட்டப் பட்டுள்ளன.

இராமன் குரக்குப்படையின் முயற்சியால் கடல்மீது அணை கட்டி அதன்வழி இலங்கையை அடைந்தான் என்பதனை வான்மீகிமுனிவரும் கம்பநாடரும் ஒத்துக்கொள்கின்றனர். ஆனால் அணை எத்தனை நாள்களில் அமைக்கப்பட்டது என்பதில் வேறுபடுகின்றனர். வான்மீகி முனிவர்,

''விரைந்து வினைமுடிக்கும் வானரர்களால் ஐந்தாவது
நாளில் சுவேலமலையை எல்லையாக வைத்துக்கொண்டு
இருபத்துமூன்று ஓசனைகள் அப்படியே கட்டி
முடிக்கப்பட்டன'' (யு. 22:73)

என்று ஐந்து நாள்களில் அணை கட்டப்பட்டதனைத் தெரிவிக்கிறார். ''மூன்று நாள்களில் அணை திரிகூடமலையின் மீதுள்ள இலங்கையை எட்டித் தொட்டது. வானரப்படையின் ஆரவாரம் வானத்தைப் பிளந்தது. இப்பொழுது உள்ள வானம் மற்றோர் வானமோ என்று வியக்கும் நிலை உண்டாயிற்று''என்கிறார் கம்பநாடர்.

''உற்ற தால்அணை ஓங்கல் இலங்கையை
முற்ற மூன்று பகலிடை; முற்றவும்
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்;
மற்றுஇவ் வானம் பிறிதுஒரு வான்கொலோ?'' (6739)

இவ்அணை கட்டும் நிகழ்ச்சியில் கம்பநாடரால் இரு நாள்கள் சுருக்கப்பட்டுள்ளன.

நேரிய ஆராய்ச்சி நெறிமுறை

இச்சான்றுகளால் ஓர் உண்மை ஐயத்திற்கு இடமின்றி விளங்குகிறது. நிகழ்ச்சிகளின் கால அளவினைப் பொறுத்தமட்டில் கம்பநாடர் வான்மீகிமுனிவரை விட்டுத் தாராளமாக விலகிச் சென்றுள்ளார் என்பதே அது. இவ்வடிப்படை உண்மையை மறந்து கம்பராமாயணத்தை விளக்கவோ ஆராயவோ முற்படுவது தவறான

அணுகுமுறையாக முடியும். அந்தப் பாதை கடத்தற்கு அரிய குழப்பப் பாலைவனத்திற்கே இட்டுச்செல்லும். கம்பராமாயணத்திற்கு உரை வரைந்த அறிஞர் பெருமக்கள்கூட இவ்வுண்மையினை உணராமல் இடர்ப்பட்டுள்ளனர். அவர்கள் உரை சில இடங்களில் ஒளிகாட்டுவதற்கு மாறாக இருளில் தள்ளி மயங்க வைக்கிறது. மேலும் அவர்கள் கண்ட முடிபுகள் தவறாகச் சென்றுள்ளன. அவர்களால் நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கச்சிதமாக வனைந்து காட்டும் கம்பநாடரின் கலையழகைக் கண்டு மகிழ முடியாமற் போய்விட்டது.

எனவே கம்பராமாயணத்தை வான்மீகிராமாயணத்தையோ வேறு வடமொழி நூல்களையோ கருவியாகக் கொண்டு விளக்க முற்படுவது பொருத்தமாக அமையாது; நேரிய ஆராய்ச்சி நெறிமுறை ஆகாது. கம்பநாடரின் கைவண்ணத்தை அறியக் கம்பராமாயணமே உற்ற துணை. கம்பநாடர் செய்துள்ள நிகழ்ச்சிகளின் கால மாற்றம், காலத்தின் அளவு மாற்றம் ஆகியவை நேர்த்தி மிக்கன. அவ்விடங்களில் அவரின் தனிமுத்திரை பளிச்சிடுகிறது. கம்பநாடரின் தன்னேற்றத்தை என்றோ கண்டறிந்து,

"வாரமாம் இராம காதை
வளமுறத் திருத்தி னானே" *(பால. மிகைப்பாடல்,14)*

என்று திறனாய்வுக் குரல் கொடுத்தவரை, கம்பநாடரின் கவிதை ஓடுகிற நரம்பறிந்து கொண்டாடியவரைக் கற்பார் நெஞ்சம் கொண்டாடத் தொடங்குகிறது.

2. அயோத்தி வாழ்க்கை

கோபுரவாசல்

இராமாயணம் என்னும் கலைக்கோயிலின் கோபுர வாசல் பால காண்டம். இதில் தசரதன் செய்த வேள்வி, இராமன் பிறப்பு, வளர்ச்சி, திருமணம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இவை இராமாயணத்தின் தலைமை நிகழ்ச்சியான வனவாசத்திற்குத் துணைபுரிவன. இதில் சற்றொப்பப் பதினெட்டு ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தேர் நகர்வதற்கு முன்னே செய்யப்படும் ஆயத்தங்கள் போன்று அமைத்துள்ளன.

இருவேள்விகள்

தசரதன் நெடுங்காலமாகத் தனக்கு மகப்பேறு வாய்க்காமல் வாடினான். அவன் கலைக்கோட்டுமுனிவனின் உதவியை நாடினான். அவனைக்கொண்டு பரிவேள்வியும் (அசுவமேத யாகம்) மகவினை அளிக்கும் வேள்வியும் (புத்ர காமேஷ்டி யாகம்) நடத்தினான். இவ் வேள்விகள் ஓராண்டு தொடர்ந்தன. இறுதியில் புதல்வரைத் தரும் வேள்வியில் வந்த வெண்சோற்றை உண்டு தேவியர் கருவுற்றனர். அவர்கள் ஓராண்டு சென்ற பின் பிள்ளைகளை ஈன்றெடுத்தனர். இவை ஈராண்டு நிகழ்ச்சிகள்.

கம்பநாடரும் வான்மீகிமுனிவரும் இக்கால அளவில் பெரிதாக மாறுபடவில்லை. ஆனால் நிகழ்ச்சிகளில் சிறுசிறு மாற்றங்கள் செய்துள்ளனர். உரோமபதநாட்டுக்குச் சென்ற தசரதன் அயோத்தி திரும்பிய பின் அந்நாட்டு மன்னன் அனுப்பிவைக்கக் கலைக்கோட்டுமுனிவனும் அவன் மனைவியும் அயோத்தி அடைந்தனர் என்பது கம்பராமாயணம். உரோமபதநாட்டுக்குச் சென்ற தசரதனோடு கலைக்கோட்டுமுனிவனும் அவன் மனைவி சாந்தையும் வந்தனர் என்பது வான்மீகம். வான்மீகம் உரோமபதநாட்டுக்குச் சென்ற தசரதன் அந் நாட்டிலேயே ஏழெட்டு நாள் தங்கினான் என்கிறது (பா. 11;18). கம்பநாடர் காப்பியத்தில் இக்குறிப்புக் காணப்பட வில்லை.

கம்பராமாயணம் வேள்விகள் செய்யப்பட்டதனை மிகச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது. பன்னிரு திங்கள் வேள்வித் தீ முடுகி எரிந்தது, அதன்பின் வானத்தில் இடமின்றித் தேவர்கள் நிறைந்தனர், துந்துபிகள் ஒலிக்க வானவர் மலர்களைத் தூவி ஆரவாரிக்கக்

கலைக்கோட்டுமுனிவன் அத் தீயில் புதல்வரை அளிக்கும் ஆகுதியை வழங்கினான் என்கிறது. (264,265) ஆனால் வான்மீகம் இளவேனிற் காலத்தில் வேள்வி தொடங்கப்பட்டது, அப்பொழுதே பல நாடுகளையும் சுற்றிவர வேள்விக் குதிரை அவிழ்த்துவிடப்பட்டது, அடுத்த இளவேனிற் காலத்தில் பரிவேள்வி நிகழ்வுற்றது, அதன் முடிவில் மகவினை அளிக்கும்வேள்வி செய்யப்பட்டது என்று கூறியுள்ளது.

இராமன் பிறந்த நாள்

கவிஞர் இருவரும் இராமன் என்று பிறந்தான் என்பதைத் தெரிவித்துள்ளனர். கம்பநாடர்,

"வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்களும்
தூயகற் கடகமும் எழுந்து துள்ளவே" (280)

கோசலை கருமுகிற் கொழுந்து எழில்காட்டும் சோதியாகிய இராமனைப் பயந்தனள் என்கிறார். புனர்பூசம் என்பது நட்சத்திரம்; கடம் என்பது இலக்கினம். புனர்பூசத்தின் பிற்காற்கூறும், பூசமும், ஆயில்யத்தின் முற்காற்கூறும் கடக இலக்கினத்தில் அடங்கும் என்பது சோதிடம். மாதத்தைப் பற்றி நேரடிக் குறிப்பு ஏதும் கம்பநாடரால் தரப்படவில்லை. ஆனால், வான்மீகிமுனிவர் இராமனைச் சித்திரைத் திங்கள் வளர்பிறை நவமி திதியில் கற்கடக இலக்கினத்தில் பெற்றெடுத்தாள் (பா.18:9,10,11) என்று விளக்கமாகக் குறித்துள்ளார்.

சித்திரையில் தொடங்கிய வேள்வி ஓராண்டில் முடியச் சில நாள் சென்ற பின் வயாவும் வருத்தமும் உற்று உரிய பருவத்தில் பிள்ளைகளைப் பெற்றனர் என்பதாலும், வான்மீகிமுனிவர் குறித்துள்ள இராமன் பிறந்த நாள் குறிப்பினையே தாமும் தந்துள்ளார் என்பதாலும் கம்பநாடரும் சித்திரைமாதம் என்பதையே ஏற்றுக்கொண்டுள்ளார் எனலாம். .

வள்ளல் திருமணம்

அடுத்து விளக்கமாகப் பேசப்பட்டுள்ள நிகழ்ச்சி இராமனுக்கும் சீதைக்கும் நடைபெற்ற திருமணமாகும்.

இராமன் பிறப்புக்கும் திருமணத்திற்கும் இடையே பல ஆண்டுகள் ஓடிவிட்டன. கம்பநாடர் பதினான்கு ஆண்டுகள் என்று உய்த்துணர வைக்கிறார். வான்மீகிமுனிவர் இடைப்பட்ட ஆண்டுகள் பன்னிரண்டு என்கிறார் என்பர். இவ்இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தவை காப்பியத்தில் விரித்துச்சொல்லும் அளவுக்கு இன்றியமையாதவை அல்ல. இக்காலப் பகுதியில் இராமனோடு இலக்குவனும் பரதனோடு

சத்துருக்கனும் இணைந்து பிரியாமல் கலை பல பயின்று தலைசிறந்த பிள்ளைகளாய் விளங்கினர். கவிஞர் இருவரும் இராமனது திருமணத்திற்கு முன்னைய இளமைப்பருவ வாழ்க்கையைச் சுருக்கமாகவே தெரிவித்துள்ளனர்

இராமன் வயது

திருமணத்தின்போது இராமனுக்கு வயது என்ன என்பதனைக் காணலாம். இராமனை விசுவாமித்திரன் தன் வேள்வி காக்க அழைத்துச் சென்ற போது அவனுக்குப் பதினாறு வயது நிரம்பவில்லை என்கிறார் வான்மீகிமுனிவர். விசுவாமித்திரனிடம் தசரதன்,

> *"செந்தாமரைக்கண்ணன் என் இராமன் பதினாறு*
> *வயது நிரம்பாதவன். இவனுக்கு அரக்கர்களை*
> *எதிர்த்துப் போர்புரிவதற்கு ஏற்ற வன்மை*
> *இருப்பதாக எனக்குத் தெரிவில்லை"* *(பா.20:2)*

என்றான். இதில் இராமனது வயது சரியாகச் சுட்டப்படவில்லை. அவன் வயது பதினாறுக்குக் குறைவு என்று மட்டுமே சுட்டப்படுகிறது. அப்படியானால் பதினைந்து முடிந்து பதினாறாவது வயது நடக்கிறதா, அன்றி அதற்கும் குறைவான வயது ஆகிறதா என்னும் ஐயம் எழுகிறது.

வான்மீகத்தில் இராமன் வயது பற்றிய குறிப்பு வேறு ஈரிடங்களில் காணப்படுகிறது. அவற்றில் ஒன்று மாரீசன் பேச்சாகவும் மற்றொன்று சீதை பேச்சாகவும் அமைந்துள்ளது. சீதையைக் கவர்வதற்குத் தன் உதவியை நாடிய இராவணனிடம் மாரீசன் தன் முன்னை அனுபவத்தைக் கீழ்வருமாறு தெரிவித்தான்:

''ஒரு காலத்தில் நான் தண்டகவனத்தில் முனிவர்களின் தசையை உண்டு காலம் கழித்தேன். என் தொல்லை தாங்காமல் விசுவாமித்திரன் தசரதனிடம் சென்றான். அவனிடம் வேள்வி காக்க இராமனைத் தன்னுடன் அனுப்ப வேண்டினான். அப்பொழுது தசரதன், 'இந்த இராமன் பன்னிரண்டு வயது சிறுவன்; படைப்பயிற்சியில் தேர்ச்சி அற்றவன். ஆதலின் படையோடு யானே வந்து உன் பகைவர்களைக் கிழங்கெடுப்பேன்' என்றான். அதற்கு விசுவாமித்திரன் இணங்காமல் இராமனையே தருமாறு வேண்டிப் பெற்று ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தான். வேள்வியைக் குலைக்கச் சென்ற என்னை இராமன் தன் அம்பினால் தாக்கினான். நான் நூறு யோசனைகளுக்கு அப்பால் கடலில் தள்ளப்பட்டேன்'' (ஆ 38:1-30) என்றான். இதனால் விசுவாமித்திரனோடு வேள்வி காக்கச் சென்ற இராமனுக்கு வயது பன்னிரண்டு என்று சுட்டப்படுகிறது

அந்தணக்கோலத்தில் சீதையைக் கவரத் தண்டகவனம் அடைந்த இராவணனிடம் அவள் ''அந்தணரில் மேம்பட்டவனே, யான் மிதிலை மன்னன் சனகன் மகள்; இராமன் மனைவி; பெயர் சீதை. அயோத்தியில் இன்பப்பேற்றிடையே பன்னீராண்டுகள் வாழ்ந்தேன். அதன்மேல் பதிமூன்றாம் ஆண்டில் இராமனுக்கு இளவரசு பட்டம் கட்ட ஏற்பாடாயிற்று. தசரதனிடம் கைகேயி பெற்ற வரத்தால் நாங்கள் வனம் புகுந்தோம். அப்போது இராமனுக்கு வயது இருபத்தைந்து; எனக்குப் பதினெட்டு என்று கணக்கிட்டனர்'' (ஆ.47:3,4,5,10) என்றாள். இதனால் திருமணத்தின் போது இராமனுக்குப் பன்னிரண்டு வயது என்று உறுதிசெய்யப்படுகிறது.

கம்பராமாயணத்தில் விசுவாமித்திரனோடு தசரதன் நிகழ்த்தும் உரையாடலில் இராமன் வயது பற்றிய ஆண்டுக்குறிப்பு இல்லை; இளமைக்குறிப்பு மட்டுமே உள்ளது. தசரதன்,

''படையூற்றம் இலன்சிறியன் இவன்பெரியோய்'' (326)

என்கிறான். ஆனால் இராமனைக் குறிக்கக் கம்பநாடர் பயன்படுத்தும் சொற்கள் அவன் பன்னிரண்டு வயதினைக் கடந்த இளைஞன் என்பதனை உணர்த்தும் வகையிலேயே அமைந்துள்ளன. இராமனைக் குறிப்பதற்கு, வீரன் (308) நம்பி (331) செம்மல் (388) அண்ணல் (395) குரிசில் (450) ஐயன் (517) மைந்தன் (518) குமரன் (534) சிங்க ஏறு (670) ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் நம்பி, செம்மல், அண்ணல், ஐயன் ஆகிய சொற்கள் இராமனின் இளமைப் பொலிவினைக் காட்டுவன. நம்பி என்னும் சொல் முழுமையானவன் (பூர்ணன்) என்பதனைச் சுட்டும்; செம்மலும் அண்ணலும் ஐயனும் தலைவன் என்பதனை உணர்த்தும்.

மேலும் விசுவாமித்திரனோடு வேள்வி காண வந்த இராமலக்குவர்களைப் பார்த்து, 'இவர்கள் யார்?' என்று சனகன் விசுவாமித்திரனிடம் வினவினான். முனிவன் இராமனது குலப்பெருமையை விளக்கிப் பின் அவன் தோளாற்றலை வியந்து பேசினான். ''ஐயனே, அலைகடலின் நிறத்தைக் கொண்ட சிறந்த ஆடவனாகிய இராமனுடைய நீண்டு உயர்ந்த தோள்களின் திறத்தை ஊன்றி நோக்குவாய். இவன் எய்த அம்பு கனலைக் கக்கும் கண்களைக் கொண்ட தாடகையின் மார்பைத் துளைத்து, மலையைத் துளைத்து, மரத்தைத் துளைத்து, மண்ணைத் துளைத்தது'' என்று சனகனிடம் தெரிவித்தான்.

''அலைஉருவக் கடல்உருவத்து ஆண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலைஉருவப் புயவலியை நீஉருவ நோக்குஐயா
உலைஉருவக் கனல்உமிழ்கண் தாடகைதன் உரம்உருவி
மலைஉருவி மரம்உருவி மண்உருவிற்று ஒருவாளி'' (662)

இப்பாட்டில் சித்திரிக்கப்படும் இராமன் தோற்றப்பொலிவும், அவனைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தும் 'ஆண்டகை' என்னும் சொல்லும் கருதத்தக்கன, பன்னிரண்டு வயதுடைய ஒருவனை இவ்வாறு புனைந்துரைக்கவோ குறிக்கவோ இயலாது. எனவே கம்பநாடர் மாரீசன், சீதை ஆகியோர் கூற்றுகளில் வரும் இராமன் வயது பற்றிய குறிப்பை ஒதுக்கிவிட்டு 'ஊந ஷோடாச வர்ஷ:' என்பதற்குப் பதினாறு வயது நிரம்பாதவன் என்று பொருள் கொள்வதே சிறப்பு என்று கருதியுள்ளார். வான்மீகத்தில், காட்டிற்குப் புறப்பட்ட இராமனிடம் கோசலை அவன் பிறந்த பின் தனக்குப் பதினேழு ஆண்டுகள் வருத்தமின்றிக் கழிந்தன என்று கூறுவதும் இதனை உறுதிப்படுத்துகிறது.*

பெரியவாச்சான்பிள்ளை விளக்கம்

பெரியவாச்சான்பிள்ளை, தசரதன் கூற்றில் வரும் 'பதினாறு ஆண்டு நிரம்பாதவன்' (ஊந ஷோடச வர்ஷ:) என்பதற்கு, ''பூசலாடியும் படைபொருந்தியும் பழக்கமில்லை; இவரையா பூசலுக்குக் கொடுபோகத் தேடுகிறது? இதென்ன சேராச் சேர்த்தி! பதினாறு பிராயம் நிரம்புகைக்குச் சிலநாளாயிற்று வேண்டுவது. இன்னாள் இத்தனையும் (இந்த நாள்கள் எல்லாம்) கழிய வந்தானாகில் கண்ணழிக்க வொண்ணாது (மறுக்கமுடியாது). கொண்டு போவானிறே. இவ்வளவிலே வந்து பிழைத்தோமித்தனை. ஊந சப்தம் அந்த சங்க்யையிலே (எண்ணிக்கையிலே) சிறிது குறையாயிற்றுக் காட்டுவது. ஆகையால் பதினைந்தரையாதல், பதினைந்தேமுக்காலாதலாய்ப் பதினாறாம் பிராயம்'' என்று மிகத் தெளிவாக விளக்கம் தந்துள்ளார். மேலும் காட்டிற்குப் புறப்பட்ட இராமனிடம் கோசலை பேசிய பேச்சில் வரும் 'த₃ச ஸப்த ச' என்பது அவன் பிறந்த நாள் தொடங்கித் தான் படும் பாட்டைச் சொல்லும் வார்த்தையாகையால் அது முதற்பிறப்பையே குறிக்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.**

ஆனால் சீதை, மாரீசன் பேச்சுகளை அடிப்படையாகக் கொண்டு இராமன்வயதை விளக்கமுற்பட்டு, 'த₃ச ஸப்த ச' என்பதற்குப் பத்தும் ஏழும் ஏழும் என்று பொருள்கூறி இருபத்துநான்கு என்று

---

* *இதன் விளக்கத்தைப் 'பரதனின் கேகயப் பயணம்' என்னும் பகுதியில் காண்க.*

** *ஸ்ரீராமாயண தனிச்லோகம், பதி.ஸ்ரீ.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ப.28-29*

முடிவுகட்டுவதும், திருமணத்திற்குப் பின் பன்னிரண்டு ஆண்டுகள் அயோத்தியில் கழித்தனர் என்று கொண்டு அதனைக் கழித்து விசுவாமித்திரனோடு சென்ற போது அவனுக்கு வயது பன்னிரண்டு என்று தீர்மானிப்பதும் அவர் முன்னே தந்துள்ள அருமையான விளக்கத்திற்கு மாறாகச் செல்கின்றன.*

சீதை வயது

இனித் திருமணத்தின் போது, சீதைக்கு வயது யாது என்பதும் சிந்தித்தற்குரியது. ''திருமணம் நடந்த போது இராமனுக்கு வயது 12; சீதைக்கு வயது 6'' என்கிறது அக்கினி வேச்ய ராமாயண சாரம் (சுலோகம், 4). வான்மீகத்தில், இராவணனோடு உரையாடும் சீதை தனக்கு ஆறாம் வயதில் திருமணம் நடந்ததையும் பின்னர்ப் பன்னிரண்டு ஆண்டுகள் அயோத்தியில் வாழ்ந்ததையும் தெரிவித்துள்ளாள்.

வான்மீகிமுனிவர் சீதையின் அழகைப் பலபடப் புனைந்து கூறவில்லை. திருமண மேடைக்கு அழைத்துவரப் பெறும் சீதையைக் குறிப்பிடும் போது, ''எல்லாவகை ஆபரணங்களையும் பூண்டவளும், அன்னப்பறவைச் சித்திரம் போடப்பட்ட மென்மையான மஞ்சள் நிறப் பட்டாடை அணிந்தவளும், வாசனைத் திரவியங்கள் பூசப்பட்ட நல்ல செந்நிற மேலாடை போர்த்தவளும், மின்னற்கொடி போன்ற தோற்றமும் கறுத்த சுருண்ட தலைமுடியும் அகன்ற கண்களும் கொண்டவளும், தாமரையிலிருந்து தனியே பிரிந்து வந்த திருமகள் போன்றவளும், நாராயணனின் திருமேனியிலிருந்து நழுவி வந்தவளுமான சீதையை அந்த வேள்வித் தீயினுக்கு முன்பாகச் சனகன் அழைத்து'' (பா. 173: 26–28) வந்தான் என்கிறார். இப்புனைந்துரை ஆறு வயது பெண்ணைப் பற்றியதாகக் கொள்ள ஓரளவு தயக்கம் உண்டாகிறது.

மேலும், வனவாசத்தின் போது அத்திரிமுனிவன் பத்தினி அனசூயையிடம் தன் வரலாற்றைத் தெரிவிக்கும் சீதை,

> *''என் தந்தை கணவனைச் சேருவதற்குரிய என் பருவத்தைக் கண்டு உடைமையை இழந்த வறியவன் போல எளியவராய் மனக்கவலை அடைந்தார்'' (அ.118:34)*

என்கிறாள். இதனால் சீதை, கொழுகொம்பைப் படர்வதற்குரிய கொடி போல உரிய பருவம் அடைத்திருந்தாள் என்பது தெரிகிறது. 'ஆறுவயது பெண்ணுக்குத் திருமணம் இன்னும் ஆகவில்லையே' என்று தந்தை சனகன் வருந்தினான் என்பது இயல்புக்கு மாறாக அமையும்.

** ஷ நூல் *ப.30–33)*

கம்பநாடர் நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் மணப்பெண் உறுதியாக ஆறு வயது பேதைப் பெண் அல்லள். அவள் பெண்மை நலம் கனிந்த நங்கை; மதனற்கும் எழுத ஒண்ணா மங்கை; பெண்கனி.

"சொல்லும் தன்மைத் தன்றுஅது குன்றும்; சுவரும்திண்
கல்லும் புல்லும் கண்டுஉரு கப்பெண் கனிநின்றாள்" (511)

"வாட்கண் நங்கை" (516)

ஆகிய அறிமுகத்தொடர்கள் அவளை அகவாழ்வில் ஈடுபடுதற்குரிய பருவப் பெண் என்பதனை உறுதிப்படுத்துகின்றன. கம்பநாடர் திருமணத்திற்கு முன்பே இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு ஒருவர் மற்றொருவரை அடையத் துடித்தனர் என்று காட்டியுள்ளார். ஆறு வயது பெண் பன்னிரண்டு வயது ஆணைக் கண்டு காதலித்துத் தவித்தாள் என்பது கைக்கிளை ஒழுக்கமாய் நகைப்பிற்கு இடமாகும்.

திருமணத்திற்கு முன்பு மணவுறுதி செய்யப்பட்டது. சீதை மன்னர் வீற்றிருந்த மண்டபத்திற்கு வந்தாள். அவளைத் தோழியர் அழகினுக்கு அழகு செய்வது போல ஒப்பனை செய்தனர். அந்நிகழ்ச்சியினைத் தெரிவிக்கும் கம்பநாடர் அவள் மார்பகங்கள், இடை, கண்கள் ஆகிய உறுப்புகளின் நலம் புலப்படப் பாடியுள்ளார். சீதையின் மார்பகங்கள் என்னும் அழகிய பொற்செப்புகளில் பூங்கொடிகளையும் மன்மதனின் கரும்பு வில்லையும் மான்மதச் சாந்தினால் ஓவியமாகத் தீட்டினர். அதனால் பல்வகைச் சமயங்களால் பேசப்படும் இறைவனைப் போல 'உண்டு' என்றும் 'இல்லை' என்றும் கருதப்படும் அவள் இடையினுக்கு இடுக்கண் செய்தனர். அவள் கண்கள் நீண்டு, செவ்வரி படர்ந்து, வஞ்சமும் கள்ளத்தனமும் இன்றி, மழையைப் போலக் குளிர்ந்து விளங்கின: நஞ்சினோடு அமுதத்தைச் சேர்த்துச் செய்யப்பட்டவை போலக் காட்சி அளித்தன. அக்கண்களின் கருமை நிறம் அஞ்சனம் தீட்டியதால் வந்ததா அன்றி அண்ணல் இராமனின் கரிய மேனியைப் பார்த்ததால் வந்து ஒட்டிக் கொண்டதா என்று தம்மால் அறிய முடியவில்லை என்கிறார், கம்பநாடர்.

"சில்இயல் ஓதி கொங்கைத்
திரள்மணிக் கனகச் செப்பில்
வல்லியும் அனங்கன் வில்லும்
மான்மதச் சாந்தின் தீட்டிப்
பல்லியல் நெறியின் பார்க்கும்
பரம்பொருள் என்ன யார்க்கும்
இல்லைஉண்டு என்ன நின்ற
இடையினுக்கு இடுக்கண் செய்தார்" (1128)

"நஞ்சினோடு அமுதம் கூட்டி
நயனங்கள் ஆன என்னச்
செஞ்செவே நீண்டு மீண்டு
சேயரி சிதறித் தீய
வஞ்சமும் களவும் இன்றி
மழைஎன மதர்த்த கண்கள்
அஞ்சன நிறமோ அண்ணல்
வண்ணமோ? அறிதல் தேற்றாம்" (1131)

மேலும், கம்பநாடர் திருமணச்சடங்கின் முடிவில் இராமன் காதற்கடல் பொங்கும் சீதையோடு பாற்கடல் போன்ற பள்ளியைச் சார்ந்தான் என்கிறார் (1258). இதனால் கலவி இன்பம் நுகரும் செவ்வியளாக இருந்தாள் என்பது விளங்கும், இவற்றால் சீதையை மணவாழ்க்கையில் ஈடுபடும் பருவத்தளாகவே இருந்தாள் என்றே கம்பநாடர் காட்டியுள்ளார் என்பது தேற்றம்,

பதினாறும் பன்னிரண்டும்

பதினாறு வயது இளைஞனுக்கும் பன்னிரண்டு வயது மங்கைக்கும் மணம் முடிப்பதே பண்டைய வழக்கம். தொல்காப்பியம் தலைமகனுக்கும் தலைமகளுக்கும் இடையே இருத்தற்குரிய பத்துப் பொருத்தங்களைக் குறித்துள்ளது (மெய்ப்பாட்டியல், 25). அவற்றுள் ஒன்று ஆண்டு என்பது. அதனை விளக்கும்போது பேராசிரியர், ''யாண்டென்பது ஒத்தவாறு என்எனின், பன்னீர்யாண்டும் பதினாறியாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவம் என்பது ஒத்தினுள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பெனவே படும்'' என்று கூறியுள்ளார். சிலப்பதிகாரத்துள்ளும் இவ்வொப்புமை போற்றிக் காக்கப்பட்டுள்ளது. திருமணம் நிகழுங் காலத்துக் கண்ணகிக்கும் கோவலனுக்கும் முறையே பன்னிரண்டும் பதினாறும் அகவை என்பதனை,

"ஈகைவான் கொடிஅன்னாள் ஈர்ஆறுஆண்டு அகவையாள்"
(சிலம்பு.1:24)

"இருநிதிக் கிழவன்மகன் ஈர்எட்டுஆண்டு அகவையான்"
(சிலம்பு.1:34)

என்று குறித்துள்ளது சிலப்பதிகாரம்.

இம்மரபை ஒட்டியே கம்பநாடர் திருமணக்காலத்து இராமனைப் பதினாறு வயதிற்கும் சீதையைப் பன்னிரண்டு வயதிற்கும் உட்பட்டவர்களாகக் காட்டியுள்ளார். வான்மீகமும் திருமணத்தின்போது இராமனுக்கு வயது பதினாறு நடப்பதாகவே காட்டியுள்ளது என்பதே

தரும். இதனைக் கருத்தில் கொண்டு கணக்கிட்டால் இராமனுக்குத் திருமணத்தின் போது என்ன வயது என்பது தெளிவாகும்.

இராமனுக்குப் பங்குனி உத்தரத்தில் திருமணம் நிகழ்ந்தது. அவன் பிறந்ததோ சித்திரைத்திங்கள் வளர்பிறை ஒன்பதாம் நாள் (நவமி திதி). அடுத்து வரும் சித்திரைத்திங்கள் ஒன்பதாம் நாளன்று அவனுக்குப் பதினாறு வயது நிறைவுறும். பங்குனி உத்தரம் பௌர்ணமி நாளாகும். ''பௌர்ணமி முழு நிலவு நாள் தைத்திங்களில் பூசத்தன்றும், மாசியில் மகத்தன்றும், பங்குனியில் உத்தரத்தன்றும், சித்திரையில் சித்திரையன்றும், வைகாசியில் விசாகத்தன்றும் வருவதைக் காணலாம். இந்தக் கணிப்பு எந்த ஆண்டிலும் மாறாது என்பர், வானவியலார்.''* பங்குனி உத்தரத்திற்கும் சித்திரை வளர்பிறை நவமிக்கும் இடையே உள்ள இடைவெளி இருபத்துநான்கு நாள்கள் ஆகும். பதினாறு ஆண்டுகளில் இருபத்துநான்கு நாள்களைக் கழித்தால் இராமனுக்குத் திருமணம் நடந்த நாளை அறியலாம். கம்பநாடரின் கருத்துப்படி இராமனுக்குப் பதினைந்து ஆண்டும் பதினொரு மாதமும் ஆறுநாளும் ஆகிய போது திருமணம் நிகழ்ந்தது என்று தெளியலாம்.

திருமணத்திற்கு முன்னைய நிகழ்ச்சிகள்

இராமலக்குவர் விசுவாமித்திரனோடு வேள்வி காக்கச் சித்தாச்சிரமம் செல்வது, தாடகையைக் கொன்று வேள்வி காப்பது, மிதிலைக்குச் செல்வது, வில்லை முறிப்பது ஆகியவை பங்குனி உத்தரத்திற்கு முன்பு நடந்தவை ஆகும். இனி அவை நடந்த காலம், அவற்றின் கால அளவு ஆகியவற்றைக் காணலாம்.

சித்தாச்சிரமப் பயணம் (மூன்று நாள்கள்)

முதல் நாள்

கவிஞர் இருவரும் விசுவாமித்திரனோடு இராமலக்குவர் சித்தாச்சிரமம் நோக்கிச் சென்ற பயணம் குறித்து விரிவாகக் கூறியுள்ளனர். விசுவாமித்திரன், தசரதன் அரண்மனையினின்று இராம லக்குவரோடு புறப்பட்டுக் காடு நோக்கி நடந்தான். அவர்கள் சரயு வாற்றை அடைந்தனர். அதன்கரையில் அன்னப் பறவைகள் ஒலியெழுப்பிக்கொண்டு திரிந்தன. அவ்வொலி, அரங்கில் நடமாடும் பெண்களின் சிலம்பொலி போல இனிமையாக இருந்தது. கருப்பங்கொல்லையில் காற்றுப் புகுந்து சலசலத்தது. கமுக மரத்திலிருந்து வழிந்த தேன் வரப்பை உடைத்துக்கொண்டு வயலில்

---

* *தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு, 'வானவியல்', உலகத்தமிழ்மொழி அறக்கட்டளை, சிகாகோ, அமெரிக்கா, 2000 ப. 1448.*

ஓடியது. இளமங்கையர் கூந்தலைப் போன்ற சோலையில் வண்டுகள் சுற்றித் திரிந்தன. அச்சோலை நண்ணினார்' (335,336). அவ் இடத்தில் இரவைக் கழித்தனர்.

வான்மீகமும் முதல் நாள் இரவைச் சரயுவாற்றங்கரையில் இனிமையாகக் கழித்தனர் என்றே குறித்துள்ளது. அதற்கு முன் மூவரும் சரயுவாற்றின் தென்கரையில் ஒன்றரை யோசனை நடந்துள்ளனர் (பா.22:10). அவர்களுக்கு முனிவன் பலை, அதிபலை என்னும் மந்திரங்களை அறிவுறுத்தியுள்ளான் (பா.22:20). கம்பநாடர் இம் மந்திரங்களை வேறொரு நாள் (மூன்றாவது நாள்) அறிவுறுத்தியதாகக் காட்டியுள்ளார்.

இரண்டாம் நாள்

அடுத்த நாள் கதிரவன் எழ, மூவரும் அங்கிருந்து புறப்பட்டு ஆற்றைக் கடந்தனர். வழியில் ஒரு சோலையைக் கண்டனர். அதனைச் சூழ்ந்திருந்த நறும்புகை அங்கு முனிவர்கள் வேள்வி செய்கின்றனர் என்று கோள்சொல்லிற்று. ''இங்கேதான் யோகத்திலிருந்த சிவன்மேல் மன்மதன் மலர் அம்புகளைத் தொடுத்து, அவன் நெற்றிக்கண் நெருப்பில் பூளைப்பூவாய்ப் பொசுங்கினான்; அவன் சிதைந்த உடல் சிதறியதால் இஃது அங்க நாடு என்னும் பெயர் பெற்றது; இத் தவக்குடில்தான் காமனாச்சிரமம்'' என்று அவ்விடத்தின் வரலாற்றை இராமனுக்கு விசுவாமித்திரன் விளக்கினான். அங்கு உறைந்த முனிவர்கள், மூவரையும் முகமலர எதிர்கொண்டு அகமலர இன்சொல் வழங்கி விருந்தோம்பினர். அன்றைய இரவு அங்கே கழிந்தது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியைப் பாடத் தொடங்கும் கம்பநாடர்,

''தாழும் மாமழை தவழும் நெற்றியால்
சூழி யானைமேல் தோன்றும் மால்வரை
பாழி மாமுகட்டு உச்சிப் பச்சைமா
ஏழும் ஏறப்போய் ஆறும் ஏறினார்'' *(337)*

என்கிறார். கோவைக் கம்பன் அறநிலைப் பதிப்பு இதில் வரும் 'பாழிமாமுகட்டு உச்சிப் பச்சைமா ஏழும் ஏற' என்பதற்கு,'' பெருமை பொருந்திய உயர்ந்த சிகரத்தின் உச்சியில் சூரியனது தேரில் பூட்டப்பட்ட பச்சை நிறக்குதிரைகள் ஏழும் ஏறும்படியான உச்சிக் காலத்தில்'' என்று பொருள் கண்டுள்ளது. ஆனால் அறிஞர் வை.மு.கோ. உச்சிக்காலத்தில் என்று பொருள் கொள்ளாமல், ''உதயகிரியின்மேல் ஏறும்படியான காலைப்பொழுதில்'' என்று உரை வகுத்துள்ளார். இதுவே சரி. ஞாயிற்றின் எழுச்சியைக் கிழக்குமலையின்மேல் ஏறுவதாகப் பாடுவது கவிமரபு. உச்சிப்பொழுது

என்று பொருள் கொண்டால் ஆற்றங்கரையில் இரவு தங்கியவர்கள் காலைப்பொழுது கழிந்த பின் அவ் ஆற்றைக் கடந்தனர் என்று பொருள்பட்டுப் பொருந்தாமல் போகிறது. வேள்வியை விரைந்து முடிக்க விழையும் விசுவாமித்திரன் காலைப்பொழுதைச் சோலையில் வறிதே கழித்தான் என்று கொள்வது அவன் எண்ண ஓட்டத்திற்கு எதிராக அமைகிறது.

வான்மீகத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் இரண்டாம்நாள் நிகழ்ச்சியைத் தெரிவிப்பதில் எந்த மாற்றமும் இல்லை. அவர்கள் சரயுவாறும் திரிபதகையும் கூடும் இடத்தை நெருங்கிய நிலையில்,

> *''இனிய பார்வை கொண்ட இராமனே, இப் புனித ஆறுகளின் நடுவில் இன்றைய இரவைப் போக்குவோம்; நாளை கடந்து செல்வோம்'' (பா.23:16)*

என்றான், விசுவாமித்திரன். அவன் அழகிய கதைகளைச் சொல்ல அரசகுமரர்கள் கேட்டு மகிழ்ந்து துயில் கொண்டனர்.

மூன்றாம் நாள்

கவிச்சக்கரவர்த்தி இரண்டாம் நாள் இரவினைக் காமனாச்சிரமத்தில் கழித்த மூவரும் மூன்றாம் நாள் காலை புறப்பட்டு நண்பகற் பொழுதில் கொடிய பாலைவனத்தை அடைந்தனர் என்கிறார்.

> *''அன்றுஉறைந்து அலர்கதிர்ப் பரிதிமண் டிலம்அகன்*
> *குன்றின்நின்று இவரவோர் சுடுசுரம் குறுகினார்'' (342)*

அப்பாலைநிலத்தை எளிதில் கடப்பதற்காக முனிவன் இராம லக்குவர்க்குப் பலை, அதிபலை என்னும் இரு விஞ்சைகளைப் புகட்டினான். ''முனிவ, இந் நிலப்பகுதி சிவனது நெற்றிப் பார்வை பட்டு வெந்து போயிற்றோ? பழிமிக்க கொடுங்கோல் அரசன் ஆண்ட நாட்டினும் சீரழிந்து கிடக்கிறதே, ஏன்?'' என்று வினவினான் இராமன். விசுவாமித்திரன், தாடகையின் வரலாற்றைச் சொல்லி அவளால் அப்பகுதி அழிந்தது என்று முடித்தான். அப்பொழுது தாடகை எதிர்ப்பட்டாள்.

.தாடகைவதம் மாலையில் நடந்ததாகவே இரு நூல்களும் தெரிவிக்கின்றன. கம்பநாடர், அதனைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்: தாடகை இராமனைச் சூலப்படையாலும் கல்மழையாலும் தாக்கினாள். இராமன் சுடுசரம் ஒன்றால் அவளை வீழ்த்திக் கன்னிப்போரில் வாகை சூடினான். அவள் மார்பிலிருந்து வெளிப்பட்ட குருதிவெள்ளம் காடெங்கும் பரவி அந்திவானம் பற்றுக்கோடின்றி அறுந்து வீழ்ந்தது போலக் காட்சியளித்தது. இராமன்மீது வானவர் பூமழை பொழிந்தனர்;

விசுவாமித்திரனிடம் இராமனுக்குப் படைக்கலங்களை வழங்குமாறு வேண்டினர். அதன் பின்னர் மூவரும் இருகாத தூரம் நடந்துசென்று கோமதியாற்றினை அடைந்தனர். முனிவன் அவ்வாற்றின் வரலாற்றை இராமலக்குவர்க்குக் கூறினான். தன் தமக்கையே ஆறாக உருமாறியுள்ளாள் என்றான். அவர்கள் ஒரு சோலையை அடைய, அது திருமால் வாமனனாக இருந்து தவம் செய்தது என்று கூறி வாமனன் வரலாற்றை விளக்கினான். அங்கிருந்த சித்தாச்சிரமமே தன் உறைவிடம் என்று தெரிவித்தான். இரவு அங்கே தங்கினர்.

''விண்ணவர் போய பின்றை
விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனும் கானம் நீங்கி'' (394)

''இனையன நிகழ்ந்த பின்னர்
காவதம் இரண்டு சென்றார்'' (397)

''செம்மலும் இளைய கோவும்
சிறிதுஇடம் தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யாது என்ன'' (407)

என்னும் குறிப்புகள் தாடகைவதம் நிகழ்ந்த பின்பு அவ்விடத்திலேயே தங்காமல் பயணத்தைத் தொடர்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.

இம்மூன்றாம்நாள் நிகழ்ச்சியை வான்மீகிமுனிவர் இருநாள் நிகழ்ச்சிகளாக விரித்துக் கூறியுள்ளார். வான்மீகிமுனிவர் காலையில் ஓடம் ஏறி ஆற்றைக் கடந்து, அதன் தென்கரைவழியாக நடந்து, அச்சமூட்டும் காட்டுப் பகுதியை அடைந்தனர் என்கிறார். அவர்கள் தாடகை இருந்த வனத்தை நோக்கி நடந்தனர். அஃது அங்கிருந்து ஒன்றரை யோசனை தொலைவில் இருந்தது. முனிவன் அவள் வரலாற்றைக் கூறினான். இந்திரன் மண்ணுலகை அழிக்க நினைத்த விரோசனன் மகள் மந்தரையையும், மகாவிட்டுணு இந்திரனை அழிக்க எண்ணிய பிருகுமுனிவன் மனைவியையும் அழித்தனர் என்று சான்று காட்டி, அத் தீயவளைக் கொல்லப் பணித்தான். இராமன் வில்லை நாணேற்றி ஒலியெழுப்ப, அது கேட்டுச் சினமும் திகைப்பும் கொண்ட தாடகை இராமனை நோக்கி ஓடிவந்தாள்.

தாடகை இராமன்மேல் கல்மாரியும் கணைமாரியும் பொழிய, அவன் அவற்றைப் பொடியாக்கினான். இராமன் அவள் கைகளை அறுக்க, இலக்குவன் அவள் மூக்கை அறுத்துத் தள்ளினான். அந்நிலையிலும் அவள் மாயத்தால் பல்வேறு உருவங்களைக் கொண்டு போரிட்டாள். ''அந்திவேளை நெருங்குகிறது. அவ்வேளை வந்து விட்டால் அரக்கர்களுக்கு வலிமை கூடிவிடும். அவர்களை அழிப்பது அரிது'' என்று விசுவாமித்திரன் இராமனை விரைவு படுத்தினான். உடனே

இராமன் அவளைச் சரம் ஒன்றினால் வீழ்த்தினான். இதனால் தாடகைவதம் மாலைக்காலம் முடியும் தருவாயில் நிகழ்ந்தது என்பது புலப்படுகிறது. முனிவன்,

> *"இனிய பார்வை கொண்டவனே, இன்று இரவு இங்குத் தங்குவோம். நாளை காலை என் குடிலுக்குச் செல்வோம்"*
> *(பா.26:36)*

என்றான். அக்காட்டில் இனிதே இரவைக் கழித்தனர். அந்த வனம் சாபம் நீங்கிப் பொலிவுற்றது.

மறுநாள் காலை முனிவன் இராமனுக்குப் படைக்கலங்களை ஒவ்வொன்றின் பெயர், தன்மை இவற்றைக் கூறி வாரி வழங்கினான். அவர்கள் சித்தாச்சிரமம் நோக்கிப் புறப்பட்டனர். நடந்தவாறே விசுவாமித்திரன் இராமனுக்கு எய்த அம்புகளைத் திரும்ப இழுத்துக் கொள்ளும் வித்தையைக் கற்றுக் கொடுத்தான். அவர்கள் வறண்ட பாலையைக் கடந்த பின் செழித்த மரங்களும் பாடித் திரியும் பறவைகளும் மான்களும் நிறைந்த சோலையில் அமைந்த சித்தாச்சிரமத்தைக் கண்டனர். வீரர் இருவரின் கைகளைப் பற்றியவாறு முனிவன் தவக்குடிலுக்குள் நுழைந்தான். விசுவாமித்திரன் ஐம்பொறிகளை அடக்கி வேள்வித்தீக்கை அடைந்தான் என்கிறார் வான்மீகிமுனிவர்.

கம்பநாடர் சித்தாச்சிரமத்தை அடைந்ததனையும் மூன்றாம் நாளில் நடந்ததாகக் காட்டிப் பயணத்தில் ஒரு நாளைக் குறைத்துள்ளார். அவர்கள் இரவுவேளைகளை ஆற்றங்கரைச் சோலையிலோ தவக்குடிலிலோ கழிப்பதாகவே முன்னர்க் காட்டியுள்ளமையால் அதற்கேற்பத் தாடகை வதத்திற்குப் பின் அக் கொடிய காட்டில் தங்காமல் சற்றொப்ப இருகாதம் நடந்து கோமதியாற்றங்கரையில் இருந்த சித்தாச்சிரமத்தில் தங்கினர் என்று காட்டுவதே பொருத்தமாக இருக்கும் என்று கம்பநாடர் கருதினார் போலும். கம்பராமாயணத்தின்படி சித்தாச்சிரமப் பயணம் மூன்றுநாள் நிகழ்ச்சி; வான்மீகத்தின்படி நான்கு நாள் நிகழ்ச்சி.

வேள்வி காத்தல் (ஆறு நாள்கள்)

இருநூல்களும் வேள்வி ஆறு நாள்கள் நடந்ததாகவே தெரிவிக்கின்றன. ஆனால் வேள்வித்தொடக்கம், முடிவு பற்றி வேறுபாடு காணப்படுகிறது. கம்பராமாயணத்தில் விசுவாமித்திரன் சித்தாச்சிரமத்தை அடைந்த அன்று இரவே வேள்வியைத் தொடங்கினானா அன்றி மறுநாள் தொடங்கினானா என்பதற்கான வெளிப்படைக்குறிப்புக் காணப்படவில்லை. கதிரவன் மறைவுக்குச்

சற்று முன்பாகத் தாடகைவதம் நிகழ்ந்துள்ளது. அதன் பின்பு அங்கிருந்து இரு காத தூரம் நடந்து சித்தாச்சிரமத்தை அடைந்துள்ளனர். விசுவாமித்திரன் அங்கே இருந்து வேள்வி செய்வதாகச் சொல்லி அதற்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து வந்துள்ளான். அதன் பின்னரே வேள்வி தொடங்கப்பட்டுள்ளது.

"ஈண்டுஇருந்து இயற்றுவென் யாகம் யானெனா
நீண்டபூம் பழுவத்து நெறியின் எய்திப்பின்
வேண்டுவ கொண்டுதன் வேள்வி மேவினான்
காண்டகு குமரரைக் காவல் ஏவியே" (432)

"எண்ணுதற்கு ஆக்கஅரிது இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்" (433)

என்று வேள்வி நடந்த விதத்தைத் தெரிவிக்கிறார் கம்பநாடர்.

பகலவன் மறைவுக்குப் பின் நிகழ்ந்துள்ள இருகாதப் பயணம், வான்மீகி போல ஆறு இரவுகள் என்னாமல் ஆறு நாள்கள் வேள்வி காத்தனர் என்று வரும் குறிப்பு இவை வேள்வி மறுநாள் தொடங்கப்பட்டது என்னும் எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன. வான்மீகத்தையொட்டி வேள்விக்கு முன்னேற்பாடாக ஆசிரமத்தை அடைந்த அன்றைய இரவே முனிவன் பேசாநோன்பை மேற்கொண்டான் என்று கொள்வதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் சித்தாச்சிரமத்தை அடைந்த அடுத்த நாள்தான் வேள்வி தொடங்கப்பட்டு ஆறு நாள் நடந்தது என்பது தெளிவு. அஃதாவது அவர்கள் அயோத்தியைவிட்டுப் புறப்பட்ட மூன்றாம் நாள் சித்தாச்சிரமத்தை அடைய, வேள்வி நான்காம் நாள் தொடங்கி நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய ஆறு நாள்கள் நடைபெற்று நிறைவுற்றது.

வேள்வி முடியும் நாள் அன்று அரக்கர்கள் இடிமுழக்கம் செய்துகொண்டு வந்தனர். வேள்விச்சாலையை மறைத்த அந்தச் சேனை வானப்பரப்பை மூடி நின்றது. இலக்குவன் அம்புகளை எய்து அரக்கர்களை அழிக்க முற்பட்டான். இராமன் சரக்கூடம் அமைத்துத் தசைத்துண்டமும் இரத்தமும் வீழ்ந்து வேள்வியைச் சிதைத்துவிடாமல் பாதுகாத்தான். அரக்கர்களைக் கண்டு அஞ்சிய முனிவர்கள் இராமனிடம் தஞ்சம் புகுந்தனர். இராமன் எய்த ஓர் அம்பு மாரீசனைக் கடலில் தள்ள, மற்றோர் அம்பு சுபாகுவை எமனுலகுக்கு அனுப்பியது. அரக்கர் தோற்றோடி மறைந்தனர். விசுவாமித்திரன் வேள்வி நிறைவுற்ற மகிழ்ச்சியில், "உலகங்களைப் படைத்தும், ஊழிப் பெருவெள்ளம்

கோக்கும் காலத்தில் அவை அழியாவண்ணம் திருவயிற்றில் அடக்கிக் காத்தும் பாதுகாப்பவனே, நீ வேள்வி காத்ததனை என் பெருமையாகக் கருதுவதல்லாமல் உனக்கு அரிய செயலாக யான் கருதவில்லை'' (449) என்று கூறி இராமனைக் கொண்டாடினான். அன்று இராமன் முனிவர்களோடு இனிது தங்கினான்.

இனி, வான்மீகம் வேள்வித் தொடக்கம், நிறைவு பற்றிக் கூறுவதனைக் காணலாம். சித்தாச்சிரமத்தைச் சேர்ந்த மறுநாள் விசுவாமித்திரன் வேள்வியைத் தொடங்கினான். அதற்குரிய முன்னேற்பாட்டை முதல்நாள் இரவே செய்து முடித்திருந்தான். இராமலக்குவர் காலைச் சந்தியை முடித்துக்கொண்டு முனிவனை அணுகினர். அவன் பேசா நோன்பு மேற்கொண்டிருந்தான். மற்ற முனிவர்கள் இராமனிடம் அன்று முதல் ஆறு இரவுகள் வேள்வியைக் காக்க வேண்டும் என்றனர். வீரர் இருவரும் இரவுபகல் இமைமூடாமல் வேள்வி காத்தனர். ஐந்து நாள்கள் கழிந்தன.

ஆறாம் நாள் வேள்வித்தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அப்பொழுது வானில் அரக்கர்கள் பெருமுழக்கம் செய்துகொண்டு தோன்றினர். இரத்த வெள்ளம் பொழிந்து வேள்வியைக் குலைக்க முயன்றனர். இராமன் மானவக் கணையை மாரீசன் மார்பில் ஏவ, அவன் நூறு யோசனைக்கு அப்பால் சென்று கடலில் வீழ்ந்தான்; நெருப்புக் கணையைச் சுபாகுவின் மார்பில் விட அவன் மாண்டான். காற்றுக் கணையால் எஞ்சிய அரக்கரைக் கூற்றுக்கு இரையாக்கினான். முனிவர் இராமனின் வீரத்திற்குப் புகழாரம் சூட்டினர். ''தோளாற்றல் மிக்கவனே, புகழ்மாலை பூண்டவனே, என் எண்ணம் இப்பொழுது ஈடேறியது. நீ ஆசிரியன் கட்டளையை அழகுற முடித்தாய். இந்தச் சித்தாச்சிரமம் இன்றுதான் தன் பெயருக்கு ஏற்பச் சித்தி பெற்ற ஆசிரமம் ஆயிற்று'' (பா.30:22) என்று விசுவாமித்திரன் இராமனைக் கொண்டாடினான். அவர்களோடு மாலைச் சந்தி வழிபாட்டை முடித்து இரவை இனிதே போக்கினான்.

இராமாயண சார சங்கிரகம் கூறுவது சரியா?

வான்மீகத்தில் வரும் இரவு, விடியற்காலக் குறிப்புகளைக் கொண்டு கணக்கிட்டால் அயோத்தியினின்று புறப்பட்ட மூவரும் நான்காம் நாள் சித்தாச்சிரமத்தை அடைந்தனர் என்பதும், ஐந்தாம் நாள் தொடங்கி ஆறு நாள் நடைபெற்ற வேள்வி பத்தாம் நாள் முடிந்தது என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால் வான்மீகத்தின் காலக்குறிப்பினை ஆராய்ந்து விளக்கும் இராமாயண சார சங்கிரகம் என்னும் நூல் மூவரும் சித்தாச்சிரமத்தை அடைந்த அன்றே (பஞ்சமி) வேள்வி தொடங்கியது என்றும், அன்று இரவு முதல் ஆறு இரவுகள் (தசமி)

வரை இராமலக்குவர் வேள்வி காத்தனர் என்றும் கூறுகிறது. விசுவாமித்திரன் சித்தாச்சிரமத்தை அடைந்த நான்காம் நாளே வேள்விக்கான பேசா நோன்பை மேற்கொண்டான் என்பது சரி. ஆனால் இராமலக்குவர் அன்றிரவே வேள்வி காக்கத் தொடங்கினர் என்பது பொருந்துமாறு இல்லை. அன்று அவர்கள் மனச்சஞ்சலமின்றி இரவைக் கழித்து மறுநாள் காலை எழுந்து சந்திவழிபாடு முதலியவற்றை முடித்துக் கொண்டு விசுவாமித்திரனைச் சார்ந்துள்ளனர்.

"அரசகுமரர்கள் இருவரும் அந்த இரவை மனச்சஞ்சலம்
அற்றவர்களாய்க் கழித்து, விடியற்காலத்தில் எழுந்திருந்து
காலைச்சந்தியைச் சேவித்தும், உருச்சொல்லலை (ஜபம்)
முறைப்படி நிறைவேற்றியும் தூய்மையானவர்களாய்
எரியோம்பல் செய்து இருக்கையில் அமர்ந்திருக்கும்
விசுவாமித்திரனை வணங்கினர்" *(பா. 29:55)*

என்று தெரிவிக்கிறது வான்மீகம்.

அப்பொழுது முனிவர்கள், அவர்களிடம் விசுவாமித்திரன் பேசாநோன்பு மேற்கொண்டிருப்பதைத் தெரிவித்து, 'இன்று முதல் ஆறு இரவுகளும் வேள்வி காக்க வேண்டும்' (அத்$_3$ய ப்ரப்$_4$ருதி ஷட்$_3$ ராத்ரம் ரக்ஷதாம்) என்று தெரிவித்துள்ளனர். இதனால் வேள்வி ஐந்தாம் நாள் தொடங்கி ஆறுநாள் நடந்தது என்பதும், பத்தாம் நாள் இரவுக்கு முன்னரே நிறைவடைந்தது என்பதும் தெளிவாகின்றன. இது விசுவாமித்திரன் வேள்வி நிறைவுற்ற நிலையில் மற்றவர்களோடு மாலைச்சந்தி வழிபாட்டைச் செய்தான் என்பதால் உறுதிப்படுகிறது.

மிதிலைப்பயணம் (இருநாள்கள்)

முதல் நாள்

வேள்வி முடிந்த அன்று (ஒன்பதாம் நாள்) மூவரும் சித்தாச்சிரமத்திலேயே தங்கினர் என்பதும் மறுநாள் காலை (பத்தாம் நாள்) மிதிலைக்குப் புறப்பட்டனர் என்பதும் கம்பநாடரால் கீழ்வரும் பாடல்களில் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன.

"பின்னர்அவ் எழில்மலர்க் கானத்து,
அன்று தான்உவந்து அருந்தவ முனிவரோடு இருந்த
குன்று போல்குணத் தான்எதிர் கோசலை குருசில்
இன்று யான்செயும் பணிஎன்கொல் பணிஎன இசைத்தான்
(450)

அரிய யான்சொலின் ஐயநிற்கு அரியதுஒன் றில்லை
பெரிய காரியம் உளஅவை முடிப்பது பின்னர்;
விரியும் வார்புனல் மருதம்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியும் காண்டும்நாம் எழுகஎன்று போனார்"
(452)

'இன்று யான் செய்யும் பணி என்கொல்?' என்னும் இராமனின் வினா அஃது அடுத்த நாள் காலைப்பொழுது என்பதனைக் காட்டுகிறது. இப்படி ஒரு சில நாள்களில் சூரியன் மறைவு, தோற்றம் இவற்றால் இரவு வருதலையும் மறுநாள் பிறத்தலையும் காட்டாமல் சூழ்நிலையாலும், 'இன்று', 'நாளை' என்னும் சொற்களாலும் குறிப்பாகக் காட்டுவது கம்பநாடர் இயல்பு. இதனால், பலமுறை ஞாயிற்றையும் நிலவையும் பாடும் நிலை தவிர்க்கப்பட்டுப் புனைந்துரையால் சோர்வு ஏற்படாமல் காக்கப்படுகிறது. கம்பராமாயணம், மிதிலைக்குச் செல்லலாம் என்னும் கருத்தினை விசுவாமித்திரனே கூறியதாகத் தெரிவிக்கிறது. வான்மீகிராமாயணத்தில் முனிவர்கள் கூறியதாகக் காணப்படுகிறது. அவர்கள் தங்களுடன் இராமனும் வரவேண்டும் என்றும் அங்குள்ள வலிய வில்லைக் காண வேண்டும் என்றும் பணித்தனர். விசுவாமித்திரனுக்குக் கங்கைக் கரையில் உள்ள இமயமலைக்குச் செல்லவேண்டும் என்பது விருப்பம்.

மிதிலைப்பயணத்தின் முதல்நாள் இரவு அவர்கள் சோணையாற்றங்கரையில் தங்கினர். இரு நூல்களும் அவ்வாறே தெரிவிக்கின்றன. அவர்கள் ஆற்றை அடையவும் கதிரவன் மறையவும் சரியாக இருந்தது. மறுநாள் தோன்றும் போது குளிர்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் வெப்பத்தைத் தணித்துக் கொள்பவன் போலக் கதிரவன் தன் தேரோடும் கடலில் குளித்தான் என்கிறார் கம்பநாடர்.

> *"நதிக்கு வந்துஅவர் எய்தலும் அருணன்தன் நயனக்*
> *கதிக்கு முந்துறு கலினமான் தேரொடும், கதிரோன்*
> *உதிக்கும் காலையில் தண்மைசெய் வான்தனது உருவில்*
> *கொதிக்கும் வெம்மையை ஆற்றுவான் போல்கடல்*
> *குளித்தான்"* (453)

இதனால் வெயிலின் கடுமை விளங்குகிறது. அது பங்குனி மாதம் என்பதற்கு ஏற்ப வெப்பம் மிக்க நாளாக இருந்துள்ளது. தாமரைமலர்கள் இதழ்களாகிய கதவுகளை மூடிவிட்டமையால் வண்டுகள் தம் பெடையோடு சென்று மலர்ச்சோலையில் தங்கின. அவர்களும் அச்சோலையையே தங்குவதற்குரிய இடமாகத் தேர்ந்தனர். 'நறுமலர்ச் சோலைபுக்கு உறைந்தார்' (454).

அன்று நிலவு வீசியது பற்றிய குறிப்பு ஏதும் கம்பராமாயணத்தில் இல்லை. வான்மீகத்தில் அத்தகைய குறிப்பொன்று காணப்படுகிறது. நெடுந்தொலைவு நடந்து, அந்திநேரத்தில் சோணையாற்றின்கரையை அடைந்து, நீராடி, வழிபாட்டை முடித்த முனிவர்கள் விசுவாமித்திரன் முன்னே சென்று அமர்ந்தனர். அவன் அவ்விடத்தை ஆண்ட குசன்

மரபின் வரலாற்றை விரித்துரைத்தான். அவ்வரலாற்றைச் சொல்லி முடிப்பதற்குள் நள்ளிரவு வந்தது. அப்போது பறவைப்பாட்டு அடங்கிற்று; விலங்குகளின் இயக்கம் நின்றது; மரங்கள் அசையவில்லை; தாரகைகள் வானில் கண்சிமிட்டின; சந்திரன் குளிர்ந்த கதிர்களால் மகிழ்ச்சியை உண்டாக்கினான். முனிவன் பணித்தவாறு இராமலக்குவர் உறங்கச் சென்றனர்.

"காகுத்தனே, யான் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்க நள்ளிரவு ஆகிவிட்டது. உறங்குவாய்; வாழ்த்துகள். இந்த வழி நமக்கு இடையூறு இல்லாமல் அமைவதாகும்" (பா.34:14)

என்றும்,

"அரச, குளிர்ந்த கதிர்களைக் கொண்டவனும் உலகின்
இருளை ஒழிப்பவனும் ஆகிய திங்களஞ் செல்வன் உலகில்
வாழும் உயிர்களின் நெஞ்சங்களை ஒளியால்
மகிழ்வூட்டுபவனாய் எழுகிறான்" (பா.34:17)

என்றும் விசுவாமித்திரன் இராமனிடம் தெரிவித்தான். இதில் வரும் நிலவின் தோற்றம் பற்றிய குறிப்பு அன்றைய நாள் தேய்பிறைப்பக்கத்தின் பிற்பாதி நாள்களில் ஒன்று என்பதனைத் தெரிவிக்கிறது. அன்று ஏகாதசி என்று வரையறுத்துக் கூறுகிறது இராமாயண சார சங்கிரகம். கம்பநாடர் அதனை வளர்பிறை ஒன்பதாம் நாளாகக் கொண்டுள்ளார் என்பது அடுத்த நாள் பற்றிய புனைந்துரையால் விளங்குகிறது.

இரண்டாம் நாள்

மறுநாள் பொழுது விடிந்தது. கூற்றுவன் உடல்போலக் கருகிய இருளை ஓட்டி உலகைக் காப்பதற்காக நீலக்கடலில் இருந்து கதிரவன் தேரோடு புறப்பட்டான். அக்காட்சி திருமாலின் உந்தியிலிருந்து நான்முகனோடு மலர்ந்த தாமரை மலர் முளைத்தது போன்றிருந்தது.

"காலன் மேனியின் கருகுஇருள் கடிந்துஉலகு அளிப்பான்
நீல ஆர்கலி தேரொடு நிறைகதிர்க் கடவுள்
மாலின் மாமணி உந்தியில் அயனொடு மலர்ந்த
மூல தாமரை முழுமலர் முளைத்தென முளைத்தான்" (455)

அவர்கள் கங்கையாற்றைக் கடந்து மிதிலையை நெருங்கினர். வழியில், சுருங்கல் ஒன்று கிடக்கும் வெற்றிடத்தைக் கண்டனர். இராமன் திருவடித்துகள் பட்டவுடன் அதிலிருந்து ஓர் அழகிய பெண்மணி எழுந்து நின்றாள். விசுவாமித்திரன் இராமனிடம் தீவினை செய்த தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டாகுமாறு வெகுண்டுரைத்த கௌதமன் மனைவி அகலிகையே அவள் என்றான்.

இராமன் அவள் கல்லான வரலாற்றைக் கூறுமாறு வேண்ட முனிவன் அதனைத் தெரிவித்தான்.

ஒருநாள் கௌதமமுனிவன் வெளியே சென்றிருந்த வேளை, அகலிகைமீது அடங்காக் காமம் கொண்டிருந்த இந்திரன் கௌதம முனிவன் வேடத்தில் அவளை அடைந்தான். இருவரும் காமக் கள் அருந்திக் களித்தனர். அவளுக்குத் தன்னோடு களிப்பவன் தன் கணவன் அல்லன் என்னும் ஐயம் உண்டாயிற்று. எனினும் அவனோடு களித்தல் முறையாகுமா ஆகாதா என்று ஆராய முடியாமல் இணங்கி இருந்தாள். அப்போது முனிவன் வர, அகலிகை நடுங்கினாள்; இந்திரன் பூனையாக மாறி வெளியேற முற்பட்டான். கௌதமன், அவனை உடம்பெல்லாம் கண்ணாகும்படியும் அவளைக் கல்லாய்ப் போகும்படியும் வெகுண்டுரைத்தான். அவள் பிழைபொறுக்க வேண்டினாள். அதற்கு இராமன் திருவடித்துகள் படும் போது கல்லுருவம் நீங்கும் என்று தெரிவித்தான். இதுவே முன்பு நடந்தது. ''இராமா, தாடகையை வதைத்த அவ்விடத்தில் உன்திருக்கையின் திறத்தை உணர்ந்தேன்; இவ்விடத்தில் உன் திருவடியின் திறத்தை உணர்ந்தேன்'' என்று பாராட்டினான். இராமன், ''தாயே, கௌதமமுனிவனிடம் சென்று பணிவிடை செய்வாய்'' என்று அகலிகையிடம் கூறினான். அவள் இராமன் திருவடிகளை வணங்கிப் புறப்பட்டாள். அகலிகையைக் கௌதமமுனிவனிடம் சேர்ப்பித்து அவர்கள் நகர் நோக்கி நகர்ந்தனர்.

மூவரும் மதிற்சுவரைத் தாண்டி மிதிலையின் உள்ளே நுழைந்த வேளை மாலை நேரம். இதனை நகர் பற்றிய புனைந்துரைப் பாடல் ஒன்று புலப்படுத்துகிறது. கதிரவன்ஒளி மறைய வானம் திருப்பாற்கடலாகக் காட்சியளித்தது. மாடங்களின் மேலே கட்டப்பட்டிருந்த துகிற்கொடிகள் மேகக்கூட்டம் படும் போது நனைந்தும் அகிற்புகை படும் போது புலர்ந்தும் பறந்தன என்கிறது அப்பாடல்.

''பகல்கதிர் மறைய வானம்
பாற்கடல் கடுப்ப நீண்ட
துகில்கொடி மிதிலை மாடத்து
உம்பரில் துவன்றி நின்ற
முகில்குலம் தடவும் தோறும்
நனைவன முகிலின் சூழ்ந்த
அகில்புகை கதுவும் தோறும்
புலர்வன ஆடக் கண்டார்'' *(482)*

இப்பாடலில் வரும் 'பகல்கதிர் மறைய வானம் பாற்கடல் கடுப்ப' என்னும் குறிப்பினால் மாலைக்காலத்திற்குச் சற்று முன்பு அகலிகை

சாபநீக்கம் நிகழ அதன் பின்னர் மாலையில் மிதிலைக்குள் நுழைந்தனர் என்பது தெரிகிறது.

அந்த இனிய மாலைப்பொழுதில் சீதை கன்னிமாடத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவ்வீதியில் இருட்கனி இராமன் நடந்தான். நம்பி நங்கையை நோக்க நங்கையும் நம்பியை நோக்கினாள். இருவரும் இதயம் மாறிப்புக்கு எய்தினர். கண்ணால் விளைந்த காமநோயினால் சீதை கலங்கினாள். அந்நிலையில் கதிரவன் மறைந்தான். கவிஞர் அந்தக் காமத்தீ தன்னையும் சுடுவதைத் தாங்காதவன் போலக் கதிரவன் 'கடலின் மூழ்கினான்' (540) என்று தற்குறிப்பேற்றிப் பாடுகிறார்.

அடுத்தடுத்து மாலை, அந்திமாலை, இரவு, நிலவு ஆகியவை தோன்றச் சீதை ஆற்றாமல் தவித்தாள். சீதை நிலவை இரவாகிய கருநெருப்பின்இடை வந்த வெண்நெருப்பு என்று பழித்தாள். அந்த நிலவு அமரர் பாற்கடலைக் கடைந்த போது எழுந்த அமுதகலசம் போலக் கடலினின்றும் எழுந்தது. திருமாலின் உந்தியில் பூத்த தாமரைக்கு நிகராகக் கடல், தோற்றுவித்த பிறிதொரு தாமரைமலர் போலக் காட்சியளித்தது. கிழக்குத் திசையில் வைத்த வெள்ளிக்கும்பத்தில் இருக்கும் கமுகம்பாளை விரிவது போன்று நிலாக்கற்றை விரிந்தது.

"அருந்த அமரர் கலக்கியநாள்
அமுதம் நிறைந்த பொற்கலசம்
இருந்தது இடைவந்து எழுந்ததுஎன
எழுந்தது ஆழி வெண்திங்கள்" (549)

"வண்டாய் அயன்நான் மறைபாட
மலர்ந்தது ஒருதா மரைப்போது
பண்டுஆ லிலையின் மிசைக்கிடந்து
பாரும் நீரும் பசித்தான்போல்
உண்டான் உந்திக் கடல்பூத்தது;
ஓதக் கடலும் தான்வேறுஓர்
வெண்தா மரையின் மலர்பூத்தது
ஒத்தது ஆழி வெண்திங்கள்" (550)

"புள்ளிக் குறியிட் டெனஒள்மீன்
பூத்த வானம் பொலிகங்குல்
நள்ளில் சிறந்த இருட்பிழம்பை
நக்கி நிமிரும் நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக்கு என்னாம்கொல்
கீழ்ப்பால் திசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத்து இளங்கமுகின்
பாளை போன்று விரிந்துளதால்" (551)

இப்பாடல்களில் நிலவுக்குப் பொற்கலசம், மலர்ந்த தாமரை, வெள்ளிக்கும்பத்தில் உள்ள இளங்கமுகம்பாளை ஆகியவை உவமைகளாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் இரண்டு உவமைகள் நிலவின் வடிவத்தைக் குறிக்கின்றன. இறுதி ஒன்று நிலாக்கதிர் விரிந்த பான்மையை விளக்குகிறது. பொற்கலசமும் மலர்ந்த தாமரையும் பாதிக்குமேல் வளர்ந்துவிட்ட நிலவின் வடிவினைக் குறிக்கின்றன. நிலவு கீழ்த்திசையில் தோன்றியது என்றும் குறிப்பு அது வளர்பிறைப்பக்கம் எட்டாம் நாளுக்குப் பின்னைய நிலா என்பதனைக் காட்டுகிறது. ஏனெனில், வளர்பிறையில் எட்டாம் நாளுக்குப் பின்னே நிலவு கீழ்ப்பகுதி வானத்தில் தோன்றும். அன்றிலிருந்து ஐந்தாம் நாள் திருமணம் நிகழ்ந்தது என்பதும், திருமணம் நிகழ்ந்த நாள் பௌர்ணமி என்பதும் ஐயத்திற்கு இடமின்றித் தெரிவதால் சீதையை வருத்திய நிலா வளர்பிறைப் பத்தாம்நாள் நிலா என்பது தேற்றம்.

சீதையின் நிலை இவ்வாறாக, இராமன் நிலை எவ்வாறு இருந்தது என்பதனைக் காணலாம். சனகனைக் காணச் சென்ற மூவரையும் அவன் அன்போடு வரவேற்று ஓர் அழகிய மாளிகையில் தங்கவைத்தான். சதானந்தமுனிவன் அங்கு வந்து அவர்களைக் கண்டான். இராமனுக்கு விசுவாமித்திரன் மேற்கொண்ட கடுந்தவத்தைக் கூறி விடைபெற்றுச் சென்றான். இலக்குவனும் விசுவாமித்திரனும் தங்கள் இனிய படுக்கைக்குச் சென்றனர். இராமன் மட்டும் கன்னிமாடத்தில் கண்ட சீதையின் நினைவோடு உறக்கமின்றித் தனிமையில் தவித்தான். அவர்களின் மிதிலைப் பயணத்தின் இரண்டாம் நாள் இரவு இவ்வாறு கழிந்தது.

வான்மீகம், சோணையாற்றங்கரையிலிருந்து புறப்பட்ட அவர்கள் மிதிலையை அடைவதற்கு முன்பு ஒரு நாள் கங்கைக்கரையிலும் மற்றொரு நாள் விசாலையிலும் தங்கினர் என்கிறது. அதன் விளக்கம் வருமாறு:

விசுவாமித்திரன் காலைச்சந்தி நெருங்குவதாகச் சொல்லி இராமனைத் துயில் உணர்த்தினான். அவர்கள் சோணைநதியைக் கடந்து நெடுந்தொலைவு நடந்து கங்கையை அடைந்தனர். முனிவர்கள் புனித கங்கையில் நீராடிப் பிதிரர்க்கும் தேவர்க்கும் உரிய கடன்களைச் செய்து அவியுணவு உண்டனர். பின்னர் விசுவாமித்திரன் அவர்களுக்குக் கங்கையின் வரலாறு, கந்தன் பிறந்த கதை, சகரபுத்திரர் வரலாறு ஆகியவற்றை அந்திவழிபாடு செய்யும் மாலைக்காலம்வரை கூறினான். அண்ணனும் தம்பியும் அவற்றைச் சிந்தித்துக்கொண்டே இருக்க இரவு நொடியில் கழிந்தது.

"அப்பொழுது இலக்குவனோடு கூட விசுவாமித்திரன் சொன்ன கதைகளை நினைவு கூர்ந்த அவனுக்கு (இராமனுக்கு) அந்த இரவு முழுதும் போனது தெரியாமல் கழிந்தது" (பா.45:4)

என்பது வான்மீகம்.

மறுநாள் ஓடத்தில் ஏறிக் கங்கையைக் கடந்து விசாலைநகரைக் கண்டனர். தேவேந்திரன் திதிதேவிக்குப் பணிவிடை செய்த இடம் என்று கூறி அதன் வரலாற்றை முனிவன் விரித்துரைத்தான். அதன் பின்னர் விசாலையை ஆண்ட மன்னர்குல வரலாற்றைத் தெரிவித்தான். விசுவாமித்திரன் அங்கு வந்திருப்பதை அறிந்த அந்நாட்டு மன்னன் சுமதி அவர்களை வரவேற்று உபசரித்தான். ஓர் இரவு அங்குத் தங்கி மிதிலைக்குப் புறப்பட்டனர்.

"சுமதி மன்னனின் சிறந்த விருந்தோம்பலை ஏற்று இராமலக்குவர் பின்னர் அங்கு ஓர் இரவு தங்கி அதன் பின்னர் மிதிலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (பா.48:10)

கம்பராமாயணத்தில் அவர்கள் விசாலையில் தங்கிய குறிப்பு மிகைப்பாடலில்தான் உள்ளது. அதில் அப்பொழுது விசாலை மன்னன் வந்து விசுவாமித்திரனை வணங்கினான் என்றும், அவர்கள் அங்கே சிறிது பொழுது நின்று இன்சொல் கூறி நீங்கினர் என்றும் காணப்படுகிறது. இந்நிகழ்ச்சி கம்பராமாயணத்தில் இடம் பெற்றிருப்பதாகக் கொண்டாலும் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. ஏனெனில் அவர்கள் விசாலையில் தங்கவில்லை.

மறுநாட் காலை விசாலையினின்றும் மிதிலைக்குப் புறப்பட்டனர். செல்லும் வழியில், யாரும் வாழாத தவச்சாலை ஒன்று எதிர்ப்பட்டது. அது யாருடையது என்று வினவிய இராமனுக்கு விசுவாமித்திரன் அகலிகையின் வரலாற்றை விரித்துரைத்தான். அகலிகை கௌதமமுனிவன் வேடத்தில் வந்திருப்பவன் இந்திரன் என்பதை அறிந்தே அவனோடு கூடி மகிழ்ந்தாள் என்றும், அக் கூட்டத்தால் மகிழ்ந்த அவள் அவனை அங்கிருந்து விரைவாக வெளியேற வேண்டினாள் என்றும் காணப்படுகிறது. மேலும், முனிவன் சாபத்தால் ஆண்மை இழந்த இந்திரன் தேவர்களின் உதவியால் அதனை மீண்டும் பெற்றான் என்றும் சொல்லப்படுகிறது. விசுவாமித்திரன், 'இராமா, தவக்குடிலுக்கு வா. அழகி அகலிகையைச் சாபக்கேட்டினின்றும் மீட்டு வாழ்விப்பாய்' என்று கூற, இராமன் தவக்குடிலுக்குள் நுழைந்தான் என்றும், பழைய வடிவத்தைப் பெற்ற அகலிகையை இராமலக்குவர் வணங்கினர் என்றும், அவள் இராமன் திருவடிகளை நீரால் கழுவி விருந்தோம்பல் என்னும் வழிபாட்டைச் செய்து கௌதமனை அடைந்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது.

பின்பு மூவரும் வடகிழக்குத் திசையில் சென்று வேள்விச்சாலையை அடைந்தனர். விசுவாமித்திரன் வருகையை அறிந்த சனகன் சதானந்தனோடு சென்று எதிர்கொண்டான். சனகன், இராம லக்குவர்களை யார் என்று அறிந்துகொண்டான். அங்கிருந்தவர்களுக்கு விசுவாமித்திரன் அரசவாழ்வைத் துறந்து கடுந்தவம் செய்து பிரம இருடியான வரலாற்றைச் சதானந்தமுனிவன் விரிந்துரைத்தான். மாலைச்சந்தி வழிபாட்டு நேரம் நெருங்கியது. சனகன்,

> *''ஐயனே, வியப்பு மிக்க தங்கள் வரலாற்றைக் கேட்பதில்*
> *போதும் என்னும் எண்ணம் எனக்கு உண்டாகவில்லை.*
> *முனிபுங்கவனே, இது மாலைச்சந்தி வழிபாட்டுக் காலம்.*
> *கதிரவன் மறையும் நேரம். தாங்கள் இங்கு*
> *எழுந்தருளியுள்ளதை மிகவும் பாராட்டுகிறேன். நாளை*
> *விடியலில் மீண்டும் வந்து காண்பேன். அதற்கு இணங்கி*
> *இப்பொழுது விடை தர வேண்டும்'' (பா. 65:36,37)*

என்று கூறி அங்கிருந்து சென்றான். விசுவாமித்திரன் இராம லக்குவரோடு தன் விடுதிக்குச் சென்றான்.

கம்பநாடர் மூவரும் முதல் நாள் இரவைச் சோணையாற்றங்கரையில் உள்ள சோலையில் கழித்து மறுநாள் மிதிலையை அடைந்தனர் என்கிறார். வான்மீகிமுனிவர் முதல் நாள் இரவைச் சோணை யாற்றங்கரையிலும் மறுநாள் இரவைக் கங்கைக்கரையிலும் மூன்றாம்நாள் இரவை விசாலை அரண்மனையிலும் கழித்து, நான்காம்நாள் மிதிலையை அடைந்தனர் என்கிறார். மேலும் அகலிகை சாப நீக்கம் நான்காம்நாள் காலையில் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கிறார். இராமாயண சார சங்கிரகமும் அந்நிகழ்ச்சி காலையில் நிகழ்ந்ததாகவே காட்டியுள்ளது. ஆனால் கம்பநாடர், அகலிகை கல்லுருவம் நீங்கிப் பழைய நிலையை எய்தியது பிற்பகலில் நடந்ததாகக் காட்டியுள்ளார். கங்கைக்கு அண்மையிலேயே மிதிலை இருந்தது என்பது மிதிலைக்கு எழுந்தருளும் தசரதன் அதனைக் கடந்து பிற்பகலுக்கு முன்னே அந்நகரை அடைந்தான் என்று பின்னே வருவதால் (1031,1159) விளங்கும். ஆதலின் கங்கையில் தங்கினர் என்பதனை விடுத்து மிதிலையை அடைந்தனர் என்று பொருத்தமாக அமைந்துள்ளார். விசாலையில் தங்குவது நிகழ்ச்சியின் ஓட்டத்தைக் குறைப்பதாகக் கருதி விடுத்தார் போலும்.

சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு கண்களால் கலந்து காதலால் தவிப்பதாகக் காட்டுவது கம்பநாடரின் படைப்பு. அது மாலையில் நிகழ்வதால் சீதையின் காதல் தவிப்பைக் காட்டுவதற்குத் தொடரும் இரவும் நிலவும் துணையாக அமைகின்றன. இராமன் காதல்

தவிப்பைக் காட்ட இரவின் தனிமை உதவுகிறது. இங்குப் பொழுதும் நிகழ்ச்சியும் கைகோத்துச் செல்கின்றன.

இவ்வாறு சித்தாச்சிரமத்திலிருந்து மிதிலைக்குச் செல்லும் பயணத்தில் கம்பநாடரால் இருநாள்கள் குறைக்கப்பட்டுள்ளன. கம்பநாடர் வேள்வி முடிந்த மறுநாள் அஃதாவது பத்தாம் நாள் மிதிலைக்குப் புறப்பட்டுப் பதினோராம் நாள் மாலை மிதிலையை அடைந்தனர் என்கிறார். கம்பராமாயணத்தின்படி மிதிலைப்பயணம் இருநாள் நிகழ்ச்சி; வான்மீகத்தின்படி அது நான்கு நாள் நிகழ்ச்சி.

வில்வளைப்பும் தூதர்பயணமும் (ஒருநாள்)

கதிரவன் தோன்றிய காட்சி

மிதிலையில் இராமன் செய்த அருஞ்செயல் அதுவரை யாராலும் வளைக்க முடியாத வில்லை எடுத்து வளைத்ததாகும். கம்பநாடரும் வால்மீகிமுனிவரும் இராமன் மிதிலையை அடைந்த மறுநாள் நிகழ்ச்சியாகவே அதனைக் காட்டியுள்ளனர். கம்பநாடர் அன்றைய நாளின் தோற்றத்தை வறிதே குறிக்காமல் அழகுறப் புனைந்து பாடியுள்ளார்.

இராமன் சிவபிரானது வில்லை முறிக்கப் போகும் அந்நாளின் தோற்றத்தினைச் சிவபிரான் நினைவோடு தொடங்குவது மிகவும் பொருத்தமாக உள்ளது. கதிரவன் தோன்றிய காட்சி, ''இருள் ஆகிய யானைத்தோல் போர்த்த உதயகிரி என்னும் உருத்திரமூர்த்தியின் நெற்றிக்கண் திறந்தது போன்றிருந்தது (629). சூரியன் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளின் குளம்புகள் மிதித்ததனால் உதயமலையில் செந்துகள்கள் பரவின. காலைவழிபாடு நிகழ்த்தும் அந்தணர் இட்ட தேன் நிறைந்த மலர்களும் நீரும் அத்துகள்கள் பசையாகும்படி பரவிப் பாய்ந்தன. அம்மலை முகடுகளில் சூரியனின் இளங்கதிர்கள் சென்று படிந்தன. அதனால் அவை சிவந்து விளங்கின. அக்காட்சி, சூரியன் திசையினை ஆளும் மதயானைக்குச் சிந்தூரக்குழம்பினை அப்பியது போன்றிருந்தது (630). சூரியன் உதயமானதால் பொய்கைகளில் தாமரைகள் மலர்ந்து பொலிந்தன. திரும்பிவரும் காலத்தைச் சொல்லிப் போரிடுவதற்கும் பொருளீட்டுவதற்கும் சென்ற உயிர் போன்ற தங்கள் கணவன்மார் தேரில் வருவது கண்டு மனமகிழ்ந்து முகமலர்ந்த கற்பரசிகள் போல அவை காட்சியளித்தன. வானத்தில் பகலவன் கதிர்கள் பரவின; கின்னரர்கள் பெருமைமிக்க வேதத்தை இசைந்தனர்; உயர்ந்தவர்கள் ஏத்தினர்; தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் கைகூப்பித் தொழுதனர்; கடல் என்னும் மத்தளம் முழங்கிற்று; வானம் என்னும் அரங்கில் சூரியன் என்னும் சிவபிரான் ஆனந்த நடனம்

ஆடினான். அவன் பொன்னிறச்சடைகள் விரிந்தது போன்று செந்நிற ஒளிக்கதிர்கள் எங்கும் பரவின.

"பண்டுவரும் குறிபகர்ந்து பாசறையின்
பொருள்வயினின் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரியல் உயிர்அனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனம் களிசிறப்ப ஒளிசிறந்து
மெலிவுஅகலும் கற்பி னார்போல்
புண்டரீகம் முகம்மலர அகம்மலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை எல்லாம்" (629)

"எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர வான்அரங்கில்
நடம்புரிவாள் இரவி ஆன
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்" (632)

இப்படிக் காலைப்பொழுது மலர்ந்ததை இயற்கையழகோடும் பொருள் இலக்கணவுவமையோடும் அழகுறப் பாடுகிறார் கம்பநாடர். கதிரவன் தோற்றம் பற்றிய பாடல்களில் இவை ஒளிமணிகளாய்த் திகழ்வன.

வான்மீகிமுனிவர்,

"மறுநாள் பொழுது நன்றாக விடிந்தது. சனகன் காலைக் கடன்களைச் செய்து முடித்தான். இராமலக்குவரோடு கூடியிருந்த விசுவாமித்திரனைப் போய்க் கண்டான்"(பா.66:1)

என்று மட்டும் அந்நாளின் தொடக்கத்தைக் கூறியுள்ளார்.

வில்முறிதல்

விசுவாமித்திரன் இராமலக்குவரோடு சனகன் அவையை அடைந்தான். அவனிடமிருந்து சனகன் இராமனுடைய குலமுறை, வில்லாற்றல் இவற்றை அறிந்தான். வீரர்கள் வில்லை எடுத்து வந்தனர். சதானந்தமுனிவன் அதன் வரலாற்றை உரைத்தான். விசுவாமித்திரன் கண்ணால் கட்டளையிட, இராமன் வில்லை நோக்கி நடந்தான். வலிய வில்லைக் கண்ட பெண்கள் கலங்கிப் பலவிதமாகத் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். இராமன் பெருமதிப்பும் மேனாணிப்பும் தோன்ற நடந்து சென்று, அதனை மலர்மாலையை எடுப்பது போன்று எடுத்தான். அது கணத்தில் முறிந்து விழுந்தது. நகரம் மகிழ்ச்சியில் மூழ்கியது.

இந்நிகழ்ச்சியைக் கம்பநாடர் மக்களின் வியப்புப்பேச்சு, விசுவாமித்திரன் கண்பேச்சு, மகளிரின் தவிப்பு, இராமனின் நடையழகு, வில்லை ஒடித்த விசைப்பு இவற்றால் அரிய நாடகக்காட்சியாகப் படைத்துள்ளார்.

''சனககுலப் பெண்ணாய் வளரும் சீதை தசரதன் மைந்தனைக்
கணவனாகப் பெற்றுப் பெரும்புகழ் ஈட்டப் போகிறாள்''
(பா.67:21)

என்று சனகன் மகிழ்ந்தான் என்கிறார் வான்மீகிமுனிவர்.

இது பன்னிரண்டாம் நாள் நிகழ்ச்சியாகக் கம்பராமாயணத்திலும், பதினாந்தாம் நாள் நிகழ்ச்சியாக வான்மீகத்திலும் காணப்படுகிறது. இராமாயண சார சங்கிரகம் அமாவாசையில் நிகழ்ந்ததாகத் தெரிவித்துள்ளது.

தூதர் விரைதல்

அடுத்துத் தூதர்கள் மங்கலச்செய்தியோடு அயோத்தி நோக்கி விரைந்தனர். கம்பநாடர் தூதர் புறப்பட்ட நாள், பயணம் செய்த நாள் இவற்றைப் பற்றி யெல்லாம் விளக்கமாகக் கூறவில்லை.

''கடுகிய தூதரும் காலின் காலின்சென்று
இடிகுரல் முரசுஅதிர் அயோத்தி எய்தினார்'' (732)

என்கிறார். பாட்டின்போக்கு இராமன் வில்லை முறித்தவுடன் புறப்பட்ட தூதர்கள் அன்று மாலையே அயோத்தி அடைந்தனர் என்று பொருள்கொள்ளும் வகையிலேயே உள்ளது. மேலும் தூதர்களின் விரைந்த செலவினைக் குறிக்கும் வகையிலும் இருக்கிறது.

இத்தொடருக்கு, ''விரைந்து போக எண்ணிய தூதர்களும் தமது கால்வலியினால் காற்றுப் போல விரைந்து சென்று'' என்று பொருள்கண்டுள்ளார் அறிஞர் வை.மு.கோ. செல்பவர்களோ அரச தூதர்கள்! எடுத்துச்செல்லும் செய்தியோ தசரதனுக்கு மிக விரைவில் தெரிவித்தற்குரிய செய்தி! இந்நிலையில் அவர்கள் காலால் நடந்து சென்றனர் என்பது பொருத்தமாக இல்லை. வான்மீகிமுனிவரும் தேரில் சென்றனர் என்றே குறித்துள்ளார். அவர்கள் காலால் நடந்து சென்றனர் என்னும் மாற்றம் எவ்வகையிலும் நிகழ்ச்சிஓட்டத்திற்குச் சிறப்பளிப்பதாக அமையாது. இத்தொடரில் 'கால்' என்னும் சொல் இருமுறை வெவ்வேறு பொருளில் இடம் பெற்றுள்ளது. இரண்டாவது வரும் 'கால்' என்பதற்குக் காற்று என்று பொருள் கொள்வது சரியே. ஆனால் முதலில் வரும் 'கால்' என்பதற்குக் கால் என்னும் உடலுறுப்பு என்று பொருள் கொள்வதனினும் 'தேர்' என்று பொருள் கொள்வதே

சிறப்பும் பொருத்தமும் ஆகும். இச்சொல் சக்கரத்தையும் சக்கரத்தையுடைய தேரினையும் குறிக்கும் வகையில் கம்பநாடரால் வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

> *"கால் வானகத் தேருடைய வெய்யவன் - வானத்தில் உலாவுகின்ற ஒற்றைச் சக்கரத்தேரினை யுடைய சூரியன்"*
> *(882)*

> *"கால் ஆர் தேர் அதன்மேல் ஆனான் - சக்கரங்கள் பொருந்திய (அக்ககுமாரனது)தேரின்மீது ஏறினான்" (5700)*

> *"ஒருகால் வரு கதிர் ஆம் என ஒளி கால்வன - ஒற்றைச் சக்கரத்தை யுடைய தேரின்மீது வருகின்ற சூரியன் என்னுமாறு ஒளிவிடுவன" (1288)*

என்னும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

வான்மீகிமுனிவரோ இராமன் வில்லை வளைத்த அன்றே தூதர் அயோத்திக்குப் புறப்பட்டனர் என்றும் அவர்கள் மூன்று இரவுகள் பயணத்தில் கழித்தனர் என்றும் குறித்துள்ளார்.

> *"கௌசிகமுனிவரே! தங்கள் இசைவோடு விரைந்து செயல்முடிக்க வல்ல என் அமைச்சர்கள் தேர் ஏறி இப்பொழுதே அயோத்திக்குச் செல்லட்டும்"*
> *(பா. 68:27)*

> *"சனகனால் பணிக்கப்பட்ட அந்தத் தூதர்கள் களைப்புற்றவர்களாகி வழியில் மூன்று இரவுகளைக் கழித்துப்பின் அயோத்திநகரை அடைந்தனர்"*
> *(பா. 69:1)*

மேலும் தூதர் சொன்ன மங்கலச்செய்தியால் மகிழ்ந்த தசரதன் மறுநாள் மிதிலை செல்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு தன் அமைச்சர்களைப் பணித்தான் என்றும், அவன் விருந்தோம்பலில் தூதர்கள் மன மகிழ்ந்து அன்றைய இரவை (நான்காம் நாள் இரவை) அங்குக் கழித்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இங்குத் தூதர்கள் ஒருநாள் எல்லைக்குள் மிதிலைக்குச் சென்றிருக்க முடியுமா என்னும் ஐயம் எழுவது இயற்கை. கம்பராமாயணத்தை ஆழ்ந்து நோக்கின் இதற்குரிய விடை காணலாம்.

இருவழிகள்

அயோத்தியிலிருந்து மிதிலைக்குச் செல்ல இருவழிகள் இருந்துள்ளன. முதல்வழி விசுவாமித்திரனும் இராமலக்குவரும் சென்ற வழி. அவ்வழியில் சரயுநதி, காமனாச்சிரமம், சித்தாச்சிரமம், சோணையாறு, கங்கையாறு, விசாலைநகர் ஆகியவை உள்ளன. அது

சுற்றுவழி; காட்டுப்பாதை. இரண்டாவது வழி குறுக்கு வழி; மலைப்பாதை. இவ்வழியில் சந்திரசயிலமலை, சோணையாறு, கங்கையாறு ஆகியவற்றைக் கடந்து மிதிலையை அடையவேண்டும். மிதிலைக்குப் புறப்பட்ட தசரதனும் அயோத்திமக்களும் சென்ற வழி இதுவே.

இவ்வழியைக் கடப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்பதனை அறிய இவற்றிடையே உள்ள தொலைவு எவ்வளவு என்பதனைக் காண வேண்டும். வான்மீகிமுனிவர் யோசனை, குரோசம் என்னும் அளவாலும், கம்பநாடர் யோசனை, காதம் என்னும் அளவாலும் தொலைவினைக் குறிப்பிட்டுள்ளனர். இவ் அளவுகளின் வரையறை தெளிவாகத் தெரிந்தால்தான் தூரத்தையும் நேரத்தையும் கணக்கிட முடியும். தூதர்கள் எத்தனை நாளில் அயோத்தியை அடைந்தனர் என்பதனை அறுதியிட இயலும்.

யோசனை

வான்மீகிமுனிவர் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடம் உள்ள தொலைவு, இடப்பரப்பு, இராமலக்குவர் கடந்து சென்ற தொலைவு, ஒவ்வொரு நாளும் கட்டப்பட்ட அணையின் அளவு முதலியவற்றை யோசனை என்னும் அளவாலும், ஒரு சில இடங்களில் குரோசம் என்னும் அளவாலும் குறித்துள்ளார். வான்மீகிமுனிவர் ஓர் இடத்தில், குறிப்பிட்ட இரண்டு இடங்களுக்கு இடைப்பட்ட தொலைவினை யோசனை என்னும் அளவாலும், பிறிதோர் இடத்தில் குரோசம் என்னும் அளவாலும் குறித்துள்ளார். இதனால் யோசனை, குரோசம் ஆகியவற்றிடையே உள்ள விகிதம் தெளிவாகிறது.

பரத்துவாசமுனிவன் இராமனிடம் தன் ஆசிரமத்திற்கும் சித்திர கூடத்திற்கும் இடையே பத்துக் குரோசதூரம் என்று தெரிவித்துள்ளான். அவனே பரதனிடம் அவ்விரண்டனுக்கும் இடைப்பட்ட தூரம் இரண்டரை யோசனை என்று கூறியுள்ளான்.*

2 ½ யோசனை = 10 குரோசம்

1 யோசனை = $\frac{10 \times 2}{5}$ = 4 குரோசம்

---

* *வான்மீகத்தில் 'அர்த₄த்ருதீயேஷு' (அ.92:10) என்று வருவதற்கு எஸ். சாம்பமூர்த்தி தம் மொழிபெயர்ப்பில் 3½ யோசனை என்று பொருள் கொண்டுள்ளார். ஆனால் அ.வீ.நரஸிம்மாச்சாரியர் 2½ யோசனை என்று குறித்துள்ளார். 'அர்த₄ம்த்ரிதீயம் ஏஷாம் தேஷு' என்று விரித்து 2½ யோசனை என்று கோவிந்தர் தெளிவுபடுத்தியுள்ளார். திலகரும் 2½ யோசனை என்றே குறித்துள்ளார். எனவே 2½ யோசனை என்பதே சரியாகும்.*

இதனால் ஒரு யோசனை என்பது நான்கு குரோசமாகும். மோனியர் வில்லியம்ஸ் வடமொழி – ஆங்கில அகராதி குரோசத்தைக் கால் யோசனை என்று குறிப்பதும் இதனோடு பொருந்திவருகிறது (ப.322).

யோசனை: மூவகை விளக்கம்

யோசனை பற்றி மூவகை விளக்கம் தருகிறது மோனியர் வில்லியம்ஸ் அகராதி.

''யோசனா: ஒரு குறிப்பிட்ட தூரம், சில பொழுது 4 அல்லது 5 மைல்களாகக் கொள்ளப்படுகிறது. சரியாகச் சொல்ல வேண்டுமானால் 4 குரோசங்கள்; அஃதாவது சுமார் 9 மைல். வேறு கணக்கின்படி 2½ மைல்கள். சிலரின் கருத்துப்படி 8 குரோசங்கள்''

பெரும்பாலோர் கருத்து 4 குரோசங்கள் சேர்ந்தது ஒரு யோசனை என்பதாகும். வானமீகத்தின் வழியும் இதுவே சரியானது என்பது விளங்குகிறது.

குரோசம் என்னும் அளவையொட்டியே யோசனைக்கு 9 மைல் என்றும், 4–5 மைல் என்றும், 2½ மைல் என்றும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. ஒரு குரோசத்திற்கு 2000 தண்டம் என்று கொண்டு 9 மைல் என்றும் 1000 தண்டம் என்று கொண்டு 4–5 மைல் என்றும், 500 தண்டம் என்று கொண்டு 2½ மைல் என்றும் வரையறை செய்யப்பட்டுள்ளமை கூர்ந்து நோக்கின் புலனாகும்.

12 அங்குலம்	=	1 அடி
1½ அடி	=	1 முழம் (ஹஸ்தம்)
4 முழம்	=	1 தடி (தண்டம்)

என்பது அகராதி தரும் சிறிய நீட்டலளவைகள். இதனால் ஒரு தண்டம் (தடி) என்பது 1 x 4 x 1½ =6 அடி என்பது தெளிவு.

முதலாவது விளக்கம்

2000 தண்டம்	=	1 குரோசம்
4 குரோசம்	=	1 யோசனை

1 யோசனை $= \dfrac{4 \times 2000 \times 6}{3 \times 220 \times 8}$ மைல் $= \dfrac{48000}{5280}$

= 9மைல், 0பர்லாங்கு, 160கெஜம் *

* *இதனையே 1 யோசனை = 4 குரோசம்; 1 குரோசம்= 2000 தண்டம்; 1 தண்டம் = 2 கெஜம்; 1 குரோசம் = 2000 x 2 அஃதாவது 4000 கெஜம்:*

1 யோசனை $= \dfrac{4 \times 2000 \times 2}{1760} = \dfrac{100}{11} = 9\ 1/11$ மைல்

என்று விளக்கியுள்ளார், எஸ். ஆர். என். மூர்த்தி.
Vedic view of the Earth, New Delhi, 1994, P.64,65

இரண்டாவது விளக்கம்

1000 தண்டம் = 1 குரோசம்

4 குரோசம் = 1 யோசனை

1 யோசனை = $\frac{4 \times 1000 \times 6}{3 \times 220 \times 8}$ மைல் = $\frac{24000}{5280}$

= 4 மைல், 4 பர்லாங்கு, 80 கெஜம்

மூன்றாவது விளக்கம்

500 தண்டம் = 1 குரோசம்

4 குரோசம் = 1 யோசனை

1 யோசனை = $\frac{4 \times 500 \times 6}{3 \times 220 \times 8}$ மைல் = $\frac{12000}{5280}$

= 2 மைல், 2 பர்லாங்கு, 40 கெஜம்

குரோசம்

குரோசம் என்பது கூப்பீடு தூரம் என்று அகராதிகள் எல்லாம் ஒருமிடறாக ஒத்துக்கொள்கின்றன. மலையாள அகராதி 'ஒரு விளிப்பாடு தூரம்' என்றும், ஆப்தே அகராதி ¼ யோசனை என்றும் மட்டுமே குறித்துள்ளன. மோனியர் வில்லியம்ஸ் அகராதி மட்டும் ¼ யோசனை என்பதனோடு 1000 தண்டம் என்றும் குறித்துள்ளது.

இவ்விளக்கம் யோசனை 4–5 மைல் என்பதனைத் தழுவி அமைந்ததாகும். மூவகை யோசனை வரையறைகளை யொட்டிக் குரோசத்தின் அளவினைக் கணக்கிட்டுக் காணலாம்.

1 குரோசம் = 500 தண்டம் = 4 பர்லாங்கு,120 கெஜம்.(யோசனை 2 ½ மைல் என்னும் கணக்கு)

1 குரோசம் = 1000 தண்டம் = 1 மைல், 1 பர்லாங்கு. (யோசனை 4–5 மைல் என்னும் கணக்கு)

1 குரோசம் = 2000 தண்டம் = 2 மைல், 2 பர்லாங்கு. (யோசனை 9 மைல் என்னும் கணக்கு)

ஒருவர் எவ்வளவு உரக்கக் கத்தினாலும் அது ½ மைலுக்கு மேல் கேட்காது. ஆதலின் கூப்பீடு தூரம் என்பதற்கு 500 தண்டம் என்பதே இயல்பாகும். எனவே ஒரு குரோசம் என்பதற்கு 500 தண்டம் என்று கொண்டு ஒரு யோசனை என்பது 2 மைல் 2 பர்லாங்கு 40 கெஜம் என்று வரையறை செய்வதே தக்கதாகும். இதுவே வான்மீகத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் பொருந்தி வருகிறது.

வான்மீகத்தில் யோசனை என்னும் அளவு

வான்மீகத்தில் பல இடங்களில் யோசனை என்னும் அளவால் தொலைவு சுட்டப்பட்டுள்ளது. அவை யோசனை பற்றிய வரையறையைத் தெளிவுபடுத்துவன. ஆதலின் அவற்றைக் காண்பது அவசியமாகிறது.

சரயுவும் கங்கையும் (திரிபதாகை) கூடுமிடத்திலிருந்து ஒன்றரை யோசனையில் தாடகை தங்கியிருந்தாள் (பா. 24:30). ஒன்றரை யோசனை சற்றொப்ப மூன்றரை மைல். இத்தொலைவினை ஒருநாள் காலை அங்கிருந்து புறப்பட்ட விசுவாமித்திரனும் இராமலக்குவரும் கடந்து பிற்பகலில் தாடகை உறைந்த வனத்தை அடையச் சூரியன் மறையுமுன் தாடகை வதம் நிகழ்ந்தது என்பது பொருத்தமாக உள்ளது.

பரத்துவாசன் ஆசிரமத்திலிருந்து இரண்டரை யோசனையில் சித்திரகூடம் இருக்கிறது என்பது பரத்துவாசன் கூற்று (அ. 92:10). அஃதாவது பத்துக் குரோச தூரத்தில் உள்ளது. அவ்விரண்டனுக்கும் இடைப்பட்ட தொலைவு ஐந்தரை மைல். இரவு முனிவன் குடிசையில் தங்கிய இராமலக்குவர் மறுநாள் அங்கிருந்து சீதையோடு புறப்பட்டு யமுனைக்கரை வழியாக நடந்துசென்றனர். பின்பு தெப்பம் ஒன்று அமைத்து, ஆற்றைக் கடந்தனர்; மறுகரையில் ஒரு குரோச தூரம் அலைந்து இரவு தங்க இடம் கண்டனர்; மறுநாள் காலை யமுனையில் நீராடிவிட்டுச் சித்திரகூடத்திற்குப் புறப்பட்டனர். அங்கு இலக்குவன் பர்ணசாலை அமைக்க அதில் தங்கினர். இத்தொலைவினை ஒருநாளிலேயே கடந்திருக்கலாம். அவ்வாறு கடக்காமைக்குக் காரணம் யமுனைப்பெருக்கைத் தெப்பம் அமைத்துக் கடக்க நேர்ந்தமையே ஆகும்.

விராதன் இருப்பிடத்திற்கும் சரபங்கன் உறையுளுக்கும் இடைப்பட்ட தொலைவு ஒன்றரை யோசனை (ஆ. 4:28) சற்றொப்ப மூன்றரை மைல். விராதன் வதைக்குப் பின் மூவரும் சரபங்கன் ஆசிரமம் அடைய அவன் தீப் புகுந்து பிரமலோகம் சென்றான். பின்னர் ஒரு பெரிய மலையை அடுத்த காட்டில் புகுந்து சுதீக்கணனின் குடிலை அடைந்து இரவைக் கழித்தனர். காலையில் புறப்பட்டவர்கள் மூன்றரை மைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவினை மாலைக்குள் கடந்தனர் என்பது இயல்பே ஆகும்.

இக்குறிப்புகளால் இராமலக்குவர் ஒரு பகலில் ஒன்றரை யோசனையும் அதற்குச் சற்றுக் கூடுதலாகவும் நடந்துள்ளனர் என்பது தெளிவு.

ஒரு பகலில் அவர்களால் எவ்வளவு தொலைவு கடக்க முடியும் என்னும் குறிப்பு, சுதீக்கணமுனிவன் பேச்சிலிருந்து புலப்படுகிறது. அவன் தன் உறைவிடத்திலிருந்து நான்குயோசனை தூரத்தில் அகத்தியன் தம்பி தவக்குடிலும் அதிலிருந்து ஒருயோசனை தூரத்தில் அகத்தியன் உறையுளும் இருக்கின்றன என்றான் (ஆ. 11:38,42). அவர்களிடம் அகத்தியமுனிவன் இளவலின் ஆசிரமத்தில் இரவைக் கழித்து மறுநாள் காலை அகத்தியனைச் சென்றடையலாம் என்றும் தெரிவித்தான். சுதீக்கணன் ஆசிரமத்திலிருந்து அகத்தியன் இளவலின் இருப்பிடம் ஒன்பது மைல். அங்கிருந்து அகத்தியன் தவக்குடில் இரண்டே கால் மைல். அதனால்தான் அவ்வாறு இருநாள் பயணம் செய்யுமாறு அறிவுறுத்தினான். அவர்களும் அவ்வாறே பயணம் மேற்கொண்டனர்.

இதனால் மூவரும் ஒருநாளில் கடந்த தூரத்தின் மேல்எல்லை நான்கு யோசனை அல்லது ஒன்பது மைல் என்பது ஒருதலை.

அகத்தியன் ஆசிரமத்திற்கும் பஞ்சவடிக்கும் இடைப்பட்ட தொலைவு இரண்டரை யோசனை; சுமார் ஐந்தரை மைல். காலையில் அங்கிருந்து புறப்பட்ட மூவரும் மாலைக்குள் பஞ்சவடி சென்றடைந்தனர். பின்னர் இலக்குவன் பர்ணசாலை அமைக்க அதில் தங்கினர் என்பது கால அளவும் அவர்கள் கால்நடையும் ஒத்திசைந்தன என்பதற்குச் சான்று.

இவ்விடங்களில் எல்லாம் யோசனை என்பதற்கு 2 மைல் 2 பர்லாங்கு 40 கெஜம் என்று கொண்டால் மட்டுமே பொருத்தமாக அமையும். 9 மைல் என்றோ 4–5 மைல் என்றோ கொண்டால் இயல்புக்கு முரணாகப் போகும்.

வான்மீகிமுனிவர் காலத்தோடு இணைக்காமல் தனியே இடங்களின் தொலைவினை யோசனை என்னும் அளவால் சுட்டும் இடங்களும் உண்டு.

பரத்துவாசன் ஆசிரமத்திலிருந்து மூன்று யோசனை (பதி மூன்றரை மைல்) தூரத்தில் அயோத்தி உள்ளது. (யு 127:23). இலங்கைக்குத் தெற்கே புஷ்பிதமலையும் (கி.41:29) மகேந்திரமலையிலிருந்து கடலின் நடுவே இலங்கையும் (கி.41:29) நூறு யோசனை (சுமார் 277 மைல்) தூரத்தில் இருந்தன. இலங்கையிலிருந்து புறப்படுவதற்காக அனுமன் ஏறிநின்ற அரிஷ்டமலை பத்து யோசனை (சுமார் 22 மைல்) அகலமும் முப்பது யோசனை (சுமார் 68 மைல்) நீளமும் கொண்டது (சு.56:33). இராவணன் மாளிகை அரை யோசனை (சுமார் 1 மைல்) அகலமும் ஒரு யோசனை (சுமார் 2 மைல்) நீளமும் உடையது (சு.9:2).

குரங்குகளால் கட்டப்பட்ட அணையின் அகலம் பத்து யோசனை (சுமார் 23 மைல்); நீளம் நூறு யோசனை (சுமார் 227மைல்) (யு.22:77). அவ்வணை முதல்நாள் பதினான்கு யோசனையும் (சுமார் 32 மைல்) இரண்டாம்நாள் இருபது யோசனையும் (சுமார் 45 மைல்) மூன்றாம்நாள் இருபத்தொரு யோசனையும் (சுமார் 48 மைல்) நான்காம்நாள் இருபத்திரண்டு யோசனையும் (சுமார் 50 மைல்) ஐந்தாம்நாள் இருபத்துமூன்று யோசனையுமாக (சுமார் 52 மைல்) மொத்தம் நூறு யோசனை நளனால் கட்டப்பட்டது (யு 22:69–73). இந்தக் காலஅளவும் தொலைவும் எவ்வளவு ஊக்கத்தோடும் எழுச்சியோடும் அணைகட்டப்பட்டது என்பதனைக் காட்டுகின்றன.

இவ்வாறே வானரவீரர் ஒவ்வொருவரும் தங்களால் தாண்டக் கூடிய தொலைவினைக் கூறுவதும் அவர்கள் ஆற்றலைக் காட்டுவதாக அமைந்துள்ளது. (கி.65) கவந்தன் கை ஒரு யோசனை (2 மைல்) நீளமுடையது என்று குறித்து அவன் பேருருவத்தை உணர்த்தியுள்ளார் (ஆ.69:31).

வான்மீகத்தில் குரோசம் என்னும் அளவு

வான்மீகிமுனிவர் குரோசம் என்னும் அளவினை மிகக் குறைந்த இடங்களிலேயே பயன்படுத்தியுள்ளார். ஒரு குரோசம் என்பது 500 தண்டம். அஃதாவது 4 பர்லாங்கு 120 கெஜம். அயோத்திக்கு ஒரு குரோச தூரத்தில் உள்ள (சுமார் ½ மைல்) நந்திக்கிராமத்தில் பரதன் ஆசிரமம் இருந்தது (யு. 128:28) பரத்துவாசன் ஆசிரமத்திற்கும் சித்திரகூடத்திற்கும் இடைப்பட்ட தூரம் பத்துக்குரோசம்; சுமார் 5½ மைல் (அ.54:28).

யமுனைக்கரையின் அருகில் உள்ள ஆலமரத்திலிருந்து ஒரு குரோச தொலைவில் (சுமார் ½ மைல்) சித்திரகூடம் செல்லும் காட்டுப்பகுதி உள்ளது (அ.90:1). பஞ்சவடியிலிருந்து மூன்று குரோசத்தில் (சுமார் 1½ மைல்) கிரௌஞ்சமலை உள்ளது (ஆ.69:8–10). கிரௌஞ்சவனத்திலிருந்து மதங்காசிரமம் செல்லும் வழியில் மூன்று குரோசத்தில் (சுமார் 1½ மைல்) அயோமுகியின் குகை இருக்கிறது. (ஆ.69:5).

குரோசம் பெரும்பாலும் அருகில் உள்ள இடங்களைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. வான்மீகத்தை மொழிபெயர்த்தவர்கள் எல்லாம் குரோசம் என்பதனை 2000 தண்டம் (2மைல்) என்றே மொழிபெயர்த்துள்ளனர். அது பொருந்துமாறில்லை.

கம்பராமாயணத்தில் யோசனை என்னும் அளவு

கம்பநாடர் யோசனை என்னும் அளவினைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளார். வான்மீகத்தில் காணப்படும் சில இடங்கள் பற்றிய அளவுகளை ஏற்றுக்கொண்டுள்ளார்; சிவற்றை விடுத்துள்ளார்; தாமாகச் சிலவற்றைச் சேர்த்துள்ளார். மகேந்திரமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட தொலைவு 100 யோசனை என்று வான்மீகத்தையொட்டிக் கூறியுள்ளார் (4732). குரங்குகள் ஒவ்வொரு நாளும் அணை அமைத்த தூரத்தினை வான்மீகிமுனிவர் குறித்திருக்கத் தாம் அதனைக் குறிக்காமல் விடுத்துள்ளார். சீதையைத் தேடிச் செல்லும் இராமலக்குவர் சில நாளில் தேடிய தொலைவினைத் தாமாகச் சேர்த்துள்ளார்.

கலைக்கோட்டுமுனிவனை உரோமபதநாட்டிற்கு அழைத்து வருவதாகச் சொல்லிச் சென்ற விலைமகளிர் அவன் ஆசிரமத்திற்கு ஒரு யோசனை (சுமார் 2 ½ மைல்) தொலைவில் தங்கினர் (218). இது அம்மகளிர் முனிவனுக்கு அண்மையிலோ அவனை விட்டு விலகிச் சேய்மையிலோ தங்காமல் வாய்ப்பான இடத்தில் தங்கி அவனை அடிக்கடி சென்று வயப்படுத்தினர் என்பதற்கு ஏற்றவாறு உள்ளது. இங்கு யோசனை என்பதற்கு 9 மைல் என்றோ 4–5 மைல் என்றோ கொண்டால் சற்றும் பொருத்தமின்றிப் போவது காணலாம்.

கங்கைக்கரையிலிருந்து பரத்துவாசன் தவச்சாலை இரு யோசனை (சுமார் 4½ மைல்) தொலைவு (10242). கங்கையைக் குகன் உதவியால் கடந்த இராமலக்குவர் சீதையோடு அன்று மாலைக்குள் பரத்துவாசனால் எதிர்கொள்ளப்பட்டனர் என்பதால் இங்குக் குறிக்கப்படும் தொலைவு பொருத்தமாகவே தோன்றுகிறது.

வனவாசம் செய்யப் புறப்பட்ட இராமன் முதலிய மூவரும் அயோத்திமக்கள் தங்களைத் தொடர்வதனைத் தவிர்ப்பதற்காக இரவில் சோலையிலிருந்து புறப்பட்டு விடிவதற்குள் தெற்கே இரு யோசனை தூரம் நடந்து காட்டிற்குள் புகுந்தனர் (1892). இரவின் பிற்பாதியில் சுமார் ஆறு மணி நேரத்தில் சுமார் 4½ மைல்களைக் கடந்தனர் என்பது மிகப் பொருத்தமாக உள்ளது. இங்குப் பதினெட்டு மைல்கள் என்றோ ஒன்பது மைல் என்றோ கொள்வது சூழ்நிலைக்கு மாறாக அமையும். இவை நடந்து கடந்த தூரத்தினைக் காட்டுவன.

இனித் தேர் ஏறிக் கடந்த தொலைவினைக் காணலாம். மன்னன் உரோமபதன் கலைக்கோட்டுமுனிவனை இரு யோசனை அளவு சென்று எதிர்கொண்டு வரவேற்றான். (227) தசரதன் கலைக்கோட்டு முனிவனைத் தன்னாட்டிற்கு வேள்வி செய்விக்க அழைத்துவரச்

சென்றான். அப்பொழுது அவன் வருகையை அறிந்த உரோமபத மன்னன் ஒரு யோசனை தூரம் சென்று அவனை அழைத்து வந்தான். (237). அயோத்திக்கு வந்த கலைக்கோட்டுமுனிவனைத் தசரதன் மூன்று யோசனை (சுமார் 6½ மைல்) முன்னே சென்று எதிர்கொண்டு வணங்கினான் (249). இவை இயல்பான சூழலில் மன்னர்கள் தேரில் மேற்கொண்ட பயணங்கள். ஆதலின் சில மணி நேரத்தில் நிகழ்ந்தனவாகும். இவ்விடங்களில் யோசனை என்பதற்கு இரண்டரை மைல் என்பதே இசைவாக அமைகிறது.

வனவாசத்திற்குப் புறப்பட்ட இராமலக்குவர், சீதை மூவரும் சுமந்திரன் செலுத்திய தேரில் ஏறி அயோத்திநகரிலிருந்து இரு யோசனை கடந்து ஒரு சோலையில் தங்கினர் (1846). ஓரிரு மணிகளிலேயே கடக்கக் கூடிய தொலைவினைப் பல மணிநேரம் பயணம் செய்து கடந்துள்ளனர். இதற்குத் தக்க காரணம் உண்டு. அவர்கள் முற்பகலில் புறப்பட்ட போதிலும் வழியெங்கும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அத்தேரின் முன்னும் பின்னும் மக்கள் சென்றனர். ஆதலின் தேர் வேகமாகச் செல்ல வாய்ப்பில்லை. எனவேதான் நான்கரை மைல் தூரத்தைப் பல மணிநேரத்தில் கடந்துள்ளனர்.

கம்பநாடர் சீதையைத் தேடும் இராமலக்குவர் ஒரு சில நாள்களில் எவ்வளவு தொலைவு தேடினர் என்னும் குறிப்பினையும் தந்துள்ளார். ஒருநாள் பதினெட்டு யோசனையும் பிறிதொரு நாள் இருபது யோசனையும் தேடியுள்ளனர். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற பின் மலையில் சிலநாள் சோர்ந்து கிடந்து மீண்டும் தேடத் தொடங்கிய அன்று கதிரவன் மறைவதவற்குள் பதினெட்டு யோசனை அளவு தேடி முடித்தனர் (3573). மறுநாள் வைகறையிலேயே சீதையைத் தேடும் முயற்சியை மேற்கொண்டு, நண்பகலுக்குள் நெடுந்தொலைவு தேடிவிட்டனர். அவர்கள் தேடிய தொலைவு 'ஐ ஐந்து அடுத்த யோசனை இரட்டி' (3643) என்று குறிக்கப்பட்டுள்ளது.

'ஐ ஐந்து' என்பதனை உம்மைத்தொகையாகக் கொண்டு ஐந்தும் ஐந்தும் என்று விரிக்கலாம். அப்பொழுது கூட்டலாகும். பண்புத்தொகையாகக் கொண்டு ஐந்து ஆகிய ஐந்து என்றும் விரிக்கலாம். அப்பொழுது பெருக்கலாகும். உம்மைத்தொகையாகக் கொள்ளும்போது பத்து என்றும், பண்புத்தொகையாகக் கொள்ளும்போது இருபத்தைந்து என்றும் பொருள்படும். அவற்றின் இரட்டிப்பு முறையே இருபதும் ஐம்பதுமாகிய யோசனைகளைக் குறிக்கும். இதற்கு முன்னே கதிரவன் மறைவதற்குள் பதினெட்டு யோசனை கடந்தனர் என்பதால் இங்கு நண்பகலுக்குள் கடந்த தூரத்தை

ஐம்பது யோசனையாகக் கொள்ளாமல் இருபது யோசனையாகக் கொள்வதே பொருந்தும்.

பதினெட்டு யோசனை சுமார் 41 மைல் தொலைவினையும் இருபது யோசனை சுமார் 45 மைல் தொலைவினையும் குறிக்கும். இத்தொலைவினை மிகுந்த முயற்சியோடும் துன்பத்தோடும்தான் ஒருநாளில் கடக்க இயலும். சீதையை முனைப்போடு தேடும் இளைஞர்களான இராமலக்குவர் அதனைச் சாதித்தனர் எனலாம். யோசனை என்பதற்கு 4–5 மைல் என்று கொண்டால் இவ் யோசனைகள் முறையே 82 மைல்களையும் 90 மைல்களையும் குறிக்கும்; 9 மைல் என்று கொண்டால் முறையே 142 மைல்களையும் 182 மைல்களையும் குறிக்கும். இவை எத்தகைய வலிய மனிதராலும் ஒருநாளில் கடத்தற்கு இயலாத தொலைவு ஆகும்.

இதனால் யோசனை என்பது 2 மைல் 2 பர்லாங்கு 40 கெஜத்தைச் சுட்டும் அளவாகவே இராமகாதையில் கொள்ளப்பட்டுள்ளது என்பது ஐயத்திற்கிடமின்றி உறுதிப்படுகிறது.

கம்பநாடர் யோசனை என்னும் அளவையால் மேலும் சிலவற்றின் அளவுகளைத் தெரிவித்துள்ளார். அவை வருமாறு: இலங்கையின் பரப்பளவு 700 யோசனை (4834). இலங்கைமதில் 700 யோசனை நீளமும் 100 யோசனை ஆழமும் உடையதாய்க் கட்டப்பட்டது (6533). இலங்கைத்தெருக்களின் நீளம் 12 யோசனை (4991). மேலும் இலங்கைக்கும் இமயமலைக்கும் இடைப்பட்ட தூரம் 9000 யோசனை, ஏமகூடமலையிலிருந்து நிடதமலை 9000 யோசனை. நிடதமலை யிலிருந்து மேருமலை 9000 யோசனை, மேருமலையிலிருந்து நீலகிரிமலை 9000 யோசனை, நீலகிரிமலையிலிருந்து மருத்துமலை 4000 யோசனை என்று குறித்துள்ளார். இவ்அளவுகளைத் துல்லியமான தொலைவினைச் சுட்டாமல் நெடுந்தொலைவு என்பதனைக் குறிப்பனவாகக் கொள்வதே சிறப்பு.

காதம்

கம்பநாடர் பயன்படுத்தியுள்ள மற்றோர் அளவு காதம். காதம், காவதம் இரண்டும் ஒன்றே. கம்பநாடர் இருவழக்குகளையும் கையாண்டுள்ளார். ''காவதம் – காதம்; பகுதிப் பொருள் விகுதி'' என்று விளக்கியுள்ளார், அடியார்க்குநல்லார் (சிலம்பு, நாடுகாண் காதை, அடி41). வான்மீகிமுனிவர் குரோசம் என்னும் அளவினைக் குறிப்பிட்டுள்ளார். கம்பராமாயணத்தில் குரோசம் என்னும் பெயர் காணப்படவில்லை.

வடமொழி அகராதியில் கவ்யூதி என்று ஓர் அளவுப்பெயர் இடம் பெற்றுள்ளது. அது கவ்யூதம் என்றும் குறிக்கப்படுகிறது. குரோசம் என்பதன் பொருளை விளக்குமிடத்து மோனியர்வில்லியம்ஸ் வடமொழி – ஆங்கில அகராதி அதனை ¼ யோசனை என்றும் ½ கவ்யூதி என்றும் குறித்துள்ளது (ப.322). இதனால்,

4 குரோசம் = 1 யோசனை

2 கவ்யூதி = 1 யோசனை

என்பது தெளிவாகிறது. எனவே,

2 குரோசம் = 1 கவ்யூதி

2 கவ்யூதி = 1 யோசனை

என்னும் கணக்குக் கிடைக்கிறது

குரோசத்தின் அளவு யோசனைக்குக் கொள்ளும் அளவுக்கேற்ப 500 தண்டம், 1000 தண்டம், 2000 தண்டம் என்று மாறுபடுவதனையும் இராமகாதையில் 500 தண்டம் கொண்டதே ஒரு குரோசம் என்று கொள்ளப்பட்டுள்ளதனையும் முன்னர்க் கண்டோம். இதனால், இராம காதையில் வரும் செய்திகளையொட்டிக் கணக்கிட்டால்,

500 தண்டம் = 1 குரோசம் = 4 பர்லாங்கு, 120 கெஜம்.

1000 தண்டம் = 1 கவ்யூதி = 1 மைல், 1 பர்லாங்கு, 20 கெஜம்.

2000 தண்டம் = 1 யோசனை = 2 மைல், 2 பர்லாங்கு, 40 கெஜம்.

என்னும் வரையறைகள் கிடைக்கும்.

இதனால், குரோசம் ஒரு கூப்பீடு தூரம், கவ்யூதம் இரு கூப்பீடு தூரம் என்பதும், கவ்யூதம் குரோசத்திற்கும் யோசனைக்கும் இடைப்பட்ட அளவு என்பதும் தெளிவாகின்றன. இக்கவ்யூதமே தமிழில் காவதம் என்றும் காதம் என்றும் மருவி வழங்குவதாகத் தோன்றுகிறது.

"கடுப்பிகு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழக்கியதோர் யோசனையோர் கேட்பர்"

(நாலடியார், ஈகை,10)

என்பதில் வரும் காதம் ஒரு மைல் தொலைவுக்கும் சற்றுக் கூடுதலான கவ்யூதம் என்னும் அளவினைக் குறிக்கிறது எனலாம். ஏனெனில், முரசின் முழக்கம் குரோசத்தால் குறிக்கப்படும் அரை மைல்

தொலைவினும் மிக்கு ஒலிப்பதாகும். இது கவ்யூதம்தான் தமிழில் காதமாயிற்று என்பதற்கு நல்ல சான்று.

கம்பநாடர் சில இடங்களில் காதம் என்னும் அளவினைக் குறித்துள்ளார். அவற்றுள் நான்கு இடங்கள் கருதத்தக்கன.

கம்பநாடர், இராமனிடம் பரத்துவாசமுனிவன் தன் ஆசிரமத்திலிருந்து பத்துக்காதத் தொலைவில் சித்திரகூடம் இருக்கிறது என்று தெரிவிப்பதாகக் குறித்துள்ளார்.

"ஆவது உள்ளதே ஐய!கேள்; ஐயிரண்டு அமைந்த
காவ தப்பொழிற்கு அப்புறம் கழிந்தபின் காண்டி
மேவு காதலின் வைகுதிர் விண்ணினும் இனிதால்;
தேவர் கைதொழும் சித்திர கூடம்என்று உளதே" (2031)

வான்மீகிமுனிவர் இதே செய்தியை,

"குழந்தாய்! இங்கிருந்து பத்துக் குரோச தூரத்தில்
மாமுனிவர்களால் வணங்கப்படுவதும் புண்ணியமானதும்
எம்மருங்கும் கண்ணுக்கினிதாய் இலங்குவதும் ஆகிய
ஒருமலை உள்ளது. இதற்குச் சித்திரகூடம் என்பது பெயர்.
இதில் தங்குவாய்" (அ.54:28;29)

என்று பரத்துவாசமுனிவன் கூறியதாகத் தெரிவித்துள்ளார். வான்மீகம் பத்துக்குரோசம் என்று குறிப்பதனைக் கம்பநாடர் பத்துக்காவதம் என்பதால் குரோசம் என்பதனையே காதம் என்று குறிக்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

தாடகைவதத்திற்குப் பின் விசுவாமித்திரனும் இராமலக்குவரும் இருகாதம் கோமதியாற்றின் பக்கமாக நடந்து சித்தாச்சிரமத்தை அடைந்தனர். அதனை,

"இனையன நிகழ்ந்த பின்னர்
காவதம் இரண்டு சென்றார்" (397)

என்று குறித்துள்ளார் கம்பநாடர். கவ்யூதம் என்பதற்கு ஒத்த அளவாகக் காவதம் என்பதனைக் கொண்டிருந்தால், 'காவதம் இரண்டு சென்றார்' என்று பாடாமல், 'ஓசனை ஒன்று சென்றார்' என்று பாடியிருப்பார். ஏனெனில் இரு கவ்யூதம் ஒருயோசனையாகும். இங்கும் குரோசம் என்பதனையே காவதம் என்னும் அளவுப்பெயரால் குறித்துள்ளார். இரு குரோசம் என்பது ஒரு மைலுக்குச் சற்றுக் கூடுதலாகும். அதனால்தான் சூரியன் மறைவதற்குமுன் தாடகைவதம் நிறைவடைய மூவரும் அங்குத் தங்காமல் சித்தாச்சிரமம் அடைந்தனர் என்று கம்பநாடர் கூறுவது பொருந்துகிறது.

பரதன் கங்கைக்கரையிலிருந்து பரத்துவாசமுனிவன் ஆசிரமத்தை அடையுமுன் 'கழிந்தனன் பல காவதம் காலினே' என்கிறார் (2373). அகத்தியன் உறைவிடத்திலிருந்து ஒருயோசனை தொலைவில் உள்ள பஞ்சவடியைச் சென்றடைந்ததனை, 'நடந்தனர் காவதம் பலவும்' என்று குறிக்கிறார் (2690). இவ்விடங்களில் குரோசம் என்னும் கருத்திலேயே காவதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கருதினாலேயே 'பல' என்பதன் பொருள் சிறக்கும்.

இதுகாறும் கண்டவற்றால் யோசனை என்பது இருமைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவு என்பதும், கவ்யூதம் என்பது ஒருமைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவு என்பதும், குரோசம் என்பது அரை மைலுக்குச் சற்றுக் கூடுதலான தொலைவு என்பதும் தெளிவு. மேலும் தமிழில் காதம் என்பது கவ்யூதம் என்பதற்கு நிகராகச் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், கம்பநாடர் அதனைக் குரோசம் என்பதற்கு நிகராகவே பயன்படுத்தியுள்ளார் என்பதும் விளங்குகிறது.

அயோத்திக்கும் மிதிலைக்கும் இடைப்பட்ட தொலைவு

இந்த வரையறைகளைக் கருத்தில்கொண்டு அயோத்திக்கும் மிதிலைக்கும் இடையேயுள்ள தொலைவு, அவற்றைக் கடத்தற்கு ஆகும் நேரம், தூதர்கள் பயணநேரம் ஆகியவற்றைக் காணலாம். இராமன் திருமணத்தின்பொருட்டுத் தசரதன் மேற்கொண்ட பயணம் மிக விரிவாகக் கம்பநாடரால் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. தசரதன் பயணத்தின் முதல்நாள் இரண்டு யோசனை தூரம் கடந்து சந்திரசயிலம் என்னும் மலையில் தங்கினான். சற்றொப்ப அதே தொலைவினைத்தான் அடுத்த இருநாள்களிலும் ஒவ்வொருநாளும் கடந்துள்ளான். எனவே அயோத்தியிலிருந்து மிதிலை ஆறு அல்லது ஏழு யோசனை தொலைவில் இருந்தது எனலாம். அவ்விரண்டனுக்கும் இடைப்பட்ட தூரம் பதினான்கு அல்லது பதினைந்து மைல்களே ஆகும். ஆனால் இடையில் மலையும், சோணையாறும் கங்கையாறும் குறுக்கிட்டன.

இம்மூன்று நாளிலும் தசரதன் பயணம்செய்த நேரத்தைக் கணக்கிட்டால் சுமார் பன்னிரண்டு (5+4+3=12) மணி நேரத்திற்கு மேல் ஆகாது. தசரதனோடு புறப்பட்ட பட்டத்தரசியரும் வசிட்டன் முதலியோரும் சிவிகையில் பயணம் செய்துள்ளனர். எனவே அவர்கள் வேகமாகப் பயணம் செய்திருக்க வாய்ப்பில்லை. இதற்கு மாறாகத் தூதர்கள் பெருந்திரளாகச் செல்லாமல் சிலரே சென்றுள்ளனர். பாதையிலும் மக்கள் நெரிசல் இல்லை. அவர்கள் ஏறிச் சென்ற தேரும் காற்றினும் கடிய வேகத்தில் பறந்துள்ளது. அவர்கள் தசரதனும் அயோத்தி நகரமக்களும் எவ்வழியாக மிதிலை சென்றார்களோ அவ்வழியாகவே அயோத்திக்குச் சென்றிருக்க வேண்டும்.

ஆதலால் தூதர்கள் மிதிலையிலிருந்து முற்பகல் புறப்பட்டு மாலைக்குள் அயோத்தியை அடைந்தனர் என்பது சரியாகவே அமைந்துள்ளது.

தசரதனின் மிதிலைப் பயணம் (மூன்று நாள்கள்)

முதல் நாள்

கம்பநாடர், தூதர் வந்த மறுநாள் தசரதனும் அயோத்திமக்களும் மிதிலைக்குப் புறப்பட்டதாகத் தெரிவிக்கிறார். அப்பயணத்தில், தசரதனும் சேனையும் வழியில் தங்கிய இடங்கள், அங்கு ஆண்களும் பெண்களும் மகிழ்ந்திருந்த காட்சிகள், மாலைப்பொழுது, நிலாக்காட்சி ஆகியவற்றைக் கவிதையழகு கொஞ்சும்வண்ணம் தீட்டியுள்ளார்.

தசரதன் பயணக்காட்சியைக் கம்பநாடர், ''அவன் செல்லும் போது சங்கு, புல்லாங்குழல், தாளம், எக்காளம், பேரிகை முதலியன முழங்கின. அவ்வோசை மேகத்தில் தோன்றும் இடியைத் துரத்தியது; மாலைகளும், குடைகளும், மயிற்பிச்சங்களும் வெயிலை ஓட்டின; வெண்கொற்றக்குடையைக் கண்டு 'இதன் வடிவமும் நிறமும் குளிர்ச்சியும் எனக்கு இல்லையே' என்று சந்திரன் வெட்கப்பட்டு ஓடினான்; அவன் தேவர்களும் மயங்கும்படி மேனாணிப்போடு சென்றான்'' என்று கற்பனையழகோடு பாடியுள்ளார்.

''சங்கமும் பணையும் கொம்பும்
தாளமும் காளத் தோடு
மங்கல பேரி செய்த
பேர்ஒலி மழையை ஓட்டத்
தொங்கலும் குடையும் தோகைப்
பிச்சமும் சுடரை ஓட்டத்
திங்கள்வெண் குடைகண்டு ஓடத்
தேவரும் மருளச் சென்றான்'' (808)

வெண்கொற்றக் குடையின் தன்மையைக் காட்டுவதாக அமைந்த இப்புனைந்துரை காலத்தைக் காட்டுவதன்று. இதனைக் காலத்தைக் காட்டும் குறிப்பாகப் பிறழ உணர்ந்து, ''இரவிலும் பகலிலுஞ் செல்லுதலால் 'சுடரை ஓட்ட', 'திங்கள் ஓட' என்றார். தசரத சக்கரவர்த்தி, சேனைகள் பின்தொடர ரிஷிகளோடு கூடப் புறப்பட்டு நான்கு நாட்களில் வழிகடந்து ஐந்தாநாள் விதேக தேசத்தை அடைந்தான் என்று முதனூலிற் கூறியுள்ளது'' (எழுச்சிப்படலம், 78 உரை) என்று குறிப்பும் எழுதியுள்ளார் அறிஞர் வை.மு.கோ. இது பொருத்தமான விளக்கம் அன்று. தசரதன் மலைச்சாரலை அடைந்த பின்பே மாலைப்பொழுது வந்தது.

அவர்கள் சந்திரசயிலச்சாரல் காட்சிகளைக் கண்டுகொண்டிருக்கும் போது அந்திமாலை வர அந்த மலை யானை போலத் தோன்றியது. வானில் விரைந்து செல்லும் மாலைச்சூரியன் அவ்யானைமேல் பாயும் சிங்கத்தை ஒத்தது. செவ்வானம், சிங்கம் யானைமீது பாய்ந்ததால் வெளிப்படும் இரத்தத்தைப் போல இருந்தது (878). அன்று தசரதன் இருயோசனை தூரம் கடந்து மலையடிவாரத்தில் தங்கினான் (812).

இரவு வந்தது. சூரியனாகிய சிங்கம் மேற்குமலைக்குச் செல்ல அதற்கு அஞ்சி ஒதுங்கியிருந்த யானைக்கூட்டம் வந்து பரவியது போல இருள் பரவியது. தசரதனின் படைவெள்ளம் தீபங்களை ஏற்ற அவை கடலில் செந்தாமரை பூத்ததுபோலக் காட்சியளித்தன. நிலவு, கடலினின்றும் நட்சத்திரங்கள் புடைசூழ எழுந்து வானில் ஒளிவீசியது. அக்காட்சி முத்துகளை ஈன்ற வெண்சங்கு வெண்மணலில் ஊர்ந்து செல்வதுபோல இருந்தது. பெண்கள் மலர்ந்த முகத்தோடு தோன்றினர். ''முடைக்கடல் ஒரு நிலவைத் தோற்றுவித்தது: படைக்கடலுக்கு அதனைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை; ஆதலால் தேவலோகப் பெண்களின் முகத்தைவிட அழகான பெண்களின் முகங்கள் என்னும் குறையாத பல நிலவுகளைத் தோற்றுவித்தது'' என்னும் வண்ணம் பெண்களின் முகங்கள் ஒளிர்ந்தன. குறைந்த மதிக்கு முன்னே பெண்களின் நிறைந்த முழுமதிகள் தோன்றின என்னும் புனைந்துரை அது வளர்பிறைப் பன்னிரண்டாம்நாள் என்பதனை உறுதிசெய்கிறது. முழுவட்டத்திற்குச் சற்றே குறைந்து காணப்படும் அன்றைய மதியத்திற்குச் சங்கு ஏற்ற உவமையாகும். கடலில் தோன்றிய மதியம் கலை குறைந்தது என்பது, அதற்குப் போட்டியாகப் படைக்கடல் பெண்களின் முகமாகிய கலை குறையாத மதியங்களை – ஆனா மதியங்களைத் – தோற்றுவித்தது என்பதனால் விளங்குகிறது.

''தண்நல் கடலின் துளிசிந்து தரங்கம் நீங்கி,
விண்ணில் சுடர்வெண் மதிவந்தது மீன்கள் சூழ
வண்ணக் கதிர்வெண் நிலவுஈன்றன வாலு கத்தோடு
ஒள்நித் திலம்ஈன்று ஒளிர்வால்வளை ஊர்வது ஒத்தே'' (884)

''மீன்நாறு வேலை ஒருவெண்மதி ஈனும் வேலை
நோனாது அதனை நுவலற்குஅருங் கோடி வெள்ளம்
வான்நா டியரின் பொலிமாதர் முகங்கள் என்னும்
ஆனா மதியங் கள்மலர்ந்தது அனீக வேலை'' (885)

இரண்டாம் நாள்

கதிரவன் தோன்றும் போதே கடுமையாக விளங்கினான். இரவு என்னும் இரணியனை அழிக்கக் கதிர்கள் என்னும் ஆயிரம் கைகளை வீசிக் கொண்டு உதயமலை என்னும் தூணிலிருந்து நரசிங்கம்

தோன்றியதுபோல வெளிப்பட்டான். தசரதன் நாட்கடமைகளை முடித்துப் பயணத்தைத் தொடர்ந்தான். அவனும் சேனையும் சோணையாற்றை அடைந்து சோலையில் தங்கிய பின்னரே உச்சிவேளை வந்தது.

"துறைஎலாம் கமலம் ஆன
சோணையாறு அடைந்தது அன்றே" (891)

"அடைந்துஅவண் இறுத்த பின்னர்
அருக்கனும் உம்பர்ச் சேர்ந்தான்" (892)

மக்கள் சோலையில் பூக்கொய்து, ஆற்றில் நீராடி, அதன் பிறகு கள்ளுண்டு களித்தனர். அதனைக் கண்டு தானும் நீராட எண்ணியது போலப் பகலவன் மேலைக்கடலை அடைந்தான். நிலவு தோன்றியது. அன்று வளர்பிறைப் பதிமூன்றாம் நாள். நிலவின் புனைந்துரை அதனை உறுதிப்படுத்துகிறது. முதல்நாள் பெண்களின் முகத்திற்குத் தோற்றுச் சென்ற சந்திரன் அன்று மீண்டும் அவர்கள் எதிரே வந்து தோன்றினான். அஃது ஆற்றலின்மையால் பகையரசனிடம் தோற்ற மன்னன் மீண்டும் அவன்மேல் படையெடுத்து வருவது போன்றிருந்தது.

"ஆற்றல் இன்மையி னால்அழிந் தேயும்தம்
வேற்று மன்னர்தம் மேல்வரும் வேந்தர்போல்
ஏற்று மாதர்மு கங்களொடு எங்கணும்
தோற்ற சந்திரன் மீளவும் தோன்றினான்" (961)

அன்றைய நிலவொளி வெண்ணிறக் கள்ளின் வெள்ளமாய்த் திகழ்ந்தது. அது பொருள்களின்மேல் வெள்ளை அடித்தது. கரிய ஆறுகள்கூடக் கங்கை போலக் காட்சி அளித்தன; கருங்கடல் பாற்கடலாயிற்று; கரிய மலைகளெல்லாம் கயிலை மலைகள் ஆயின. மன்மதன் பிறந்த நாளை வெள்ளாடை அணிந்து கொண்டாடுவது போல எல்லாப் பொருள்களும் வெண்மைக்கோலம் கொண்டன. கள்ளில் பலரும், கலவியில் பலரும், புலவியில் பலரும் இன்பம் காண அவ்இரவு கழிந்தது.

மூன்றாம் நாள்

முழுநிலா நாள் நெருங்கிவிட்டதால் சந்திரன்மறைவும் சூரியன்தோற்றமும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. தீயோர் இடையில் பெற்ற செல்வம் விரைந்து மறைவதுபோலச் சந்திரன் மறைந்தான்; பாற்கடல்பரமன் மார்பில் விளங்கும் கௌத்துவமணி போலக் கதிரவன் தோன்றினான்(1023). வேந்தர்வேந்தனாகிய தசரதன் காலையில் புறப்பட்டுக் கங்கையாற்றை அடைந்தான். சேனை கங்கையில் நீராடிக் கரையேறிற்று. தசரதன் மிதிலையை நெருங்கச் சனகன் எதிர்கொண்டு வரவேற்றான்.

தசரதன் மிதிலைப்பயணம் பற்றிய புனைந்துரை அனைத்தும் கம்பநாடர் படைப்பு. வான்மீகத்தில் சந்திரசயிலம் பற்றிய குறிப்புக்கூட இல்லை. அது தூதர் வந்து செய்தி தெரிவித்த மறுநாள் தசரதன் மிதிலைக்குப் புறப்பட்டு நான்கு நாள்களுக்குள் விதேகநாட்டை அடைந்தான் என்று மட்டுமே தெரிவிக்கிறது.

"வழியை நான்கு நாள்களுக்குள் கடந்து விதேயநாட்டிற்கு வந்து சேர்ந்தான்" (பா.69:8)

கம்பநாடர் பயணத்தை மூன்று நாளில் நிகழ்ந்ததாகக் குறைத்து அதனை விளக்கமாகப் பேசிக் காப்பியச் சுவையினைக் கூட்டியுள்ளார். மேலும் தூதர், தசரதன் இவர்களின் பயண நாள்களைக் குறைந்தமையால், வில்லை வளைத்தபின் இராமனும் சீதையும் காதல் ஏக்கத்தோடு நெடுநாள் காத்திருந்தனர் என்னும் நிலையினையும் தவிர்த்துள்ளார்.

இராமன் விசுவாமித்திரனோடு சென்றபின் பதிமூன்றாம்நாள், தசரதன் மிதிலைக்குப் புறப்பட்டு அன்று சந்திரசைலமலையிலும், பதினான்காம்நாள் சோணையாற்றங்கரையிலும் தங்கிப் பதினைந்தாம் நாள் அங்குச் சென்றடைந்தான் என்கிறது கம்பராமாயணம். வான்மீகம் பத்தொன்பதாம்நாள் அயோத்தியிலிருந்து புறப்பட்டு, இருபத்திரண்டாம் நாள் மிதிலையை அடைந்தான் என்கிறது.

மணவுறுதி

கம்பநாடரும் வான்மீகிமுனிவரும் மணவுறுதி செய்யப்பட்ட நாளிலும் வேறுபடுகின்றனர். கம்பநாடர் தசரதன் மிதிலையை அடைந்த அன்று மாலையே மணவுறுதி நிகழ்ச்சி நடைபெற்றதாகக் கூறுகிறார்.

அன்று மாலை சனகன், வசிட்டன், விசுவாமித்திரன், தசரதன் உள்ளிட்டோர் மண்டபத்தில் கூடினர். தோழியர் சீதையை ஒப்பனை செய்து அழைத்து வந்து ஒரு தவிசில் அமர்த்தினர். திருமணநாள் உறுதிசெய்யப்பட்டது. விசுவாமித்திரன் தசரதனிடம் நாள்குறித்துத் தெரிவித்தான்.

"நாளைஎன உற்றபகல் நல்தவன் உரைத்தான்" (1157)

இது பிற்பகல் நிகழ்ச்சி என்பதனை உணர்த்தும் குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அங்குக் கூடியிருந்தோர் தத்தம் மனைக்குத் திருப்பினர்; அப்பொழுது கதிரவனும் மேருமலையை அடைந்தான் என்பதே அது.

"மன்னவர்பி ரிந்தனர்கள் மாதவர்கள் போனார்
மின்னுசுடர் ஆதவனும் மேருவில் மறைந்தான்" (1159)

அது முழுநிலவுக்கு முந்தைய நாள். அதனால் எங்கும் பகல்போல நிலாக் காய்ந்தது. காதல் நோயினால் தளர்ந்த சீதை தன் ஆற்றாமை தோன்ற, ''நிலவே! வேலினையும் நெருப்பினையும் வீசும் கதிர்களைக்கொண்டு வெயில்போல் எங்கும் பரவுகின்றாய். பிழையில்லாதவர்களாய் உள்ள பெண்களின் உயிரை வாங்குபவர் உன்னையன்றி வேறொருவர் உள்ளரோ? சொல்வாய்'' (1165) என்று அதனைப் பழித்தாள். இராமனுக்கும் அந்த இரவு விடியாத நீள்இரவாக அமைந்தது. அவன் சீதையின் நினைவில் தவித்துத் தளர்ந்தான்.

வான்மீகிமுனிவர் தசரதன் மிதிலைக்கு வந்த மறுநாள் மணவுறுதி செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அதுவருமாறு: தசரதன் மிதிலையை அடையச் சனகன் அவனை முறைப்படி எதிர்கொண்டான். அவன் குலத்தோடு திருமணத்தொடர்பு செய்துகொள்வதில் மிகவும் பெருமையடைவதாகச் சனகன் தெரிவித்தான். மறுநாள் வேள்வி முடிந்தபின் திருமணத்தை நடத்த இசைவளிக்க வேண்டினான். தசரதன் அதற்கு இசையச் சனகன் அன்றைய இரவு வேள்வியை நிறைவுசெய்து, திருமணத்திற்கு முன்னே செய்தற்குரிய சடங்குகளையும் நிகழ்த்தலானான். தசரதன், சனகன் விருந்தோம்பலில் இரவைக் கழித்தான்.

மறுநாள் தூதர் சாங்கியாசிய நாட்டுக்குச் சென்று சனகன் தம்பி குசத்துவசனை அழைத்து வந்தனர். மாலையில் மணவுறுதி நிகழ்ந்தது. முதலில் வசிட்டன் தசரதன் குலவரலாற்றைக் கூறினான். அடுத்து, சனகன் தன் குல வரலாற்றைத் தெரிவித்தான். தன் பெண்களில் மூத்தவளான சீதையை இராமனும் இளையவளான ஊர்மிளையை இலக்குவனும் மணந்துகொள்ள வேண்டும் என்று வேண்டினான்.

> *''தோளாற்றல் மிக்கவனே, இன்று மக நட்சத்திரம். ஐயனே,*
> *இன்றைக்கு மூன்றாவது நாள் பங்குனி உத்தரம். அன்று*
> *திருமணம் நிகழ்த்துவாய். இராமலக்குவர் மேன்மேலும் நலம்*
> *பெறத் தானம் செய்யப்பட வேண்டும்'' (பா.71:24)*

என்றான் சனகன். விசுவாமித்திரன் சனகனிடம் பரதனுக்கும் சத்துருக்கனனுக்கும் அவன் தம்பி பெண்கள் இருவரையும் திருமணம் செய்துகொடுக்குமாறு வசிட்டமுனிவன் இசைவோடு வேண்டினான். அதற்கு அவனும் இசைந்தான். நால்வருக்கும் பங்குனி உத்தரத்தில் திருமணம் செய்வதாக உறுதிசெய்யப்பட்டது. தசரதன் நாந்தீ முதலிய நற்கடன்களைச் செய்யப் புறப்பட்டான்.

கம்பராமாயணத்தில் தசரதன், இராமன் மிதிலையிலிருந்து புறப்பட்ட பதினைந்தாம் நாள் மிதிலையைச் சென்றடைய அன்றே மணவுறுதி

நிகழ்த்தப்பட்டுள்ளது. வான்மீகத்தில் இருபத்திரண்டாம் நாள் தசரதன் அங்குச் சென்றடைய இருபத்துமூன்றாம் நாள் மணவுறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மணவுறுதி செய்யப்பட்டதில் கம்பநாடரால் ஒருநாள் குறைக்கப்பட்டுள்ளது.

மணவிழா (ஒருநாள்)

தசரதன் மிதிலையை அடைந்த மறுநாள் திருமணம் நடந்ததாகக் கம்பநாடரும், மூன்றாம்நாள் நடந்ததாக வான்மீகிமுனிவரும் தெரிவிக்கின்றனர். கம்பராமாயணப்படி, பூரநட்சத்திரத்தோடு கூடிய நாளில் திருமணவுறுதியும், உத்தர நட்சத்திரத்தோடு கூடிய நாளில் திருமணமும் நிகழ்ந்தன. வான்மீகம், பங்குனிமாதத்தில் மகநட்சத்திரத்தோடு கூடிய நாளில் திருமணம் உறுதிசெய்யப்பட்டுப் பூரநட்சத்திரத்தோடு கூடிய நாளில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டு, உத்தர நட்சத்திரத்தோடு கூடிய நாளில் திருணம் நிகழ்த்தப்பெற்றது. திருமணம் உறுதிசெய்யப்பட்ட மறுநாள் தசரதன் விடிவதற்கு முன்னரே எழுந்து அந்தணர்களுக்கு ஆநிரைகளை வழங்கினான்; பரதனின் தாய்மாமன் உதாசித்தன் அங்கு வந்துசேர்ந்தான் என்கிறது.

கம்பநாடர் திரும்மணநிகழ்ச்சியைக் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார். கதிரவன் இராமனுக்கும் சீதைக்கும் நடக்கும் திருமணத்தைக் காண விழைந்தது போல இருளைக் கிழித்துக் கொண்டு தேர் ஏறி வந்தான். இராமனும் சீதையும் மண்டபத்திற்கு வந்துசேர்ந்தனர். வசிட்டன் திருமணச்சடங்குகளை நிகழ்த்தினான். மணமக்கள் தீ வலம் வந்து, அம்மி மிதித்து, அருந்ததி கண்டு கணவனும் மனைவியுமாக மனை புகுந்தனர்.

''பங்குனி உத்தரம் ஆன பகற்போது
அங்கஇ ருக்கினில் ஆயிர நாமச்
சிங்கம் மணத்தொழில் செய்த திறத்தால்
மங்கல அங்கி வசிட்டன் வகுத்தான்'' (1258)

இப்பாட்டின் குறிப்புரையில், ''(உத்திர) பல்குநீ நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமியை யுடைமையால்', இம்மாதத்திற்குப் பால்குநமென்று பெயர்; அது பங்குனி எனத் திரிந்தது'' என்று அறிஞர் வை.மு.கோ எழுதியுள்ளது கருதத்தக்கது. அன்றே இலக்குவன் ஊர்மிளையையும், பரதன் மாண்டவியையும், சத்துருக்கனன் சுருதகீர்த்தியையும் மணந்தனர். வான்மீகிமுனிவர் ஊர்மிளையைச் சனகன் மகளாகக் காட்டியுள்ளார். ஆனால் கம்பநாடர் அவளையும் குசத்துவசன் மகளாகவே குறித்துள்ளார் என்பது தவிரத் திருமண நிகழ்ச்சியில் இருநூல்களுக்கும் இடையே பெரிய மாற்றம் ஏதுமில்லை.

வான்மீகத்தின்படி, திருமண மண்டபத்தில் பெண்கள் காத்திருந்தனர். தசரதன் தன் பிள்ளைகளோடும் முனிவர்களோடும் மற்றவர்களோடும் அங்கு வந்துசேர்ந்தான். வசிட்டன் முறைப்படி திருமணச்சடங்குகளை நடத்தினான். முதலில் இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நிகழ்ந்தது.

> *"இந்தச் சீதை என்மகள்; உன் ஒவ்வொர் அறச்செயலையும் உடனிருந்து நிறைவேற்றுபவள்; உனக்கு எல்லாப்பேறுகளும் உண்டாவதாக! இவள் கையினை உன் கையினால் பற்றுவாய்"* *(பா. 73:31)*

என்றவாறு சனகன் இராமனிடம் சீதையை ஒப்படைத்தான். பின்பு தம்பியர் திருமணம் நடந்தேறியது.

இவ்வாறு இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்டுச் சென்ற பதினாறாம் நாள் திருமணம் நடந்ததாகக் கம்பநாடரும் இருபத்தைந்தாம் நாள் நிகழ்ந்ததாக வான்மீகிமுனிவரும் தெரிவிக்கின்றனர்.

இராமாயண சார சங்கிரகம், துவாதசியன்று சனகன் தசரதனைச் சந்தித்துக் குலவரலாறு கூறினான் என்றும் திரயோதசியில் தசரதன் அந்தணர்களுக்கு ஆநிரைகளைக் கொடுத்தான் என்றும் சதுர்த்தசியில் பிரமச்சரிய ஒழுக்கம் முடிவுறும் நிலையில் நடைபெறும் சமாவர்த்தனம் என்னும் சடங்கு நிகழ்ந்தது என்றும் பௌர்ணமியில் திருமணம் நடைபெற்றது என்றும் குறிக்கிறது. மேலும் திருமணம் ஐந்துநாள் நிகழ்ந்தது என்றும் இல்புகுவிழா பஞ்சமியில் நிகழ, அவ் இல்லத்தில் மூன்றுநாள் தங்கினர் என்றும் கூறுகிறது. இவற்றிற்கு வான்மீகத்தில் போதுமான சான்றுகள் இல்லை. இஃது ஆசிரியர் நடைமுறையையொட்டிப் போட்டுள்ள கணக்கே ஆகும். இக்கணக்கின்படி இருபத்தொன்பதாம் நாள் நிகழ்ச்சி திருமணம் என்று ஆகிறது.

வான்மீகம், நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடந்தன என்று கருதும் வகையிலேயே அமைந்துள்ளது. அதில் உள்ளவாறே கணக்கிட்டால், கீழ்க்கண்டவாறு காலநிரல் அமையும்

வான்மீகக் காலநிரல்

நாள்	திதி	நிகழ்ச்சி
முதல்நாள்	சஷ்டி (தேய்பிறை)	மூவரும் சரயுவாற்றில் தங்குதல்
இரண்டாம்நாள்	சப்தமி	மூவரும் காமனாச் சிரமத்தில் தங்குதல்

மூன்றாம்நாள்	அஷ்டமி	தாடகைவதத்திற்குப் பின் அங்கேயே தங்குதல்
நான்காம்நாள்	நவமி	சித்தாச்சிரமத்தை அடைதல்
ஐந்தாம்நாள்	தசமி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஆறாம்நாள்	ஏகாதசி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஏழாம்நாள்	துவாதசி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
எட்டாம் நாள்	திரயோதசி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஒன்பதாம் நாள்	சதுர்த்தசி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
பத்தாம்நாள்	அமாவாசை	இராமலக்குவர் வேள்விகாத்தல்
பதினோராம்நாள்	பிரதமை	சோணையாற்றங்கரையில் தங்குதல்
பன்னிரண்டாம்நாள்	துவிதியை	கங்கைக்கரையில் தங்குதல்
பதிமூன்றாம் நாள்	திருதியை	விசாலைநகரில் தங்குதல்
பதினான்காம்நாள்	சதுர்த்தி	மூவரும் மிதிலையை அடைதல்
பதினைந்தாம் நாள்	பஞ்சமி	இராமன் வில் வளைத்தல் மற்றும் தூதர் அயோத்திக்குப் புறப்படல்
பதினாறாம்நாள்	சஷ்டி	தூதர் பயணம்
பதினேழாம்நாள்	சப்தமி	தூதர் பயணம்
பதினெட்டாம்நாள்	அஷ்டமி	தூதர் அயோத்தியை அடைதல்
பத்தொன்பதாம்நாள்	நவமி	தசரதன் மிதிலைக்குப் புறப்படுதல்
இருபதாம்நாள்	தசமி	மிதிலைப்பயணம்
இருபத்தோராம்நாள்	ஏகாதசி	மிதிலைப்பயணம்
இருபத்திரண்டாம்நாள்	துவாதசி	மிதிலையை அடைதல்
இருபத்துமூன்றாம்நாள்	திரயோதசி	திருமணவுறுதி செய்தல்
இருபத்துநான்காம்நாள்	சதுர்த்தசி	திருமணஏற்பாடு செய்தல்
இருபத்தைந்தாம்நாள்	பௌர்ணமி	திருமணம்

இக்கால நிரலில் மூவரும் சோணையாற்றங்கரையில் தங்கிய நாள் பிரதமை என்று வருவது முரணாக அமைகிறது. காரணம், அன்று நள்ளிரவுக்குப்பின் நிலவு தோன்றியதாக வான்மீகம் குறிப்பிடுகிறது. ஆதலின் இராமாயண சார சங்கிரக ஆசிரியர் அந்நாளைத் தேய்பிறை ஏகாதசியாகக் கொண்டுள்ளார்; அதற்கேற்பத் தூதர் இராமன் வில்லை முறித்த அன்றே அயோத்திக்குப் புறப்பட்டனர் என்னாமல் மூன்றுநாள் கழித்துப் புறப்பட்டனர் என்றும், தசரதன் நான்காம்நாள் மிதிலையை அடைந்தான் என்னாமல் நான்குநாள் பயணம் செய்து ஐந்தாம்நாள் அடைந்தான் என்றும், தசரதன் மிதிலையை அடைந்த மூன்றாம்நாள் திருமணம் நிகழ்ந்தது என்னாமல் நான்காம் நாள் நிகழ்ந்தது என்றும் கணக்கிட்டுள்ளார், இப்படி முறையே மூன்றும் ஒன்றும் ஒன்றுமாக ஐந்துநாள்களைச் சேர்த்துள்ளார். இவ் ஐந்துநாள்களையும் கூட்டினால் திருமணம் இருபத்தொன்பதாம்நாள் நடந்தது என்றும் அதிலிருந்து பின்னோக்கி எண்ணினால் ஏகாதசியில் சோணையாற்றில் தங்கினர் என்றும் பொருத்தமாக அமைகிறது. இல்லையெனில் அன்று பின்னிலவு எரித்தது என்பது இடைச்செருகலாகத் தள்ள நேரிடும். அக்குறிப்பினை இடைச்செருகலாகத் தள்ளாமல், வான்மீகத்தில் காணப்படும் குறிப்புகளை இராமாயண சார சங்கிரக ஆசிரியர் இருபத்தொன்பது நாள் நிகழ்ச்சியாக ஒழுங்குபடுத்திக் காட்டியுள்ளார்.

இராமாயண சார சங்கிரகக் காலநிரல்

நாள்	திதி	நிகழ்ச்சி
முதல் நாள்	துவிதியை (தேய்பிறை)	மூவரும் சரயுவாற்றில் தங்குதல்
இரண்டாம்நாள்	திருதியை	மூவரும் காமனாச்சிரமத்தில் தங்குதல்
மூன்றாம்நாள்	சதுர்த்தி	தாடகைவதத்திற்குப் பின் அங்கேயே தங்குதல்
நான்காம்நாள்	பஞ்சமி	சித்தாச்சிரமத்தை அடைதல் இரவே வேள்விகாக்கத் தொடங்குதல்
ஐந்தாம்நாள்	சஷ்டி	வேள்விகாத்தல்
ஆறாம்நாள்	சப்தமி	வேள்விகாத்தல்
ஏழாம்நாள்	அஷ்டமி	வேள்விகாத்தல்
எட்டாம்நாள்	நவமி	வேள்விகாத்தல்

ஒன்பதாம்நாள்	தசமி	வேள்வி நிறைவு
பத்தாம்நாள்	ஏகாதசி	சோணையாற்றங்கரையில் தங்குதல்
பதினோராம்நாள்	துவாதசி	கங்கையாற்றங்கரையில் தங்குதல்
பன்னிரண்டாம்நாள்	திரயோதசி	விசாலைநகரில் தங்குதல்
பதிமூன்றாம்நாள்	சதுர்த்தசி	அகலிகைசாபம் நீக்கி மிதிலை அடைதல்
பதினான்காம்நாள்	அமாவாசை	வில்வளைத்தல்
பதினைந்தாம்நாள்	பிரதமை	– – – – –
பதினாறாம்நாள்	துவிதியை	– – – – –
பதினேழாம்நாள்	திருதியை	தூதர் அயோத்திக்குப் புறப்படல்
பதினெட்டாம்நாள்	சதுர்த்தி	தூதர் பயணம்
பத்தொன்பதாம்நாள்	பஞ்சமி	தூதர் பயணம்
இருபதாம்நாள்	சஷ்டி	தூதர் அயோத்தி அடைதல்
இருபத்தோராம்நாள்	சப்தமி	தசரதன் மிதிலைக்குப் புறப்படல்
இருபத்திரண்டாம்நாள்	அஷ்டமி	மிதிலைப்பயணம்
இருபத்துமூன்றாம்நாள்	நவமி	மிதிலைப்பயணம்
இருபத்துநான்காம்நாள்	தசமி	மிதிலைப்பயணம்
இருபத்தைந்தாம்நாள்	ஏகாதசி	தசரதன் மிதிலையை அடைதல்
இருபத்தாறாம்நாள்	துவாதசி	சனகன் குலவரலாறு கூறல்
இருபத்தேழாம்நாள்	திரயோதசி	தசரதன் கோதானம் செய்தல்
இருபத்தெட்டாம்நாள்	சதுர்த்தசி	சமாவர்த்தனம் முதலிய சடங்கு நிகழ்தல்
இருபத்தொன்பதாம் நாள்	பௌர்ணமி	திருமணம்

ஆனால், கம்பநாடரின் காலநிரல் எந்தக் குழப்பமும் இல்லாமல் மிகத்தெளிவாக உள்ளது. இராமன் விசுவாமித்திரனோடு புறப்பட்டுச் சென்ற பதினாறாம்நாள் அவனுக்கும் சீதைக்கும் பங்குனி உத்தரமாகிய பௌர்ணமியில் திருமணம் நிகழ்ந்தது. பௌர்ணமியிலிருந்து பதினாறுநாள்களைப் பின்நோக்கிக் கணக்கிட்டால் அமாவாசையன்று அயோத்தியிலிருந்து விசுவாமித்திரனோடு புறப்பட்டுச் சென்றான் என்பது தெளிவாகிறது. அவ்விவரம் வருமாறு:

கம்பராமாயணக் காலநிரல்

நாள்	திதி	நிகழ்ச்சி
முதல்நாள்	அமாவாசை	சரயுவாற்றில் தங்குதல்
இரண்டாம்நாள்	பிரதமை	காமனாச்சிரமத்தில் தங்குதல்
மூன்றாம்நாள்	துவிதியை	சித்தாச்சிரமத்தில் தங்குதல்
நான்காம்நாள்	திருதியை	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஐந்தாம்நாள்	சதுர்த்தி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஆறாம்நாள்	பஞ்சமி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஏழாம்நாள்	சஷ்டி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
எட்டாம்நாள்	சப்தமி	இராமலக்குவர் வேள்விகாத்தல்
ஒன்பதாம்நாள்	அஷ்டமி	வேள்வி நிறைவு
பத்தாம்நாள்	நவமி	மிதிலைக்குப்புறப்பட்டுச் சோணைக்கரையில் தங்குதல்
பதினோராம்நாள்	தசமி	மிதிலையை அடைதலும் சீதையைக்கண்டு இராமன் காதல் கொள்ளுதலும்
பன்னிரண்டாம்நாள்	ஏகாதசி	இராமன் வில்லை முறித்தலும் தூதர் அயோத்தி புறப்படலும்
பதிமூன்றாம்நாள்	துவாதசி	தசரதன் மிதிலைக்குப் புறப்பட்டுச் சந்திரசயிலத்தில் தங்குதல்
பதினான்காம்நாள்	திரயோதசி	சோணையாற்றில் தங்குதல்
பதினைந்தாம்நாள்	சதுர்த்தசி	தசரதன் மிதிலை அடைதலும் திருமணவுறுதி செய்தலும்
பதினாறாம்நாள்	பௌர்ணமி	திருமணம்

கம்பநாடரின் காலநிரல் அவர் காலத்தைச் சுருக்கி நிகழ்ச்சிகளை எவ்வளவு செறிவாக அமைத்துள்ளார் என்பதனைக் கண்டு மகிழத் துணைபுரிகிறது.

அயோத்தி திரும்புதல்

திருமணம் முடிந்தபின் தசரதன் முதலியோர் எப்பொழுது அயோத்தி திரும்பினர் என்பது பற்றித் தெளிவான குறிப்பு இரு நூல்களிலும் இல்லை. சில நாள்களுக்குப் பின் தசரதன் புறப்பட்டான் என்கிறார் கம்பநாடர்.

''வேந்தனும் அந்நகர் வைகினன்; மெள்ளத்
தேய்ந்தன நாள்சில; செய்தது உரைப்பாம்'' *(1262)*

வான்மீகம் திருமணம் நிகழ்ந்த அன்றைய இரவு கழிந்தபின் விசுவாமித்திரன் இமயமலைக்குப் புறப்படத் தசரதனும் விரைந்து அயோத்திக்குப் பயணமானான் என்கிறது.

''அந்த விசுவாமித்திரன் சென்ற பின்னர் விரைந்து
வேந்தர்வேந்தனும் அயோத்தி அரசனுமான தசரதன் மிதிலை
மன்னனைக் கண்டு விடைபெற்றுக்கொண்டு நகருக்குப்
பயணமானான்'' *(பா.74:2)*

இராமாயண சார சங்கிரகம் திருமணத்திற்குப் பின் எட்டாம்நாள் அஷ்டமியில் இரவு கழிந்தவுடன் விசுவாமித்திரன் இமயமலைக்குப் புறப்பட்டான், நவமியில் தசரதன் பயணம் தொடங்கிற்று. தசரதன் ஐந்துநாள் பயணம் செய்து தேய்பிறைத் துவிதியையில் அயோத்தி அடைந்தான் என்று கூறுகிறது. இப்பகுப்புக்கான சான்று ஏதும் வான்மீகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

மிதிலையிலிருந்து தசரதன் ஒருநாளிலேயே அயோத்தி அடைந்தான் என்று கருதும்வகையிலேயே கம்பநாடரின் பாடற்போக்கு அமைந்துள்ளது. வழியில் பரசுராமன் வலிஅடக்கப்பட்டான். இது மிகக் குறுகிய கால எல்லையில் நடந்து முடியத் தசரதன் அன்றே அயோத்தியை அடைந்தான். இடையில் எங்கும் தங்கிய குறிப்பு இல்லை. முன்பு மிதிலைக்குச் செல்லும்போது அயோத்திமக்கள் உடன்வந்ததால் விரைந்து செல்லமுடியவில்லை. இப்பொழுது திருமணம் முடிந்து சிலநாளுக்குப் பின் செல்வதால் கூட்டம் குறைவாக இருந்தது. எனவே ஒருநாளில் திரும்ப முடிந்தது. தூதர் ஒருநாளில் அயோத்தி அடைந்தது இங்கு நினைவுகூர்தற்குரியது. தசரதன் என்று மிதிலையிலிருந்து புறப்பட்டான் என்னும் குறிப்புத் தெளிவாக இல்லையெனினும் அவன் தன் பிள்ளைகளோடும் மருமகப் பெண்களோடும் பங்குனிமாதத் தேய்பிறையின் முற்பாதியிலேயே அயோத்தி திரும்பிவிட்டான் என்பது மட்டும் தெளிவு.

3. சித்திரகூட வாழ்க்கை

பரதனின் கேகயப் பயணம்

இராமகாதையின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று இராமனுக்குத் தசரதன் முடிசூட்ட மேற்கொண்ட செயல். தசரதன் எப்பொழுது இராமனுக்கு முடிசூட்ட எண்ணினான் என்பது சிந்தனைக்குரியது.

வாரியார் கருத்து

''இராமருக்கும் சீதைக்கும் திருமணமாகிப் பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தன. இராமரும் சீதையும் அணுவளவும் கவலையில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்த கதை பன்னிரண்டு வினாடிக்குள் போய்விட்டது.

இந்த நிலையில் கேகய ராஜா, இராமர், இலக்குமணர், பரதர், சத்ருக்கனர் ஆகிய நான்கு பேர்களையும் மருமகள்மாரோடு அனுப்ப வேண்டுமென்று தசரதருக்கு ஆள் அனுப்பினார். 'நான்கு பேர்களையும் ஒன்றாக அனுப்பாவிட்டாலும் பரதனையும், சத்துருக்கனரையும் முதலில் அனுப்பிவைத்தால், அவர்கள் வந்த பிறகு இராமரும், இலக்குமணரும் வரட்டும்' என்று கூறியிருந்தார் கேகயமன்னர்'' என்று தெரிவித்து, அதற்கேற்பப் பரதன் சத்துருக்கனனோடு கேகயநாட்டுக்குச் சென்றான் என்று விரிவுரை நிகழ்த்தியுள்ளார், 'அருள்மொழி அரசு' திருமுருக கிருபானந்தசாரியார்.*

ராஜாஜி கருத்து

''ராமனும் சீதையும் மிகவும் சந்தோஷமாக அயோத்தியில் ஒருகுறைவுமின்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தார்கள்..... பன்னிரண்டு ஆண்டுகள் ஆனந்தமாக ராமனும் சீதையும் அயோத்தியில் சுகம் அனுபவித்தார்கள். இனி உலகில் மக்கள் படும் இடையூறுகள், துயரங்கள், கோபதாபங்கள் எல்லாவற்றையுமே பகவானும் ஈசுவரியும் நேராக ஊனுடலில் அனுபவிக்கப் போகிறார்கள்'' என்று திருமணத்திற்குப் பின் பன்னிரண்டு ஆண்டுகள் சென்ற பின்பே தசரதன் இராமனுக்கு முடிசூட்டி வைக்க முனைந்தான் என்கிறார் மூதறிஞர் ராஜாஜி**

---

* *திருமுருக கிருபானந்தவாரியார், கம்பஇராமாயண விரிவுரை, கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ், 1965, ப.65*

** *சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி, இராமாயணம், வானதி பதிப்பகம், 1980, ப.69*

இவ்அறிஞர்கள் இருவரும் இக்கருத்துகளை வான்மீகத்தை யொட்டியே தெரிவித்துள்ளனர். ஏனெனில், கம்பநாடர் தம் நூலில் எங்கும் திருமணம் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு தசரதன் முடிசூட்ட முயன்றான் என்று குறிப்பிடவில்லை. வான்மீகத்திலும் இதற்கு வலிமையான சான்று இல்லை.

வான்மீகிமுனிவர், ''திருமணத்திற்கு முதல்நாள் பரதனின் தாய்மாமன் உதாசித்தன் மிதிலைக்கு வந்துசேர்ந்தான். அவன் தன் தந்தையான கேகயமன்னன் பரதனைக் காண விழைவதாகவும், அவனை அழைத்துச் செல்லத் தான் அயோத்தி சென்றதாகவும், செய்தி அறிந்து மிதிலைக்கு வந்ததாகவும் தசரதனிடம் தெரிவித்தான்'' என்கிறார். திருமணத்திற்குப் பின் அவனும் அயோத்திக்கு வந்து சிலநாள் தங்கிப் பரதனையும் சத்துருக்கனனையும் அழைத்துக்கொண்டு சென்றுள்ளான்.

''சில காலம் (சில நாள் என்று மொழிபெயர்த்துள்ளார் கிருஷ்ணசாமி ஐயர்) சென்ற பிறகு இரகுகுலச் சான்றோனாகிய தசரதமன்னன், பணிவே வடிவு கொண்டது போன்றவனும், நற்செய்கையுடையவனும் தாமரைக்கண்ணனும் பகைவரைக் கலங்கச் செய்பவனும் கைகேயியின் பிள்ளையுமான பரதன் தன்னை வணங்கிய போது, அவனிடம் இப்படிப் பணித்தார்: 'குழந்தாய்! உன்னை அழைத்துக்கொண்டு போக வந்திருக்கும் உன்மாமனும் கேகயன் மகனுமான உதாசித்தன் இங்கே தங்கியுள்ளான். மிதிலையில் இருந்தபோது உன்னைக் கேகயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று என்னிடம் வேண்டினான். அதனை இப்பொழுது நிறைவேற்றுவாய் என்றான்'' (பா.77:22–24) என்கிறது .வான்மீகம்.

திருமணம் நிகழ்வதற்கு முன்பு தன்னிடம் உதாசித்தன் வைத்த வேண்டுகோளைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் தசரதன் நிறைவேற்றினான் என்பதோ, கேகயமன்னன் அத்தனை ஆண்டுகளுக்குப் ·பின் பேரன்மாரையும் அவர்தம் மனைவிமாரையும் காண விழைந்தான் என்பதோ கதையின் ஓட்டத்திற்கு மாறாக அமையுமேயன்றிப் பொருத்தமாக அமையாது.

இப்பகுதியில் எங்கும் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் பரதன் கேகயம் சென்றான் என்பதற்கோ இராமனுக்கு முடிசூட்டும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது என்பதற்கோ எக்குறிப்பும் இல்லை. இவ்வாறு குறிப்பதற்கு ஆதாரமாக அமைவது, துறவிக்கோலத்தில் வந்த இராவணனிடம் சீதை திருமணத்திற்குப்பின் தான் பன்னிரண்டு ஆண்டுகள் அயோத்தியில் அனைத்து இன்பங்களையும் நுகர்ந்து கொண்டிருந்ததாகவும் கைகேயி வரத்தால் காட்டிற்கு வந்தபொழுது

தன் கணவனுக்கு இருபத்தைந்தும் தனக்குப் பதினெட்டும் வயது ஆகியதாகவும் தெரிவிப்பதே ஆகும். இக்குறிப்பினை அடிப்படையாகக் கொண்டே ஏனைய இடங்களில் வரும் காலக்குறிப்புகளை அறிஞர்கள் ஒருங்கவிடுகின்றனர்.

இதற்கு மாறான குறிப்பொன்று வான்மீகத்திலேயே இடம் பெற்றுள்ளது. இராமன் கானகம் புறப்பட்டதைக் கேட்டுப் புலம்பும் கோசலை,

> *''இராகவனே! நீ பிறந்த பின் பதினேழு ஆண்டுகள் வருத்தம் ஏதுமின்றிக் கழிந்தன. வயதடைந்த இக்காலத்தில் உன்னைப் பிரிந்து எப்படி வாழ்வேன்?''* (அ.20:45-47)

என்கிறாள்.

இதில் வரும், 'த₃ச ஸப்த ச்ச வர்ஷாணி' என்பது 'பத்தும் ஏழுமாகிய பதினேழு ஆண்டுகள்' என்றே நேராகப் பொருள்படும். இதற்கு இருபத்துநான்கு ஆண்டுகள் என்று கிருஷ்ணசாமிஐயர் போன்றோர் இடர்ப்பட்டுப் பொருள் கொள்கின்றனர். பதினேழு ஆண்டுகள் என்று பொருள் கொண்டபோதிலும் சீதை, மாரீசன் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு, பூணூல் அணிவது இரண்டாவது பிறப்பாதலின், இது பூணூல் பூண்டதற்குப் பின்னைய ஆண்டுகளைக் குறிக்கிறது என்றும், அரசகுலத்தவனாகிய இராமனுக்கு எட்டாமாண்டில் பூணூல் அணிவிக்கப்பட்டது என்றும் ஆகவே அவனுக்கு வனம் புகும்போது இருபத்தைந்து வயது என்றும் விளக்குகிறார் அறிஞர் அ.வீ. நரஸிம்ஹாசாரியர்* இராமாயண சார சங்கிரகமும் உபநயனத்திற்குப் பின் பதினேழு ஆண்டுகள் (உபநயநாந்தம் ஸப்த த₃ச வர்ஷாணி) என்றே விளக்கம் தந்துள்ளது.

இராமன் வயது பற்றிப் பேசும்போது சீதை, மாரீசன், ஆகியோரின் கூற்றினைவிடக் கோசலை, தசரதன் இவர்கள் கூற்றுகளே முதன்மையாகக் கொள்ளத் தக்கன. சீதை, துறவிக்கோலத்தில் உள்ள இராவணனிடம் வயது பற்றித் தெரிவிப்பது தேவையற்றதாக அமைகிறது. மாரீசனுக்கு இராமன் வயது தெளிவாகத் தெரிய வாய்ப்பில்லை. இவர்களினும் சரியாகச் சொல்வதற்குரியவர் அவன் பெற்றோரே ஆவர். இராமன் விசுவாமித்திரனோடு சென்றபோது அவனுக்குப் பதினாறு வயது நிறையவில்லை என்கிறான் தசரதன். வனம் புகும்போது அவனுக்குப் பதினேழு வயது என்கிறாள் கோசலை.

இவ் இருவரின் கூற்றுக்களையும் இணைத்து நோக்கும்போது, இராமனுக்குப் பதினாறு வயது நிறைவதற்கு முன்னர்த் திருமணம்

* *ஸ்ரீராமாயணம், அயோத்தியா காண்டம், முதற்பாகம், தமிழ் வசனம், ஸர்க்கம் 20, ப. 627, 628-633 அடிக்குறிப்பு.*

நிகழ, அதன் பிறகு ஓராண்டுக்கு மேல் முடி சூட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், திருமணத்தின்போது வந்த உதாசித்தன் அயோத்தியில் ஒரு சில மாதங்கள் தங்கிப் பரதனைக் கேகயத்திற்கு அழைத்துச் சென்றான் என்றும் இயைபுற அமையும். இதனால், காலக்கணக்கில் சிக்கலைத் தோற்றுவிக்கும் சீதை, மாரீசன் பேச்சுப்பகுதிகள் இடைச்செருகல் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவற்றை அடிப்படையாகக் கொண்டதாலேயே அறிஞர்கள் கோசலையின் பேச்சில் வரும் வயது பற்றிய குறிப்பினை விளக்குவதில் இடர்ப்பட்டுள்ளனர்.

உதாசித்தன் வருகை

கம்பராமாயணத்தில் திருமணத்தின்போது உதாசித்தன் வந்திருந்தான் என்னும் குறிப்பு இல்லை. ஆனால் திருமணத்தின்போது வந்திருந்தான் என்று ஊகிப்பதற்கு இடமிருக்கிறது, மிதிலையிலிருந்து திரும்பியபின் நாள்கள் இன்பமாகக் கழிய, ஒருநாள் தசரதன் பரதனிடம், ''ஐயனே! உன் பாட்டன் உன்னைக் காண விழைகிறான். ஆதலால் கேகயத்திற்குச் செல்வாய்'' என்றான். பரதன் உதாசித்தனோடு ஏழுநாள் பயணம் செய்து கேகயம் அடைந்தான் என்கிறார் கம்பநாடர். இதில் உதாசித்தன் வந்து அழைத்துச் சென்றான் என்று கூறாமல், பரதன் அவனோடு புறப்பட்டுப் போனான் என்று மட்டும் கூறப்பட்டிருத்தலால் அவன் திருமணத்தின் போதே வந்திருத்தல் வேண்டும் என்று கருத இடமளிக்கிறது. இல்லையேல், அதன்பின் சின்னாள்களில் வந்தான் என்று கொள்ள வேண்டும்.

''நண்ணினர் இன்பத்து வைகும் நாளிடை'' (1308)

என்பது திருமணம் முடிந்து அயோத்தி திரும்பி அதிக காலம் ஆகவில்லை என்பதனைக் காட்டுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் முடிசூட்ட முயன்றான் என்பதற்கு எந்தச் சான்றும் கம்பராமாயணத்தில் காணப்படவில்லை.

தசரதன் எடுத்த திடீர் முடிவு

கவிஞர் இருவரும் தசரதன் இராமனுக்கு முடிசூட்டத் திடீரென்று முடிவு செய்தான் என்றே தெரிவித்துள்ளனர். கம்பநாடர் அரசனாகவும், வான்மீகிமுனிவர் இளவரசனாகவும் முடிசூட்ட எண்ணினான் என்கின்றனர். அது சித்திரைமாதத்தில் நிகழ்ந்தது என்பது வான்மீகத்தில் வெளிப்படையாகவும், கம்பராமாயணத்தில் குறிப்பாகவும் காணப்படுகிறது.

''காடுகள் பூத்துக்குலுங்கும் இந்தச் சித்திரைத்திங்கள்
கொண்டாட்டங்களுக்கு ஏற்றதாகச் சொல்லப்படுகிறது.
இராமனுக்கு இளவரசுபட்டம் சூட்டுவதற்கான எல்லாம்
திரட்டப்படட்டும்'' (அ. 3:4)

என்று தசரதன் கூறுவதாக வான்மீகத்தில் உள்ளது.

காட்டிற்குப் புறப்பட்ட இராமன் மூன்றாம்நாள் சித்திரகூடம் நோக்கிச் சென்றான். அவன் வருகையால் விலைமகளிர் மனம் போல ஈரமற்ற இளவேனில், குளிர்ச்சி தரும் கார்காலம் போல மாறியது.

''பூரியர் புணர்மாதர் பொதுமனம் எனமன்னும்
ஈரமும் உளதுஇல்என்று அறிவுஅரும் இளவேனில்
ஆரியன் வரலோடும் அமுதுஅள வியசீதக்
கார்உறு குறிமானக் காட்டியது அவண்எங்கும்'' (1999)

என்கிறார் கம்பநாடர். இளவேனில் பருவம் சித்திரை, வைகாசி மாதங்களைக் கொண்டது. எனவே அது சித்திரை மாதம் என்பது விளங்குகிறது.

அந்த மாதத்தில் ஒருநாள் தசரதன் அவையைக் கூட்டினான். இராமனுக்கு முடிசூட்ட விழைவதாகத் தெரிவித்து அவர்கள் இசைவைப் பெற்றான். அந்த நாள் பற்றி எந்தக் குறிப்பும் கம்பநாடர் தரவில்லை. பின்னால் தேய்பிறைப் பஞ்சமியில் வனவாசம் முடிந்து திரும்பினர் என்று வரும் குறிப்பினால் அது தேய்பிறைச் சதுர்த்தி என்று மட்டும் தெரிகிறது. வான்மீகிமுனிவர் அது சித்திரைமாதத்தில் புனர்பூசத்தோடு கூடிய வளர்பிறை நாள் என்று குறித்துள்ளார்.

''இன்று சந்திரன் பூசநட்சத்திரத்திற்கு முந்தைய புனர்பூச
நட்சத்திரத்தில் இருக்கிறான். கணியர்கள் பூச
நட்சத்திரத்தோடு கூடிய நாளை தக்கதாகச்
சொல்லுகின்றனர்''

''மேலான போர் வீர, புஷ்ய நட்சத்திரத்தில் நீ
முடிசூட்டப்பட்டவனாக வேண்டும். என்னை என்
மனமானது அதிலேயே தூண்டிக்கொண்டிருக்கிறது. உனக்கு
நாளை இளவரசு பட்டம் சூட்டப் போகிறேன்'' (அ.4:11-12)

என்று தசரதன் இராமனிடம் தெரிவிப்பதால் இதனை உணரலாம்.

இராமன் பிறந்த மாதம் சித்திரை என்பதும் திதி வளர்பிறை நவமி என்பதும் நட்சத்திரம் புனர்பூசம் என்பதும் நாம் அறிந்தவை. முந்தைய சித்திரைமாதத்திற்குச் சில நாள் முன்புதான் மிதிலையில் திருமணம் நடந்து எல்லோரும் அயோத்திக்குத் திரும்பினர். ஆதலின் இதனை

அதற்கு அடுத்த சித்திரை என்று கொள்ள வேண்டும். சென்ற சித்திரையில் அவனுக்குப் பதினாறு வயது முடிந்தது. இந்தச் சித்திரை வளர்பிறை நவமி வந்தால் அவனுக்குப் பதினேழு வயது நிறைவடையும். வயது கணக்கினைப் பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையில் குறிப்பதும் உண்டு. அது சில நாள் முன்பாக வரும். தசரதன் இராமனை அழைத்து அவனுக்கு முடிசூட்ட விழைவதைத் தெரிவித்த நாள் புனர்பூசத்தோடு கூடிய நாள் என்பதால் நட்சத்திரக்கணக்கில் அன்று அவனுக்கு வயது பதினேழு என்பது தேற்றம். அன்று திதி சதுர்த்தி. ஏனெனில், மறுநாள் காடு சென்றான். அன்று பஞ்சமிதிதி என்று கூறப்படுகிறது. இதனால் மறுநாள் அவனோடு பேசும் கோசலை அவன்பிறந்து பதினேழு ஆண்டுகளாய்த் தான் எத்தகைய துன்பமுமின்றி வாழ்ந்ததாகத் தெரிவிப்பது முற்றும் பொருத்தமாக அமைகிறது. கம்பநாடர் தேய்பிறையில் காடு சென்றான் என்பதால் அவனுக்கு அன்று பதினேழுவயது முடிந்து பத்துநாள் ஆகிறது என்பது தெரிகிறது.

கைகேயி மனமாற்றம்

தசரதன் இராமனை அழைத்துச் செய்தி தெரிவித்தான். இராமன் அவனிடம் விடைபெற்றுத் தன் மாளிகையை அடைய, வசிட்டன் அங்குச் சென்று அவனுக்கும் சீதைக்கும் நூல்முறைப்படி மந்திரங்களால் தீக்கை செய்துவைத்துப் புறப்பட்டான். கோசலை தன் மைந்தனுக்கு நலம் வேண்டி நாராயணனை வழிபட்டாள். நகரம் விழாக்கோலம் பூணத் தொடங்கியது. மறுநாள் இராமனுக்கு முடிசூட்டுவிழா என்று அறிந்த மந்தரை ஆத்திரம் கொண்டாள். கைகேயியிடம் சென்று தன் சூழ்ச்சி நிறைந்த பேச்சுத்திறனால் அவள் தூய சிந்தையைத் திரித்தாள். அவள் தன் அலங்காரத்தைச் சிதைத்துக்கொண்டு தரையில் கிடந்தாள் என்று கம்பநாடரும், சினவுள் அடைந்து அங்கு அவ்வாறு கிடந்தாள் என்று வான்மீகிமுனிவரும் கூறியுள்ளனர். எந்த வேளையில் இது நடந்தது என்பதில் கவிஞர் இருவரும் சிறிது மாறுபடுகின்றனர். கம்பநாடர் இதனை முன்னிரவில் நடந்ததாகவும், வான்மீகிமுனிவர் மாலையில் நடந்ததாகவும் காட்டியுள்ளனர். மந்தரை 'கடைக்கண் அளிபொழிய' உறங்கிக் கொண்டிருந்த கைகேயியை எழுப்பினாள் என்கிறார் கம்பநாடர். தோரணங்களையும், ஒப்பனையோடு திரியும் மக்கள்கூட்டத்தையும் கண்டு (த்ருஷ்ட்வா) வியப்படைந்த மந்தரை படுக்கையில் கிடந்த கைகேயியை (சயாநம் கைகேயீம்) அடைந்தாள் என்கிறார் வான்மீகிமுனிவர். இவற்றால் அவ்வேறுபாடு தெரிகிறது. அது தசரதன் கைகேயியைச் சந்தித்த நேரம்பற்றிய குறிப்பால் மேலும் உறுதிப்படுகிறது.

தசரதன் முடிசூட்டுவிழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுக் கைகேயியின் அரண்மனையை அடைந்தான். அப்பொழுது நள்ளிரவு நேரம் என்கிறார் கம்பநாடர்.

''நாழிகை கங்குலின் நள்ளடைந்த பின்றை
யாழிசை அஞ்சிய அம்சொல் ஏழைகோயில்
வாழிய என்றுஅயில் மன்னர் துன்னவந்தான்
ஆழி நெடுங்கை மடங்கல் ஆளிஅன்னான்'' (1495)

என்பதால் இது விளங்குகிறது. ''அந்தப்புரம் சென்ற தசரதன் வேருடன் பிடுங்கி எறியப்பட்ட பூங்கொடி போல் வெறுந்தரையில் கிடந்த கைகேயியைத் தூக்கினான். அவள் விருப்பம் எதுவாயினும் அதனை நிறைவேற்றுவதாக இராமன்மீது ஆணையிட்டுக் கூறினான். அவள் இரு வரங்களைக் கேட்டாள். மனக்கலக்கம் அடைந்த தசரதன் ஒரு முகூர்த்த நேரம் நினைவிழந்து கிடந்தான். பின்னர் அவளை ஏசினான். இராமனுக்கு முடிசூட்டப்படுமானால் நஞ்சுண்டு தன் உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதாக அவள் அச்சுறுத்தினாள். அவன், அவள் காலில் விழுந்து கெஞ்சினான். வார்த்தை தந்துவிட்டுப் பின்னர் நிறைவேற்றாமல் இருக்கலாமா என்று வினவி அவனை நெருக்கினாள். 'இராமனை எவ்வாறு காட்டிற்கு அனுப்புவேன்?' என்று மீண்டும் மீண்டும் அந்த ஒன்றையே தசரதன் சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் கதிரவன் மறைய இரவு வந்தது'' என்கிறார் முனிவர்.

''அவ்வாறு அந்தத் தசரதமன்னன் மனங்கலங்கப் பெற்றுப்
புலம்பிக் கொண்டிருக்கும்போது சூரியன் மறைந்தான்;
இரவும் நெருங்கியது'' (அ.13:25)

கைகேயி பேசுவதும் தசரதன் மூர்ச்சையடைவதுமாக இரவு கழிந்தது என்று இரு நூல்களுமே தெரிவிக்கின்றன.

வனவாசத்தொடக்கம்

பொழுது விடிந்தது. கம்பநாடர் இரவின் மறைவு, சூரியன் தோற்றம் இவற்றைக் கவிதையழகு மிளிரப் புனைந்துரைக்கிறார். இரவு என்னும் பெண் கைகேயியின் செயலைக் கண்டு ஆண்களின் முன் நிற்க நாணியவள் போல மறைந்தாள். தன்குலத்தில் பிறந்த பிள்ளையாகிய தசரதனுக்கு இப்படிப் பாவி கைகேயி தீங்கு இழைக்கிறாளே என்று சினம் முதிர்ந்து சிவந்தவன் போலச் சூரியன் காட்சியளித்தான்.

காலையில் வசிட்டன் விழாமண்டபத்தை அடைந்தான். தசரதனை அழைத்துவரச் சுமந்திரனைப் பணித்தான். தசரதனை அழைக்கச் சென்ற சுமந்திரனிடம் கைகேயி இராமனை அழைத்து வருமாறு கூறினாள். இராமன் மன்னன் இருக்குமிடத்தைத் தேடியவாறு அங்கு வந்தான்.

தாய் என்று நினைப்பவன் முன்னே கூற்றுவன் போல நின்றாள். தசரதன் தன் வாயால் சொல்லமாட்டான் என்று தானே தான் பெற்ற வரத்தினை அவனிடம் தெரிவித்தாள். அது கேட்டு இராமன் முகம் அலர்ந்த தாமரையைத் தன்பொலிவால் வென்றது. இராமன் காட்டிற்குப் புறப்பட்டான். அவனோடு சீதையும் இலக்குவனும் உடன்சென்றனர். அவன் தாயரையும் வசிட்டனையும் வணங்கித் தேர் ஏறி வனத்திற்குப் பயணமானான். மக்கள் பின்தொடர்ந்தனர்.

வான்மீகத்தில் சுமந்திரனோடு சென்ற இராமன் அழுதுகொண்டிருக்கும் தசரதனைக் காண்கிறான். காட்டிற்குச் செல்ல கைகேயி பணித்தபோது அவளையும் தசரதனையும் வணங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டவன் மீண்டும் சீதை இலக்குவன் ஆகியவர்களோடு சென்று தசரதனிடம் விடைபெறுகிறான். அப்பொழுது தசரதன் அவனைக் கட்டித் தழுவி மூர்ச்சை அடைகிறான். கம்பநாடர் இராமன் தசரதனை ஒருமுறைகூடக் காணாமலே காட்டிற்குப் புறப்படுவதாகக் காட்டிச் சோகத்தை மிகுதிப்படுத்துகிறார்.

சரயுவாற்றங்கரை

இராமன் காடு செல்வதைக் காணமாட்டேன் என்பது போலக் கதிரவன் மேற்குமலையில் மறைந்தான். கௌதமன் சாபத்தால் உடம்பெல்லாம் கண்ணான இந்திரன் போல எண்ணற்ற விண்மீன்களோடு வானம் காட்சியளித்தது.

"பரந்துமீன் அரும்பிய பசலை வானகம்
அரந்தைஇல் முனிவரன் அறைந்த சாபத்தால்
நிரந்தரம் இமைப்புஇலா நெடுங்கண் ஈண்டிய
புரந்தரன் உருஎனப் பொலிந்தது எங்குமே" (1845)

இரவு வருதற்குள் இரு யோசனைத் தொலைவு கடந்து ஒரு சோலையை அடைந்து அங்கு முனிவர்களோடு தங்கினான். அது சரயுவாற்றின்கரையில் இருந்தது. மக்கள் தன்னுடன் தொடர்வதைத் தவிர்ப்பதற்காகச் சுமந்திரனிடம் தேரை நகருக்கு ஓட்டிச் செல்லப் பணித்து, அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது நள்ளிரவில் இராமன் தையலொடும் தம்பியொடும் தெற்கு நோக்கி நடக்கலானான். வான்மீகம் தேரிலேயே கங்கைக்கரைவரை சென்றதாகத் தெரிவிக்கிறது. அதில் அன்று நிலவின் தோற்றம் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் கம்பநாடர் நிலவின் எழுச்சியைக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"மைவிளக் கியதே அன்ன
வயங்குஇருள் துரக்க வானம்
கைவிளக்கு எடுத்தது என்ன
வந்தது கடவுள் திங்கள்" (1887)

நள்ளிரவில் நிலவு தோன்றியது என்பதால் அது தேய்பிறைப்பக்கம் என்பது தெளிவு. ஏனெனில் வளர்பிறையில் முன்னிலவும், தேய்பிறையில் பின்னிலவும் தோன்றுவது இயற்கை. இராமன் வனவாசம் முடிந்து அயோத்திக்குப் புறப்பட்டது பஞ்சமி திதியில் என்னும் குறிப்பு யுத்தகாண்டத்தில் (10090) காணப்படுவதால் அஃது ஐந்தாம் நாள் நிலவாகும். அது சூரியன் மறைந்து பத்துநாழிகைக்குப் பின் தோன்றி விடியும்வரை இருப்பதாகும். மறுநாள் பொழுது விடிவதற்குள் மூவரும் தெற்கே இருயோசனை தூரம் சென்றுவிட்டனர்.

கங்கைக்கரை

காலைவேளையில் இராமன் தன் தம்பியொடும் சீதையொடும் கங்கைக்கரையை நோக்கி நடந்தான். மூவரும் இயற்கைக்காட்சிகளைக் கண்டவாறு நடந்து கங்கைக்கரையை அடைய, அங்கிருந்த முனிவர்கள் வரவேற்றனர். இராமன் கங்கையில் நீராடி எரியோம்பி, அவர்கள் அளித்த காய், கனி, கிழங்குகளை உண்டான். இது முற்பகலில் நடந்த நிகழ்ச்சியாகும். அதன் பின்னர்க் குகன் கையுறையோடு வந்து இராமனைச் சந்தித்தான். இராமன் அவன் அன்பினைப் பாராட்டி, மறுநாள் விடியலில் படகுடன் வருமாறு வேண்டினான். குகன், இராமனை வேண்டி அவன் இசைவினைப் பெற்று அங்கேயே தங்கினான். அப்பொழுது சூரியன் மறைந்தான்.

அன்று இன்னொரு முக்கியமான நிகழ்ச்சி நடந்தது. விடிவதற்குமுன் சரயுவாற்றின்கரையினின்றும் அயோத்திக்குப் புறப்பட்ட சுமந்திரன் தேர் ஐந்து நாழிகைக்குள் அங்குச் சென்றடைந்தது. அவன் வசிட்டனோடு அரண்மனை சென்று தசரதனைக் கண்டான். தசரதன் அவனிடம், 'இராமன் நெடுந்தொலைவு சென்றுவிட்டானா? அன்றி அருகில் உள்ளானா?' என்று வினவினான். இராமன் தன் தம்பியொடும் சீதையொடும் கானகம் நோக்கி நடந்தான் என்று சுமந்திரன் கூற, அதனைக் கேட்ட அந்நொடியே தசரதன் ஆவி பிரிந்தது.

இதனைக் கருத்தில்கொண்டு கம்பநாடர் அன்றைய கதிரவன் மறைவினைப் பாடுகிறார். ''தசரதன் இருட்கூட்டம் போன்ற பகையைப் போக்கினான்: திசைகளை எல்லாம் வென்றான்; மேலான இடத்தில் இருந்து ஒப்பற்ற ஆணைச்சக்கரத்தைச் செலுத்தினான்; தன் புகழை நிலைநாட்டி உலகத்தவர் உள்ளத்தில் எல்லாம் இருந்து அருள்புரிந்து மாண்டுபோனான். அந்தத் தசரதன் மறைவைப் போலக் கதிரவன் மறைவு இருந்தது'' என்கிறார்.

''விரிஇருட் பகையை ஓட்டித்
திசைகளை வென்று, மேல்நின்று
ஒருதனித் திகிரி உந்தி
உயர்புகழ் நிறுவி, நாளும்
இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து
இருந்துஅருள் புரிந்து வீந்த
செருவலி வீரன் எனச்
செங்கதிர்ச் செல்வன் சென்றான்'' (1973)

வான்மீகிமுனிவர், ''இரவு தமசா நதிக்கரையிலிருந்து தேரில் புறப்பட்ட இராமன் விடிவதற்குள் நெடுந்தொலைவு கடந்து, தென்கோசலநாட்டு எல்லையைச் சேர்ந்து, காலை வழிபாட்டைச் செய்துமுடித்தான்; வேதசுருதி, கோமதி, சியந்திகை ஆகிய ஆறுகளைத் தாண்டிக் கங்கைக்கரையைக் கண்டான்; அங்குள்ள சிருங்கிபேரம் என்னும் இடத்தை அடைந்து, ஒரு காட்டுவாதுமை மரத்தடியில் தங்கினான்; அங்குக் குகன் வந்து இராமனைச் சந்தித்து அவனோடு அன்றிரவு தங்கினான்'' என்கிறார்.

பரத்துவாசன் ஆசிரமம்

கம்பநாடர் மூன்றாம்நாள் கங்கைக்கரையிலிருந்து புறப்பட்ட மூவரும் அன்று மாலையே பரத்துவாசன் இருக்கையை அடைந்தனர் என்றும், வான்மீகிமுனிவர் மறுநாள் மாலை அடைந்தனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

அன்று கதிரவன் ஓர் உண்மையை உணர்த்துபவன் போலத் தோன்றினான். முதல்நாள் 'உயிர்கள் இறக்கும் முறை இது' என்று காட்டுவது போல மறைந்தான்; அன்று 'உயிர்கள் மீண்டும் பிறக்கும் முறை இது' என்று கூறுவது போல உதித்தான். இராமன் நாள்வழிபாட்டை முடித்தான். குகனை ஓடம் கொண்டுவரப் பணித்து அதில் ஏறிக் கங்கையைக் கடந்தான். தன்னுடன் கானகம் வர விழைந்த குகனைத் தன் சகோதரனாக ஏற்று அங்கேயே இருக்குமாறு பணித்து வழியிடைக் காட்சிகளைச் சீதைக்குக் காட்டியவாறு சித்திரகூடம் நோக்கி விளையாட்டாக நடந்தான்.

பொழுது சாயும் வேளை வந்தது. தொலைவில் சித்திரகூடமலை தெரிந்தது. 'முனிவர்கள் உறையும் இடமல்லவா இது' என்றான் இராமன்.

''போதும்,
சென்றது குடபால் அத்திரு மலைஇது அன்றோ?
என்றனன்'' (2017)

பரத்துவாசமுனிவன் எதிர்கொண்டு வரவேற்றுத் தன் மக்கள்போல அவர்களைக் கருதி விருந்தோம்பினான் என்கிறார் கம்பநாடர்.

வான்மீகிமுனிவரும் உதயவேளையில் கங்கைக்கரையிலிருந்து புறப்பட்டான் என்றே தெரிவித்துள்ளார். அதற்கு முன்பாக இராமன் ஆலம்பாலைக் கொண்டு தலைமுடியைச் சடையாக்கிக் கொண்டான். சுமந்திரனை அயோத்திக்குத் திரும்புமாறு பணித்தான். சீதை படகில் கங்கையைக் கடக்கும் போது இடரின்றி வனவாசம் முடிந்து திரும்பக் கங்கைக்கு நேர்ந்து கொண்டாள். மூவரும் அன்றிரவு வத்சநாட்டில் ஒரு மரத்தடியில் தங்கினர்.

மறுநாள் உதயவேளையில் அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்தனர். உச்சிவேளையில் கங்கையும் யமுனையும் கூடும் பிரயாகை என்னுமிடத்தை அடைந்தனர். கதிர் சாயும் வேளையில் பரத்துவாசமுனிவன் தவக்குடிலைச் சேர்ந்து அவன் விருந்தோம்பலில் மகிழ்ந்து அந்த இரவை அங்கே கழித்தனர் என்பது வான்மீகம்.

சித்திரகூடம்

பரத்துவாசமுனிவன் தவக்குடிலினின்று சித்திரகூடத்தை மூவரும் ஒருநாள் பயணத்தில் அடைந்ததாகக் கம்பநாடரும் இருநாள் பயணத்தில் அடைந்ததாக வான்மீகிமுனிவரும் குறித்துள்ளனர். இங்கும் கம்பநாடர் ஒருநாள் பயணத்தைச் சுருக்கியுள்ளார்.

அப்பயணத்தைக் கம்பநாடர் கீழ்வருமாறு குறித்துள்ளார்: மறுநாள் பொழுது விடிந்தது. பரத்துவாசமுனிவன் திரிவேணி சங்கமத்தின் அருகில் உள்ள அவ்விடத்திலேயே தன்னோடு தங்குமாறு அவர்களை வேண்டினான். இராமன் அது மக்கள் நெருங்குவதற்குரிய இடமாக இருத்தலின் அங்குத் தங்க இயலாமையைத் தெரிவித்தான். முனிவன் அவர்களைப் பத்துக் காதத்திற்கு அப்பால் உள்ள சித்திரகூடத்திற்கு ஆற்றுப்படுத்தினான். அவர்கள் நண்பகற் பொழுதில் யமுனையாற்றைக் கண்டனர்.

"சென்று செங்கதிர்ச் செல்வனும் நடுஉறச் சிறுமான்
கன்று நீர்நுகர் காளிந்தி எனும்நதி கண்டார்" *(2032)*

அந்நதியில் நீராடிக் காயும் கனியும் உண்டனர். பின்னர் இலக்குவன் அமைத்த தெப்பத்தால் யமுனையைக் கடந்து பாலைநிலத்தில் நுழைந்தனர். 'இந்த வெப்பத்தைச் சீதை ஆற்றமாட்டாளே' என்று இராமன் நினைத்தான். பாலை சோலையாக மாறிற்று. அதனை மெல்லக் கடந்து சித்திரகூடத்தை அடைந்தனர்.

இராமன் சீதைக்குச் சித்திரகூடமலையின் பல்வேறு அழகிய காட்சிகளைக் காட்டிக்கொண்டிருந்தான். அங்கு முனிவர்கள் எதிர்கொள்ள அவர்களை வணங்கி அவர்கள் விருந்தினன் ஆயினான். அவ்வேளையில் இலக்குவன் பர்ணசாலை அமைத்தான்.

மாலைப் பொழுது வந்தது. சூரியன் காலநேமியின்மேல் செலுத்தப்பட்ட சக்கரம்போல மேற்குமலையில் வீழ்ந்தான் (2083). அவ்அசுரனின் இரத்தம் பரவியது போல அந்திவானம் சிவந்து தோன்றியது. சிதறி விழுந்த அவன் பல் போல நிலவின் துண்டம் வானில் காட்சியளித்தது. மூவரும் மாலை வழிபாடு நிகழ்த்தினர். அவ்விரவு, இலக்குவன் அமைத்த பர்ணசாலை இருக்கும் இடத்தை இராமன் அடைந்து அதில் சீதையோடு குடிபுகுந்தான். அதன் திறத்தை எண்ணி நெகிழ்ந்து கண்ணீர் சோர நின்றான். இலக்குவன் அண்ணனுக்கு உற்ற அவலத்தை எண்ணி வருந்தினான். இராமன் கனிவான சொற்களால் அவனை அமைதிப்படுத்தினான். பின்னர் அங்கே இருந்தவாறு தேவரும் போற்றத் தவம் செய்யலானான்.

> *"சக்கரம் தானவன் உடலில் தாக்குற*
> *எக்கிய சோரியின் பரந்தது எங்கணும்*
> *செக்கர்அத் தீயவன் வாயின் தீர்ந்துவேறு*
> *உக்கவான் தனிஎயிறு ஒத்தது இந்துவே"* (2084)

என்னும் நிலவின் வடிவு பற்றிய புனைந்துரையில் ஓர் அரிய காலக்குறிப்புப் பொதிந்துள்ளது. பின்னர்க் கவந்தனின் கோரைப் பற்களைக் குறிக்கும் இடத்தில் கவிச்சக்கரவர்த்தி அவை முழுநிலவை இரு கூறிட்டதுபோல இருந்தன என்று குறித்துள்ளார்.

> *"முரண்தொகு முழைநுழை முழுவெண் திங்களை*
> *இரண்டுகூறு இட்டென இலங்குஎ யிற்றினான்"* (3656)

இதனால், பாதிமதியும் கோரைப்பல்லும் ஒப்புடையன என்பது தெளிவு. அன்றைய பிறைநிலா அரக்கன் பல்போல இருந்தது என்னும் உவமையால் அஃது எட்டாம்நாள் பிறை என்பது புலனாகிறது.

இராமன் சித்திரகூடத்தை அடைந்த நான்காம்நாள் அட்டமி திதி என்பதால், பரத்துவாச முனிவன் ஆசிரமத்தை அடைந்த மூன்றாம் நாள் சப்தமி திதி என்பதும், கங்கைக்கரையில் தங்கிய இரண்டாம்நாள் சட்டி (சஷ்டி) திதி என்பதும், முடிசூடாமல் வனவாசம் செய்யப் புறப்பட்டுச் சரயுவாற்றின் கரையில் தங்கிய முதல்நாள் பஞ்சமி என்பதும் தெளிவாகின்றன. யுத்தகாண்டத்தில் தேய்பிறைப் பஞ்சமி திதியோடு வனவாசம் முடிந்தது என்று வரும் குறிப்போடு (10090) இது பொருந்திவருவது கருதத் தக்கது.

வான்மீகம், பரத்துவாசமுனிவன் ஆசிரமத்திலிருந்து புறப்பட்ட மூவரும் யமுனையாற்றைக் கடந்து அதன்கரை வழியே நடந்து ஒரு சமதரையைக் கண்டு இரவு அங்கே தங்கினர் என்றும், மறுநாள் காலையில் யமுனையில் நீராடிச் சித்திரகூடமலை நோக்கி நடந்தனர் என்றும், வான்மீகிமுனிவனைக் கண்டு வணங்கி அவன் சொற்படி அங்குத் தங்கினர் என்றும் குறித்துள்ளது. மேலும், இலக்குவன் அமைத்த பர்ணசாலையில் மூவரும் மனக்குறையின்றி வாழ்ந்ததாகவும், சித்திரகூடமலையையும் தூய மாலியவதி நதியையும் கண்டு இராமன் உள்ளத்தில் மகிழ்ச்சிவெள்ளம் கரைபுரண்டதாகவும் தெரிவித்துள்ளது.

கம்பநாடர் இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்ட நான்காம் நாளும், வான்மீகிமுனிவர் ஆறாம்நாளும் சித்திரகூடத்தை அடைந்தான் என்று குறித்துள்ளனர்.

தசரதன் மறைவு

இராமன் வனம்புகுந்த இரண்டாம்நாள் காலையிலேயே தசரதன் பிள்ளைப்பாசத்தால் மாண்டான் என்பதனை முன்பே கண்டோம். தசரதன் உடலைச் சூழ்ந்துகொண்டு தேவிமார் அழுதனர். வசிட்டன் அவ்வுடலைத் தையற்கடல்நின்று எடுத்துத் தயிலக்கடலில் உய்த்தான். உடன் பரதனை அழைத்துவரத் தூதரை விடுத்தான் என்கிறது கம்பராமாயணம்.

வான்மீகம் இராமன் காடு சென்ற ஏழாம்நாள் தசரதன் மறைந்தான் என்கிறது. சுமந்திரன் கங்கைக்கரையினின்று எப்பொழுது அயோத்திக்குப் புறப்பட்டான் என்பதை விளக்குவதில் வான்மீகிராமாயண உரைகாரர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. சிலநாள் தங்கிப் புறப்பட்டனர் என்பது சிலரது கருத்து. அஃது எவ்வாறாயினும், இராமன் காடு சென்ற ஐந்தாம்நாள் அவன் அயோத்தி அடைந்து தசரதனைக் கண்டு செய்தி தெரிவித்தான் என்பது ஐயத்திற்கு இடமின்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அயோத்தி திரும்பிய சுமந்திரன் சொன்னவற்றைக் கேட்டு மகன் பிரிவைத் தாங்க முடியாமல் தசரதனும் கோசலையும் பெரிதும் துன்புற்றனர். கோசலை தசரதனிடம் அவன் இராமனுக்குக் கேடு செய்துவிட்டதாகக் குறை கூறினாள். அவளுடைய கடுஞ்சொற்களைக் கேட்ட தசரதன் மிகவும் வருந்தித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். அதனால் நெகிழ்ந்துபோன கோசலை அவனை வணங்கி இனியசொற்களால் தேற்றினாள். அப்பொழுது,

> *"இராமன் காட்டிற்குச் சென்று ஐந்துநாள்கள் ஆகின்றன.*
> *அவை எனக்கு ஐந்து ஆண்டுகளுக்கு நிகராகத்*
> *தோன்றுகின்றன"* (அ. 62:17)

என்றாள். அதன்பின் கதிரவன் மறைய இரவு வந்தது. இக்குறிப்பினால் அவன் கங்கைக்கரையில் அதிகநேரம் தங்கவில்லை என்றே தோன்றுகிறது.

மறுநாள் இரவு கோசலையிடம் தசரதன், சலபோசமுனிவனிடம் தான் பெற்ற சாபத்தைக் கூறினான்.

''அந்தத் தசரதமன்னன் இராமன் காட்டிற்கு
அனுப்பப்பட்டபின் ஆறாவது இரவின் நடுப்பகுதியில் முன்
செய்த தீவினை யொன்றை நினைவுகூர்ந்தான்'' (அ.63:4)

என்கிறார் வான்மீகிமுனிவர். தசரதன் அந்தச் சாபம் விளையும் காலம் வந்துவிட்டதாகவும் தான் இறக்கப் போவதாகவும் கூறினான். இராமனின் சிறப்புகளைச் சொல்லிச் சொல்லி அவனை விளித்தவாறு நள்ளிரவுக்கு அப்பால் உயிர்நீத்தான். மறுநாள் (ஏழாம்நாள்) காலையிலேயே அவன் மாண்ட செய்தி எங்கும் பரவலாயிற்று. தசரதன் உடலைக் கொப்பரையில் கிடத்தினர். பெருஞ்சோகத்தில் அன்றைய பொழுது கழிந்தது. அரசனின் மனைவிமார் தரையில் விழுந்து புரண்டு புலம்பிக் கொண்டிருக்கும்போதே சூரியன் மறைந்தான்.

இராமன் காடு சென்ற எட்டாம்நாள் காலை அமைச்சர்களும் அந்தணர்களும் கூடிப் பரதனை அழைத்துவர முடிவுசெய்தனர். தூதர்கள் குதிரைகளில் கேகயத்திற்குப் புறப்பட்டனர். அவர்கள் அன்றிரவே கேகயத்தின் தலைநகரான இராசகிருகத்தை அடைந்தனர்.

''அந்தத் தூதர்கள் தலைவனது நல்லன்பின்பொருட்டும், குலம்
உய்வதன் பொருட்டும், குலத்தின் மதிப்பின் பொருட்டும்
அக்கறை மிக்கவர்களாய்க் காலதாமதம் செய்யாதவர்களாய்
இரவே இராசகிருகம் என்னும் பட்டணத்திற்கு வந்து
சேர்ந்தனர்'' (அ. 68:22)

பரதன் வருகை

கம்பராமாயணம், வான்மீகம் தெரிவிப்பதுபோல அன்றிரவே கேகயநாட்டை அடைந்தனர் என்று தெரிவிக்கவில்லை. அது தூதர்கள் இரவும் பகலும் வேகமாகப் பயணம் செய்து, பின்னரே அந்நாட்டை அடைந்தனர் என்று குறிப்பதால் சில நாள் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்பது தெரிகிறது. ஆனால், அவர்கள் பயணம் செய்த நாள்களை உய்த்துணர்வதற்கான குறிப்புகள் உள்ளன.

''பொருஇல் தூதுவர் போயினார் பொய்இலார்
இரவும் நன்பக லும்கடிது ஏகினார்;
பரதன் கோயில்உற் றார்படி காரீர்!எம்
வரவு சொல்லுதிர் மன்னவற் கே! என்றார்'' (2102)

பரதன் தூதர் கேகயநாட்டை அடைந்த அன்றே பொழுதும் நாளும் பார்க்காமல் தம்பியொடு அயோத்திக்குப் பயணமானான். ஏழுநாள் பயணம் செய்தபின் அதனை நண்ணினான்.

''ஆறும் கானும் அகன்மலை யும்கடந்து
ஏறி ஏழ்பகல் நீந்திப்பின் எந்திரத்து
ஊறு பாகு மடைஉடைத்து ஒண்முளை
நாறு பாய்வயல் கோசலம் நண்ணினான்'' *(2119)*

இதனால் பரதன் ஏழுநாள் பயணம் செய்துள்ளான் என்பது தெரிகிறது. உதாசித்தனோடு அயோத்தியிலிருந்து கேகயம் சென்ற பரதன் ஏழுநாளில் அங்குச் சென்றடைந்தான் என்று முன்னரும் சொல்லப்பட்டுள்ளது (1311). ஆனால் தூதர் எத்தனை நாள் பயணம் செய்தனர் என்பது திட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை. அதனை அறிவதற்கான குறிப்புக் கோசலையின் பேச்சில் காணப்படுகிறது.

பரதன் அயோத்தியை அடைந்த அன்று, முதலில் கைகேயியைக் கண்டு அடுத்துக் கோசலையைச் சந்தித்தான். அவள் அவனிடம், ''மகனே! உன் தந்தை இறந்து பதினான்கு நாள்கள் ஆகிவிட்டன; அவனுக்கு இறுதிக்கடன்கள் செய்வாய்'' என்றாள்.

''மறுஇல் மைந்தனே! வள்ளல் உந்தையார்
இறுதி எய்திநாள் ஏழ்இ ரண்டின;
சிறுவர் செய்கடன் செய்து தீர்த்திஎன்று
உறுவல் மேயினாள் உரையின் மேயினாள்'' *(2223)*

கோசலையின் பேச்சினால் தசரதன் இறந்து பதினான்கு நாள் கழித்துவிட்டன என்பது தெரிய வருகிறது. இப்பதினான்கு நாள்களில் பரதன் கேகயத்திலிருந்து பயணம் செய்த ஏழு நாள்களைக் கழித்தால் எச்சமாக வரும் ஏழுநாள்கள் தூதர் அயோத்தியிலிருந்து கேகயத்திற்குப் பயணம் செய்த நாள்கள் என்பது புலப்படும்.

கம்பராமாயணத்தின்படி, இராமன் வனம்புகுந்த இரண்டாம்நாள் தசரதன் மறைய உடன் தூதர் புறப்பட்டு ஏழுநாள் பயணம் செய்து ஒன்பதாம் நாள் கேகயம் அடைந்தனர். அன்றே பரதன் அங்கிருந்து புறப்பட்டு ஏழுநாள் பயணம் செய்து பதினாறாம்நாள் அயோத்தியை அடைந்தான்.

வான்மீகத்தில், தூதர்கள் ஒன்பதாம் நாள் காலை பரதனைக் கண்டு உடன் அயோத்திக்குப் புறப்பட வேண்டும் என்றனர். பரதன், தூதர் பயணம் செய்த வழியாகப் பயணம் செய்யாமல் நாடுகளின் வழியாகப் பயணம் செய்து ஏழு இரவுகளுக்குப் பின் கேகயத்திலிருந்து புறப்பட்ட எட்டாம்நாள் அயோத்தியை அடைந்தான். அஃது இராமன் கானகம்

சென்ற பதினாறாம் நாளாகும். வான்மீகத்தின் பயணக்குறிப்பு வேறு வகையாக இருந்துபோதிலும் பரதன் அயோத்தியை அடைந்த நாள், இராமன் வனம் புகுந்த பதினாறாம் நாளாகவே அமைந்துள்ளது கருதத்தக்கது.

வான்மீகத்தின் காலக்குறிப்பினை விளக்கும் இராமாயண சார சங்கிரகம் பரதன் சதுர்த்தசியன்று புறப்பட்டுப் பஞ்சமியன்று அயோத்தி அடைந்தான் என்று குறித்துள்ளது. அது பொருந்தாது. அதன்படி கணக்கிட்டால் ஏழு இரவுகளுக்கு மாறாக ஆறு இரவுகளே வழியில் கழிந்தன என்று ஆகும்.

> *"பரதன் வழியில் ஏழு இரவுகள் கழித்தவனாய் அந்த*
> *அயோத்திமாநகரைக் கண்முன் கண்டு தேரோட்டியை*
> *நோக்கி இங்ஙனம் மொழிந்தான்"* *(அ.71:20)*

என்பதனோடு மாறுபடும்.

ஈமக்கடன்களும் சடங்குகளும்

கம்பநாடர், பரதன் அயோத்தியை அடைந்த அன்றே தசரதனின் ஈமச்சடங்குகள் நடைபெற்றன என்கிறார். கோசலை தெரிவித்தவாறு பரதன் தசரதனுக்கு இறுதிக்கடன்களைச் செய்ய முற்பட்டான். தந்தையின் உயிரற்ற அறப்படிவத்தைக் கண்டு புலம்பினான். தசரதன் உடல் சரயுவாற்றங்கரைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. பரதன் இறுதிக்கடன் செய்ய முற்படத் தசரதன் அவனை மகன் அல்லன் என்று துறந்த செய்தியை வசிட்டன் சொன்னான். பரதன் மாளாச் சோகத்தில் ஆழ்ந்தான். சத்துருக்கனன் இறுதிக்கடன்களைச் செய்துமுடித்தான். பட்டத்தரசியர் மூவரும் நீங்கலாக ஏனைய தசரதன் தேவிமார் தீக்குளித்து நற்கதி பெற்றனர்.

அன்று தொடங்கிப் பத்து நாள்கள் தசரதன் இறப்பை ஒட்டிய சடங்குகள் நிகழ்ந்தன. அந்நாளில் பரதன் பெருந்துயரத்தில் இருந்தான்.

> *"ஐந்தும் ஐந்தும்நாள் ஊழி ஆம்என*
> *மைந்தன் வெந்துயர்க் கடலின் வைகினான்;*
> *தந்தை தன்வயின் தருமம் யாவையும்*
> *முந்து நூலுளோர் முறையின் முற்றினான்"* *(2241)*

அஃதாவது இராமன் காடு சென்ற பதினாறாம்நாள் தொடங்கி இருபத்தைந்தாம்நாள் நிறைவுற்றது.

வான்மீகத்தில் பரதன் பதினாறாம்நாள் அயோத்தி திரும்பிய போதிலும் அன்று இறுதிக் கடன் செய்யவில்லை. முதலில் கைகேயியைக் கண்டு அவளால்தான் எல்லாம் நிகழ்ந்தது என்று

தெரிந்த நிலையில் கோசலையைச் சென்று கண்டான். பரதனின் தூய சிந்தையைக் கோசலை உணர்ந்து அவனைக் கட்டியணைத்துக் கதறினாள். அப்பொழுது இரவுப்பொழுது வந்தது என்கிறது வான்மீகம்.

"அறத்தைப் பேசியவாறு மெய்ம்மறந்து அறிவிழந்து தரையில் விழுந்து அடிக்கடி பெருமூச் செறிந்துகொண்டிருந்த அவனுக்கு (பரதனுக்கு) அந்த இரவும் துயரமாகவே கழிந்தது"
(அ. 74:65)

மறுநாள் (பதினேழாம் நாள்) பரதன் தசரதனுக்குரிய ஈமக்கிரியைகளைச் செய்தான். அன்றுமுதல் பத்துநாள்கள் சாத்தீட்டு மேற்கொள்ளப்பட்டு (இராமன் வனம்புகுந்த இருபத்தாறாம் நாள்) முடிவுற்றது. பதினோராம் நாள் (இராமன் வனம்புகுந்த இருபத்தேழாம் நாள்) தீட்டுக்கழிப்பு நிகழ்ந்தது. பன்னிரண்டாம் நாள் (இராமன் வனம் புகுந்த இருபத்தெட்டாம் நாள்) நீத்தார் கடன்களைப் பரதன் செய்தான். பதிமூன்றாம் நாள் (இராமன் வனம் புகுந்த இருபத்தொன்பதாம் நாள்) விடியற்காலையில் பரதன் தசரதனுடைய எலும்பின்மேல் பால் தெளித்தான். தந்தையின் எலும்புக்குவியலையும் சாம்பலையும் கண்டு அவனும் சத்துருக்கனனும் புலம்பினர். வசிட்டன்,

"தீரனே! உன் இறந்த தந்தைக்கு இது பதிமூன்றாவது நாள். எஞ்சிய எலும்புகளைப் பொறுக்குவதில் இப்பொழுது ஏன் தாமதிக்கின்றாய்?" *(அ. 77:22)*

என்று பரதனை வினவி அவனைத் தெருட்டினான்.

கம்பநாடர் பரதன் அயோத்தி திரும்பிய அன்றே தசரதனுக்கு இறுதிக்கடன்களைச் செய்யத் தொடங்கினான் என்று குறித்துள்ளார். வான்மீகிமுனிவர் மறுநாள் செய்யத் தொடங்கினான் என்று கூறியுள்ளார். இங்குக் கம்பநாடரால் ஒருநாள் குறைக்கப்பட்டுள்ளது. கம்பராமாயணம், ஈமச்சடங்குகள் பத்துநாள்கள் நடந்தன என்கிறது. அஃதாவது, இராமன் காடு சென்ற பதினாறாம் நாள் தொடங்கி இருபத்தைந்தாம் நாள் நிறைவுற்றன என்கிறது. வான்மீகம் பதிமூன்று நாள்கள் நடந்தன என்கிறது. பதினேழாம் நாள் தொடங்கி, இருபத்தொன்பதாம் நாள் நிறைவுற்றன என்கிறது. இறுதிச்சடங்கு நிகழ்ந்த நாள்களில் கம்பநாடரால் நான்கு நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன.

பரதன் இராமனை அழைத்துவரப் புறப்படல்

கம்பநாடர், தசரதன் இறப்பையொட்டிய சடங்குகள் எல்லாம் முடிந்த மறுநாள் பரதன் இராமனை அழைத்துவரக் காட்டிற்குப் புறப்பட்டான் என்று குறித்துள்ளார். ''இராமனைக் கொண்டுவந்து முடிசூட்டுவேன் அல்லது அவனோடு காட்டில் யானும் தவம் புரிவேன்'' என்று தன்

முடிவைத் தெரிவித்தான் பரதன். அது கேட்டு மந்திரக் கிழவரும் மக்களும் மகிழ்ச்சியுற்றனர். அன்றே காடு நோக்கிப் புறப்பட்டனர்.

வான்மீகிமுனிவர், இறுதிச்சடங்குகள் பதிமூன்றாம் நாள் முடிந்த போதிலும் பதினைந்தாம்நாள் அன்றே பரதன் காட்டிற்குப் புறப்பட்டான் என்று கூறியுள்ளார். பதினான்காம் நாள் அமைச்சர்கள் கூடிப் பரதனிடம் அரசினை ஏற்க வேண்டினர். அவன் அதனை மறுத்து, இராமனை அழைத்துவரப் போவதாகச் சொல்லிக் காட்டுப்பாதையைச் செப்பம் செய்யுமாறு வேலைக்காரர்களைப் பணித்தான்.

> *"அதன்மேல் பதினான்காவது நாளில் சூர்யோதயத்திலேயே மந்திரிமார்கள் வந்து கூடிப் பரதனைப் பார்த்துப் பின்வரும் சொல்லைச் சொன்னார்கள்"* (அ.79:1)*

மறுநாள் சூதரும் மாகதரும் பரதனைத் துயில் எழுப்பினர். அஃது அவனுக்கு மிக்க துயரத்தை உண்டாக்கிற்று. அன்று வசிட்டன் அவனை முடிசூட்டிக்கொள்ளுமாறு வேண்டினான். அவன் ''இராமன்தான் மன்னன்; அவனைக் கானகத்திலிருந்து அழைத்துவர முடியாமற் போனால் யானும் அவனுடன் தங்குவேன்' என்று கூறிப் படைகளோடு காடு நோக்கிப் புறப்பட்டான். இராமன் காடு சென்ற முப்பத்தோராம் நாள் அது. கம்பநாடர் இங்கும் ஒரு நாள் குறைத்துக் காலச் செறிவோடு அமைத்துள்ளார்.

சித்திரகூடப்பயணம்

இராமனை அழைத்துவரக் கானகம் புறப்பட்ட பரதன் மரவுரி அணிந்து சத்துருக்கனனோடு தேர் ஏறினான். பரதன் முதல்நாள் இரவு இராமன் தங்கிய சோலையிலேயே அவன் கிடந்த புல்லணைக்கு அருகில் கிடந்தான். (1300)

இரண்டாம் நாள் அங்கிருந்து கால்களால் நடந்து சென்று கங்கைக்கரையை அடைந்தான். பரதன் பெரும்படையோடு வருவது கண்ட குகன் இராமனைக் கொல்ல வருகிறான் என்று முதலில் தவறாகக் கருதி அவனை அழித்து இராமனைக் காப்பதாக வீரவுரை பகர்ந்தான். பின்னர் அவன் தோற்றத்தினையும், நோக்கத்தினையும் கொண்டு அவன் தூய உள்ளத்தை உணர்ந்து கொண்டாடினான். பரதன் அன்றிரவு குகனோடு கங்கைக்கரையில் தங்கினான்.

---

* பதினான்கு நாள் கடத்தபின் மறுநாள் என்று இதனைப் பதினைந்தாம் நாள் நிகழ்ச்சியாக எஸ். சாம்பமூர்த்தி குறித்துள்ளார் (அ.சர்.79 ப.229.) ஆனால், ஆ.வீ. நரஸிம்ஹாசார்யரும், பி.எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரும் பதினான்காம் நாள் நிகழ்ச்சியாகவே காட்டியுள்ளனர். பின்னவர்கள் கருத்தே பொருத்தமாகும். 'தி₃வஸே சதுர்த₃சே' என்பது பாடம்.

மூன்றாம்நாள் குகன் படகு கொண்டுவர எல்லோரும் கங்கையைக் கடந்தனர். படகில் செல்லும்போது தாயரைக் குகனுக்கு அறிமுகப்படுத்தினான். கோசலையின் தாயுள்ளம் அவனையும் தன் மக்களுள் ஒருவனாக ஏற்றது. பரதன் பல காவதம் நடந்து பரத்துவாச முனிவனைக் கண்டான். அவன் பரதன் காடு போந்ததன் காரணம் அறிந்து மகிழ்ந்து படைக்கு விருந்தளித்தான். பரதன் கிழங்கும் காய்களும் உண்டு புழுதியில் படுத்து இரவைப் போக்கினான்.

நான்காம் நாள் பொழுது புலர்ந்தது. இருள் நீங்கப் படை அனுபவித்த இந்திரபோகம் பொய்யான கனவு போல முடிந்தது. புண்ணியப்பயன் நுகர்ந்தவர்க்கு அது முடிவடையும் காலம் போலக் கதிரவன் தோன்றினான் (1392). சேனை சோலைகளையும், மலைகளையும் கடந்து பாலைநிலத்தை அடைந்தது. கைகேயியின் மீது சீற்றங்கொண்ட நேர்மையாளன் பரதனைக் கண்டு உருகிய உலர்ந்த மரங்கள் தளிர்த்தன. பாலை மருதமாக மாறப் படைகள் எளிதில் கடந்து சென்றன.

இலக்குவன் இராமனுக்குக் கேடு செய்யப் பரதன் வருவதாகக் கருதிப் போர்க்கோலம் பூண்டான். அவனைப் பரதனுடைய உயர் குணத்தைக் கூறி இராமன் ஆற்றினான். சேனையைத் தொலைவில் நிறுத்திவிட்டுச் சத்துருக்கனனோடு சென்று இராமனைக் கண்டு வணங்கினான். அவன் நிலை கண்டு இலக்குவன் நெஞ்சழிந்து கண்ணீர் விட்டான். இராமன் தந்தையின் மறைவு அறிந்து வருந்தி அவனுக்கு நீர்க்கடன் செய்தான். சீதையின் துயரத்தைத் தாயர் ஆற்றுவித்தனர். அப்பொழுது சேனையும் பிறரும் வந்து சேர்ந்தனர். பகலவன் மறைந்தான். அது தசரதன் மறைவுக்காகக் குலமுதல்வனாகிய தானும் கடலில் மூழ்கி நீர்க்கடன் செய்வது போல இருந்தது.

"படம் செய் நாகணைப் பள்ளி நீங்கினான்
இடம்செய் தொல்குலத்து இறைவன் ஆதலால்
தடம்செய் தேரினான், தானும் நீரினால்
கடம் செய் வான்எனக் கடலில் மூழ்கினான்" *(2468)*

வான்மீகத்தின்படி, பரதன் முதல் நாள் நெடுந்தொலைவு கடந்து கங்கைக்கரையை அடைந்து தங்கினான். குகன் அங்குவந்து பரதனைச் சந்தித்தான். குகன் வாயிலாக இராமன் தங்கிய இடத்தை அறிந்து அங்கேயே தங்கினான். இரண்டாம் நாள் சூரியன் தோன்றுவதற்கு முன்பே மைத்ரம் என்னும் நன்முகூர்த்தத்தில் பிரயாகம் என்னும் காட்டை அடைந்தான். பரத்துவாசமுனிவனைக் கண்டான். பரதனின் அறநெஞ்சினை உணர்ந்த முனிவன் அவனை அங்குத் தங்கச் சொன்னான். படைகளுக்கு விருந்தளித்தான். மூன்றாம் நாள்

அங்கிருந்து புறப்பட்டுச் சித்திரகூடத்தை அடைந்து இராமனை வணங்கினான். இராமன் தந்தையின் மறைவுகேட்டு வருந்தினான். பின்பு நீர்க்கடன்களைச் செய்தான். பரதனும் இராமனும் உரையாடிக் கொண்டிருக்கும்போதே இரவு வந்தது.

"அப்பொழுது அந்த உற்றாரரோடு கூடி வருந்திய
சகோதரர்களுக்கு இரவு நீண்டதாய்க் கழிந்தது" *(அ.105:1)*

என்கிறார் வான்மீகிமுனிவர்.

பரதன் நான்கு நாளில் சித்திரகூடத்தை அடைந்தான் என்று கம்பராமாயணமும் மூன்றுநாளில் அடைந்தான் என்று வான்மீகமும் தெரிவிக்கின்றன. கம்பநாடர் இராமன் எங்கெங்குத் தங்கிக் காட்டிற்குச் சென்றானோ அங்கங்குத் தங்கிப் பரதனும் சென்றான் என்பதனைக் காட்ட ஒருநாளை அதிகமாகச் சேர்ந்துள்ளார் என்று தோன்றுகிறது. இராமன்காட்டிற்குப் புறப்பட்ட இருபத்தாறாம் நாள் புறப்பட்டு இருபத்தொன்பதாம் நாள் அங்கு அடைந்தான் என்கிறது கம்பராமாயணம். இராமன் காட்டிற்குப் புறப்பட்ட முப்பத்தோராம் நாள் பரதன் அயோத்தியிலிருந்து புறப்பட்டு, முப்பத்து மூன்றாம் நாள் சித்திரகூடம் அடைந்தான் என்கிறது வான்மீகம்,

பரதன் அயோத்தி திரும்புதல்

பரதன் சித்திரகூடத்தை அடைந்த மறுநாள் இராமனை அரசேற்க வற்புறுத்தி வேண்டியும் அவன் மறுத்தமையால் அன்றே அயோத்தி நோக்கிப் புறப்பட்டான் என்றே இரு நூல்களும் தெரிவிக்கின்றன. இதனை இராமன் காடு புகுந்த முப்பதாம்நாள் நிகழ்ச்சியாகக் கம்பராமாயணமும், முப்பத்துநான்காம்நாள் நிகழ்ச்சியாக வான்மீகமும் காட்டுகின்றன. கம்பநாடர் பரதனும் வசிட்டனும் இராமனை அரசேற்குமாறு வேண்டுவதாகக் குறித்துள்ளார். வான்மீகிமுனிவர் அவர்களோடு சாபாலி என்னும் முனிவனும் நாத்திகவாதம் பேசி இராமனை அரசேற்க வற்புறுத்தி அவனால் கண்டிக்கப்படுவதாகக் காட்டியுள்ளார். இறுதியில் தேவர்கள் இராமன் நாடு திரும்பினால் தங்கள் நோக்கம் முடியாது என்று கருதி இராமன் தந்தை சொல் காப்பான் என்றும், பரதன் பதினான்கு ஆண்டுகள் நாடாள வேண்டும் என்றும் தெரிவித்தனர். அதற்கு இசைந்து பதினான்கு ஆண்டுகள் முடிந்தவுடன் இராமன் திரும்பவில்லையென்றால் தான் எரிபுகுந்து மாள்வதாகச் சொல்லி, இராமன் திருவடிகளைப் பெற்று அயோத்திக்குப் புறப்பட்டான் என்கிறார் கம்பநாடர்.

வான்மீகம், "இராமன் அரசேற்க இசையும்வரை அங்கேயே உண்ணாமல் புற்படுக்கையில் கிடந்து அறப்போராட்டம் செய்வதாகப்

பரதன் கூறி அதனை மேற்கொள்ள முற்பட்டான். இராமன் அஃது அரச குலத்தவர் மேற்கொள்ளத்தக்க வழியன்று என்று கூறி அவனைத் தெருட்டினான். அந்நிலையில் இராவணவதத்தை விரும்பிய முனிவர்கள் பரதனிடம் இராமன்கருத்துக்கு இசையுமாறு பணித்தனர். அவனும் வேறு வழியின்றி இராமனைப் பொற்பாதுகைகளில் ஏறி நிற்கச்செய்து அவற்றைப் பெற்றுக்கொண்டு அயோத்திக்குத் திரும்ப விடைபெற்றான்'' என்கிறது.

இருநூல்களும் பரதன் எத்தனை நாளில் அயோத்தி திரும்பினான் என்பதனைக் குறிக்கவில்லை. அவன் அயோத்தியில் அரண்மனையில் தங்காமல் அருகில் உள்ள நந்திக்கிராமத்தில் தங்கி இராமன் திருவடிகளை அரியணையில் வைத்து அரசாண்டான் என்கின்றன.

4. தண்டகவன வாழ்க்கை

அத்திரிமுனிவன் உறையுள்

பரதன் அயோத்திக்குப் புறப்பட்டபின் இராமனும் சித்திரகூடத்தை விட்டுத் தெற்கு நோக்கிச் செல்ல முடிவுசெய்தான். அங்கிருந்தால் அயோத்திமக்கள் அடிக்கடி வந்து கண்டு வருந்துவர் என்பதே காரணம் ஆகும். அங்குள்ள முனிவர்களுக்குத் தான் அங்கு வந்த பின் கரன் முதலான அரக்கர்களால் தொல்லை மிகுந்ததைக் குலபதி என்னும் முனிவன் வாயிலாக இராமன் அறிந்து அங்கிருந்து புறப்பட்டதாகக் கூறுகிறார் வான்மீகிமுனிவர். மேலும் பரதனின் குதிரை யானைப் படைகளின் கழிவுகளால் அவ்விடம் தூய்மையற்றிருந்ததால் அங்கிருந்து செல்லத் தீர்மானித்தான் என்றும் தெரிவிக்கிறார். இதனால், இராமன் பரதன் புறப்பட்ட மறுநாள் அங்கிருந்து அகன்றான் எனலாம்.

அஃது இராமன் வனம் புகுந்த முப்பத்தொன்றாம் நாள். கம்பராமாயணப்படி இராமன் வனவாசத்திற்குப் புறப்பட்ட நாள் தேய்பிறைப் பக்கம் பஞ்சமி என்பதால் அதன் முப்பத்தொன்றாம் நாள் தேய்பிறைப் பக்கப் பஞ்சமி ஆகும். அன்று அத்திரிமுனிவன் உறையுளை மூவரும் அடைந்தனர். முனிவனும் அவன் பத்தினி அனசூயையும் நன்கு விருந்தோம்பினர். அனசூயை ஆடை ஆபரணங்களைத் தந்து சீதையை அணிந்துகொள்ளச் செய்தாள். கம்பநாடர் அன்று நிலவின் தோற்றம் பற்றி யாதும் குறிப்பிடவில்லை. வான்மீகத்தில் நிலவு பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. வான்மீகத்தின்படி இராமன் காட்டிற்குப் புறப்பட்டது வளர்பிறைப் பக்கப் பஞ்சமி என்பதால் அதன் முப்பத்துமூன்றாம் நாள் வளர்பிறைச் சப்தமி ஆகும். அது முன்னிலவு நாள். எனவே,

> *"சீதையே! விண்மீன்களால் அழகுற்று விளங்கும் இரவு*
> *வந்தது. விண்ணில் சந்திரன் தோன்றி நிலவு போர்த்து*
> *விளங்குகிறான்"* *(அ.119:9)*

என்று அனசூயை சொல்கிறாள்.

சரபங்கன் தவக்குடில்

அடுத்த நாள் (இரண்டாம் நாள்) புதுக்கோலத்தோடு பொலிந்த சீதையோடும் தம்பியோடும் இராமன் தண்டகவனம் புகுந்தான். அங்கு விராதன் சீதையைக் கவர்ந்து செல்ல முயன்று இராமலக்குவரால் தோள்கள் வெட்டப்பட்டான். இராமன் அவனை மண்ணில் புதைக்கக் கருதித் தன் திருவடியால் தள்ளச் சாபம் நீங்கப் பெற்று விண்ணில்

தோன்றி இராமனைத் துதித்தான். அதன் பின்னர் மூவரும் சரபங்கன் இருக்கும் சோலை நோக்கிச் சென்றனர். அது மாலைக்காலம் என்பது,

"மொய்கொள் சோலை முன்னினார்
வைக லானும் வைகினான்" (2586)

என்னும் பாடலால் விளங்குகிறது.

இரவு நெருங்கும் வேளையில் அவர்கள் சரபங்கன் தவக்குடிலை அடைந்தனர் என்கிறார் கம்பநாடர்.

"குரவம் குவிகோங்கு அலர்கொம் பினொடும்
இரவு கண்உறும் பொழுதுஎய் தினரால்
சரவங் கன்இருந் துதவம் கருதும்
மரவம் கிளர்கோங்கு ஒளிர்வா சவனம்" (2587)

இதில் உள்ள 'உறும்' என்பதற்கு மாறாக 'உகும்' என்னும் பாடம் சில பதிப்புகளில் காணப்படுகிறது. 'உறும்' என்பது அடையும் என்றும், 'உகும்' என்பது நீங்கும் என்றும் பொருள்படும். முன்னர்க் கதிரவன் மறைந்தான் என்று வருவதால் அதற்குச் சேர இரவு அடைந்தது என்பதே பொருத்தமாக அமையும். ஆதலால் 'உறும்' என்பதே உரிய பாடம் ஆகும்.

அப்பொழுது சரபங்கனைச் சந்தித்துத் திரும்பும் இந்திரன் இராமனைக் கண்ணாரக் கண்டு தொழுது துதித்துச் சென்றான். இராமன் சரபங்கன் குடிலில் நுழைந்து திருவடிகளைத் தொழ அவன் கண்ணீர் சிந்தியவாறு இராமனைத் தழுவி வரவேற்றான். சரபங்கன் கூறிய அறவுரையினைக் கேட்டவாறு இராமன் சீதையோடு அங்கே தங்கினான். இதனை,

"அவ்வயின் அழகனும் வைகினன் அறிஞன்
செவ்விய அறவுரை செவிவயின் உதவ,
நவ்வியின் விழியவ ளொடுநனி இருளைக்
கவ்விய நிசிஒரு கடையுறும் அளவின்" (2621)

என்னும் பாட்டுத் தெரிவிக்கிறது.

முனிவர்கள் ஆசிரமம்

மறுநாள் (மூன்றாம் நாள்) உலகத்தை மூடிய இருள்உறையினை உரித்துக்கொண்டு பகலவன் எழுந்தான். இந்திரன் தந்த பிரமபதத்தை ஒதுக்கிய சரபங்கன் தன் மனைவியோடு தீப்புகுந்து பரமபதத்தை அடைந்தான். அவன் மறைவுக்காக வருந்தும் நெஞ்சோடு மூவரும் அங்கிருந்து புறப்பட்டனர். மலைகள், மரங்கள், மணிப்பாறைகள், ஆறுகள், அருவிகள், செழித்த காடுகள், இனிய இடங்கள், ஆழமான

நீர்நிலைகள் ஆகியவற்றைக் கடந்து தண்டகவனத்தில் வாழும் முனிவர்களை அடைந்தனர். அவர்களை முனிவர்கள் எதிர்கொண்டு வரவேற்று இனியதொரு குடிலுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்துத் தங்கள் இடம் சார்ந்தனர்.

அடுத்த நாள் இராமனிடம் வந்து அரக்கர்களால் தாங்கள் படும் அல்லலைத் தெரிவித்து அபயம் வேண்டினர். இராமன் அரக்கர்களை வேர் அறுத்து அவர்களைக் காப்பதாக உறுதியளித்தான். முதல் நாள் இராமனை வரவேற்று மறுநாள் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர் என்பதனை,

> *''இனியதுஓர் சாலைகொண்டு ஏகி, இவ்வயின்*
> *நனிஉறை என்றுஅவற்கு அமைய நல்கித்தாம்*
> *தனிஇடம் சார்ந்தனர்; தங்கி, மற்றைநாள்*
> *அனைவரும் எய்தினர், அல்லல் சொல்லுவான்''* (2640)

என்கிறார் கம்பநாடர். இதில் 'மற்றைநாள்' என்பது மர்ரே பதிப்பிலுள்ள பாடம். 'மாதவர்' என்பது வேறு சில பதிப்புகளில் உள்ள பாடம். இதற்கு முன்னர் உள்ள ஆறு பாட்டுகளும் அவற்றின் முன்னேயுள்ள, 'அத்தண்டக வனத்து உறை தவத்துளோர் எலாம்' என்பதனை எழுவாயாகக் கொண்டிருத்தலால் இப்பாட்டும் 'மாதவர்' என்னும் மற்றோர் எழுவாயினைக் கொள்ளாமல் அதனையே எழுவாயாகக் கொண்டுள்ளது என்பதே பொருத்தம். மேலும், 'சார்ந்தனர்', என்னும் வினைமுற்றும், 'தங்கி' என்னும் வினையெச்சமும் நெடுந்தொலைவு கடந்து வந்துள்ள இராமனை ஓய்வுகொள்ளச் செய்து மறுநாள் தங்கள் குறைகளைத் தெரிவித்துள்ளனர் என்பதனைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு அத்திரிமுனிவன் ஆசிரமத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம்நாள் முனிவர்களோடு தங்கும் வாழ்க்கை தொடங்கியது என்றும் மறுநாள் இராமன் அவர்களுக்கு அடைக்கலம் அளித்தான் என்றும் கூறுகிறார் கம்பநாடர்.

வான்மீகத்தில், ''இராமன் இரண்டாம் நாள் அத்திரிமுனிவன் இருக்கையினின்றும் புறப்பட்டுத் தண்டகாரணியத்தில் நுழைந்து முனிவர்களின் தவக்குடில் வரிசைகளைக் கண்டான். அவனை முனிவர்கள் ஒரு தவக்குடிலில் தங்கச்செய்து விருந்தோம்பினர். மூன்றாம் நாள் விராதன்வதை நிகழ்ந்தபின் இராமன் சரபங்கனைக் கண்டான். அவன் இராமனைச் சிறிது போது அங்கு இருக்கச் சொல்லித் தீப்புகுந்து பிரமலோகம் சென்றான். பின்னர் இராமன் அவன் தெரிவித்ததற்கு இணங்கச் சுதீக்கணனிடம் சென்றான். அம்முனிவன் மூவரையும் தன் ஆசிரமத்தில் தங்கச் செய்து உணவளித்தான்.

அன்றிரவு அங்கே கழிந்தது. நான்காம் நாள் காலை சுதீக்கணனிடம் விடைபெற்றுக்கொண்டு இயற்கைக்காட்சிகளைக் கண்டவாறே நடந்து மூவரும் கதிரவன் மறையும் வேளையில் பஞ்சாபசரசம் என்னும் தடாகத்தைக் கண்டு முனிவர்களின் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு மூவரும் நெடுங்காலம் வாழ்ந்தனர்'' என்று சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது.

பத்தாண்டு வனவாசம்

கம்பநாடரின் காப்பியமும் வான்மீகமும் தண்டகவன முனிவர்களோடு இராமன் பத்தாண்டுகள் வாழ்ந்தான் என்றே தெரிவிக்கின்றன.

> *''ஐந்தும் ஐந்தும் அமைதியின் ஆண்டு, அவண்*
> *மைந்தர் தீதுஇலர் வைகினர்''* (2656)

என்று கம்பராமாயணமும்,

> *''அவ்வாறு முனிவர்களின் தவக்குடில்களில் இடையூறின்றி*
> *இன்பமாய் உறைந்த இராமனுக்குப் பத்து ஆண்டுகள்*
> *கழிந்தன''* (ஆ.11:27)

என்று வான்மீகமும் குறிப்பிடுகின்றன.

கம்பநாடர் ஒரு தவக்குடிலிலேயே பத்தாண்டுகள் தங்கினர் என்று குறித்துள்ளார். வான்மீகத்தில் ஒவ்வொரு முனிவனின் இருப்பிடத்திலும் மாறிமாறிப் பல மாதங்கள் தங்கினர் என்று காணப்படுகிறது. தன்னால் முனிவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் தனியே ஒரு குடிலில் தங்கியிருந்து இராமன் அவர்களைக் காத்துவந்தான் என்று கம்பநாடர் செய்துள்ள இம்மாற்றம் காப்பியத்திற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது.

பஞ்சவடிப்பயணம்

பின்னர், முனிவர்கள் இராமனிடம் அகத்தியமுனிவனைச் சென்று காணுமாறு கூறினர். அவர்கள் அகத்தியமுனிவனைக் காணச் செல்லும் வழியில் சுதீக்கணமுனிவன் உறையும் சோலையை அடைந்து இரவு வைகினர்(2658). அங்கு இருக்க வேண்டிய அவனிடம் இராமன் அகத்தியமுனிவனைக் காணவேண்டும் என்னும் தன் விருப்பினைச் சொல்ல, அவனும் அதற்கு இசைந்து வழி கூறிச் செல்ல விடுத்தான்.

மூவரும் சோலையை விரைவில் கடந்து அகத்தியமுனிவனைக் கண்டனர். அவன் வேதியர் வேதம் முழங்க, முனிவர்கள் கமண்டல நீர் தெளித்து மலர்களைத் தூவ, அவர்களைத் தன் இருப்பிடத்திற்கு

அழைத்துச் சென்றான். இராமனை அங்கேயே தங்குமாறு கூறினான். இராமன் அரக்கர்கள் வரும் திசையில் முற்படச் சென்றிருப்பது நலம் என்றான். அகத்தியமுனிவன் படைக்கலங்களை வழங்கிப் பஞ்சவடியின் சிறப்பினைக் கூறி அங்குச் சென்று தங்குமாறு பணித்தான். அப்பொழுதே அவர்கள் பஞ்சவடி நோக்கிப் போயினர். வழியில் சடாயுவைக் கண்டனர். அவர்களைத் தசரதன்மக்கள் என்று அறிந்த சடாயு அவர்களுக்குப் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவித்தான். தன் சிறகுகளின் பரந்த நிழலின்கீழ் அவர்கள் நடந்து வரும்படி வானில் பறந்து சென்றான். இதனால் அது நண்பகலையொட்டிய வேளை என்பது புலப்படுகிறது. மூவரும் பஞ்சவடியை அடைந்தனர். இராமனும் சீதையும் கோதாவரியின் இயற்கைக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருக்க இலக்குவன் பூஞ்சாலை ஒன்று அமைத்தான். இராமன் அதில் குடிபுகுந்து தங்கலானான்.

வான்மீகம், பத்தாண்டுகளுக்குப் பின் இராமன் சுதீக்கணன் தவக்குடிலுக்குத் திரும்பி அங்குச் சில காலம் தங்கினான் என்றும், ஒருநாள் அகத்தியமுனிவனைக் காண்பதற்காக அங்கிருந்து புறப்பட்டு அன்று மாலை அகத்தியமுனிவனின் தம்பியைக் கண்டு இரவு அவனோடு தங்கினான் என்றும், மறுநாள் அகத்தியமுனிவனைக் கண்டான் என்றும் கூறுகிறது. மேலும்,

> *"தோளாற்றல் மிக்கவனே, இனியவனே, சீதையோடும்*
> *இலக்குவனோடும் இனிதே இளைப்பாறுவாய். கதிரவன்*
> *மறைந்துவிட்டான். மாலைக்காலமும் வந்துவிட்டது"* (ஆ.13:1)

என்று முனிவன் சொல்ல அன்றிரவு அங்குத் தங்கி மறுநாள் புறப்பட்டுப் பஞ்சவடியை அடைந்தான் என்றும் குறிப்பிட்டுள்ளது.

பஞ்சவடியில் எவ்வளவு காலம் தங்கியிருந்தனர் என்பது பற்றிய வெளிப்படையான குறிப்பு எதனையும் கம்பநாடரோ வான்மீகி முனிவரோ தரவில்லை. அவர்கள் அங்குச் சில ஆண்டுகள் தங்கியுள்ளனர். கம்பராமாயணத்தில் காணப்படும் சில குறிப்புகளைக் கொண்டு அதனைக் கணக்கிட முடியும்.

சீதை சிறைப்பட்ட காலம்

கம்பநாடர், சீதை எந்தப் பருவ காலத்தில் இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டாள் என்பதனை அறியத்தக்க வகையில் ஒரு குறிப்புத் தந்துள்ளார். "மன்மதக்கணைகளால் விளைந்த புண்ணில் வாடை கலந்த பனி தைத்து இராவணனை வருத்தியது. அவன், 'இப்பொழுது நடப்பில் உள்ள பருவம் ஏதடா?' என்று கேட்டான். அது கேட்டு

அச்சமுற்ற பின்பனிப்பருவம் நீங்கிச் செல்ல, இளவேனிற்பருவம் வந்து சேர்ந்தது'' என்கிறார்.

''பருவத்தால் வாடை தந்த
பசும்பனி, அனங்கன் வாளி
உருவிப்புக்கு ஒளித்த புண்ணில்
குளித்தலும், உளைந்து விம்மி,
இருதுத்தான் யாதுஅ டாஎன்று
இயம்பினன்: இயம்ப லோடும்
வெருவிப்போய்ச் சிசிரம் நீங்கி
வேனில்வந்து இறுத்தது அன்றே'' (3165)

இதனால் இளவேனிற் காலத் தொடக்கத்தில் இராவணன் சீதையைக் கவர்ந்தான் என்பது தெரிகிறது. இதற்கு முன்னைய நிகழ்ச்சிகளான சூர்ப்பணகை இராமன்மீது காமம் கொள்வது, கரன்வதம் ஆகியவை பின்பனிக்காலத்தின் இறுதியில் நடந்தனவாகும். இனி அவை நடந்த நாள் பற்றிக் காணலாம்.

சூர்ப்பணகை காமம்

பின்பனிக்கால இறுதியில் ஒருநாள் சூர்ப்பணகை இராமனைப் பார்த்து அவன் அழகில் மயங்கினாள். அழகிய பெண்ணுருவம் கொண்டு அவன்முன் சென்று தன்னை மணந்துகொள்ள நயந்து நின்றாள். அவள் சீதையை அச்சுறுத்த முயன்ற போது இராமனால் வெருட்டப்பட்டாள். இது மாலைக்கால நிகழ்ச்சி. அப்பொழுது கதிரவன் மறையலானான்.

''பொன்திணி சரளச் சோலைப்
பளிக்கறைப் பொதும்பர் புக்காள்
சென்றது பரிதி மேற்பால்;
செக்கர்வந்து இறுத்தது அன்றே'' (2802)

இரவெல்லாம் காமவெறியால் துன்புற்றாள். நிலவு தோன்றி அவளை வதைத்தது. அவள் மதியைக் கறியாகக் கொண்டு மன்மதனை உண்ண எண்ணினாள்; நிலவொளியின் தாக்குதலைத் தாங்க முடியாமல் தவித்தாள்; இணக்கமில்லாத் திங்களை விழுங்க இராகு என்னும் பாம்பினைக் கொண்டுவருவேன் என்று கொதித்தாள்; அழகிய பெரிய மதியும் பனிக்காலத்து வாடைக்காற்றும் மன்மதனும் தன்னைக் காணாதவாறு குகைக்குள் சென்று தங்கினாள்.

''கலைஉ வாமதி யேகறி ஆகவன்
சிலையின் மார்னைத் தின்னும் நினைப்பினாள்'' (2805)

''நிலைக்கும் வானில் நெடுமதி நீள்நிலா
மலைக்க நீங்கும் மிடுக்குஇலள் மாந்துவாள்'' (2806)

"அணைவுஇல் திங்களை நுங்க, அராவினைக்
கொணர்வென் ஓடிஎ னக்கொதித்து உன்னுவாள்" (2808)

"வாம மாமதி யும்பனி வாடையும்
காம னும்தனைக் கண்டுஉண ராவகை
நாம வாள்எயிற்று ஓர்கத நாகம்வாழ்
சேம மால்வரை யின்முழை சேருமால்" (2812)

என்பனவற்றால் அது பின்பனிக்காலத்தில் நல்ல நிலவொளி வீசிய நாள் என்பது விளங்குகிறது.

கரன் வதை

மறுநாள் சூரியன் தோன்றினான். அரக்கர்களாகிய இருளை நீக்க இராமன் தோன்றியது போல அக்காட்சி இருந்தது. இராமன் கோதாவரியாற்றில் சந்திவழிபாடு செய்துகொண்டிருந்த பொழுது சூர்ப்பணகை சீதையைக் கவர முற்பட்டு இலக்குவனால் மூக்கும், காதும், மார்பகங்களும் அறுக்கப்பட்டாள். அவள் கரனிடம் சென்று முறையிட்டாள். அவன் பதினான்காயிரம் அரக்கர்களோடு வந்து போரிட்டு மாண்டான். அவனது சேனை எழுப்பிய புழுதியால் பச்சைக் குதிரைகள் பூட்டப்பட்ட பகலவனின் பொன்னிறத்தேர் வெண்ணிறமாக மாறியது என்பதால் அது பகலின் முற்கூறு என்பது புலனாகிறது.

"விசும்புறு தூளியால் வெண்மை மேயின
பசும்பரிப் பகலவன் பைம்பொன் தேர்அரோ" (2927)

கவிஞர் ஒரு முகூர்த்தத்திலும் (48 நிமிடம்) சூர்ப்பணகை மூன்று கடிகையிலும் (72 நிமிடம்) மாலியவான் ஒரு நாழிகையிலும் (24 நிமிடம்) இப்போர் நடந்ததாகக் கூறியுள்ளனர். முகூர்த்தம் என்பது 48 நிமிடம், கடிகை என்பது 24 நிமிடம். நாழிகை என்பது கடிகையைக் குறிக்கும் தமிழ்ச்சொல். இதுவே 'நாளி' என்று வடமொழியில் திரிந்து வருகிறது.

"முத்தம் ஒன்றில் முடிந்தவர் மொய்புண்ணீர்
நீத்தம் ஓடி நெடுந்திசை நேர்உற" (3063)

என்பது கவிஞர் கூற்று.

"வில்ஒன்றில் கடிகை மூன்றில் ஏறினர்" (3130)

இது சூர்ப்பணகை கூற்று.

"ஒருவி லால்ஒரு நாழிகைப் பொழுதினுள் உலந்தார்" (9286)

என்பது மாலியவான் பேச்சு.

சூர்ப்பணகை, மாலியவான் கூற்றுகள் தோராயமாகச் சொல்லப்பட்டவை என்று அமைதி கொள்ள வேண்டும். அல்லது அவற்றிற்கு மாறாக வேறு பாடங்கள் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இப்போர் ஒன்றே கால் மணிக்குள் முடிந்தது என்பது உறுதி.

அன்றே சூர்ப்பணகை அழுது புலம்பிக் கொண்டு இலங்கையை அடைந்து இராவணனிடம் முறையிட்டாள். பஞ்சவடியிலிருந்து நெடுதொலைவுள்ள இலங்கையை அவள் எவ்வாறு சில மணிநேரத்தில் அடைந்தாள் என்னும் தடை எழும். இதற்கு விடை கூறும் வகையில் சூறைக்காற்றுப் போல விரைந்து சென்றடைந்தாள் என்கிறார் கம்பநாடர்.

"கலங்கு சூறைவன் போர்நெடுங் கால்என
இலங்கை மாநகர் நொய்தின்சென்று எய்தினாள்" *(3066)*

அரக்கர்களுக்கு இவ் ஆனைத்தொழில் (அருஞ்செயல்) செய்து முடிக்கக் கூடியது என்று கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இராவணன் இலங்கையிலிருந்து பஞ்சவடிக்கு வந்து சீதையைக் கவர்ந்துகொண்டு அன்றே இலங்கைக்குத் திரும்பினான் என்பதனையும் ஏற்க இயலும்.

இராவணன் காமவெறி

சூர்ப்பணகை இராவணனைச் சந்தித்த போது அவன் அரசவையில் நடன நிகழ்ச்சியைக் கண்டுகொண்டிருந்தான். அங்குக் குளங்களில் தாமரை பூத்தது போல விளக்குகள் எரிந்தன (3084). சூர்ப்பணகையின் அழுகையைக் கேட்டுத் துயின்ற பெண்கள் சிலர் தாங்கள் கண்ட கனவினால் விளைந்த இன்பத்தையும் மறந்து சரிந்த கூந்தலோடும் கலைந்த ஆடையோடும் அசைந்த மார்பகங்களோடும் எழுந்து மயங்கினர் (3108). இக்குறிப்புகள் அது முன்னிரவுப் பொழுது என்பதனைக் காட்டுகின்றன.

இராவணனிடம் சூர்ப்பணகை சீதையின் அழகினைப் பன்னி உரைத்து அவனுக்காக அவளைத் தூக்கிவர முயன்ற போது தனக்கு இராமலக்குவரால் தீங்கு நிகழ்ந்தது என்றாள். சீதையின் அழகைக் கேட்டுக் காமவெறி கொண்ட இராவணன் கலங்கினான். அவன் நிலவைக் கொண்டுவருமாறு பணியாளர்களுக்கு ஆணையிட்டான். அவர்கள் இராவணன் ஆளும் இலங்கைக்கு மேலே போவதற்கு அஞ்சி ஒரு பக்கமாக ஒதுங்கிச் செல்லும் முழுமையான சந்திரனைத் தேடி அழைக்க அவன் வந்து தோன்றினான். தன்னை வருத்திய கொடிய

அரக்கனின் வலிமை குறைந்த காலத்தில், அவன்மீது வஞ்சம் தீர்க்கச் செல்லும் வலியவன் போல வட்டமான நிலவு தோன்றியது.

"வெஞ்சினத்து அரக்கன் ஆண்ட
வியல்நகர் மீது போதும்
நெஞ்சுஇலன் ஒதுங்கு கின்ற
நிறைமதி யோனை நேடி
அஞ்சலை, வருதி நின்னை
அழைத்தனன் அரசன் என்னச்
சஞ்சலம் துறந்து தான்,அச்
சந்திரன் உதிக்க லுற்றான்" (3172)

"அயில்உறக் கலந்த நல்நீர்
ஆழிநின்று ஆழி இந்து...
உயிர்தெற உவந்து வந்தான்
ஒத்தனன் உதயம் செய்தான்" (3173)

என்பவற்றில் வரும் 'நிறைமதியோன்', 'ஆழி இந்து' (வட்ட நிலா) என்னும் சொற்றொடர்கள் அது நிறைமதி நாள் என்பதனை வெளிப்படையாகவே காட்டுகின்றன. முதல் நாள் சூர்ப்பணகையும் மறுநாள் இராவணனும் நிலவொளியில் துன்புற்றனர். இராவணனை வருத்தியது பௌர்ணமி நிலவு என்பதால் சூர்ப்பணகையை வருத்தியது சதுர்த்தசி நிலவாகும். சதுர்த்தசியிலேயே முழுநிலவு வருதலும் அதன் எச்சம் மறுநாள் இருத்தலும், அவ்வெச்சம் இருக்கும் நாளையே பௌர்ணமி என்று குறித்தலும் வழக்கம். அதனால்தான் சூர்ப்பணகையை வருத்திய சதுர்த்தசி நிலவைக் 'கலை உவா மதி', 'நெடு மதி', 'வாம மாமதி' என்று முழுநிலவு போலப் பாடியுள்ளார். மேலும் சித்திரை முழுமதியோடு பின்பனிக்காலம் முடிதலின், இராவணன் பருவத்தை அழைத்த போது பின்பனி நீங்கி இளவேனில் வந்தது என்பதும் விளங்குகிறது.

இராவணன் சீதையைக் கவர்ந்துவர எண்ணினான். அவ்இரவிலேயே அமைச்சர்களைச் கூட்டி ஆய்ந்தான்; விமானத்தில் ஏறி மாரீசன் இருக்கையை அடைந்தான்.

"ஏவின சிலதர் ஓடி
'ஏ' எனும் துணையில், எங்கும்
கூவினர்; கூவ லோடும்
குறுகினர்" (3235)

என்பதால் அமைச்சர் கூட்டம் எவ்வளவு விரைவாக நடந்தது என்பது தெரிகிறது.

சீதையைச் சிறைவைத்தல்

மறுநாள் காலையில் மாரீசன் மாயமானாகக் கானகத்தில் நின்றான். அதன் அழகில் மயங்கிய சீதை இராமனிடம் அதைப் பிடித்துத்தர வேண்டினாள். அந்த மானைப் பிடிக்கச் சென்ற இராமன் அது அரக்கர்களின் மாயம் என்று உணர்ந்து அதன்மீது அம்பைச் செலுத்தினான். மாரீசன் 'இலக்குவனே! சீதையே!' என்று இராமன் குரலில் கத்தியவாறு உயிர்விட்டான். அக்குரல் கேட்ட சீதை இராமனுக்கு ஏதோ கேடு என்று கருதி, இலக்குவனை அங்குச் செல்லுமாறு செய்தாள்.

இராவணன் தவக்கோலம் கொண்டு சீதையின் இருக்கையை அடைந்தான். சீதை அவனைப் பணிவுடன் வரவேற்றாள். இலங்கையினின்று வருவதாகத் தெரிவித்தான். அரக்கர்கள் துறவிகளால் தொடர்பு கொள்வதற்குரியவர்கள் அல்லர் என்று கூறி அவர்களை அழிக்கவே இராமன் வனம் புகுந்துள்ளான் என்றாள். அதனால் இராவணன் சீற்றம் கொள்ள, அவன் வேடம் கலைந்தது. சீதையைப் பர்ணசாலையோடு எடுத்துத் தேரில் வைத்துக்கொண்டு விரைந்து சென்றான்.

சடாயு இராவணனை இடைமறித்தான்; சீதைக்கு ஆறுதல் கூறி அவனோடு போரிட்டுத் தடுத்தான். இராவணனின் கொடி, குண்டலம், மார்புகவசம், வில் முதலியவற்றையும் தேர்ப்பாகனையும் சிதைத்து வீழ்த்தினான். இறுதியில் இராவணன் வீசிய தெய்வவாளால் காயமுற்று வீழ்ந்தான். இராவணன் வான் வழியே சென்று அசோகவனத்தில் சீதையைச் சிறைவைத்தான்.

இதுகாறும் கண்டவற்றால், கம்பராமாயணத்தின்படி சித்திரைமாதம் பௌர்ணமிக்கு முதல்நாளன்று (சதுர்த்தசி) சூர்ப்பணகை இராமன்மீது காமுற்றுக் கலங்கினாள் என்பதும், மறுநாள் பௌர்ணமியன்று இராவணன் சீதையின்மேல் மையல் கொண்டான் என்பதும், தேய் பிறைத் தலைநாளில் (பிரதமையில்) சீதையைக் கவர்ந்து சென்றான் என்பதும் தெளிவாகின்றன.

வான்மீகம், ''முன்பனிக்காலத்தில் ஒருநாள் சூர்ப்பணகை இராமனைக் கண்டு காமுற்றாள், அன்றே சீதையைக் கவரமுயன்று மூக்கறுப்பட்டாள், இராவணன் முதலில் அகம்பனன் என்னும் அரக்கன் வாயிலாகக் கரன் வதையை அறிந்தான், அவனே முதலில் சீதையைக் கவர்ந்து வரும் கருத்தினைத் தெரிவித்தான், பின்னரே சூர்ப்பணகை அதனைத் தெரிவித்தாள், இராவணன் சீதையின் கூந்தலைப் பற்றித் தூக்கிச் சென்றான், அவளை முதலில் அந்தப்புரத்திலும் பின்னர்

அசோகவனத்திலும் சிறைவைத்தான், ஓராண்டுக்குள் தனக்கு இசையவில்லையென்றால் அவளைத் தின்று விடுவதாக மருட்டிச் சென்றான்'' என்று குறித்துள்ளது.

அதில் சீதை இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட மாதம், பக்கம் குறித்துத் திட்ட வட்டமான குறிப்பு இல்லை. கோவிந்தராஜர் சித்திரை (சைத்ர) மாதத்தில் நிகழ்ந்ததாகக் கருதுகிறார் (ரா.சா.ச. முன்னுரை,ப.14). இராமாயண சார சங்கிரக ஆசிரியர் முப்பிரால வேங்கடாச்சாரியர் மாசிமாதம் (மாகம்) தொடங்கி ஆனிமாதம் (ஜேஷ்டம்) வரை ஐந்து மாதங்கள் வசந்தகாலம் என்று சொல்லி ஆனிமாதம் வளர்பிறைத் தலைநாளில் (பிரதமை) நடந்தது என்று தெரிவித்துள்ளார் (ப.24). அம்பலவாணக் கவிராயர் தம் அறப்பளீசுர சதகத்தில், ''வெற்றி கொள் இராகவன் தேவிசிறை சேர்கடகம்'' (67) என்று ஆடிமாதத்தில் சிறைப்பட்டதாகக் கூறியுள்ளார். கோவிந்தராஜர் சொல்வதுபோலச் சித்திரை மாதம் என்று கொண்டாலும் அம்பலவாணக் கவிராயர் சொல்வது போல ஆடிமாதம் என்று கொண்டாலும் தன்னைப் பங்குனிப் பௌர்ணமியன்று சந்தித்த அனுமனிடம் சீதை தான் சிறைப்பட்டுப் பத்தாவது மாதம் நடக்கிறது என்று சொல்வதோடு பொருந்தாமல் மாறுபடும். ஆனிமாத வளர்பிறைத் தலைநாளில் (பிரதமையில்) சிறையெடுக்கப்பட்டாள் என்பதே அவள் கூறுவதற்கேற்ப அமையும். முப்பிரால வேங்கடாச்சாரியர் கருத்தே ஏற்புடைத்து. இதற்குத் தடையாக வான்மீகத்தில் பம்பைக்கரையில் தங்கியிருந்த காலம் வசந்தகாலம் என்றும் அப்பொழுது வீசிய காற்றுச் சித்திரைமாதக் காற்று என்றும் காணப்படுகிறது. இராமன்,

> *''இலக்குவா, இந்த வசந்தமாதம் இனிய காற்றினை உடையது. மன்மதனின் கொண்டாட்டத்திற்கு ஏற்ற காலம். மணமிக்க நறுமலர்களும் கனிகளும் நிறைந்த மலர்களைக் கொண்டது''*
> *(கி.1:11)*

> *''இலக்குவா, இளமான் விழியாள் சீதையின் நினைவால் துயரில் மூழ்கிக் கிடக்கும் என்னை இப்பொழுது சித்திரை மாதத்தில் காட்டில் வீசும் காற்றுத் (சைத்ரோவநாநில:) தாங்கமுடியாவண்ணம் வாட்டுகிறது''* *(கி.1:37)*

என்றான். இதில் வரும் சித்திரைமாதக் காற்று என்பதற்குச் சித்திரை மாதத்திலிருந்து வீசும் கோடைக் காற்று என்று பொருள் கொள்வதே தகும்.

இராமலக்குவர் சீதையைத் தேடுதல்

இதனைக் கம்பநாடர் கீழ்வருமாறு தெரிவிக்கிறார்: மாரீசனைக்

கொன்று குடிலுக்குத் திரும்பும் இராமன், இலக்குவன் தன்னை நோக்கி வருதலைக் கண்டான். இலக்குவன் பேச்சைக் கேட்காமல் மானின்பின் சென்ற தன் பிழையை எண்ணி வருந்தினான். இருவரும் பர்ணசாலைக்குத் திரும்பினர். அங்குச் சீதையைக் காணாமல் கலங்கினர். அவளைத் தேடிச் செல்லும் வழியில் சடாயுவைக் கண்டனர். அவன் இராவணன் வாளால் தான் வீழ்ந்ததைத் தெரிவித்தான். இராவணன் எங்கே சென்றான் என்பதனைத் தெரிவிப்பதற்கு முன்பே அவன் உயிர் பிரிந்தது. அவர்கள் சடாயுவிற்கு இறுதிக்கடன்கள் செய்தனர். இராமன் ·புனலாடி இறுதிக்கடன் செய்வதைக் கண்ட கதிரவன் அவனது துன்பத்தைக் கண்டு ஆற்றாமல் தானும் புனலாடிக் கடன்கள் செய்வதுபோல மறைந்தான் (3540).

அந்தி வந்து அணுகும் வேளை ஒரு கரிய மலையை அடைந்தனர். சீதையின் நினைவால் இராமன் உறங்காமல் தவித்தான். நிலவின் வெள்ளம் கொடிய பாம்பின் பல்லில் ஊறும் நஞ்சுபோல அவனை வருத்தியது. அந்த நிலவொளி,

> *''விண்தலம் விளக்கும் செவ்வி வெண்மதி விரிந்தது'' (3546)*
>
> *''உலகம் எங்கும் விளக்கிய நிலவின் வெள்ளம்'' (3547)*
>
> *''விடம்பரந் தனையது ஆய வெண்நிலா வெதுப்ப'' (3548)*

என்று குறிக்கப்படுகிறது. காரணம், அது பௌர்ணமிக்கு அடுத்த நாள் ஆகும். அது பின்பனிக்காலம் முடிந்து இளவேனிற் காலம் தொடங்கும் நாள். அதனால்தான் அவர்கள் தங்கியிருந்த சோலையினைத் 'தண்தமிழ்த் தென்றல்' (3546) தழுவும் சோலை என்று குறித்துள்ளார். சீதையின் பிரிவால் வாடும் இராமனைக் காற்று வருத்தியது. அதனை,

> *''கூதிர் வாடைவெங் கூற்றினை நோக்கினான்'' (3555)*

என்கிறார் கம்பநாடர். அங்குக் கூதிர் என்பது பருவத்தைக் குறிக்காமல் குளிர்ச்சியைக் குறிக்கிறது. இதனைப் பிரிதோர் இடத்தில் இச்சொல் இப்பொருளில் ஆளப்படுதல் கொண்டு அறியலாம். கூதிர்ப்பருவம் கழிந்த பின்பே இராமன் வானரப்படைகளோடு சென்று கடற்கரையில் தங்கினான். அங்கு இயற்கைக்காட்சிகளைக் கண்டு சீதை பிரிவை எண்ணிக் கவன்றான். அவன்மீது கடலின் நீர்த்திவலைகளைச் சுமந்து வந்த காற்று வீசியது. அத்திவலைகளைக் கவிஞர்,

> *''கூதிர்நுண் குறும்பனித் திவலை'' (6392)*

என்கிறார். அங்குக் கூதிர் என்பது பருவத்தைக் குறிக்காமல் குளிர்ச்சி என்னும் பொருளில் வருதல் காணலாம். இராமனை வருத்திய அந்த

நீண்ட இரவுப்பொழுது ஊழிக்காலம் கழிந்தது என்று சொல்லுமாறு கழிந்தது.

இராமன் அடைந்த தளர்ச்சி

'முன்பு தாமரையில் வாழ்ந்த இலக்குமியாகிய சீதை யான் நேற்று மூடி வைத்த தாமரையின் இல்லை' என்று விரித்துக் காட்டுவது போல மறுநாள் கதிரவன் தோன்றினான் (3570). இராமன் சீதையின் பிரிவால் சோர்ந்து தளர்ந்தான். அவன் சோலையை நோக்கினான்; அஃது அவள் கூந்தலை நினைவூட்டியது. சக்கரவாளப் பறவைகளை நோக்கினான்; அவை அவள் மார்பகங்களை நினைவூட்டின. பூங்கொம்புகளின் அழகினை நோக்கினான்; அஃது அவள் மார்பில் எழுதப்படும் தொய்யிலை நினைவூட்டியது. அவளை அணையாத தன் தோள்களை நோக்கியவாறு நாள்களைக் கழித்தான்.

அவ்வாறு நாள்களைக் கழித்த சமயத்தில் ஒருநாள் இலக்குவன் இராமனை வணங்கி, ''பெரியோய், சீதையைத் தேடாமல் இங்கே தங்கியிருத்தல் புகழைத் தரும் செயலோ?'' என்று பணிவுடன் வினவினான். இராமன், ''சடாயு சொல்லிய இராவணன் என்னும் அரக்கன் இருக்கும் இடத்தைத் தொடர்ந்துதேடிக் கண்டறிவோம்'' என்றான். மீண்டும் சீதையைத் தேடுவதில் முனைந்தனர்.

''பொழிலை நோக்கும் ; பொழில்உறையும்
புள்ளை நோக்கும் ; பூங்கொம்பின்
எழிலை நோக்கும் ; இளமயிலின்
இயலை நோக்கும் ; இயல்புஆனாள்
குழலை நோக்கிக் கொங்கைஇணைக்
குவட்டை நோக்கி, அக்குவட்டின்
தொழிலை நோக்கித் தன்னுடைய
தோளை நோக்கி, நாள்கழிப்பான்'' (3572)

''அன்ன காலை இளவீரன்
அடியின் வணங்கி 'நெடியோய்!அப்
பொன்னை நாடாது ஈண்டுஇருத்தல்
புகழோ?' என்னப் புகழோனும்
'சொன்ன அரக்கன் இருக்கும்இடம்
துருவி அறிதும் தொடர்ந்து'என்ன
மின்னும் சிலையார் மலைதொடர்ந்த
வெயில்வெங் கானம் போயினரால்'' (3573)

சீதையைத் தொடர்ந்து தேடுதல்

சித்திரைமாதம் தேய்பிறை இரண்டாம்நாள் (துவிதியை) தொடங்கிச் செயல்மடிந்து கிடந்த இராமன் மீண்டும் சீதையைத் தேடத் தொடங்கி

வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கு முடிசூட்டிக் கிட்கிந்தைமலைக்கு அருகில் உள்ள மற்றொரு மலையில் சென்று தங்கினான். அப்பொழுது தக்கணாயனம் வந்தது (4148). எனவே, ஆடி மாதத்திற்கு முன்னர் ஆனிமாதத்தில் சில நாள் தொடர்ந்து தேடியுள்ளனர் என்பது தெரிகிறது.

முதலாம் நாள்

இனி அவர்கள் ஆனிமாதத்தில் எப்பக்கத்தில் (பக்ஷத்தில்) தேடத் தொடங்கினர் என்பதற்குரிய குறிப்பும் காணப்படுகிறது. மீண்டும் சீதையைத் தேடத் தொடங்கிய அவர்கள் முதல்நாள் பதினெட்டு யோசனைத் தொலைவு தேடிய பின், இரவு ஒரு சோலையில் தங்கினர்.

''புள்படி யுங்குளிர் வார்பொழில் புக்கார்'' *(3574)*

''மேருவின் வெங்கதிர் மீள மறைந்தான்'' *(3575)*

அன்றிரவு இலக்குவனை அயோமுகி என்னும் அரக்கி கவர்ந்து செல்ல முயன்றாள்.

இரண்டாம் நாள்

மறுநாள் உச்சி வேளைக்கு முன்பு இருபது யோசனை கடந்தனர். பின்பு கவந்தனின் கையில் சிக்கி அவனை வாளால் வெட்டி வீழ்த்தினர். சாபம் நீங்கிய அவன் கூறியபடி சபரியைக் காணச் சென்று அன்றிரவு அங்குத் தங்கினர்.

''கானமும் மலையும் நீங்கி,
கங்குல்வந்து இறுக்கும் காலை
யானையின் இருக்கை அன்ன
மதங்கனது இருக்கை சேர்ந்தார்'' *(3698)*

மூன்றாம் நாள்

அடுத்த நாள் இரலைக்குன்றத்திற்கு வழிகூறி அவள் யோகத்தின் தன்மையாலே வீடு எய்த, இருவரும் பம்பைப்பொய்கையை அடைந்தனர். அதன்கரையில் சீதையின் நினைவால் இராமன் புலம்பினான். மாலைப்பொழுது வர, அவனை நீராடி இறைவழிபாடு செய்யுமாறு இலக்குவன் வேண்டினான். அவர்கள் அன்றிரவு அங்குத் தங்கினர்.

''சோலைவாய்,
மாடுதான் வைகினான்; எரிகதிரும் வைகினான்''
(3745)

நான்காம் நாள்

அன்று 'காலையே கடிது நெடிது ஏகினார்'. சுக்கிரீவனைக் காணச் செல்லும் அவர்களை முதலில் அனுமன் வந்து சந்தித்தான். அவர்கள் கருத்தறிந்த அனுமன் சுக்கிரீவனைச் சென்று அழைத்து வந்தான். இருவரும் உற்ற நண்பர்களாயினர். பின் எல்லோரும் சோலையை அடைந்தனர். இராமன் நீராடி விருந்துண்டான்.

"புனிதன் மஞ்ச னத்தொழில் புரிந்துபின்
இனிது இருந்துநல் விருந்தும் ஆயினான்" (3819)

என்பதால் இவையனைத்தும் முற்பகல் நிகழ்ச்சிகள் என்பது தெளிவு.

இராமன், சுக்கிரீவன் மனைவியின்றி விருந்தோம்புவது கண்டு 'நீயும் என்னைப் போல மனைவியைப் பிரிந்துள்ளாயோ?' என்று வினவினான். அப்பொழுது அனுமன், வாலியினால் நேர்ந்த தீங்கினை விளக்கமாகக் கூறினான். இராமன் வாலியை அழிப்பதாகக் கூறி அவன் இருப்பிடத்தைக் காட்டுமாறு வேண்டினான். அதனைத் தொடர்ந்து இராமன் மராமரங்களை அம்பினால் எய்தும், இலக்குவன் துந்துபியின் உடலைக் காலால் எற்றியும் தங்கள் வலிமையைச் சுக்கிரீவன் உணருமாறு செய்தனர். பின்னர்ச் சுக்கிரீவன் சீதை எறிந்துசென்ற அணிகலன்களைக் கொண்டுவந்து காட்ட இராமன் துயரத்தால் மயங்கினான். அவனைச் சுக்கிரீவன் ஆற்றுவித்தான். இராமன் முதலில் சுக்கிரீவன் குறையை முடிப்பதாகச் சொல்ல எல்லோரும் வாலியின் இருப்பிடம் நோக்கி நடந்தனர். அவர்கள் பிற்பகலில் புறப்பட்டு மலைப்பாதையில் இருபது யோசனை (50 மைல்) கடந்து இரவுக்குள் வாலியின் இருப்பிடத்தை அடைந்துள்ளனர்.

இங்கு இரு வினாக்கள் எழும். ஒன்று, அன்று நாள் முடிந்தது என்பதற்குச் சான்று யாது? மற்றொன்று, இருபது யோசனைகளை இரவுக்குள் கடக்க முடியுமா? சுக்கிரீவன் வாலியைப் போருக்கு அழைத்தபோது அவன் படுக்கையில் இருந்தான் என்பதால் அது மறுநாள் காலை என்பது விளங்குகிறது. அவனைத் தடுக்கும் தாரை இராமன் சுக்கிரீவனுக்குத் துணையாக வந்திருக்கிறான் என்கிறாள். அதை அவள் உறங்குவதற்கு முன் அறிந்திருக்க வேண்டும். அங்ஙனமாயின் முதல் நாள் இரவுக்கு முன் அவர்கள் அங்குச் சென்றடைந்திருந்தனர் என்பது தெளிவு. இதற்குமுன் கவந்தன் கையில் சிக்கிய அன்று இராமலக்குவர் நண்பகலுக்குமுன் இருபது யோசனைகள் கடந்தனர் என்பதால் அது சாத்தியமே என்பது விளங்கும்.

ஐந்தாம் நாள்

அன்று காலை வாலிவதம் நிகழ்ந்தது. இராமன் எய்த அம்புக்கு

இலக்கான வாலி முதலில் அவனை இகழ்ந்தான். இறுதியில் தன்பிழை உணர்ந்து மன்னிப்பு வேண்டினான். தன்மகன் அங்கதனை இராமனிடம் கையடையாக்கினான். தாரை வந்து அவன்மேல் விழுந்து அரற்றினாள். அதன்பின் இறுதிக்கடன்கள் நிகழக் கதிரவன் மறைந்தான். இது.

"மறைந்தான் மால் அருக்கன்" (4114)

என்பதால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறாம் நாள்

காலையில் சுக்கிரீவனுக்கு முடிசூட்டும் விழா நிகழ்ந்தது. தன் மகனுக்கு நடக்க இருக்கும் முடிசூட்டு விழாவைக் காண முற்பட்டவனைப் போலக் கதிரவன் தோன்றினான் (4115). முடிசூட்டப்பட்ட சுக்கிரீவன் இராமனைக் கண்டு வணங்க அவன் நல்லரசின் இயல்புகளை எடுத்துரைத்தான். மழைக்காலம் முடிந்தபின் படைகளோடு வருமாறு கூறி அவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பிவிட்டு இராமன் தம்பியோடு மாலியவான் என்னும் மலையில் சென்று தங்கினான்.

மீண்டும் சீதையைத் தேடத் தொடங்கிய நாள்

இவ் ஆறு நாள் நிகழ்ச்சிகளும் ஆனிமாத வளர்பிறையில் நிகழ்ந்துள்ளன. இவற்றில் மீண்டும் பயணத்தைத் தொடங்கிய முதல்நாள் நிலவு இல்லாத இருள்நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது. அன்று இருள் பரந்ததை,

"தெருண்டஅறி வில்லவர் சிந்தையின் முந்தி,
இருண்டன மாதிரம் எட்டும்இ ரண்டும்" (3576)

என்றும்,

இலக்குவன் அயோமுகியைக் கண்டதனையும், அவளை யார் என்று வினவியதனையும் முறையே,

"கன்றுஇரு ளில்திரி கோளரி கண்டான்" (3589)

"மாஇயல் கானின் வயங்கிருள் வந்தாய்!
யாவள் அடீஉரை செய்கடிது என்றான்" (3591)

என்று தெரிவித்துள்ளார்.

இலக்குவனைப் பாராட்டும் இராமன்,

"தொல்இருள் தனைக்கொலத் தொடர்கின் றாளையும்
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினாய்" (3632)

என்று குறிப்பிடுகிறான்.

அன்று வானில் விண்மீன்களே காட்சியளித்தன. அவை, அழகு நிலா என்று தோன்றிய ஊழித்தீயின் வெப்பம் மிக்க கதிர் சுட்டதால் கொதித்த வானத்தின் உடம்பெல்லாம் தோன்றிய கொப்புளங்கள் போல இருந்தன.

"அப்புடை அலங்குமீன் அலர்ந்த தாம்என
உப்புடை இந்துஎன்று உதித்த ஊழித்தீ
வெப்புடை விரிகதிர் வெதுப்ப மெய்எலாம்
கொப்பளம் பொடித்ததோ கொதிக்கும் வானமே" (3640)

இப்பாட்டில் இந்து என்னும் சொல் இருந்த போதிலும் அது நிலவின் தோற்றத்தைக் குறிக்க வில்லை. கொப்புளங்கள் தோன்ற முன்பு எரித்த நிலவு காரணமாக அமைந்தது என்பதனையே சுட்டுகிறது.

சபரியின் தவக்குடிலில் தங்கியிருந்த இரண்டாம் நாளில் நிலவுஎழுந்தது பற்றிய குறிப்பு ஏதுமில்லை.

பம்பைப் பொய்கையில் தங்கியிருந்த மூன்றாம் நாள், இராமன் சீதையை நினைந்து வருந்திய போது, குளிர்ந்த சந்திரன் வெப்பக்கதிர்களையுடைய சூரியன் போல எழுந்தான் என்றும், பின்னர் உலகம் உறங்கியது என்றும் வரும் குறிப்பு அது சிறிதுநேரம் தோன்றி மறையும் மூன்றாம் பிறை என்பதனை உணர்த்துகிறது.

இதனால் இராமலக்குவர் அமாவாசைக்கு அடுத்த நாள் மீண்டும் சீதையைத் தேடத் தொடங்கினர் என்பது தெளிவு. அன்று அமாவாசையின் எச்சம் இருந்ததாகக் கொண்டாலும் பிழையில்லை. சித்திரைமாதத் தேய்பிறை இரண்டாம்நாள் முதல் (துவிதியை) ஆனிமாத அமாவாசை வரை இடைப்பட்ட காலம் நாற்பத்தைந்து நாள்கள். எனவே, இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பின் இராமன் ஒன்றரை மாதம் செயலற்றுக் கிடந்துள்ளான். மேலும் ஆனிமாதம் வளர்பிறை நான்காம் நாள் இராம சுக்கிரீவச் சந்திப்பு நிகழ, அவர்கள் கிட்கிந்தைக்குச் சென்று இரவு தங்கினர் என்பதும், ஐந்தாம் நாள் வாலிவதம் நடந்தது என்பதும், ஆறாம் நாள் சுக்கிரீவனுக்கு முடிசூட்டப்பட்டது என்பதும், அன்றே இராமன் மாலியவான் என்னும் மலைக்குச் சென்று தங்கினான் என்பதும், அதன்பின்னர்ச் சில நாள்களில் ஆடிமாதம் பிறந்தது என்பதும் விளங்குகின்றன.

தக்கிணாயன காலம்

இராமனும் இலக்குவனும் மாலியவான் மலையில் தங்கியிருந்தபோது ஆடிமாதம் வந்தது என்பதனைக் கம்பநாடர்,

"மாஇயல் வடதிசை நின்று வானவன்
ஒவிய மேஎன ஒளிக்க வின்குலாம்
தேவியை நாடிய முந்தித் தென்திசைக்கு
ஏவிய தூதுஎன இரவு ஏகினான்" *(4148)*

என்னும் பாட்டால் பெறவைத்துள்ளார். சூரியன் தென்திசைக்கு ஆடிமாதம் முதல்நாள் செல்லத் தொடங்குவான். அதுமுதல் ஆறுமாத காலம் தக்கிணாயன காலம் எனப்படும்.

வான்மீகத்தில் சீதையைத் தேடாமல் இருந்தது பற்றிய குறிப்பு ஏதுமில்லை. சில நிகழ்ச்சிகள் நடந்த பொழுதும் முறையும் வேறாக உள்ளது. அயோமுகி பகலில் இராமலக்குவர் மதங்காச்சிரமத்தை நோக்கி நடந்து செல்லும் போது முன்னே சென்ற இலக்குவனிடம் தன் வேட்கையைத் தெரிவிக்க அதனால் சீற்றங் கொண்ட இலக்குவன் அவள் உறுப்புகளை அரிந்ததாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கவந்தன் சாபநீக்கம் பெற்றது மாலையில் நடந்ததாகக் காட்டப்பட்ட போதிலும் இராமலக்குவர் கவந்தன் உடலுக்கு எரியூட்டிய பின் இரவை மலை யடிவாரத்தில் கழித்து மறுநாள் சபரியைக் கண்டு அவள் எரிமூழ்கித் துறக்கம் புறப்பட்ட பின் பம்பைப்பொய்கை அடைந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. கம்பராமாயணம் அவர்கள் கவந்தனின் தாளைத் துணிக்க அவன் சாபநீக்கம் பெற்றான் என்று மட்டுமே கூறுகிறது; உடலுக்கு எரியூட்டிய குறிப்பு இல்லை. மேலும் அவர்கள் வசந்த காலத்திலேயே பம்பைக்கரையில் இருந்தனர் என்றும் தெரிவித்துள்ளது.

வான்மீகத்தில் வரும் குறிப்புகளால் சீதை ஆனிமாத வளர்பிறைத் தலைநாளில் சிறையெடுக்கப்பட்டாள் என்றும், இராமலக்குவர் அவ்வசந்த காலத்திலேயே பம்பைக்கரையை அடைந்தனர் என்றும் தெரிகிறது. கம்பராமாயணத்தில் உள்ள குறிப்புகளால் சீதை சித்திரைத் தேய்பிறைத் தலைநாளில் சிறையெடுக்கப் பட்டாள் என்றும் இராமலக்குவர் ஆனிமாத வளர்பிறையில் பம்பைக் கரையை அடைந்தனர் என்றும் உணர முடிகிறது.

வான்மீகத்தில் காணப்படாமல் கம்பராமாயணத்தில் மட்டும் காணப்படும் இருள். நிலவு பற்றிய பல புனைந்துரைகள் கம்பநாடர் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைக் காட்டுவதில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதனைக் காட்டுகின்றன.

5. கிட்கிந்தை வாழ்க்கை

மழைப்பருவங்களின் முடிவு

இராமனும் இலக்குவனும் மழைக் காலமாகிய நான்கு மாதங்கள் கழிந்தபின் சுக்கிரீவனைப் படையுடன் வருமாறு பணித்துவிட்டு ஆடிமாதம் தொடங்குவதற்கு முன்பே கிட்கிந்தையருகே இருந்த மாலியவான்மலையில் தங்கினர்.

கார்காலம் வந்தது. காந்தள், கொன்றை, முல்லை முதலிய மலர்கள் மலர்ந்தன; மான்கள் துள்ளித் திரிந்தன; அன்னங்கள் நீர்நிலைகளில் படிந்தாடின; கொக்குகளும் நாரைகளும் வரிசையாய்ப் பறந்தன. இந்த இனிய சூழல் சீதையை நினைவூட்ட இராமன் துயரத்தால் துவண்டான். அக்காலம் அகன்றது என்று கூறி இலக்குவன் தேற்றினான்.

''வினையின் வெந்துயர் விரவு திங்களும்
விரைவு சென்றன, எளிதின்; நின்
தனுஎ னும்திரு நுதலி வந்தனள்
சரதம் வன்துயர் தவிர்தியே!'' (4214)

என்றான் இலக்குவன்.

பின்னர்க் கூதிர்காலம் வந்தது. நாழிகைவட்டிலைக் கொண்டன்றி மாலைப் பொழுதையும் காலைப்பொழுதையும் அறிவது அரிதாயிற்று. அப்பொழுதும் இராமன் சீதையை எண்ணி வருந்தினான். ''கூதிர் காலம் முடிந்துவிட்டது. இராவணன் இருப்பிடத்தைக் கண்டறியும் காலம் வந்து சேர்ந்தது; நீ வருந்துவது ஏன்?'' என்று இலக்குவன் ஆறுதல் கூறினான்.

''இளவலும் உரைசெய்வான் எண்ணும் நாள்இனும்
உளஅல; கூதிரும் இறுதி உற்றதால்;
களவுசெய் தவன்உறை காணும் காலம்வந்து
அளவியது; அயர்வதுஎன்? ஆணை ஆழியாய்!'' (4243)

மார்கழிமாத நிலவு

ஆவணி, புரட்டாசி ஆகிய இருமாதங்களும் கார்ப்பருவம்; ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருமாதங்களும் கூதிர்ப்பருவம். இதனால் நான்கு மாதங்கள் கழிந்தன என்பது தெளிவாகிறது. அதன் பின்னர் நிலவு வானில் திகழ்ந்த காட்சியைக் கவிஞர் குறிப்பதால் அது மார்கழிமாத நிலவு என்பது ஒருதலை.

''கடம்திறந்து எழுகளிறு அனைய கார்முகில்
இடம்திறந்து ஏகலின் பொலிந்தது இந்துவும்
நடம்திறன் நவில்வுறு நங்கை மார்முகம்
படம்திறந்து உருவலின் பொலியும் பான்மைபோல்''
(4256)

மார்கழிமாதத்தில் வானம் முகிற்கூட்டங்கள் அகன்று தெளிவாக இருந்தமையால் நிலவு நன்றாகக் காட்சி தந்தது. அது திரைச்சீலையினின்றும் வெளிப்படும் நடனமங்கையின் முகம் போல விளங்கிற்று. பெண்ணின் முகத்தை முழுமதிக்கே உவமையாகச் சொல்வது மரபாதலின், அது முழுநிலவு என்பது புலனாகிறது. கம்பநாடர் அதன் பின்னரே முன்பனிப்பருவம் வந்தது என்கிறார்.

''மன்னவன் தலைமகன் வருத்தம் மாற்றுவான்
அந்நெறிப் பருவமும் நணுகிற்று'' (4258)

என்பதால் முழுநிலவோடு ஒரு பருவம் முடிந்து மற்றொரு பருவம் தொடங்குகிறது என்பதும் கம்பநாடரும் அக்கருத்தினரே என்பதும் வெளிப்படுகின்றன.

வானரப்படைகளின் வருகை

மழைக்காலம் முடிந்த பின்னும் சுக்கிரீவன் படைகளோடு இராமனிடம் வந்துசேரவில்லை. இராமன் மார்கழி முழுநிலவு நாளுக்குப் பின்னும் சில நாள் காத்திருந்தான். பின்னர் இலக்குவனை அவன்பால் சீற்றத்தோடு அனுப்பினான். இலக்குவன், சுக்கிரீவன் சந்திப்பு ஒரு முற்பகலில் நடந்தது. இலக்குவனை நீராடி அமுதுண்ணச் சுக்கிரீவன் வேண்டினான். அதற்கு அவன், தான் திரும்பிச் சென்று கீரை முதலியவற்றைக் கொண்டுவந்து கொடுத்தே இராமன் உண்ண வேண்டும் என்பதனைத் தெரிவித்து மேலும் காலம் தாழ்த்த இயலாது என்று கூறிப் புறப்பட்டான். அவனுடன் சுக்கிரீவனும் இராமனைக் காணச் சென்றான். இதனால் அது நண்பகலுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி என்பது விளங்கிறது.

இலக்குவனும் சுக்கிரீவனும் இராமன் இருக்குமிடத்தை அடைந்தனர். சுக்கிரீவன் இராமனிடம் அவன் சீதையைப் பிரிந்து துன்புறுவதை மறந்து தான் இன்பத்தில் மயங்கிக் கிடந்தமைக்காக வருந்தினான். இராமன் அவன் குற்றத்தை மறந்து அவனைப் பாராட்டிய பின் அனுமனைக் குறித்து வினவினான். அவன் படைகளைத் திரட்டிவரச் சென்றுள்ளதாகவும் அன்றே கிட்கிந்தைக்குப் ப்டைகள் வந்து சேர இறுதிநாள் என்றும் மறுநாள் படைகள் இராமன் இருக்குமிடத்தை அடையும் என்றும் சுக்கிரீவன் கூறினான். அவனைப் பாராட்டிப் பேசி, ''பொழுது கழிந்தது. ஆகவே ஊருக்குச் சென்று படைகள் வந்தபின்

வா'' என்று பணித்தான். அவனும் அவ்வாறே செய்தான்.

''பெரும்பகல் இறந்தது; பெயர்தி; நின்படை
பொருந்துழி வாஎனத் தொழுது போயினான்'' (4405)

மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்பே படைகள் வந்து குவியத் தொடங்கின. அப்படைகளை இராமலக்குவர் பார்வையிடத் தொடங்கினர். அவர்கள் இருபது நாள் இரவு பகலாகப் பார்த்தும் படையின் நடுப்பகுதியைக் கூடப் பார்க்க முடியவில்லை. அவர்கள் படையினைப் பார்வையிடுவதை முடித்துக்கொண்டு சீதையைத் தேடிச் செல்லப் படைகளை விடுத்தனர்.

''பத்து இரட்டிநன் பகல்இரவு ஒருவலர் பார்ப்பார்,
எத்தி றத்தினும் நடுவுகண் டிலர்முடிவு எவனோ?'' (4439)

என்பது ஓர் அரிய காலக்குறிப்பு. இதனால் இலக்குவன் என்று கிட்கிந்தைக்குச் சென்றான், மழைக் காலம் முடிந்து இராமன் எத்தனை நாள்கள் காத்திருந்து இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பினான் ஆகியவற்றைக் கணக்கிட்டு அறிய முடிகிறது.

சுக்கிரீவன் அப்படைகளுக்குச் சீதையைத் தேடுவதற்கு ஒருமாத கால எல்லை விதித்தான். அந்த ஒருமாத கால அளவு பௌர்ணமியை எல்லையாகக் கொண்டது.

''ஆண்டுகடந்து அப்புறத்தும் இப்புறத்தும்
ஒருதிங்கள் அவதி யாகத்
தேண்டிஇவண் வந்துஅடைதீர்; விடைகோடிர் கடிது'' (4478)

என்பதில் ஒருமாத கால அளவும்,

''வெற்றி வானர வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஓடித் துருவி ஒருமதி
முற்று றாதமுன் முற்றுதிர் இவ்இடை
கொற்ற வாகை யினீர்எனக் கூறினான்'' (4457)

என்பதில் பௌர்ணமிக்குமுன் என்று அக்காலத்தின் எல்லையும் தெரிவிக்கப்படுதல் காணலாம். அந்தக் கால எல்லையின் முடிவில் அசோகவனத்தில் சீதை இருத்தலை அனுமன் கண்டறிந்தான்.

அன்று பௌர்ணமிநாள் என்பது நிலவு பற்றிய புனைந்துரையால் மிகத் தெளிவாகத் தெரிகிறது.* எனவே சுக்கிரீவன் ஒரு பௌர்ணமி தொடங்கி அடுத்த பௌர்ணமிக்குமுன் சீதையைத் தேடிக் கண்டு பிடிக்குமாறு கால எல்லை வகுத்தான் என்பது தேற்றம். அதற்கு முன்பு இருபது நாள் படைகளைப் பார்வையிட்டுள்ளனர். அதற்கு

* *இதன் விளக்கத்தை அடுத்த பகுதியில் காணலாம்.*

முதல்நாள் கிட்கிந்தைக்கு இலக்குவன் சென்று சுக்கிரீவனோடு நண்பகல் வேளையில் இராமன் இருக்குமிடம் சார்ந்தான். அதற்கு முன்பு மார்கழிமாத பௌர்ணமி நடன மங்கையின் முகம்போல இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளதால் அதிலிருந்து பத்தாம்நாள் (தேய்பிறைத் தசமி) அன்று இலக்குவன் கிட்கிந்தை சென்று திரும்பினான் என்றும் பதினோராம் நாள் (ஏகாதசி) அன்று படைகளை இராமலக்குவர் பார்வையிடத் தொடங்கி இருபதுநாள் பார்வையிட்ட பின் தைமாதப் பௌர்ணமியன்று வானர வீரர்கள் சீதையைத் தேடிவர விடுக்கப்பட்டனர் என்றும் தெளிவாகிறது.

வான்மீகமும் மழைக்காலத்திற்குப் பின் படைகள் திரட்டப்பட்டுச் சீதையைத் தேடும் முயற்சி நடந்ததாகவே தெரிவிக்கிறது. சுக்கிரீவன் இராமனிடம், சிராவணம்முதல் நான்கு மாதங்கள் மழைக்காலம் என்று கூறி அவனை அப்பருவத்தின் இறுதிப்பகுதியாகிய கார்த்தீக மாதம் தொடங்கியதும் இராவணவதைக்குரிய முயற்சிகளில் ஈடுபடுமாறு (கி.26:14,17) தெரிவித்தான். இதனால் மழைக்காலம், சிராவணம், பாத்ரபதம், ஆஸ்வீனம், கார்த்தீகம் ஆகிய நான்கு மாதங்கள் என்பது புலனாகிறது. இராமன் சுக்கிரீவனைக் கார்த்தீகம் முடிந்தபின் வரச்சொல்லாமல் அதன் தொடக்கத்திலேயே வரப் பணித்தான். அவன் வரவில்லை. எனினும் இராமன் கார்த்தீகம்வரை நான்கு மாதங்கள் காத்திருந்து அதன் பின்னரே இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பினான்.

> *''ஐய, சீதையைக் காணாது மூழ்கிக் கிடக்கும் எனக்கு*
> *மழைக்கால நான்கு மாதங்களும் நூறு ஆண்டுகள்*
> *போலக் கழிந்தன''* (கி.30:64)

> *''வானரமன்னன் மழைக்காலத்திற்குப் பின் வருவதாக உறுதி*
> *மொழிந்துவிட்டுச் சிற்றின்பத்தில் பொழுதுபோக்கிக்*
> *கொண்டு நான்கு மாதங்கள் கழிந்து விட்டதனை*
> *நினையாது இருக்கிறான்''* (கி. 30:78)

ஆகியவற்றால் கார்த்தீகத்திற்குப் பின்னர் ஆக்ரஹாயன மாதத்திலேயே இலக்குவன் கிட்கிந்தை சென்றான் என்பது தெளிவு.

இலக்குவன் சீற்றத்திற்குக் காரணம் தெரியாமல் வருந்தும் சுக்கிரீவனிடம் அனுமன்,

> *''காலம் தெரியாதவர்களில் மேலோனே, கருத்தின்மையால்*
> *இன்ன காலம் என்று அறியாதிருக்கின்றாய். பூத்த*
> *ஏழிலைப்பாலைகளால் கறுத்துள்ள அழகிய சரத்காலம்*
> *இப்பொழுது நடைபெறுகிறது''* (கி.32:13)

என்பதால் கார்த்தீக மாதத்திற்குப் பின்னும் சரத்காலம் இருத்தலை அறியலாம். சரத்கால மாதங்கள் ஆஸ்வீனம் – கார்த்தீகம், கார்தீகம் – அக்ரஹாயனம் ஆகும்.

சுக்கிரீவன் இராமனைக் காணச் செல்வதற்கு முன்பு அன்று தொடங்கிப் பத்துநாள்களுக்குள் படைகள் வந்து சேர வேண்டுமென்று கட்டளை பிறப்பித்துச் சென்றான் (கி.37:12) இராமனிடம் பேசும் போது, மேலும் சில படைகள் வந்து சேரும் (ஆக₃மிஷ்யந்தி – கி.38:32) என்று கூறினான். இவை படைகள் திரளுவதற்குச் சில நாள்கள் ஆகியுள்ளன என்பதனைத் தெரிவிக்கின்றன. வடமொழி அறிஞர்கள் படைகள் வந்தவுடன் மார்கழிமாதத்தில், ஒருமாதக் கெடு தரப்பட்டுச் சீதையைத் தேடிவர அனுப்பப்பட்டன என்று கூறுகின்றனர். கம்பராமாயணத்தில் உள்ளது போலத் தைமாதத்தில் அனுப்பப்பட்டிருக்கலாமோ என்னும் ஐயம் தோன்றுகிறது.

வானரப்படைகள் சீதையைத் தேடுதல்

சீதையைத் தேடிச்சென்ற படைகளில் மற்றத் திசைகளில் சென்ற படைகளை விடுத்துத் தென்திசையில் சென்ற படையின் தேடுதல் பணியை மட்டுமே கம்பநாடர் தெரிவித்துள்ளார். அவர்கள் முதல் நாள் விந்தியமலைப்பக்கம் தேடினர். மறுநாள் நருமதையாற்றின் மருங்கெல்லாம் தேடி, ஏமகூடமலையினை அடைந்து அங்குத் தேடினர். இதனை,

"நல்நெடுந் தாழ்வரை நாடினார் நவைஇலார்
பல்நெடுங் காலம்ஆம் என்னஓர் பகலிடை" *(4524)*

"செம்பொன்நல் கிரியைஓர் பகலில் தேடினார்
கொம்பினைக் கண்டிலர் குப்புற்று ஏகினார்" *(4539)*

என்னும் பாட்டுப் பகுதிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இருநாள் தேடியபின் மூன்றாம்நாள் முதல் அவர்கள் பல பகுதிகளாய்ப் பிரிந்து தேடத் தொடங்கினர். அனுமனும் அவனோடு சென்றவர்களும் அன்று ஒருசுரத்தைக் கடந்து இருள் நிறைந்த ஒருபிலத்துள் நுழைந்தனர். அங்கு மணிகளால் ஒளிவீசும் நகரத்தையும் அதில் சுயம்பிரபை என்பவளையும் கண்டனர். அவள் அவர்களுக்கு இனிய விருந்து படைத்தாள். பின்னர் அவள் பொன்னுலகம் செல்லுமாறு அனுமன் பிலத்தினை இடித்துக் கடலில் எறிந்து, வீரர்களோடு அதிலிருந்து வெளிப்பட்டான். அன்றிரவு அவர்கள் ஒரு பொய்கைக்கரையில் தங்கினர்.

*"நீருடைய பொய்கையினின் நீள்கரை அடைந்தார்
தேருடை நெடுந்தகையும் மேலைமலை சென்றான்" (4593)*

அங்குத் துமிரன் அங்கதனைத் தாக்க, அங்கதன் அவனை அறைந்து வீழ்த்தினான். மறுநாள் (நான்காம்நாள்) பொழுது புலர்ந்தவுடன் புறப்பட்டுப் (4604) பெண்ணையாற்றின் பகுதிகளில் தேடி அதன் 'துறையில் வைகினார்' (4607).

மறுநாள் (ஐந்தாம்நாள்) தொடங்கிப் பல இடங்களில் தேடி இறுதியில் முப்பதாம்நாள் மயேந்திர மலையில் கூடினர். ஐந்தாம்நாள் முதல் இருபத்தொன்பதாம்நாள் வரை தசநவநாடு, விதர்ப்பநாடு, பாண்டுமலை, சுவணகத்துறை, அருந்ததிமலை, மரகதமலை, வேங்கடமலை, தண்டகநாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டியநாடு முதலியவற்றைத் தேடிப் பார்த்தனர். இவ்வாறு அவர்கள் தேடிய நாள்களில் முதல் நான்கு நாளும் இறுதி ஒரு நாளுமாகிய ஐந்து நாள்களை மட்டும் குறித்து எஞ்சிய நாள்களை விளக்கமாகச் சொல்லாமல் விடுப்பது புனைந்துரையில் சோர்வு ஏற்படாமல் காக்கிறது. மேலும் ஏனைய பகுதிகளை அவர்கள் இருபத்தைந்து நாள்களில் தேடினர் என்பதனை ஊகிப்பதற்கு இடமளிக்கிறது. அவர்கள் மகேந்திரமலையில் கூடியநாள் மாசிமாதப் பௌர்ணமி. இது முன்பு தைமாதப் பௌர்ணமியன்று புறப்பட்டனர் என்பதால் தெளிவாகிறது.

வான்மீகத்தில், தென்திசையில் தேடுவதற்கு அனுமனோடு சென்ற வீரர்கள் முதலில் சுக்கிரீவன் கூறிய இடங்கள் சிலவற்றில் தேடினர்; பின்பு விந்தியமலையில் புகுந்து அங்குள்ள குகைகளிலும் காடுகளிலும் தேடினர்; அடுத்து, கண்டுமுனிவரால் சபிக்கப்பட்ட வறண்ட வனப்பகுதியில் தேடினர். அங்கு ஓர் அசுரன் எதிர்ப்பட அங்கதன் அவனைக் கொல்ல, அப்பகுதியில் தேடினர். காலக்கெடுவில் பெரும்பகுதி கழிந்தது.

"நமக்கு வகுக்கப்பட்டிருந்த கால எல்லை பெரும்பாலும் கடந்துவிட்டது; (மஹாந் யாத:) சுக்கிரீவனோ வன்மையாகத் தண்டிப்பவன்; நீங்கள் ஒன்றுகூடி எங்கும் தேடுவீர்களாக"
(கி.49:4)

என்றான் அங்கதன்.

வான்மீகத்தில் சுயம்பிரபைசந்திப்பும் காலக்கழிவும்

அவர்கள் விந்தியமலையின் தெற்கில் உள்ள இரசதமலைப் பக்கத்தில் தேடினர். பின்னர் அதன் தென்மேற்குச் சிகரத்தை அடைந்து அவ்விடத்தில் தேடினர். அப்பொழுது ஒரு மாதக்கெடு முடிந்தது.

இதனை வான்மீகிமுனிவர்,

> *''அந்த மலையின் தென்மேற்குச் சிகரத்தை அடைந்தனர். அவ்விடத்தில் இருக்கும்போது அந்தத் தவணைக்காலம் கழிந்துவிட்டது'' (கி.50:3)*

என்கிறார்.

அப்பொழுது ஓர் இருண்ட குகையில் நுழைந்து அங்குச் சுயம்பிரபை என்னும் வயது முதிர்ந்த பெண்மணியைக் கண்டனர். அப்பெண்மணியிடம் அனுமன்,

> *''பெருந்தகை சுக்கிரீவனால் வரையறுக்கப்பட்ட காலம் எதுவோ அது மலைக்குகையில் சுற்றிக் கொண்டிருந்த எங்களுக்குக் கழிந்துவிட்டது'' (கி.53:3)*

என்றான். அனுமன் முயற்சியால் அவள் வானுலகு சென்றாள் என்று கம்பநாடர் கூறுவது போலன்றி, ''வானரர்கள் வேண்ட அவள் தவவலிமையால் அவர்கள் குகையிலிருந்து வெளியேற்றப்பட்டுத் தென்கடலுக்கு அருகில் உள்ள பிரசிரவணம் என்னும் மலையைக் கண்டனர். அவள் மீண்டும் தன் குகைக்குள் சென்றுவிட்டாள்'' என்கிறார் வான்மீகி முனிவர்.*

அதன்பின் வானரர்களிடம் பேசும் அங்கதன்,

> *''வானரர்களே! நாம் குரக்கரசன் கட்டளையால் தேடப் புறப்பட்டவர்கள். குகையில் ஒருமாதம் முடிந்துவிட்டது. அதனை ஏன் நீங்கள் உணரவில்லை'' (கி.53:22)*

என்று குறிப்பிட்டுள்ளான்.

இக்குறிப்புகளை ஆழ்ந்து நோக்கின், அவர்கள் சுயம்பிரபையின் குகையில் இருந்த போது ஒரு மாத காலஎல்லை முடிய அன்றே அங்கிருந்து வெளிவந்தனர் என்பதும் அதன்பின்னர் மேற்கொண்டு என்ன செய்வது என்று கலந்து பேசினர் என்பதும் அங்கு நெடுநாள் தங்கவில்லை என்பதும் விளங்குகின்றன.

சம்பாதியிடம் தங்கள் வரலாற்றைத் தெரிவிக்கும் அங்கதன்,

---

* சுயம்பிரபையால் குகைக்கு வெளியில் கொண்டுவந்து விடப்பட்ட வானரர்கள் விந்தியமலையின் அடிவாரத்தில் இருந்து சிந்தித்தனர் (கி.53:117) என்றும், சம்பாதி சூரியனால் சிறகுகள் எரியுண்டு வீழ்ந்த இடம் தென்கடலின் கரையில் உள்ள விந்தியமலை (கி.60:7)என்றும் வான்மீகம் குறிக்கிறது. இங்கெல்லாம் விந்தியமலை என்று குறிக்கப்படுவது வடக்கேயுள்ள விந்தியமலையன்று; மகேந்திர மலையின் அருகில் உள்ள மலைப்பகுதியே யாகும். சம்பாதி நடக்க முடியாமல் கிடந்தான் என்பது இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

''மயனுடைய மாயையால் செய்யப்பட்ட அந்தப் பிலத்தை (சுயம்பிரபையின் பிலம்) முற்றும் தேடித் திரிந்துகொண்டிருந்த எங்களுக்கு அரசனால் தவணையாகக் குறிக்கப்பட்டிருந்த ஒருமாதம் எதுவோ அதுவும் அங்கேயே கடக்கப்பட்டது'' (வ்யதீதஸ் தத்ர ந: மாஸ: ய: ராஜ்ஞ ஸமய: க்ருத:) (கி.57:18)

என்று தெரிவித்துள்ளமை இதனை உறுதிப்படுத்துகிறது. மேலும் வானரர்கள் எங்கும் இருமாதங்கள் கடந்துவிட்டன என்று சொல்வதாகக் குறிப்பு இல்லை என்பது கருதத்தக்கது.

வான்மீகத்தில் படைகள் எந்த மாதத்தில் அனுப்பப்பட்டன என்பதனையும் காலக்கெடு தொடங்கிய நாள், முடிந்த நாள் எவை என்பதனையும் அறிவதற்குப் போதுமான தக்க சான்றுகள் இல்லை.

அ.வீ. நரஸிம்ஹாசாரியர், ''வர்ஷா காலம் இரண்டு மாதங்களே. ஆயினும் கீழ்ச் சொன்ன ஆடிமாதத்தையும் மேல்வரும் அற்பிசி மாதத்தையும் கூட்டிக்கொண்டு இந்நான்கு மாதங்களும் யுத்தத்திற்குத் தகாதவையாகையால் நான்கு என்று இங்குச் சொல்லப்பட்டன'' என்றும், ''மார்கழியில் வானரர்கள் புறப்படுதல், ஸ்வயம்ப்ரபையின் பிலத்தில் வெகுகாலம் கடந்தது. இதனையே 'காலச்ச நோ மஹாந் யாத:' என்று கபிகள் சொல்லினர். பிலத்தினின்று வெளிப்பட்ட பின்பு பங்குனி மாதத்தின் சுக்லபக்ஷ த்ரயோதசியினன்று ஹனுமான் ஸமுத்திரத்தைத் தாண்டுதல்'' என்றும் விளக்கியுள்ளார்.*

இராமாயண சார சங்கிரக ஆசிரியர் முப்பிரால வேங்கடாச்சாரியர், சுக்கிரீவன் மார்கழிமாதக் கடைசியில் புஷ்யமாதத்தை எல்லையாகக் குறித்துப் படைகளை விடுத்தான் என்றும், அப்படைகள் விந்தியமலையில் தேடும்போதே புஷ்யமாதம் முடிந்தது என்றும், சுயம்பிரபையின் குகையில் இருந்தபோது மாகமாதம் கழிந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

சுயம்பிரபையின் குகையிலிருந்து வெளிவந்த வானரர்கள் பூத்திருந்த மரங்களைப் பார்த்து வசந்த காலம் வந்துவிட்டது என்று மயங்கிக் கலங்கினர்.

''அப்பொழுது கொடிகளால் சூழப்பட்டு மலர்களைச் சுமந்துநின்ற மரங்களைப் பார்த்து வசந்தகாலம் வந்துவிட்டதைக் குறிப்பதாய் அஞ்சிக் கலக்கமுற்றனர். வசந்தம் கிட்டிவிட்டதாக ஒவ்வொருவரும் நினைத்து ஆணையையும் காலகெடுவையும் செயல்முடித்தலையும் இழந்தவர்களாய் மண்ணில் மயங்கி வீழ்ந்தனர்'' (கி.53:18,19)

---

* ஸ்ரீராமாயணம், கிஷ்கிந்தா கண்டம், தமிழ்வசனம், ஆனந்த அச்சுக்கூடம், சென்னை, 1931, ப.1773,74 அடிக்குறிப்பு.

என்கிறார் வான்மீகிமுனிவர். இப்பகுதியை மாகமாதத்தைக் குறிப்பதாகக் கொண்டு, அந்த மாதமும் வசந்தகாலத்தில் அடங்கும் என்கிறார், முப்பிரால வேங்கடாச்சாரியர் (ப.26). மாகமாதம் ஹேமந்தருதுவிலும் (முன்பனிக்காலம்) சிசிரருதுவிலும் (பின்பனிக்காலத்திலும்) அடங்குவதாகச் சொல்வதே வழக்கம். தமிழிலக்கணம் மாசியும் பங்குனியும் பின்பனிக்காலம் என்றே தெரிவிக்கிறது.

வான்மீகத்தில், இப்பகுதியில் வரும் நிகழ்ச்சிகளின் காலத்தைத் தெளிவாக வரையறுத்துக் காண்பது அரிய முயற்சியாகவே உள்ளது. அறிஞர்கள் மார்கழிமாதத்திலேயே வானரர்கள் சீதையைத் தேடிப் புறப்பட்டனர் என்று தீர்மானிப்பதால், அவ்வானரர்கள் சுயம்பிரபை குகையில் ஒருமாதம் கழித்ததாகக் கொள்ள வேண்டிய கட்டாயம் நேரிடுகிறது. அங்கு அத்தனை நாள்கள் தங்கினர் என்பது பொருந்துமாறு இல்லை. வானரர்கள் சுயம்பிரபை சந்திப்பு ஒருநாளில் நிகழ்ந்து முடிந்ததாகவே காணப்படுகிறது. ஆதலின் மார்கழிமாதத்தில் படைகள் திரளத் தைமாதத்தில் சீதையைத் தேடிச் சென்றனர் என்று கொள்வதே சிறப்பு. கம்பநாடரும் அவ்வாறுதான் அமைந்துள்ளார் என்பது கருதத்தக்கது.

அனுமன் இலங்கை செல்லுதல்

கம்பநாடர் வானரவீரர்கள் மகேந்திரமலையில் சேர்ந்த நாள், அவர்களுக்கு விதிக்கப்பட்ட காலஎல்லை முடியும் கடைசிநாள் என்று காட்டியுள்ளார். சீதையைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அங்கதன் உயிர்விட நினைத்தான். அப்பொழுது அனுமன், ''இன்னும் தேடுதற்குரிய இடங்கள் பல உள்ளன. அங்கெல்லாம் தேடிச் சீதையைக் கண்டுபிடித்து விட்டால் சொன்ன காலக்கெடு முடிந்தது என்று சுக்கிரீவன் சீற்றம் கொள்ள மாட்டான். தொடர்ந்து சீதையைத் தேடுவோம். சீதையின் துயரைத் துடைக்க முற்பட்டு உயிர்விட்ட சடாயுவைப் போல நாமும் சீதையைத் தேடும் முயற்சியில் உயிர்விடுவதே பெருமையாகும்'' என்றான். தன் தம்பியைக் குறித்த பேச்சைக் கேட்டுச் சம்பாதி அவர்களிடம் வந்தான். தன் தம்பிக்கு நிகழ்ந்ததை அறிந்தான். வானரர்கள் இராமநாமத்தைச் சொல்ல அவன் சிறகுகள் முளைத்தன. அவன், இராவணன் சீதையைக் கவர்ந்துசென்று இலங்கையில் சிறைவைத்துள்ளான் என்பதனைத் தெரிவித்து அவர்களில் யாரேனும் ஒருவர் சென்று கண்டுவருதல் சிறப்பு என்றான்.

நீலன், அங்கதன், சாம்பவன் முதலியோர் கடலைக் கடந்து இலங்கையை அடையும் வலிமை தங்களுக்கு இல்லை என்றனர். சாம்பவன், அனுமன் ஒருவனாலேயே அச்செயல் முடியும் என்று

சொல்லி அவனை அதனை மேற்கொள்ள வேண்டினான். அனுமனும் அதற்கு இசைந்து மகேந்திரமலையின்மீது ஏறி நின்றான்.

வான்மீகம் இந்நிகழ்ச்சியினைப் பின் வருமாறு கூறுகிறது: ''வானரர்கள் காலக்கெடு கடந்த நிலையில் அங்கதன் தெரிவித்ததற்கு இணங்க உயிரை விட்டுவிட முடிவுசெய்து கடற்கரையில் புல்லில் அமர்ந்து நீரைப் பருகிப் பட்டினி கிடந்தனர். இராமன் காட்டிற்கு வந்தது முதலான நிகழ்ச்சிகளைப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சில் தன்தம்பி சடாயுவின் பெயர் குறிக்கப்படுவது கேட்டு அங்கு வந்த சம்பாதி அவர்களை யார் என்று அறிந்தான். சீதையை இராவணன் சிறைவைத்துள்ளான் என்றும், அவன் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றதைத் தன்மகன் சுபார்ஸ்வன் கண்டுள்ளான் என்றும் தெரிவித்தான். அவனுக்கு அப்பொழுது மீண்டும் சிறகுகள் வளர்ந்துவிட்டமையால் வானில் பறந்து சென்றான். அன்று இரவு கழிந்தது. மறுநாள் வானரர்கள் கடல் தாண்டுவது குறித்துச் சிந்தித்தனர் (கி 64:13). முடிவில் அனுமன் இலங்கைக்குப் பறந்தான்''.

இதனால் கால எல்லை முடிந்து சில நாள்களுக்குப் பின் அனுமன் இலங்கை சென்றான் என்று வான்மீகிமுனிவர் காட்டுவதாகத் தெரிகிறது. இராமாயண சார சங்கிரகம் பால்குனி மாதம் வளர்பிறைத் துவாதசி வரை சீதையைக் காணாத நிலையில் அங்கதன் உண்ணாமல் கிடத்தல், சம்பாதி சந்திப்பு முதலியன நிகழ்ந்தன என்கிறார் (ப.27). அக்கருத்து ஏற்கத்தக்கதே.

நண்பகல் வேளை

கம்பராமாயணத்தில், அனுமன் இலங்கைக்கு எச்சிறுபொழுதில் புறப்பட்டான் என்பது பற்றி வெளிப்படையான குறிப்பு ஏதுமில்லை. ஆனால் அவன் மலையிலிருந்து புறப்பட்ட வேகத்தில் பறவைகள் எழுந்து கதிரவன் ஒளியை மறைத்தன என்று கூறப்பட்டுள்ளது. அவன் பவளமலையில் பாய்ந்து இலங்கையின் உட்புக, மேனியைச் சுருக்கிக் கொண்டு காத்திருந்தான். அப்பொழுது பகலவன் மறைந்தான்.

''தன்தகை அனைய மேனி,
சுருக்கிஅச் சரளச் சாரல்
குன்றிடை இருந்தான்; வெய்யோன்
குடகடல் குளிப்பது ஆனான்'' (4876)

என்கிறார் கம்பநாடர். இதனால் அவன் நண்பகலையொட்டிக் கிளம்பினான் என்று அறுதியிடலாம்.

அவன் ஊழிக்கால இறுதியில் வீசும் கடுங்காற்றினைப் போல வேகமாகச் சென்றான். வழியில், வானுற ஓங்கி நின்ற

மைந்நாகமலையைத் தள்ளினான். அது சிறுமானிட வேடம் தாங்கித் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு அவனைச் சிறிது போது தங்கி இளைப்பாற்றிச் செல்ல வேண்டியது. அதன் அன்பினைப் போற்றித் திரும்பும் போது விருந்தினை ஏற்பதாகச் சொல்லி மேலே சென்றான். அடுத்து அவனை 'உண்பேன்' என்று சொல்லி வாய்பிளந்துகொண்டு சுரசை என்பவள் வானில் நின்றாள். அவன் பேருருக் கொண்டான். அதனை விரைந்து சுருக்கி அவள்வாய்க்குள் நுழைந்து மீண்டான். அவள் வாழ்த்துக் கூறினாள். தேவர்களும் முனிவர்களும் ஆசி வழங்கினர். அதன்பின், அங்காரதாரை என்பவள் அவனைத் தின்ன வாயால் வான்வழியை அடைத்துக்கொண்டு நின்றாள். வான்மீகம் ஸிம்ஹிகை என்னும் பூதமாகக் குறிப்பதனையே கம்பராமாயணம் அங்காரதாரை என்று குறித்துள்ளது. அனுமன், அவள் வாயில் நுழைந்து வயிற்றைப் பிளந்து குடலைக் கையில் எடுத்துக்கொண்டு வெளிப்பட்டான். அவள் மாண்டாள். 'இராமநாமத்தால் எல்லா இடையூறும் விலகும் என்னும் கடைப்பிடியோடு பவளமலையை அடைந்தான்.

அனுமன் சீதை சந்திப்பு

இரவு வந்தது. இராவணன்தீவினை போல் இருள் எங்கும் நிறைந்தது.

> *"மெய்யிலான்,*
> *தீவினை எனஇருள் செறிந்தது எங்குமே"* (4877)
>
> *"அவ்வழி அவ்இருள் பரந்த ஆயிடை"* (4881)

அதனைத் தொடர்ந்து நிலவு எழுந்தது. சீதை அவ்இரவில் அசோக வனத்தில் அரக்கியர்கூட்டத்திடையே பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணி எண்ணித் துன்பத்தால் தேய்ந்தாள். நள்ளிரவில் காவல் புரிந்த அரக்கியர் மெல்லக் கண்ணயர்ந்தனர். அனுமன் சீதையைக் கண்டறிந்தான். அச்சோலையில் நுழைந்து அங்கு நின்றான். அப்பொழுது இராவணன் சீதையிடம் நயந்து பேசினான். அப்பேச்சுப் பயனளிக்காமல் போகவே அவளுக்கு இருதிங்கள் காலக்கெடு தந்து அங்கிருந்து அகன்றான். இராவணனைச் சூழ்ந்து வந்து நங்கையர் எட்டுவரிசையில் நெய் விளக்கு ஏந்தி வந்தனர் என்னும் குறிப்புக் காணப்படுகிறது (5148). இது கங்குற்போது என்பதனை உணர்த்துகிறது. இராவணன் திரும்பிச் சென்ற பின் அனுமன் சீதையைச் சந்தித்தான். அச் சந்திப்பின் இறுதியில், இராமனிடம் தெரிவிக்குமாறு சிலவற்றைச் சொல்லி அவனிடம் சூளாமணியை அடையாளமாகக் கொடுத்தாள். அதன்பின் அனுமன் அங்கிருந்து அகன்று அசோகவனத்தை அழித்தான்.

பொழிலை அழித்தல்

அனுமன் பொழிலை அழித்த நேரத்தைக் காட்டும் வகையில் ஓர் அரிய இசைக்குறிப்பு அமைந்துள்ளது. அவன், சீகாமரம் என்னும் பண்ணைப் பாடிக்கொண்டிருந்த வண்டுகள் கலங்குமாறு பெரிய மரங்களை ஒடித்து வீசினான். அங்குப் பூத்திருந்த நாள்மலர்கள் வானத்தில் வீசி எறியப்பட்டு விளங்கின. சீகாமரம் என்னும் பண் வைகறையில் பாடப்படுவது. இதனை,

''சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம இன்துணை தழீஇ இறகுளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண்பணை தழீஇய தளரா இருக்கை'' (அடி 75-78)

என்னும் சிறுபாணாற்றுப்படைப் பகுதியாலும், அதற்கு, ''சிவந்த இதழ் சூழ்ந்த செம்பொன்னாற் செய்தால் ஒத்த பீடத்திலே தன்னுயிர்க்குக் காவலாகிய இனிய பெடையைத் தழுவித் துயில்கொண்டு, இத் துயில் எழுந்து விருப்பம் மருவின தும்பி சீகாமரம் என்னும் பண்ணைப் பாடும் மருதநிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்பு'' என்று நச்சினார்க்கினியர் வரைந்த உரையாலும் அறியலாம்.

இராவணன் சீதையைக் கண்டு நயந்து பேசித் தோற்றுத் திரும்பியது இரண்டாம் யாமத்தின் முடிவில் என்றும், அனுமன் சீதையைச் சந்தித்துத் தூதுரைத்துச் சூளாமணியைப் பெற்றுச் சென்றது மூன்றாம் யாமத்தின் இறுதியில் என்றும், அனுமன் பொழிலை அழித்தது நான்காம் யாமத்தின் இறுதியில் என்றும் புலனாகிறது.

முழு நிலவு நாள்

அஃது எந்த நாள் இரவு என்பதனைக் காட்டும் குறிப்பினை நிலவு பற்றிய புனைந்துரையில் கம்பநாடர் தந்துள்ளார். கீழ்த்திசையில் தோன்றிய நிலவு, ''இராமதூதனாகிய அனுமன் வந்துவிட்டான்; இனி என்தந்தையாகிய இந்திரன் வாழ்வு பெற்றான்'' என்று மகிழ்ச்சியுற்ற கீழ்த்திசைப்பெண்ணின் முகம் போல விளங்கிற்று. மேலும் கடலலைகளுக்கு நடுவே தோன்றிய அது தன்பகை வீழ்ந்தது என்று இந்திரன் எடுத்த வெண்கொற்றக்குடை போலப் பொலிந்தது. வெள்ளிக்குடத்தினால் பாற்கடலை முகந்து கொட்டியது போல வெண்ணிலவு மேலும் கீழும் விரிந்தது.

''வந்தனன் இராகவன் தூதன்; வாழ்ந்தனன்
எந்தையே இந்திரன் ஆம்என்று ஏமுறா
அந்தம்இல் கீழ்த்திசை அளக வாள்நுதல்
சுந்தரி முகம்எனப் பொலிந்து தோன்றிற்றே'' (4887)

''கற்றைவெண் கவரிபோல் கடலின் வெண்திரை
சுற்றும்நின்று அலமரப் பொலிந்து தோன்றிற்றால்
இற்றதுஎன் பகைஎன எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடைஎனக் குளிர்வெண் திங்களே'' (4888)

''தெரிந்துஒளிர் திங்கள்வெண் குடத்தி னால்திரை
முரிந்துஉயர் பாற்கடல் முகந்து முரிவான்
சொரிந்ததே ஆம்எனத் துள்ளும் மீனொடும்
விரிந்தது வெண்ணிலா, மேலும் கீழுமே'' (4889)

மேலும் அனுமன் சீதையைச் சந்திப்பதற்கு முன்பு அவள் அசோகவனத்தில் துயரம் தாங்காமல் புலம்பிக்கொண்டிருந்தாள். அப்பொழுது துஞ்சாத அரக்கிமாரும் துஞ்சினர். அவள் நிலவைப் பார்த்து, ''கல்லாத சந்திரனே! மிக்க ஒளியையுடைய நிலாவே! விரைந்து நீங்காத இரவுப்பொழுதே! குறையாமல் பெருகும் இருளே! நீங்கள் எல்லோரும் என்னையே வருத்துகின்றீர்கள். என்னைச் சிறிதும் எண்ணிப் பார்க்காத வில்வீரன் இராமனை வருத்த மாட்டீர்களா?''

''கல்லா மதியே! கதிர்வாய் நிலவே!
செல்லா இரவே! சிறுகா இருளே!
எல்லாம் எனையே முனிவீர்; நினையா
வில்லா ளனையா தும்விளித் திலிரோ?'' (5231)

என்கிறாள்.

வைகறை வேளையில் அனுமன் பொழிலை அழித்து, ஊழியின் இறுதியில் தோன்றும் உருத்திரமூர்த்தி போல் நின்றான். அப்பொழுது, ''நிலவே, நீ சீதைமீது கொண்ட காமத்தில் வருந்தும் என்னைச் சுட்டாய்; அதனோடு அனுமன், தேவர்கள் காணச் சோலையை அழித்து வீசியதைப் பார்த்துக்கொண்டிருந்தாய் என்று இராவணன் தன்னைக் காய்வான் எனக் கருதிச் சந்திரன் மறைந்தான்'' என்கிறார் கம்பநாடர்.

''தொண்டைஅம் கனிவாய்ச் சீதை
துயக்கினால் என்னைச் சுட்டாய்;
விண்டவா னவர்கண் முன்னே
விரிபொழில் இறுத்து வீசக்
கண்டனை நின்றாய் என்று
காணுமேல் அரக்கன் காய்தல்
உண்டுஎன வெருவி னான்போல்
ஒளித்தனன் உடுவின் கோமான்'' (5468)

என்பதனால் அன்று விடியும் அளவும் நிலவு எரித்தது தெரிகிறது.

இவற்றில் சந்திரன் கீழ்த்திசையில் தோன்றினான் என்றும், விடியும்வரை விளங்கினான் என்றும், பெண்ணின் முகம்,

வெண்கொற்றக்குடை இவற்றைப் போல வடிவம் இருந்தது என்றும் வருவது பௌர்ணமி நிலவு என்பதனை ஐயத்திற்கிடமின்றித் தெரிவிக்கிறது: மேலும் வானரர்கள் புறப்பட்ட நாள் பௌர்ணமியாதலின் ஒருமாதக் கெடு பௌர்ணமிக்கு முதல்நாளோடு முடிவடைந்தது. அதனால் கால எல்லை முடிந்ததாகக் கலங்கினர் என்பதும் பொருத்தமாக அமைகிறது.

வான்மீகமும்,

"இராமன் செயல்கள் நிறைவேறும் பொருட்டு இரவில் இலங்கையில் புகக் கடவேன்" (சு.2:46)

"அப்பொழுது குரக்குவீரன் அனுமன் வைதேகியைக் காண்பதற்கு ஆவலோடு பகலவன் மறைவை எதிர்நோக்கியிருந்தான்" (சு.2:47)

"வலிய அனுமன் இரவின் முதல் யாமத்தில் நன்கு அமைக்கப்பட்ட அரசவீதிகளைக் கண்டு அழகிய நகரத்தில் விரைந்து பாய்ந்து புகுந்தான்" (சு.2:50)

என்று இரவின் முதல் யாமத்தில் அனுமன் நகரத்தினுள் நுழைந்தான் என்பதனைத் தெரிவிக்கிறது. அந்த முன்னிரவில் நிலவு எரித்தது. அதனை,

"சந்திரனும் இவனுக்குத் துணைபுரிபவன் போல் விண்மீன் கூட்டத்தோடு வானிடை விளங்கி, நிலவு என்னும் மேற்கட்டியினால் உலகெங்கும் பரவிப் பல்லாயிரம் கதிர்களோடு எழுந்தான்" (சு.2:57)

"சங்கின் ஒளியும், பால், தாமரைத்தாள் இவற்றின் நிறமும் கொண்டு மேலே விளங்கும் சந்திரனைத் தாமரை யோடையில் நீந்தும் அன்னம் போலக் கண்டான்" (சு.2:58)

என்று குறிக்கிறது. அது தொழுவத்தில் திரியும் காளையையும் (சு.5:1) வெள்ளிக்கூட்டில் இருக்கும் அன்னத்தையும், மந்தரமலைக் குகையில் உள்ள சிங்கத்தையும் (சு.5:14) போல விளங்கியதாம். மேலும் அந்தச் சந்திரன் கலைகள் நிறைந்து விளங்கியதனை,

"கூரிய கொம்புகளையுடைய காளை போலவும், வெள்ளிய பெரிய மலை போலவும், பொற்பூணிட்ட யானை போலவும் பூர்ண கலைகளையுடைய சந்திரன் விளங்கினான்" (சு.5:5)

"அப்பொழுது குமுத மலர்க்குவியல் போன்று இயல்பாகவே மாசற்ற சந்திரன் தூய வானத்தின் நடுவே நீல வெள்ளத்தில் அன்னம் போல் ஊர்ந்தான்" (சு.17:1)

என்று தெரிவிக்கிறது.

வான்மீகிமுனிவரும் முழுநிலவுநாள் என்கிறாரோ என்னும் எண்ணம் எழுகிறது. ஆனால் இதனை வளர்பிறைத் திரயோதசி என்று இராமாயண சார சங்கிரகம் குறிப்பிடுகிறது. கம்பநாடர் எத்தகைய குழப்பத்திற்கும் இடமின்றி அனுமன் இலங்கையில் நுழைந்த அன்று பௌர்ணமி என்று உணரத்தக்க வகையில் பாடியுள்ளார்.

அனுமன் நிகழ்த்திய அழிவுச்செயல்கள்

சுந்தரகாண்டத்துப் போர்நிகழ்ச்சிகள் கற்போர்க்குப் பலநாள் நடந்தவை போன்ற மயக்கத்தை உண்டாக்கும். ஆனால் உண்மையில் அவை குறுகிய காலஎல்லைக்குள் இரண்டு நாள்களுள் முடிந்தனவாகும். அனுமன் பொழிலை அழித்தது தொடங்கி இலங்கையிலிருந்து திரும்பி வந்து இராமன் திருவடிகளைத் தொழுதது வரையிலான அனைத்து நிகழ்ச்சிகளும் அடுத்தடுத்து விரைந்து நிகழ்ந்து முடிந்துள்ளன.

அசோகவனம் அழிக்கப்பட்டதனை அறிந்த இராவணன் உடனே அனுமனைப் பிடித்துவரக் காவலர்களை ஏவினான். அவர்கள் நொடியில் மடிந்தனர். அடுத்துச் சம்புமாலி சென்று மாண்டான். அவனுக்குப் பின் படைத்தலைவர் ஐவர் போரிட்டு மடிந்தனர். அதன்பின் இராவணன்மகன் அக்ககுமாரன் அனுமனால் தரையில் தேய்த்து அழிக்கப்பட்டான். இறுதியில் இந்திரசித்தன் போர்க்களம் புகுந்து அனுமனை அயன்படையால் கட்டி இராவணன் முன்பு கொண்டுவந்து நிறுத்தினான்.

இந்நிகழ்ச்சிகளின் விரைவினைக் காட்டும் வகையில் அவ்வீரர்களின் புறப்பாடு, வீழ்ச்சி பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன. கிங்கரர்கள் ஊழிக்காலத்து இறுதியில் பொங்கியெழும் கடல் போல் விரைந்து புறப்பட்டனர் என்பது,

"ஆலமே அனைய மெய்யர்
அகலிடம் அழிவு செய்யும்
காலம்மேல் எழுந்த மூரிக்
கடல்எனக் கடிது செல்வார்" (5491)

என்று குறிக்கப்பட்டுள்ளது

"தீயவன் தடந்தேர் சுற்றித்
தெற்றெனச் சென்ற சேனை" (5559)

என்பது சம்புமாலியின் சேனை விரைந்து புறப்பட்டதனைக் காட்டுகிறது.

படைத்தலைவர் ஐவரும் நால்வகைப் படைகளையும் 'கதுமென

வருகெனச் சொன்னார்' (5605).

''நொய்தினின் வென்று பற்றித்
தருகுவென் நொடியில் நுன்பால்'' *(5671)*

என்பது அக்ககுமாரன் இராவணன்முன் நிகழ்த்திய வீரவுரை.

இந்திரசித்தன் விரைந்து சென்று இராவணனைக் கண்டதனையும், விரைந்து அனுமனைப் பிடித்து வருவதாகத் தெரிவித்ததனையும் கீழ்க்காணும் பகுதிகள் காட்டுகின்றன:

''தேரின்,
'ஏ'எனும் அளவில் *வந்தான்*
இராவணன் இருந்த யாணர்
வாயில்தோய் கோயில் புக்கான்'' *(5723)*

*''**ஏ''எனும் அளவில்** பற்றித்*
தருகுவென்; இடர்என்று ஒன்றும்
நீஇனி உழக்கற் பாலை
அல்லை'' *(5728)*

கவிச்சக்கரவர்த்தி நிகழ்ச்சிகளின் விரைவினைப் புலப்படுத்தும் வகையில், 'கடிது', 'தெற்றென', 'கதுமென', 'நொடியில்', 'ஏ' எனும் அளவில்' ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை கருதத்தக்கது.

அனுமனொடு போரிட்ட வீரர்களில் இந்திரசித்தனைத் தவிர, ஏனையோர் எல்லாம் விரைந்து மாண்டனர். அனுமன் அரக்கர்களை விரைந்து அழித்ததனை,

*''வந்த கிங்கரர் **'ஏ' எனும் மாத்திரை** மடிந்தார்''* *(5543)*

''ஆயிரம் களிற்றைஓர் மரத்தி னால்அடித்து
'ஏ' எனும் மாத்திரத்து *எற்றி முற்றுமால்''* *(5636)*

''வானையும் வென்று ளோரை
வல்லையின் *மடிய நூறி*
ஏனையர் இன்மை, சோம்பி
இருந்ததுஅக் குரங்கும் என்றார்'' *(5667)*

*''**ஏ' எனும் அளவில்** கொல்லும்*
நிருதர்க்குஓர் எல்லை இல்லை'' *(5693)*

என்னும் பாடற்பகுதிகள் அறிவிக்கின்றன. மேலும், 'ஒருநாளே பலர் உயிர் உண்ணக் கற்றான்' (5663) என்று அனுமனின் ஆற்றல் போற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்திரசித்தனோடு நிகழ்ந்த போரில் அவன் தேர்களை எல்லாம், 'உழுந்து பேர்வதன் முன்நெடு மாருதி உதைத்தான்' (5794).

இந்திரசித்தன் வேறு வழியின்றி அயன்படையை ஏவினான். அனுமன் அப்படையால் கட்டுண்டான். இராவணன் அவனைக் கொல்லாமல் விரைந்து தன்முன் கொண்டுவரப் பணித்தான்.

அனுமன் இலங்கைநகர்க்குத் தீமூட்டுதல்

இராவணன் அவைக்கு அனுமன் கொண்டு செல்லப்பட்ட போது, அவன் ஆடல்பாடல்களில் மகிழ்ந்துகொண்டிருந்தான் என்பதால் அது நாளோலக்கம் என்பது விளங்குகிறது. அனுமனிடம் அவன் செயல்களுக்கு விளக்கம் கேட்ட இராவணன், இறுதியில் அவன் வாலில் தீ மூட்டி நகரத்தைச் சுற்றி இழுத்துவந்து விரட்டுமாறு தீர்ப்புக் கூறினான்.

வேந்தன் கோயிலை 'விரைவிற் கடந்து' (5927) 'ஏ' என்று கூறுவதற்கு முன் (5922) அயன்படையை நீக்கினர். அனுமனைக் கயிற்றால் கட்டினர். அவன் வாலில் துணிகளைச் சுற்றி, நெய்யும் எண்ணெயும் தோய்த்துத் தீ மூட்டினர். அனுமன் தன்வாலில் மூட்டப்பட்ட தீயால் இலங்கைநகர மாளிகைகளைத் தீப்பற்றி எரியும்படி செய்தான். பெரிய இலங்கைநகரை அழிக்க நெடுநேரம் ஆகியிருக்கும் என்னும் ஐயம் எழலாம். அவ் ஆனைத்தொழிலை அனுமன் கணப்பொழுதில் செய்து தலைக்கட்டினான். அதனைக் கம்பநாடர், 'ஒரு கணத்து எரித்த கொட்பு' (திறமை) (5940) என்று கொண்டாடுகிறார்.

அனுமன் கிட்கிந்தை அடைதல்

அனுமன் எவ்வளவு வேகத்தோடு தீமூட்டினானோ அவ்வளவு வேகத்தோடு அங்கிருந்து புறப்பட்டான். திரும்பும் வழியில், மைந்நாக மலைக்கு நிகழ்ந்தவற்றைச் சொல்லித் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வானர வீரர்கள் இருந்த மகேந்திரமலையில் 'கணத்தின் காலை' (6007) குதித்தான். வானர வீரர்கள் அனுமனிடம், 'தலைமகன் மெலிவுதீரப் போதுநீ முன்னர்' (6018) என்றனர். அனுமன் விரைந்து சென்று நண்பகலையொட்டி இராமனை அடைந்து, 'கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்று கூறிச் சூளாமணியைத் தந்தான். அப்பொழுதே படைகள் இலங்கை நோக்கிப் புறப்பட்டன.

வான்மீகமும் முதல்நாள் நண்பகலையொட்டி இலங்கைக்குப் புறப்பட்ட அனுமன் சீதையைக் கண்டு மறுநாள் உச்சிவேளைக்குள் திரும்பினான் என்றே தெரிவிக்கிறது. அதில் சம்புமாலி மாண்டபின் அனுமனுடன் அமைச்சர் எழுவரின் பிள்ளைகள் போரிட்டு வீழ்தல், இராவணன் முன் நிறுத்தப்பட்ட அனுமனுடன் அவன் நேரடியாகப் பேசாமல் படைத்தலைவன் பிரகத்தனே பேசுதல் என்பவை போலும்

சிறுசிறு வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் நிகழ்ச்சிகள் நடந்த கால எல்லையில் வேறுபாடு இல்லை. இராமாயண சார சங்கிரகம் அனுமன் திரும்பிய அன்று சதுர்த்தசி என்கிறது. கம்பநாடர் கூற்றின்படி அது பௌர்ணமியை அடுத்த நாள் (தேய்பிறைப் பிரதமை) ஆகும். அன்று பௌர்ணமியின் எச்சம் இருந்தது என்று கொள்வதும் தகும்.

வான்மீக அறிஞர்கள், வானரர்கள் மார்கழி மாதத்தில் சீதையைத் தேடத் தொடங்கினர் என்றும், தை (புஷ்ய) மாத முடிவில் சுயம்பிரபையின் குகையில் நுழைந்தனர் என்றும், அங்கேயே மாசி (மாக) மாதமும் முடிந்தது என்றும், அங்கிருந்து வெளிவந்த பின் சிலநாள் விந்தியமலையில் கழித்தனர் என்றும், அனுமன் பங்குனி (பால்குந) மாத வளர்பிறைத் திரயோதசியில் இலங்கை சென்று சீதையைக் கண்டு சதுர்த்தசியில் திரும்புனான் என்றும் கருதுகின்றனர்.

இதனினும், மழைக்காலம் முடிந்த பின் மார்கழிமாதத்தில் வானரப்படைகள் திரண்டன என்றும், வானரர்கள், தைமாதத்தில் தேடத் தொடங்கினர் என்றும், ஒரு மாத காலக்கெடு முடியும் நாளில் சுயம்பிரபையின் குகையில் புகுந்து அன்றே வெளிவந்தனர் என்றும், அதன் பின் சிலநாள் விந்திய மலையில் கழித்தனர் என்றும் அனுமன் பங்குனி மாத வளர்பிறைத் திரயோதசியில் இலங்கை சென்று சீதையைக் கண்டு சதுர்த்தசியில் திரும்பினான் என்றும் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

கம்பராமாயணம், வானரப்படைகள் மார்கழியில் திரண்டன என்றும், தைமாதப் பௌர்ணமியன்று சீதையைத் தேடத் தொடங்கின என்றும், அனுமன் மாசிமாதப் பௌர்ணமியன்று சீதையை இலங்கையில் கண்டு மறுநாள் (மாசிமாதத் தேய்பிறைப் பிரதமை) திரும்பினான் என்றும் உணரத்தக்க வகையில் தெளிவாக அமைந்துள்ளது.

6. இலங்கையில் தங்கிய நாள்கள்

இலங்கைச் செலவு

இலங்கையில் சீதை இருக்கிறாள் என்பதை அறிந்தவுடனேயே இராமன் சுக்கிரீவனிடம் படைகளோடு புறப்படுமாறு பணித்தான். சுக்கிரீவன் படைகளைக் கிளம்புமாறு கட்டளையிட்டான். 'ஏ' என்னும் அளவினில் எங்கும் பறை முழங்கப் படைகள் தென்திசை நோக்கிப் புறப்பட்டன. இலங்கையின் பாதுகாப்பு, பெருமை, அரண், அரக்கர் தன்மை முதலியவற்றைக் குறித்து அனுமன் சொல்லக் கேட்டவாறே படைகள் எளிதில் சென்றன. இரவும் பகலும் பயணம் தொடர்ந்தது. பன்னிரு நாள் பயணத்திற்குப்பின் பொழுது சாயும் வேளையில் படைகள் தென்திசையில் உள்ள கடற்கரையை அடைந்தன. கம்பராமாயணத்தில் காணப்படும்,

"பன்னிரு பகலில் சென்று தென்திசைப் பரவை கண்டார்"
(6058)

என்னும் அரிய குறிப்பினால் தேய்பிறை முதல்நாள் (பிரதமை) புறப்பட்ட படைகள் பன்னிரண்டாம் நாள் (துவாதசி) கடற்கரையை அடைந்தமை தெரிகிறது.

வான்மீகத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் இடையே படைகள் கடற்கரையை அடைய எடுத்துக்கொண்ட நாள் குறித்துப் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. அந்த வேறுபாடே அதனைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் காலமாற்றத்திற்கு அடியாய் அமைந்துள்ளது. அதனாலேயே போர் நிகழ்ச்சிகளில் எல்லாம் காலமாற்றம் காணப்படுகிறது. அனுமன் இலங்கையிலிருந்து பௌர்ணமியன்று நண்பகலுக்கு முன்பு திரும்பி வர, அன்றே உச்சிவேளையில் நல்ல நேரத்தில் படைகள் புறப்பட்டு எங்கும் நிற்காமல் பகலும் இரவும் பயணம் செய்து மறுநாள் பிரதமை மாலைக்குள் கடற்கரையை அடைந்தன என்றும் அன்று அங்கு மாலைச் சந்தி வழிபாட்டை இராமன் நிகழ்த்தினான் என்றும் கூறுகிறது வான்மீகம்.

கிட்கிந்தைக்கும் தெற்கே உள்ள கடற்கரைக்கும் இடையே நெடுந்தொலைவு உள்ளது. இத்தொலைவினை ஆற்றல் மிக்க அனுமன் போன்ற சிலரால் அன்றி அனைத்து வானரங்களாலும் ஒரு நாளில் கடத்தல் என்பது அரிய செயல் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டே கம்பநாடர் படைகள் பன்னிரு நாள்கள் நடந்து கடற்கரையை அடைந்தனவாகக் காட்டியுள்ளார் என்று தோன்றுகிறது.

வீடணன் அடைக்கலம்

கம்பநாடர், தேய்பிறைப் பன்னிரண்டாம் நாள் (துவாதசி) படைகள் தென்திசையை அடைந்தநேரத்தில் இராவணன் மந்திராலோசனை நடத்தியதாகக் குறித்துள்ளார். இலங்கை அனுமனால் தீயூட்டப்பட்ட பௌர்ணமியன்று உடுத்த ஆடையோடும் பூண்ட ஆபரணங்களோடும் வானில் எழுந்த இராவணன் அங்கேயே ஏழுநாள் தங்கியிருந்தான். இது பின்னால் வீடணன், 'இலங்கை வேந்தனும் ஏழுநாள் விசும்பிடை இருந்தான்' (6581) என்பதால் அறியப்படுகிறது. இதனால் எட்டாம்நாள் அவன் கீழே இறங்கியபின் நான்கு நாளில் இலங்கை சீரமைக்கப்பட்டுப் பன்னிரண்டாம் நாள் அமைச்சர்களோடு கூடி மேலே என்ன செய்யலாம் என்பது குறித்துச் சிந்திக்கலானான் என்பது புலனாகிறது.

அக்கூட்டம் எப்பொழுது தொடங்கியது என்பதற்கு வெளிப்படையான குறிப்பு யாதும் காணப்படவில்லை. ஆனால் அந்தி வேளையில் முடிவுற்றது. அதில் பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர், மந்திரக்கிழவர், சுற்றத்தார், பிள்ளைகள், தம்பியர் போன்றவர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் படைத்தலைவன் பிரகத்தன், மகோதரன், வச்சிரதந்தன், துன்முகன், மாபெரும்பக்கன், பிசாசன், சூரியப் பகைஞன், கும்பகருணன், இந்திரசித்து, வீடணன் முதலிய பலர் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளை எடுத்துவைத்தனர். வீடணனைத் தவிர மற்றையோர் எல்லாம் இராவணன் கருத்திற்கு ஏற்ப இசைவாகப் பேசினர். வீடணன் மட்டும் இரணியன் வரலாற்றைக் கூறி 'நின்னினும் பேராற்றல் பெற்றவனாகிய அவன் முறை தவறியதால் அழிந்தான். ஆதலின் போர்க்கு எழலாகாது' என்று இரந்து வேண்டினான். அவன்மீது ஆத்திரங்கொண்ட இராவணன் அவனை இலங்கையினின்றும் விரட்டினான். அவன் அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் அமைச்சர் நால்வரோடு அங்கிருந்து வெளியேறினான். அவர்கள் வானரப்படைகள் கடற்கரையில் வந்து தங்கியிருத்தலை அறிந்து கடலைக் கடந்து வடகரையைச் சேர்ந்தனர். அங்குப் பாற்கடலில் அங்கங்கே தாமரைப் பூக்கள் மலர்ந்திருப்பது போல வானரப்படைகள் தங்கியுள்ள இடத்தில் விளக்குகள் எரிந்ததை வீடணன் கண்டான் (6379). இதனால் அது முன்னிரவுப் பொழுது என்பது தெரிகிறது. அவ்வாறெனில், இராவணன் மந்திரலோசனை மாலைமுதல் இரவுவரையில் நடந்தது எனலாம். அவர்கள் 'புதியவர்களை இருளிடை எய்துவது இயல்பு அன்றாம்' என்று கருதி ஒரு சோலையில் மறைந்து வைகினர்.

பொழுது புலர்ந்தது. 'உருளுறு தேரவன் உதயம் எய்தினான்'

(6387). இராமன் சீதையின் நினைவு, தன்னை வருத்தக் கடற்கரையைச் சென்றடைந்தான். அங்கு அந்தக் குளிர்காலைப் பொழுதில் கூடியிருக்கும் அன்னப்பறவைகளைக் கண்டு ஏக்கமும், ஆண்நாரையின் வருகை நோக்கிக் காத்திருக்கும் பெண்நாரையைக் கண்டு இரக்கமும், ஒரு பெண்நாரைக்காக அடித்துக்கொள்ளும் இரு பெரிய ஆண் நாரைகளைக் கண்டு ஆத்திரமும் கொண்டான்.

அந்தச் சூழலில்தான் வீடணன் வானரர் நடுவே சென்றான். இராமன் தன் நண்பர்களோடு சேர்ந்து வீடணனுக்கு அடைக்கலம் தருவது குறித்துக் கலந்து பேசினான். இறுதியில் அடைக்கலம் அளிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. சுக்கிரீவன் சென்று வீடணனை அழைத்துவந்தான். அவன் இராமனுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். இராமன் அவனுக்கு இலங்கை அரசை அளித்துத் தன் தம்பி இலக்குவனை அவனுக்கு முடிசூட்டுமாறு பணித்தான். வீடணன், இராமனிடம் அவனுடைய திருவடிநிலைகளைத் தனக்குக் கிரீடமாகச் சூட்டுமாறு வேண்டினான். அவனுக்கு இராமன் திருவடிநிலைகள் சூட்டப்பட்டன. இராமன் கட்டளைப்படி வானரத்தலைவர்கள் வீடணனைச் சந்தனவிமானத்தில் இருக்கச்செய்து பாடிவீட்டினை வலம் வந்தனர். இறுதியில் வீடணன், இராமன் திருவடிகளை வந்து வணங்கினான். இராமன் அவன் தங்குவதற்கு ஓர் உறையுளை ஒதுக்கினான். அதன்பின்னர்க் கதிரவன் மறைந்தான். அது பங்குனிமாதமாகையால் அன்று நல்ல வெயில் எரித்தது. அதனால் கம்பநாடர், கொடிய கதிர்களை வீசி விட்டதாக எண்ணிக் கதிரவன் மறைந்ததாகக் கூறுகிறார் (6516) இதனால் இவையனைத்தும் மாலைக்குள் நிகழ்ந்துமுடிந்தன என்பது போதரும்.

இரவு வந்தது. அது தேய்பிறைப் பதிமூன்றாம் நாள் (திரயோதசி). பின்னிலவு தோன்றி இராமனை வருத்தியது. அவன் சீதையை நினைந்து தளர்ந்தான். அவனிடம் சுக்கிரீவன் வீடணனை அழைத்து மேல் செய்வதற்குரிய செயல்களைக் குறித்து எண்ணுமாறு தெரிவித்தான். வீடணன் அழைக்கப்பட்டான். அவன் இலங்கை அரண், அரக்க வீரர்களின் அளவு, அங்கு அனுமன் நிகழ்த்திய அருஞ்செயல்கள் ஆகியவற்றைக் குறித்துப் பல தகவல்கள் தந்தான். இராமன் அவனிடம் கடல் கடக்க வழி கேட்டான். அவன் கடலரசனை இரந்து வேண்டினால் படைசெல்ல வழி சொல்லுவான் என்றான். இராமனும் துணைவரும் கடற்கரையை நோக்கி நடந்தனர். அவர்கள் கடற்கரையை அடையப் பகலவன் கீழ்த்திசையில் எழுந்தான். இதனால் அன்று இராமன் உறங்கவே இல்லை என்பதும், வீடணனோடு பேசியது கடையாமத்தில் என்பதும் தெரிகின்றன.

வான்மீகத்தில் அனுமன் இலங்கைக்குத் தீயிட்டுச் சென்ற மறுநாளே (பௌர்ணமி) இராவணன் அமைச்சர்கள் கூட்டத்தை நடத்தியுள்ளான். இதனால் கம்பநாடர் காட்டுவது போல அனுமனால் அவ்வளவு மிகுந்த பேரழிவு நிகழ்ந்ததாக வான்மீகிமுனிவர் காட்டவில்லை என்று கருத வேண்டியுள்ளது. அதில் கலந்துகொண்ட எல்லோரும் இராவணனுக்கு மகிழ்வுட்டும் வகையில் பேசினர். வீடணன் மட்டும் சீதையை இராமனிடம் ஒப்படைக்குமாறு அறிவுரை கூறினான். இராவணன் அதனை ஏற்காமல் கூட்டத்தை முடித்துவிட்டுத் தன் மாளிகைக்குத் திரும்பினான்.

மறுநாள் (தேய்பிறைப் பிரதமை) காலையில் வீடணன் மீண்டும் தன் அண்ணனின் மாளிகை சென்று சீதையைச் சிறையெடுத்து வந்தபின் நிகழ்ந்து கொண்டிருக்கும் தீய நிமித்தங்களைச் சொல்லி அவளை விட்டுவிட வேண்டினான். இராவணன் அதற்கு இணங்கவில்லை. அன்று முற்பகலில் மீண்டும் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அதில் உறக்கத்திலிருந்து எழுந்த கும்பகருணனும் கலந்து கொண்டான். அவன் இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என்று கண்டித்த போதிலும், இறுதியில் அவனுக்கு ஆதரவாகப் பேசினான். அக்கூட்டத்தின் முடிவில் இராவணனுக்கு அறிவுரைகூறி அவன் பழிப்புக்கு ஆளாகிய நிலையில் வீடணன் இலங்கையைத் துறந்து வெளியேறினான். அவனுடன் அரக்கர்கள் நால்வரும் வந்தனர். ஒரு முகூர்த்த நேரத்தில் (நாற்பத்தெட்டு நிமிடம்) இராமனிடம் தஞ்சமடையச் சென்றான்.

இராமன் தன் நண்பர்களோடு கலந்து ஆராய்ந்தான். வீடணனிடம் இராவணனின் படைபலத்தைக் கேட்டறிந்து அதன்பின்பு தஞ்சமளித்தான். அதுவரை வானில் நின்றுகொண்டிருந்த வீடணன் இராமனை அணுகி அவன் திருவடிகளை வணங்கினான். இராமன் வீடணனை இலங்கைக்கு அரசனாக்கி இலக்குவனைக்கொண்டு முடிசூட்டுவித்தான். வீடணன் கம்பநாடர் காட்டுவது போல இராமன் பாதுகைகளைச் சூடிக்கொள்ளாமல் மகுடம் சூடிக்கொண்டுள்ளான்.

வான்மீகத்தில் இது பிற்பகல் நிகழ்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளது. பின்னர்ச் சுக்கிரீவன் வீடணனிடம் கடலைக் கடத்தற்கு வழியாது என்று வினவினான். அவன் கடலரசனைத் தஞ்சம்புகுந்தால் வழி கிடைக்கும் என்றான். அதனை அறிந்த இராமன் காலக்கழிவின்றி அப்பொழுதே கடற்கரையை அடைந்து தருப்பைப்புல்லில் கிடக்கத் தொடங்கினான். இது மாலையில் நடந்த நிகழ்ச்சியாகும்.

வான்மீகம் ஒருநாள் நிகழ்ச்சிகளாகக் கூறியுள்ளவற்றைக் கம்பராமாயணம் மூன்றுநாள் நிகழ்ச்சிகளாகக் காட்டியுள்ளது. அது

வீடணன் இலங்கையிலிருந்து வெளியேறிய மறுநாள். காலை இராமனைச் சரண்புகுந்ததாகவும், அதற்கு அடுத்தநாள் காலைமுதல் இராமன் புல்லணையில் கிடக்கத் தொடங்கியதாகவும் காட்டியுள்ளது.

இராமன் புல்லணைக் கிடத்தல்

கம்பராமாயணம், இராமன் வருணனை வழிவேண்டி நோன்பு நோற்கத் தொடங்கியது வீடணன் சரண்புகுந்த மறுநாள் காலை என்கிறது. காலையில் உதயமலையின் மேலிருந்து பகலவன்குதிரைகள் வானத்தில் குதித்தன. கருணைக்கடலான இராமன் கருங்கடல் நோக்கி விதிப்படி வருணமந்திரத்தை எண்ணியவாறு புல்லில் கிடந்தான். நோன்பு தொடங்கியது. அஃது ஏழுநாள் தொடர்ந்தது. அஃதாவது பதினான்காம் நாள் (தேய்பிறைச் சதுர்த்தசி) தொடங்கி இருபதாம்நாள் (வளர்பிறைப் பஞ்சமி) வரை நிகழ்ந்தது. கடலரசன் வரவில்லை.

இருபத்தோராம் நாள் (வளர்பிறைச் சஷ்டி) இராமன் சீற்றங்கொண்டான். கடலின்மீது அம்பு எய்தான். வருணன் வந்தான். ஏழாம் செறிதிரைக்கடலில் மீன்களிடையே நிகழ்ந்த போரினை விலக்கச் சென்றிருந்ததால் காலத் தாழ்வு ஏற்பட்டதாகக் கூறி, இராமனிடம் அடைக்கலம் வேண்டினான். சீற்றம் தணிந்த இராமன் தன் அம்புக்கு மருகாந்தாரத்தில் இருந்த அவுணர்களை இலக்காக்கி அழிந்தான். வருணன் கடலின்மீது அணைகட்டிக் கடந்து செல்லுமாறு தெரிவித்தான். வானரர்களை அணைகட்டுமாறு பணித்து இராமன் தன் இருக்கைக்குச் சென்றான். வருணனும் விடை கொண்டான். ஏழுநாள் தவம் கிடந்த இராமன் அந்தக் காலை வேளையில் கட்டளையிட்டு இருக்கை ஏகியது பொருத்தமான செயலாக அமைந்துள்ளது.

வான்மீகிமுனிவர் தேய்பிறைப் பிரதமையில் தொடங்கிய நோன்பு மூன்று இரவுகள் மட்டுமே தொடர்ந்ததாகக் குறிக்கிறார்.

> "*அந்த இராமன் ஊக்கங்கொண்டு நோன்பு வழுவாது*
> *மண்ணில் புல்லணை மீது படுத்திருக்கையில் மூன்று*
> *இரவுகள் கழிந்தன"* *(யு.21:10)*

அஃதாவது பிரதமை, துவிதீயை, திருதியை ஆகிய மூன்று இரவுகள் நோன்பில் கழிந்தன என்றும், சதுர்த்தியன்று இராமன் அம்புக்கு ஆற்றாது வருணன் வெளிப்பட்டு அணை கட்டுமாறு தெரிவித்தான் என்றும் குறித்துள்ளார்.

கம்பநாடர் புல்லணையில் கிடந்த நிகழ்ச்சி வீடணன் தஞ்சம் புகுந்த மறுநாள் தொடங்கியதாக ஒருநாளை மிகுதிப்படுத்திக் கூறியதோடு, அது நான்கு நாள்கள் கூடுதலாக நடந்ததாகவும் காட்டியுள்ளார். வான்மீகத்தில் அது தேய்பிறையில் நடந்த நிகழ்ச்சியாக உள்ளது.

கம்பராமாயணத்தில் தேய்பிறையில் தொடங்கி வளர்பிறைச் சட்டியில் (சஷ்டி) முடிந்த நிகழ்ச்சியாகும்.

அணை அமைத்தல்

கம்பராமாயணம் அணை கட்டப்பட்டதனைப் பின்வருமாறு தெரிவிக்கிறது:

சுக்கிரீவன் நளனை அழைத்தான். அணைகட்டும் பணி தொடங்கியது. வானரங்கள் மலைகளைக் கொண்டுவந்து தர, நளன் அடுக்கினான். மூன்று பகலில் அணைகட்டி முடிக்கப்பட்டது. அந்த மலைகளில் கிடந்த மணித்திரள் ஒளியால் இரவில் இந்திரவில் கிடப்பது போலக் காட்சியளித்தது.

"கற்கி டந்துஒளிர் காசுஇனம் காந்தலால்
மற்க டங்கள் வகுத்தவ யங்குஅணை
எற்க டந்த இருளிடை, இந்திரன்
விற்கி டந்தது என்னவி ளங்குமால்" *(6743)*

தேய்பிறைச் சதுர்த்தியில் தொடங்கிய அணைகட்டும் பணி ஐந்து நாள்கள் நடந்து தேய்பிறை அட்டமியன்று நிறைவேறியது என்கிறது வான்மீகம். வளர்பிறைச் சஷ்டியில் தொடங்கி மூன்றுநாள் நடந்து வளர்பிறை அட்டமியில் முடிந்தது என்கிறது கம்பராமாயணம். இருநூல்களும் அணைகட்டி முடிந்தது அட்டமியில் என்ற போதிலும் பக்கம் (பக்ஷம்) மாறாக உள்ளது.

சுவேலமலையை அடைதல்

சுக்கிரீவனும் வீடணனும் மற்றையோரும் இராமனைக் குறுகி நூறு யோசனை நீளமும் பத்து யோசனை அகலமும் கொண்ட அணைகட்டி முடிக்கப்பட்டதைத் தெரிவித்தனர். இராமன் சென்று அணையைக் கண்டான். படைகளை விரைந்து புறப்படுமாறு பணித்தான். அவற்றின் முன்னும் பின்னும் முறையே வீடணனும் மாருதியும் வரத் தன்னுடன் இலக்குவன் தொடர இராமன் அணையைக் கடந்தான்.

இராமனும் வானரரும் அணைவழியே நடந்தது இருபத்து மூன்றாம்நாள் (வளர்பிறை அஷ்டமி) இரவிலா அன்றிப் பகலிலா என்னும் ஐயம் உண்டாகும். இரவில் அணையின் அழகிய தோற்றத்தைப் புனைந்த கவிச்சக்கரவர்த்தி, இராமன் அணைமீது நடந்தபோது வெயில் வீசியதாகக் கூறுகிறார். இதனால் அது மறுநாள் என்பது தேற்றம். சூரியனுடைய வெவ்விய கதிர் இராமன் மேனியில் படாதவாறு குளிர்ந்த சந்தனமரங்களையும் ஓங்கிய சுரபுன்னை மரங்களையும் வானரவீரர் குடையாகப் பிடித்துச் சென்றனர் என்றும், அவன் மேனி வாடா வண்ணம் பூமரங்களைக்கொண்டு சாமரைகள்

செய்து வீசினர் என்றும் வரும் குறிப்புகள் கடுமையான காலை வெயிலைக் காட்டுவன. இருபத்து நான்காம்நாள் என்பது அமாவாசையினை அடுத்த ஒன்பதாம் நாள் (வளர்பிறை நவமி). ஆனால் இடையுவாவில் (அஷ்டமியில்) சுவேலமலையை அடைந்தான் என்று மீட்சிப்படலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இஃது எங்ஙனம் பொருந்தும் என்னும் தடை எழும். ஒரு திதியின் எச்சம் அடுத்த திதியிலும் தொடர்தல் உண்டு. எனவே இராமன் இருபத்துநான்காம் நாள் காலையில் அட்டமிதிதியில் வானரப்படையோடு சுவேலமலையை அடைந்தான் என்பது அமையும்.

இராமன் நளனிடம் படைகள் தங்கப் பாடிவீடு அமைக்குமாறு தெரிவித்தான். அவன் அமைத்த பாசறையில் வீரர்கள் சென்று தங்க, இராமனும் பன்னசாலையில் இனிது புக்கான். வானர வீரர்கள் அணைகட்டும்போது கடலில் மலைகளை வீசினர். அதனால் மேலெழுந்த உப்புநீர் கதிரவன் உடலொளியை மழுங்கச் செய்து விட்டது. அதனால் மேற்கு மலையில் உள்ள சுனைகளில் மூழ்கி அதனைப் போக்கிக்கொள்ளப் போகிறான் என்னும்படி அவன் மேற்கு மலையில் மறைந்தான். நிலவு தோன்றியது.

"மால்உறு குடக வானின்
வயங்கிய வந்து தோன்றும்
பால்உறு பசுவெண் திங்கள்
பங்கய நயனத்து அண்ணல்
மேல்உறு பகழி தூர்க்க
வெகுண்டனர் விரைவில் வாங்கிக்
கால்உற வளைத்த காமன்
வில்எனக் காட்டிற்று அன்றே" *(6764)*

மேற்குவானில் தோன்றிய பிறைநிலா வளைக்கப்பட்ட மன்மதனின் வில்லைப் போன்று இருந்தது என்னும் குறிப்பு அரைவட்டத்தினும் சற்றுக் கூடுதலாய்த் திகழ்ந்த நவமி நிலவின் வடிவினைக் குறிக்கிறது.

அன்றிரவு இராவணனின் ஒற்றர்கள் அங்கு வந்தனர். அவர்கள் வானரர்களால் பிடிக்கப்பட்டனர். இராமன், தான் இராவணனை அழிக்க வந்திருப்பதை அவனுக்குத் தெரிவிக்குமாறு பணித்து அவர்களை விடுதலை செய்தான். இராவணன், இராமன் அம்புக்குக் கடல் அடங்கியதனையும், அவன் இலங்கையில் வந்து தங்கியிருத்தலையும் அறிந்து அமைச்சர்களோடு ஆராய்வதற்காகத் தனியே இருந்தான். ஒற்றர்கள் சென்று தாங்கள் அறிந்துவந்தவற்றைக் கூறினர். அங்கே ஊமரும் கூனரும் குறளரும் 'கொழுஞ்சுடர் துணரும் நல்விளக்கு ஏந்தினர், சுற்றினர்' (6786) எனப்படுவதால் அஃது இரவுவேளை

என்பது சுட்டப்படுகிறது. அந்த மந்திராலோசனை முடியும் தறுவாயில் பொழுது விடிந்தது (6834).

வான்மீகிமுனிவர் அணைகட்டி முடிக்கப்பட்ட அட்டமி மாலையே படைகள் கடல்கடந்து மறுகரையை அடைந்தன என்று காட்டியுள்ளார். அனுமன் தோளில் இராமனும் அங்கதன் தோளில் இலக்குவனும் ஏறிக்கொள்ளச் சுக்கிரீவன் உடன்வர வான்வழியாகச் சென்று சுவேலமலையை அடைந்தனர். அங்கிருந்து காலதாமதம் செய்யாமல் மிக விரைவாக இலங்கை நோக்கிச் சென்றனர். சுகசாரணர்கள் அப்பொழுது வேவு பார்க்க வந்து வானரர்களிடம் சிக்கினர். அவர்களிடம் இராமன், தான் அடுத்த நாள் காலை இலங்கையை அழிக்கப்போவதாக இராவணனிடம் தெரிவிக்கச் சொல்லி அவர்களை விடுவித்தான். சுவேலமலையில் ஏறி அங்குத் தங்கினான்.

> *''சுவேல மலையின் உச்சியில் பொழுது சாயுங்காலத்தில்*
> *வந்துசேர்ந்து நிற்கும் அந்த இராமன் சொற்படி*
> *நடக்கும் வானரப்படை ஒளிமயமாய் விளங்கிற்று'' (யு.38:20)*

என்பதால் இதுவும் மாலைக் காலத்து நிகழ்ச்சி என்பது தெளிவாகிறது.

இராவணன் மகுடச் சிதைவு

அன்றுவரை இலங்கையை எட்டிப் பார்க்க அஞ்சி மதிப்புறத்தே சென்று கொண்டிருந்த கதிரவன், போர் மேற்கொண்டு இராமன் வந்திருக்கிறான் என்னும் துணிவால் இலங்கையைச் காணத் தொடங்கியவன் போலத் தோன்றினானாம்(6835). அஃது இருபத்தைந்தாம் நாள் (வளர்பிறைத் தசமி).

இராமன் பரிவாரங்களுடன் மலைமேல் ஏறி இலங்கையின் சிறப்பினைக் கண்டான். அரக்கர் அழிவை உணர்த்தி வடதிசைக் குன்றில் எழுந்த கருஞாயிறு போலக் காட்சியளித்தான். இலங்கையின் அழகினையும் சிறப்பினையும் எய்தக் கண்டு தன் தம்பிக்கு உணர்த்தி அவற்றை நோக்குமாறு வேண்டினான்.

அப்பொழுது இராவணன் வானரப்படையின் பரப்பினைக் காணக் கோபுரத்தின் உச்சியில் ஏறிநின்றான். அவன் பல குவடுகளைக் கொண்ட குன்று போலக் காட்சியளித்தான். அவனைச் சூழ்ந்து உருப்பசி, திலோத்தமை, மேனகை முதலிய அரம்பையர் நின்றனர். அங்கிருந்து நிமிர்ந்து பார்த்த இராவணன் இராமனைக் கண்டு வெம்பி வெகுண்டான். மற்றவர்களை யார் யார் என்று சாரன் விளக்கினான். இராவணன் சிறுநகை செய்து, ''சிங்கத்தினை மான் கூட்டம் யாது செய்ய முடியும்? இக்குரங்குக் கூட்டத்தினைப் புகழ்கின்றாயா?'' என்றான். அப்பொழுது வீடணன் இராமனிடம் எதிர்நிற்பவன்

இராவணன் என்று உரைத்தான். அருகில் நின்ற சுக்கிரீவன் அதனைக் கேட்டு ஆத்திரம் கொண்டு இராவணன் மீது பாய்ந்தான்.

இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் இடையே கைகலப்பு உண்டாயிற்று. இருவரும் கட்டிப் புரண்டு அகழியில் வீழ்ந்தனர். ஒருவரை ஒருவர் வன்மையாகத் தாக்கிக் கொண்டனர். இராமன் சுக்கிரீவனைக் காணாமல் தவித்தான். எவருக்கும் வெற்றிதோல்வி என்று இல்லாமல் மோதிக் கொண்டிருந்த போது சுக்கிரீவன் இராவணனது மகுடத்தில் இருந்த மணிகளைப் பறித்துக்கொண்டு இராமனை அடைந்து அவன் திருவடிகளை வணங்கினான். இராமன் சுக்கிரீவனைத் தழுவி அவன் அன்பினைப் பாராட்டி நெகிழ்ந்து போனான். வீடணன் சுக்கிரீவனை,

"முடிமணி பறித்திட் டாயோ!
இவன்இனி முடிக்கும் வென்றிக்கு
அடிமணி இட்டாய் அன்றே?
அரிக்குலத்து அரசே!" *(6941)*

என்று கொண்டாடினான். இராமனும் சுக்கிரீவனைப் பாராட்டினான்.

இராமன் முதலியோர் மலையிலிருந்து இறங்கித் தம் இருக்கை அடைந்தனர். அன்று கதிரவன் மறைந்த நிகழ்ச்சியினைக் கம்பநாடர் தற்குறிப்பேற்ற அணியோடு பாடியுள்ளார். தன்மகன் சுக்கிரீவன் செய்த செயலுக்காக இராவணன் தன்னைத் தண்டிக்கலாம் என்று அஞ்சிக் கதிரவன் குன்றினுக்கு அப்பால் சென்று மறைந்ததாகக் கூறுகிறார்.

"தன்தனிப் புதல்வன் வென்றித்
தசமுகன் முடியில் தைத்த
மின்தளிர்த் தனைய பல்மா
மணியினை வெளியில் கண்டான்;
ஒன்றுஒழித்து ஒன்றுஆம் என்றுஅவ்
அரக்கனுக்கு ஒளிப்பான் போல
வன்தனிக் குன்றுக்கு அப்பால்
இரவியும் மறையப் போனான்" *(6943)*

வான்மீகிமுனிவர் அட்டமியன்றே அணைகட்டி முடிக்கப்பட்டதாகவும், அன்று மாலையே படைகள் கடலைக் கடந்தனவாகவும், இராமன் சுவேலமலையில் ஏறியதாகவும், இராவணன் மகுடபங்கம் நிகழ்ந்ததாகவும் காட்டியுள்ளார். ஒரு மாலைப்பொழுதுக்குள் இத்தனை நிகழ்ச்சிகள் நடந்தனவாகக் காட்டுவது பொருத்தமாக இருக்காது என்று கம்பநாடர் கருதியுள்ளார் போலும். அதனால் இவற்றை மூன்று நாள்களில் நடந்தனவாகக் காட்டியுள்ளார். முதல் நாள் அணைகட்டி முடிக்கப்பட்டது. இரண்டாம்

நாள் படைகள் சுவேலமலையை அடைந்து பாடிவீடு அமைத்து அங்கே தங்கின. மூன்றாம் நாள் இராமன் உள்ளிட்டோர் அம்மலையின் உச்சியில் ஏறிநின்ற போது சுக்கிரீவன் இராவணன் மகுடத்தைச் சிதைத்துத் திரும்ப, அவர்கள் மலையிலிருந்து இறங்கினர் என்று தெரிவித்துள்ளார். வான்மீகிமுனிவர் இராவணன் மகுடச்சிதைவினை முன்னிரவு நிகழ்ச்சியாகக் காட்டக் கம்பநாடர் அதனை முற்பகல் நிகழ்ச்சியாகக் காட்டியுள்ளார்.

இப்பகுதியில் சொல்லப்படும் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தை வான்மீகத்தைக்கொண்டு அறுதியிடுவது அரிய முயற்சியாக அமைகிறது. இராமன் சுவேலமலையில் இருந்த போது முழுநிலவு விளங்கியதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அன்று அட்டமி.

> *"மாலைக்காலத்தால் செந்நிறம் அடைந்த கதிரவன்*
> *மறைந்தான். அப்பொழுது இரவு பூர்ண சந்திரனால்*
> *ஒளியோடு விளங்கிற்று"* (யு. 38:19)

(பூர்ண சந்த்ர ப்ரதீ$_3$ப்தா ச க்ஷபா ஸமபி$_4$வர்ததே)

இதனை முழுநிலவைக் குறிப்பதாக மயங்கக்கூடாது என்றும் இது விளக்கு, மரங்கள் இவற்றிலிருந்து வீசிய ஒளியினைச் சுட்டுகிறது என்றும் இராமாயண சார சங்கிரகம் அமைதி கூறுகிறது. ஆனால், கம்பநாடர் இந்நிகழ்ச்சிகளின் காலத்தை எளிதில் அறியும்வண்ணம் கதிரவன் தோற்றமறைவுகளை அழகுறத் தெரிவித்துள்ளார்.

இருபக்கப்படைகளின் அணிவகுப்பு

தன் மாளிகையை அடைந்த இராவணன் இரவெல்லாம் உறக்கமின்றித் தவித்தான். அவமான உணர்ச்சியால் துயரம் கொண்டான். மதுவருந்தல், ஆடல், பாடல் இவற்றுள் எதிலும் மனம் செலுத்தாமல் மலர்ப்படுக்கையில் கிடந்தான். அப்பொழுது சார்த்தூலன் என்னும் ஒற்றன் வந்து இராமன் படைகளை அணிவகுத்து நிறுத்தி யுள்ளதனைக் கூறினான். இராமன் அனுமனை இலங்கையின் மேற்கு வாயிலிலும், சுக்கிரீவனைத் தன் அருகிலும், அங்கதனைத் தெற்கு வாயிலிலும், நீலனைக் கிழக்கு வாயிலிலும் தனித்தனியே பதினேழு வெள்ளம் சேனையோடு நிறுத்தியுள்ளான் என்றும், இரு வெள்ளம் சேனையைப் படைகளுக்கு உணவுகொண்டு வர அமைத்துள்ளான் என்றும் விளக்கினான்.

சார்த்தூலன் கூறியவற்றைக் கேட்டு இராவணன் ஆத்திரம் கொண்டான். "அந்தப் பகைவர்களின் உடலினின்றும் பெருக்கெடுக்கும் இரத்த வெள்ளத்தில் போரில் எழும் புழுதித்துகளை நாளைக்குள்

போக்குவேன்'' என்று சீற்றத்தோடு முழங்கினான். அப்பொழுது அமைச்சர்களை வருமாறு பணித்தான். அவர்களோடு கலந்து பேசித் தன் படையினை விடிவதன் முன்னம் வெவ்வேறு இடங்களில் சென்று நிற்குமாறு கட்டளையிட்டான். படைத்தலைவன் பிரகத்தனைக் கிழக்கு வாயிலிலும், மகோதரனையும் மாபெரும்பக்கனையும் தெற்குவாயிலிலும், இந்திரசித்தனை மேற்கு வாயிலிலும், ஒவ்வொருவரும் இருநூறு வெள்ளம் சேனையோடு சென்று நிற்குமாறு ஆணையிட்டான். தான் அந்த அளவு சேனையோடு வடக்கு வாயிலுக்குச் சென்று நிற்பதாக அறிவித்தான். விருபாக்கனை மூலபலத்தோடும் அமைச்சர்களோடும் நகரத்தைக் காக்குமாறு ஏவினான். இவ்வாறு அணிவகுத்த வேளையில் இரவு நீங்கியது. இருபத்தைந்தாம் நாள் (வளர்பிறைத் தசமி) விடிவதற்குள் படைவகுப்பு நிகழ்ந்தது.

அங்கதன் தூது

அன்று இருபத்தாறாம் நாள் (வளர்பிறை ஏகாதசி). கம்பநாடர், ''கதிரவன் கொடுங்கோலனுக்கு அஞ்சி மறைவாக இருந்து வேதனை உழப்பவர் அவனை அடக்கித் தம்மைக் காப்பாற்றுபவரைக் கண்டு வெளிப்பட்டாற்போல் வெளிப்பட்டான்'' என்கிறார்.

''அளித்தகவு இல்லா ஆற்றல்
அமைந்தவன் கொடுமை அஞ்சி,
வெளிப்படல் அரிதுஎன்று உன்னி,
வேதனை உழக்கும் வேலை,
களித்தவற் களிப்பு நீக்கிக்
காப்பவர் தம்மைக் கண்ணுற்று
ஒளித்தவர் வெளிப்பட் டென்னக்
கதிரவன் உதயம் செய்தான்'' (6969)

அப்பொழுது வானரசேனை இலங்கையை வளைத்தது. இராமன் வடதிசை வாயிலை அடைந்தான். அவனோடு பதினேழு வெள்ளம் சேனை நின்றது. இராவணன் அங்குவந்து சேராதது கண்டு கருணையின் நிலையமான காகுத்தன் போரைத் தவிர்க்கக் கடைசி முயற்சியாகத் தூதுவிட எண்ணினான். அப்பொழுது தன் நண்பர்களோடு ஆலோசனை நடத்தி அங்கதனைத் தூது அனுப்பினான். அங்கதன் இராவணனிடம், ''சீதையை விட்டு இராமனைத் தொழுது வாழ்வாய்; அன்றிச் சுற்றத்தோடு அழிய விரும்பினால், வெளிப்பட்டுப் போரிடுவாய்'' என்றான். அவனோ அங்கதனைத் தாக்குமாறு வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அங்கதன் தன்னைத் தொடர்பவர்களில் நால்வரை அழித்து, இராமன் திருவடியை அடைந்தான். 'இராவணன் மாண்டாலன்றி ஆசையை விடான்'

என்றான். இராவணன் அமைதியை விழையாமல் போரை விரும்புவது உறுதியான போது இராமன் இலங்கையைத் தாக்க ஆணையிட்டான். அங்கதன் தூது ஏகாதசி காலையில் மிகக் குறுகிய நேரத்தில் நிகழ்ந்து முடிந்ததாகும். அதன் பின்னர்ப் போர் தொடங்கியது.

வான்மீகமும் அங்கதன் தூதினைப் போருக்கு முன் காலையில் நடந்த நிகழ்ச்சியாகவே குறிக்கிறது. அது தேய்பிறை நவமியன்று நடந்ததாகக் காட்டியுள்ளது.

போர் நடந்த நாள்கள்

இராமாயணப் போர் நடந்த நாள்கள் குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. அவற்றுள், அது பதினெட்டு மாதங்கள் நடந்தது என்பது ஒன்று. இக்கருத்து ஆய்வுக்கு உரியது. இது கலிங்கத்துப்பரணி உரையில் காணப்படுகிறது. ''முதற்குலோத்துங்கன் படைத்தலைவன் கருணாகரத் தொண்டைமான் நிகழ்த்திய கலிங்கப்போர் தேவர்கள் அசுரர்களின் போரும், இராமாயணப் போரும், பாரதப் போரும் கடுமையானவை என்னும் பேச்சு ஓயும்படி கடுமையாக இருந்தது'' என்கிறார் சயங்கொண்டார்.

''தேவாசுர ராமாயண மாபாரதம் உளஎன்று
ஓவாஉரை ஓயும்படி உளதுஅப்பொரு களமே'' (472)

இதன் குறிப்புரையில் தேவாசுரப்போர் பதினெட்டாண்டும் இராமாயணப் போர் பதினெட்டு மாதமும், பாரதப்போர் பதினெட்டு நாளும் நிகழ்ந்தன என்னும் விளக்கம் காணப்படுகிறது. இவ்விளக்கம் சீவகசிந்தாமணிப்பாட்டு 'எண்கொண்ட ஞாட்பின் இரும்பு எச்சிற் படுத்த மார்பர்' (2353) என்பதற்கு நச்சினார்க்கினியர் வரைந்துள்ள உரையினையும் சிலப்பதிகார நீர்ப்படைக்காதையில் வரும் குறிப்பினையும் அதன் உரையினையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

சிந்தாமணிப்பாட்டில் மூன்று போர்களைப் பற்றி நேரடியான குறிப்பு இல்லை. நச்சினார்க்கினியர் ''தேவாசுரம், இராமாயணம், மகாபாரதம் என்கின்ற போரில் வீரர் புண்படுமாறு போலப் புண்பட்ட வீரர்'' என்று உரை வரைந்துள்ளார். ஆனால் அவர் அப்போர்கள் நடந்த கால அளவினைச் சுட்டவில்லை.

சிலப்பதிகாரக் குறிப்பு

சேரன் செங்குட்டுவன் வடவாரியரை வென்ற போரின் விரைவினை இளங்கோவடிகள்,

''செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டிஎன்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை உண்ட
செங்குட் டுவன்தன் சினவேல் தானையொடு
கங்கைப் பேர்யாற்றுக் கரைஅகம் புகுந்து''
(நீர்ப்படைக் காதை 5-14)

என்று குறித்துள்ளார். இதில் போர்கள் நிகழ்ந்த கால அளவு காணப்படுகிறது. ஆனால் போர்களின் பெயர் காணப்படவில்லை. இப்பகுதிக்கு உரைவரைந்த அரும்பத உரையாசிரியர் போர்களையும் அவை நிகழ்ந்த கால அளவினையும் தந்துள்ளார். ''உயிர்த்தொகை உண்ட ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற்றிரட்டி என்று கூட்டி எண்கொள என்று' எனச் சொற்களைக் கொண்டுகூட்டித் ''தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டிலும் இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும் பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும் செங்குட்டுவனும் கனக விசயனும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்த'' என்று விளக்கம் தந்துள்ளார். இவ்விளக்கத்தையே சிலப்பதிகாரத்திற்கு உரைவரைந்த ந.மு.வேங்கடசாமி நாட்டார், பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் ஆகிய சான்றோர்களும் போற்றிக் கொண்டுள்ளனர்.

பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் கீழ்வருமாறு விளக்கம் தந்துள்ளார்.

''திருமாலாகிய செங்குட்டுவன் கூற்றுவன் தொழில் பெருகும்படி உயிர்த்தொகை உண்ட போர்கள் நான்கு. அவற்றுள் முதலாவது பதினெட்டு ஆண்டுகளினும், இரண்டாவது பதினெட்டுத் திங்களினும், மூன்றாவது பதினெட்டு நாளினும், நான்காவது பதினெட்டு நாழிகையினும் நிகழ்ந்தன என்று உலகத்தார் கூறும்படி வடவாரியரோடு செய்த போர் பதினெட்டு நாழிகையில் முடிவுற்றது என்பது கருத்து.

திருமால் செய்த போர்களாவன:

1. மோகினியாகித் தேவாசுரப்போர் மூட்டி நிகழ்த்தியது.
2. இராமனாகி இலங்கையில் அரக்கரோடு செய்த போர்.
3. கண்ணனாகி நிகழ்த்திய போர்.
4. செங்குட்டுவனாகி வடவாரியரோடு செய்த போர்.

இவை நிரலே பதினெட்டு யாண்டும் திங்களும் நாளும் நாழிகையும் ஆகிய காலத்தில் நிகழ்ந்தன என்பது''.

இவற்றால் சிலம்பின் அரும்பத உரையாசிரியரே முதன்முதலில் பண்டை முப்பெரும் போர்களின் கால அளவினைக் குறித்தவர் என்பது தெளிவு. அவரோ அவருக்குப் பின் சிலப்பதிகாரத்திற்கு உரை வரைந்த அறிஞர் பெருமக்களோ இராமராவணப் போர் பதினெட்டுத் திங்கள் நடந்துள்ளது என்பதனை விளக்கவில்லை. பாரதப்போர் பதினெட்டு நாளில் நிகழ்ந்தது என்பது தெளிவாகக் காணப்படுவதால், அதுபோல இராமராவணப் போரும் பதினெட்டுத் திங்களில் நடந்திருக்கும் என்னும் நம்பிக்கை கற்பவர் உள்ளத்தில் விழுந்துவிட்டது. இளங்கோவடிகள் காலத்தில் இராமகாதையும் பாரதமும் தமிழகத்தில் வழங்கின என்பதற்குச் சிலம்பில் வரும் குறிப்புகளே போதிய சான்றுகளாகும். அக்காலத்தில் வான்மீகிராமாயணமும் வியாச பாரதமுமே வழங்கியிருத்தல் வேண்டும். வான்மீகிராமாயணத்தில் இராமராவணப்போர் பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்ததாகக் காட்டப்படவில்லை. வான்மீகத்திலோ வேறு தமிழ் நூல்களிலோ தக்க சான்றுகள் இல்லாத நிலையில் அரும்பத உரையாசிரியர் விதைத்துச் சென்றுள்ள இராமராவணப் போரின் கால எல்லை பற்றிய கருத்து ஏற்றுக்கொள்வதற்கு உரியதாக அமையவில்லை.

இப்போர்களைப் பற்றிக் குறிக்கும் சிலப்பதிகாரப்பகுதியில் கருத்துப்பிழைமட்டுமன்றி வேறு சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. செங்குட்டுவன் நிகழ்த்திய போர் பதினெட்டு நாழிகையில் நடந்தது என்று கூறிவிட்டுப் பின் ஒருநாள் (ஒருபகல்) எல்லையில் பகைவர்களை அழித்தான் என்பது முரண்பாடாக உள்ளது. இளங்கோவடிகளின் ஆசிரியப்பா நடை ஆற்றொழுக்காகப் பொருள்கொள்ளும் வகையில் அமைந்தது. இப்பகுதிக்கு அரும்பத உரைகாரர் மிகுந்த இடர்ப்பட்டுக் கொண்டுகூட்டிப் பொருள் வரைந்துள்ளமை செயற்கையாக இருக்கிறது. 'உயிர்த்தொகை உண்ட' என்னும் தொடர் மீண்டும் வருவது சுவையற்றதாக உள்ளது. 'தானை' என்பதும் இருமுறை வருகின்றது. இவற்றிற்குக் காரணமாக இருப்பவை

''ஒன்பதிற்று இரட்டி என்று,
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள
வருபெரும் தானை மறக்கள மருங்கின்

என்னும் மூன்று அடிகளே ஆகும். இவற்றை நீக்கிவிட்டால், ''ஆரிய மன்னரை, செய்தொழில் பெருக, உயிர்த்தொகை உண்ட ஒருபகல் எல்லை செங்குட்டுவன் தன் சினவேல் தானையொடு'' என்று இயைந்து

எவ்வகைக் குறையுமின்றி அமைவது காணலாம். உயிர்த்தொகை உண்ட ஒருபகல் எல்லை என்னும் அடியின் இடையில் போர் பற்றிய அடிகள் சேர்க்கப்பட்டு, ஒருபகல் எல்லை என்பதனைப் பிறிதோர் அடியின் முதலிரு சீர்களாக்கி அதனை நிரப்ப மீண்டும் 'உயிர்த்தொகை உண்ட' என்பது சேர்க்கப்பட்டுள்ளது. அவற்றை நீக்கிவிட்டால்,

''செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை உண்ட ஒருபகல் எல்லை
செங்குட் டுவன்தன் சினவேல் தானையொடு
கங்கைப் பேர்யாற்றுக் கரைஅகம் புகுந்து''

என்று பொருத்தமுற அமைகிறது.

அறிஞர் ஆ. சிங்காரவேலுமுதலியார், தாம் அரிதின் முயன்று உருவாக்கிய அபிதான சிந்தாமணியில் இராவணன் என்னும் தலைப்பில் எழுதியுள்ள குறிப்பில், ''இவன் (இராவணன்) இராமனுடன் ஏழுநாள் இராப்பகல் யுத்தஞ் செய்தான்'' (ப.192) என்று குறித்துள்ளார். அவர் எந்த நூலின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பது தெரிவிக்கப்படவில்லை. அது வான்மீகத்தை யொட்டி எழுதப்பட்ட குறிப்பாகும்.

அமரர் கோதண்டராமக் கவுண்டர் கட்டுரை

1984 ஆம் ஆண்டுக் கோவைக் கம்பன் கழக மலரில் அமரர் க.கு.கோதண்டராமக்கவுண்டர் 'கம்பனில் காலக் குறிப்பு' என்னும் ஒரு சிறுகட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் கம்பராமாயணத்தின் வழி இராமராவணப் போர் நிகழ்ந்த கால எல்லையை அறுதியிட முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். ஆனால் அவரது சிந்தனையோட்டத்தினைச் சுதந்திரமாக இயங்கவிடாமல் இராமாயண உரையாசிரியர்கள் வரைந்த விளக்கங்கள் தடைசெய்து மடைமாற்றிவிட்டன.

''ராமன் சேதுகட்டி இலங்கையில் இறங்கிச் சுவேல மலையில் பாடி வீடு அமைத்தது இடை உவா; அதாவது கிருஷ்ணபக்ஷ அட்டமி திதி. இராவணவதம் கடை உவா; அதாவது அமாவாசை. என்றால் போர் எத்தனை நாள் நடந்தது? சுவாரஸ்யமான ஆராய்ச்சிதான்! பாரதப் போர், காலையில் ஆரம்பம் மாலையில் நிறைவு, இரவு ஓய்வு; இப்படிப் பதினெட்டுநாள் சண்டை. இப்படிக் கம்பராமாயணத்தில் தெளிவான விபரம் இல்லை. கம்பன் சொல்லும் முறையிலிருந்துதான் நாளைக் கணக்குப் பண்ண முடியும். அடியேன் சிற்றறிவிற்கு எட்டியவாறு போர் நாட்களைக் கணக்கிட்டுள்ளேன். அறிஞர்கள் மாறுபாடு எடுத்துக்காட்டினால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்.

முதல்நாள் போர்: வானரப்படை அகழி தூர்த்துத் தாக்குதல். அரக்கர்சேனை எதிர்த்துத் தாக்குதல். சேனை காவலரின் இருபக்க சேனை கடும்போர். அரக்கர் சேனை அழிவுகண்டு ராவணன் போர்க்குப் புறப்படுதல். ராமராவணயுத்தம். ராவணன் படுதோல்வி. ''இன்று போய் நாளை போருக்கு வாவென'' ராமன் கூறுதல் ஆகியவை முதல்நாள் போரில் பேசப்படுகின்றன.

இரண்டாம்நாள் போர்: கும்பகர்ணன் கடும்போரும் வதையும் மதியத்திற்குள் முடிந்தது. அதன்பின் அதிகாயன் போர் நிகழ்கிறது. அதிகாயன் இறந்த செய்தி கேட்டு இந்திரசித்தன் எழுந்து போருக்குப் புறப்பட்டான். இந்திரசித் நாகபாச பிரயோகம். இரவு வருகிறது?

மூன்றாம் நாள் போர்: படைத்தலைவர் வதை, மகரக் கண்ணன் வதை. இந்திரசித் பிருமாத்திரபிரயோகம். மருத்துமலை கொண்டுவந்து வானரங்கள் உயிர்பெறுதல் ஆகியவை பேசப்படுகின்றன.

நான்காம் நாள் போர்: இந்திரசித் நிகும்பலை யாகம். இந்திரசித் வதை.

ஐந்தாம் நாள் போர்: மூலபல வதை. இராவணன் போருக்குப் புறப்படுதல். ராம ராவண கடும்போர். ராவண வதம்.

மேற்கண்டபடி ஐந்து நாட்களுக்கு இலங்கைப் போர் நடந்தது என்பது என்முடிவு. ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய ஐந்து நாட்கள் சண்டை நடந்திருக்கிறது. கிருஷ்ண பட்சம் அஷ்டமியில் ராமன் சுவேலமலை வந்தான் என்பதை முன்னமே பார்த்திருக்கிறோம். நவமி, தசமியில் அங்கதன் தூதும், படைவகுப்பதும் இரண்டு நாட்கள் நடந்து இருக்கின்றன. இது நியாயமானதே''.

இவற்றில் அங்கதன் தூது ஏகாதசிகாலையில் நிகழ்ந்தது என்பதும், அதற்கு முந்தைய தசமி இரவின் கடைப்பகுதியில் படை வகுப்பு நிகழ்ந்தது என்பதும் முன்னர் விளக்கப்பட்டுள்ளன. முதல் மூன்றுநாள் போர் நிகழ்ச்சிகளைச் சரியாகக் கணக்கிட்டுள்ளார். நான்காம்நாள் நிகழ்ச்சிகளாக அவர் சொல்லியுள்ளவற்றில் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை அப்பகுதி குறித்து ஆராயும்போது காணலாம். எது எவ்வாறாயினும், அமரர் க.கு.கோதண்டராமக் கவுண்டர் போர் ஐந்து நாள் நடந்ததாக வரையறுத்துக் கூறியுள்ளது பாராட்டுக்குரிய தெளிவான முடிபாகும்.

இராமாயணப் போர் பதினெட்டு மாதங்கள் நிகழ்ந்தது என்பதற்கு வான்மீகத்திலோ கம்பராமாயணத்திலோ சான்றுகள் இல்லை. கம்பராமாயண யுத்தகாண்ட நிகழ்ச்சிகள்மட்டும் பதினெட்டு நாள்களில்

நடந்தன என்பது தெரிகிறது. இந்நிலையில் பதினெட்டு மாதம் நடந்தது என்னும் கருத்து எப்படி இலக்கிய உலகில் வேர்கொண்டது என்பது வியப்புக்குரியதாக உள்ளது.

வான்மீகம், நவமியன்று தொடங்கிய போர் ஏழுநாள்கள் நடந்து அமாவாசையன்று முடிந்தது என்றும் முதல்நாள் தொடங்கி ஆறுநாள்கள் இடைவிடாமல் இரவிலும் நிகழ்ந்தது என்றும் காட்டியுள்ளது.

கம்பநாடர் இராமராவணப் போர் ஐந்து நாள்கள் நிகழ்ந்தது என்றே காட்டியுள்ளார். அதனை இனிக் காணலாம்.

முதல்நாள் போர்

கம்பராமாயணம், பங்குனி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று போர் தொடங்கியதாகக் காட்டுகிறது. அன்று காலையில் போர் தொடங்கியது. இராவணன் படைகள் நான்கு வாயில்கள் வழியாகவும் வெளிப்போந்தன. வடக்கு வாயிலில் சுக்கிரீவனோடு வச்சிரமுட்டி மோதி மாண்டான். இராக்கதர்கள் இலங்கை நோக்கி ஓடினர். கீழை வாசலில் நீலன் நிருதர் சேனையை ஊழிநெருப்பாக அழித்தான். அங்குக் கரடியின் காவலன் இடும்பன் என்பவன் அரக்கன் கும்பானுவைக் கொன்றான். அத்திசைக்கு இராவணனால் அனுப்பப்பட்ட படைத்தலைவனும் சுமாலியின் மகனுமான பிரகத்தன் நீலனோடு போர் நிகழ்த்தி வீழ்ந்தான். தெற்கு வாயிலில் சுபாரிசன் அங்கதனோடு போரிட்டு மடிய அரக்கர்கள் களம்விட்டு ஓடினர். மேலை வாயிலில் துன்முகனும் அரக்கர் பலரும் வீழ்ந்தனர்.

நான்கு வாயில்களிலும் நிகழ்ந்த அழிவினைக் கேள்வியுற்ற இராவணன் தேர் ஏறிப் போர்க்களம் புகுந்தான். அவனை எதிர்கொள்ள இராமனும் ஆயத்தமானான். முதலில் சுக்கிரீவனுக்கும் இராவணனுக்கும் இடையே வடக்கு வாயிலில் சண்டை தொடங்கியது. சுக்கிரீவன் தளர்வுற்றது கண்டு மேற்கு வாயிலினின்றும் அனுமன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் இராவணன் சாரதியை மராமரம் கொண்டு வீழ்த்தினான். இராவணன் அனுமனை நூறு தெய்வத்தன்மை வாய்ந்த அம்புகளை எய்து கலங்கச் செய்தான். அதனைக் கண்டு அங்கு வந்த இலக்குவனுக்கும் அரக்கர்கோனுக்கும் இடையே கடும்போர் நிகழ்ந்தது. அதற்குள் அனுமன் அயர்வு நீங்கினான்.

அனுமன் இராவணனைக் குத்துப்போருக்கு அழைத்தான். ஒருவரை ஒருவர் குத்திக்கொண்டனர். அனுமன் குத்தியபோது இராவணன் வீழவில்லை. இராவணன் குத்தியதனால் அனுமன் இறக்கவில்லை. அனுமன், தன் குத்தினால் இராவணன் சாகாமையால் அதற்குப்பின்

தன் சூளுரைக்கு ஏற்ப அவனோடு நேருக்கு நேர் மோத முடியாதவன் ஆனான்.

வானரத் தலைவர்கள் மலைகளை எடுத்து இராவணனோடு மலைந்து நிலைகுலைந்தனர். அப்பொழுது இலக்குவன் உருத்து எழுந்தான். இராவணன் எய்த வேற்படையால் இலக்குவன் காயமுற்று வீழ்ந்தான். இராவணன் அவனைத் தூக்கிச் செல்ல முடியாமல் நின்றான். அனுமன் அவனை எடுத்துக்கொண்டு அகன்றான்.

அதன் பின்னர் இராமன் அங்கு வந்தான். அனுமன் விரைந்து வந்து இராமனைத் தன் தோளில் ஏற்றிக்கொண்டான். அவ்விருவருக்கும் இடையே நடந்த போரில் இராவணன் மகுடம் இழந்து நாணத்தால் தலைகுனிந்து நின்றான். வள்ளல் இராமன் அவனை 'இன்று போய்ப் போர்க்கு நாளைவா' என்று சொல்லி விடுத்தான். இராவணன் வெறுங்கையோடு நடந்துபோய்த் தன் நகரம் புக்கான். அன்றைய பகல் முடிந்தது. 'அருக்கனும் நாகம் சேர்ந்தான்' (7273).

இராவணன் அன்றிரவு தூதரை எட்டுத்திக்கும் அனுப்பி அரக்கர் படைகளைத் திரட்டப் பணித்தான். மாலியவானோடு அன்று நடந்த போர் குறித்துக் கலந்து பேசினான். அங்கு வந்த மகோதரன் சொன்ன சொற்களால் தளர்ச்சி நீங்கிய இராவணன் கும்பகருணனைப் போருக்கு அனுப்ப முடிவுசெய்தான்.

வான்மீகத்தில் முதல் நாள் (நவமி) போர் நிகழ்ச்சிகள் வேறாக அமைந்துள்ளன. அன்று காலையில் அங்கதன் தூது சென்று திரும்பிய பின்னர் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் இடையே கடுமையான போர் நிகழ்ந்தது. அவ்விரு தரப்பினருக்கும் இடையே 'ஒருவனுக்கு ஒருவன்' என்னும் முறையில் இரட்டைப் போர் (துவந்த யுத்தம்) மூண்டு நெடுநேரம் நடந்தது. அரக்கவீரர் பலர் மாண்டனர். எனினும், அரக்கர்கள் போர்க்களத்தை விட்டுத் திரும்பிச் செல்லவில்லை. கதிரவன் மறையும் வேளையை நோக்கிக் காத்துக்கொண்டிருந்தனர்.

> *"அந்த வானரர்களும் அரக்கர்களும் போர்செய்து*
> *கொண்டிருக்கும் அவ்வேளையில் பகலவன் மறைந்தான்;*
> *வானரர்களின் உயிர்களைப் பறிக்கும் இரவு தொடங்கிற்று"*
> *(யு.44:1)*

'அச்சமூட்டும் இருள்' (தா₃ருணே தமஸி–யு.44:3), 'கரையற்ற இருள்' (து₃ஷ்பாரே தமஸி – யு.44:6) ஆகிய தொடர்களால் அன்றைய இருளின் தன்மை சுட்டப்படுகிறது. அப்பொழுது அன்று வரை

எவராலும் வெல்லப்படாத இயமப்பகைஞன், மாபெரும்பக்கன், மகோதரன், வச்சிரயெயிற்றன், சுகன், சாரணன் ஆகியோர் இராமன் அம்பினால் தாக்குண்டு ஓடித் தப்பினர். அங்கதன் இந்திரசித்தனுடைய தேர்ப்பாகனையும் குதிரைகளையும் அழித்தான். இந்திரசித்தன் மாயச்செயல் புரிய வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. அவன் மறைந்து நின்று நாகபாசத்தை எய்து இராமலக்குவர்களைக் கட்டினான். இலங்கைநகருக்குள் புகுந்து தன் வெற்றியைத் தந்தையிடம் தெரிவித்துச் சென்றான்.

அனுமன் மருத்துமலையைக் கொண்டுவரப் புறப்பட்ட போது கருடன் வர, நாகபாசம் கட்டுவிட்டு விலகியது. அதுகண்டு வானரத்தலைவர்கள் மழைக்கால இடிமுழக்கம் போலப் பேரொலி எழுப்பினர். மீண்டும் இரவுப்போர் தொடங்கியது. இராவணனால் அனுப்பப்பட்ட புகைநிறக்கண்ணன் மேற்குவாயிலில் அனுமனோடு போரிட்டு மாண்டான். அடுத்து வச்சிரயெயிற்றன் தெற்குவாயிலில் அங்கதனோடு மோதி அவன் வாளுக்கு இரையானான். பின்னர் அகம்பனன் களம் புகுந்து அனுமனால் வீழ்த்தப்பட்டான்.

அகம்பனன் வதம் எப்பொழுது நிகழ்ந்தது என்பதில் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. இராமாயண சார சங்கிரகம் அகம்பன வதம் பின்னிரவில் என்று குறித்துள்ளது. (அபர ராத்ர்யாம் அகம்பன வத$_4$ச்ச) அவன் புறப்பட்ட போது,

> ''*சூரியன் ஒளிரும் நல்ல வேளையில் புயற்காற்று*
> *அடித்துத் தீய வேளை ஆயிற்று*'' (யு.55:12)

என்னும் குறிப்புக் காணப்படுவதால் அப்பொழுது கதிரவன் தோன்றிவிட்டான் என்பது தெரிகிறது. எனவே புகைநிறக்கண்ணனும் வச்சிரயெயிற்றனும் நள்ளிரவுக்கும் விடியற் காலத்திற்கும் இடைப்பட்ட வேளையிலும் அகம்பனன் விடிந்த பின்பும் கொல்லப்பட்டனர் எனலாம்.

கம்பராமாயணத்தில் முதல்நாள் போரிலேயே இராவணன் கலந்து கொள்வதாகக் காட்டப்பட்டுள்ளது. வான்மீகத்தில் முதல் நாள் போரில் அவன் கலந்து கொள்ளவில்லை. இரண்டாம்நாள் போரிலேயே பங்கு பெற்றுள்ளான். கம்பநாடர் இரண்டாம்நாள் இரவு இந்திரசித்தன் நாகபாசத்தை வீசியதாகவும், புகைநிறக்கண்ணன் முதலியோர் களம்புகுந்ததாகவும் குறித்துள்ளார். இவை வான்மீகத்தில் முதல்நாள் நிகழ்ச்சிகளாக இடம் பெற்றுள்ளன. முதல்நாள் நிகழ்ச்சியில் அகம்பனன் பற்றிய பேச்சுக் கம்பராமாயணத்தில் இல்லை.

இரண்டாம்நாள் போர்

இருபத்தேழாம்நாள்; வளர்பிறைத் துவாதசி. இராவணன் தன் அருமைத் தம்பி கும்பகருணனையும் தனையன் அதிகாயனையும் இழந்த நாள் அது.

இராவணன் ஏவலால் எழுப்பப்பட்ட கும்பகருணன் அவனை அடைந்து அறிவுரை கூறினான். அது விழலுக்கு இறைத்த நீராயிற்று. கும்பகருணன் தன் அண்ணனுக்காக உயிர்துறக்க அவனிடம் விடைபெற்றுக் களம் புகுந்தான். கம்பநாடர் அன்று கதிரவன் தோற்றம் குறித்துத் தனியாகப் பாடவில்லை. அதனால் அவன் எப்பொழுது களம் புகுந்தான் என்பதனை ஊகித்தறிய உதவும் குறிப்பொன்று காணப்படுகிறது. கும்பகருணன் களம் புகுந்த போது இராமன் வீடணனிடம் அவன் யார் என்று வினவினான். அதனைத் தெரிவிக்கும் பாடலில் கும்பகருணனுடைய உடம்பினால் எழுகின்ற கதிரவன் ஒளிமறைய இருள் பரவியது என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

"எழுங்கதி ரவன்ஒளி மறைய எங்கணும்
விழுங்கியது இருள்இவன் மெய்யினால்" (7383)

என்பதனால் அவன் போருக்குப் புறப்பட்ட நேரம் கதிரவன் தோன்றிய காலை என்பதனை அறிய முடிகிறது.

வீடணன் கும்பகருணனை இராமன் அணியில் சேர்க்க முயன்றான்; இயலவில்லை. போர் தொடங்கிற்று. நீலனும் அங்கதனும் அவனோடு போரிட்டு ஆற்றாமல் தோற்றனர். அனுமனும் கும்பகருணனும் வஞ்சினம் கூறித் தாக்கிக் கொண்டனர். கும்பகருணன் வலிமை கண்டு அனுமன் அப்பால் சென்றான். பின்னர் இலக்குவனும் சுக்கிரீவனும் அவனோடு மலைந்தனர். கும்பகருணன் நெருக்கிப் பிடிக்கச் சுக்கிரீவன் உணர்வு இழந்தான். அவனைத் தூக்கிக்கொண்டு இலங்கை செல்ல முயன்ற கும்பகருணனை இராமன் அம்பு எய்து தடுத்தான். கும்பகருணன் இரத்தம் தன்முகத்தில் பட்டதால் மயக்கம் தெளிந்த சுக்கிரீவன் அவன் மூக்கையும் காதையும் கடித்துச் சிதைத்தான். பின்பு இராமன் அம்புக்குக் கும்பகருணன் இரையானான்.

கும்பகருணன் போரிட்டுக் கொண்டிருந்த காலை வேளையில், இராவணன் மாயாசனகனைக் கொண்டு சீதையை வயப்படுத்த முயன்று தோற்றான். அவன் மாயாசனகனைக் கொல்ல முனைந்தான். அப்போது கும்பகருணன் இராமனால் கொல்லப்பட்டான் என்னும் துயரச்செய்தி கேட்டு அவன் வாய்விட்டுக் கதறினான். இவை இரண்டும் முற்பகல் நிகழ்ச்சிகளாகும்.

அடுத்து அதிகாயன் களம் புகுந்தான். அவன் படையைச் சார்ந்த தாருகன், குலிசன், காலசங்கன், மாலி, மருத்தன் ஆகியோர் இலக்குவனால் மாண்டனர். தேவாந்தகனையும் திரிசிரத்தானையும் அனுமன் அழித்தான். இலக்குவன் எய்த அயன்படையால் அதிகாயன் தலை அற்று வீழ்ந்தது. அது கண்ட அரக்கர் வானரரைக் கடுமையாகத் தாக்கினர். அங்கதனால் நராந்தகனும், நீலனால் போர்மத்தனும், இடபனால் வயமத்தனும், சுக்கிரீவனால் கும்பனும், அனுமனால் நிகும்பனும் தொலைந்தனர். அரக்கர் தோற்றனர். இப்போர் மாலைப் பொழுதிற்கு முன்னர் முடிந்தது.

அரக்கியர் அழுவது கண்டு இந்திரசித்தன் தேர் ஏறி இமைப்பினில் இராவணனை அடைந்தான். தந்தையின் இசைவு பெற்றுப் பெரும்படையோடு போர்க்களம் புகுந்தான். அங்கே இலக்குவன் இராவணனோ இந்திரசித்தனோ வரக்கூடும் என்று எதிர்பார்த்து நின்றான். இலக்குவனுக்குத் துணையாக மேற்கு வாயிலில் இருந்து மாருதி வந்து சேர்ந்தான்.

இந்திரசித்தனுக்கும் இலக்குவனுக்கும் கடும்போர் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையில் இந்திரசித்தன் தனிமை கண்டு இரக்கம் கொண்டு மறைவது போல் சூரியன் மறைந்தான்.

''நிசாசரன் தனிமை நோக்கி
இரங்கினன் என்ன மேற்பால்
குன்றுபுக்கு இரவி நின்றான்'' *(8179)*

வீடணன், ''இன்னும் கால் நாழிகைப் பொழுதில் (ஆறுமணித் துளிகள்) இந்திரசித்தனை அழித்தால்தான் உண்டு. இல்லையெனில், அரக்கனுக்கு வலிமை கூடும் இரவுக்காலம் வந்துவிடும். அவனை அழிக்க இயலாது'' என்றான். இலக்குவன் இந்திரசித்தன் தேரை அழிக்க, அவன் வானில் மறைந்து நாகக்கணையை எய்தான். இதனால் அஃது இரவின் தொடக்கம் என்பது புலப்படுகிறது.

இராமன் போர்க்களத்தில் நிகழ்ந்தவற்றை அனலனால் அறிந்து அங்குச் சென்றான். நெருப்புக்கணை தொடுத்து (ஆக்நேயாஸ்திரம்) நிலவிய இருட்டை ஓட்டினான். தம்பியின் நிலைகண்டான்; தளர்ந்தான். அப்பொழுது கருடன் வர, நாகபாசம் கழன்றது. வானரர் ஆர்த்தனர்.

இராவணனுக்கு அவ் ஆரவாரம் திகைப்பினை ஏற்படுத்தியது. இந்திரசித்தனைத் தேடி அவன் மாளிகைக்கு விரைந்தான். இராமனும், அவனை நினைந்து ஏங்கும் சீதையும், அவளை நினைந்து மயங்கும் இராவணனும் தவிர, மற்றையோர் எல்லாம் உறங்கிக் கொண்டிருந்த

நேரம் அது. இராவணனோடு பெண்கள் விளக்கேந்திச் சென்றனர். அவர்கள் தூங்கிய விழியோடும், தள்ளாடிய நடையோடும் மயங்கிய நிலையில் சென்றனர்.

"தூங்கிய விழியார், தள்ளித்
துளங்கிய நடையார், வல்லி
வாங்கிய மருங்குல் மாதர்
அனந்தரால் மயங்கி வந்தார்" *(8281)*

இக்குறிப்புகள் அது நள்ளிரவு என்பதற்குச் சான்று பகர்கின்றன.

போர்க்களம் சென்று நிகழ்ந்தவற்றை அறிந்துவந்து இராவணனிடம் தெரிவித்த தூதர், "இராமன் நள்ளிரவில் களம்புகுந்து வீழ்ந்துகிடப்பவர்களைப் பார்த்து அழுதான்; இரங்கி ஏங்கினான். 'எல்லா உலகங்களையும் எரிப்பேன்' என்றான். அப்பொழுது கருடன் வந்தான்" என்றனர் (8295). இதனால் கருடன் வருகை நள்ளிரவு நிகழ்ச்சி என்பது தெரிகிறது.

இந்திரசித்தன் இராவணனிடம் தன் தளர்ச்சியைக் கூறி, இரவு ஓய்வெடுத்து மறுநாள் போருக்குச் செல்வதாகத் தெரிவித்தான். இராவணன் தன் அரண்மனைக்குத் திரும்பினான். இந்திரசித்தன் ஓய்வுகொண்டாலும் இரவுப்போர் ஓயவில்லை. படைத்தலைவர் எழுவர் களம்புகுந்தனர். அவர்கள் மாபெரும்பக்கன், புகைநிறக்கண்ணன், வேள்விப்பகைஞன், சூரியப்பகைஞன், மாலி, பிசாசன், வச்சிரயெயிற்றன் ஆகியோர் ஆவர். அவர்கள் படைகளின் ஒளியால் எட்டுத்திக்கிலும் செறிந்திருந்த இருள் ஓடிற்று. 'இரிந்தது பேர் இருள் எண்திசை தோறும்' (8329) என்பது அஃது இரவுப்பொழுது என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

அப்போர் காலைவரை நீடித்தது. விடிவதற்குள் பத்து வெள்ளம் அரக்கர் சேனையுள் ஆறுவெள்ளத்தை இராமனும், எஞ்சிய நான்கு வெள்ளத்தை இலக்குவனும் அம்புக்கு இரையாக்கினர். அமர்க்களத்தில் குருதிவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. இரவுப்பொழுது முடிந்தது.

இருளாகிய யானையைத் தன்கதிர்களாகிய கரங்களால் அழித்த கதிரவன் உதிரவெள்ளத்தில் மூழ்கி எழுந்தவன் போலத் தோன்றினான். அஃது இருபத்தெட்டாம் நாள் (திரயோதசி).

"எதிரும் வல்இருட் கரிஇறுத் தெழுமுறை மூழ்கி,
உதிர வெள்ளத்தில் எழுந்தவன் ஆம்என உதித்தான்" (8356)

காலையில், இரவு நடந்த போரில் மாண்ட அரக்கர்களின் மனைவியர் களம் புகுந்து மடிந்த தம் கணவன்மாரைக் கண்டு கதறியழுதனர். ஆனால் இன்னொரு பக்கம் போர் தொடர்ந்து

நடந்துகொண்டிருந்தது. சூரியன் தோன்றிய பின்னரே தூமக்கண்ணன் (புகைநிறக்கண்ணன்) அனுமனாலும், மாபெரும்பக்கன் அங்கதனாலும், மாலியும் வேள்விப் பகைஞனும் பிசாசனும் இலக்குவனாலும், சூரியப்பகைஞன் சுக்கிரீவனாலும், வச்சிரத்துஎயிற்றன் அனுமனாலும் கொல்லப்பட்டனர். பிசாசன், 'நிலத்தின் மேலிருந்து போரிடுகிறானா? அன்றிக் கதிரவன்மேல் இருந்து போரிடுகிறானா?' என்று அறிய முடியாதவகையில் போரிட்டான்.

"பார்மே லினனோ? பகல்மே லினனோ?" *(8395)*

என்று அவன் போரிடும் வேகத்தைக் குறிப்பது. அது கதிரவன் நன்கு விளங்கும் காலைப் பொழுது என்பதனைப் பறையடிக்கிறது.

வான்மீகத்தில் இரண்டாம் நாள் (தசமி) காலையில் இராவணன் முதலில் நகரைக் காக்கும் படைகளைப் பார்வையிட்டான். அடுத்துப் பெரும்படையுடன் போர்க்களம் சென்ற பிரகத்தன் நீலனால் சாய்க்கப்பட்டான். அதனை அறிந்த இராவணன் தானே களம்புகுந்தான். முதலில் சுக்கிரீவனோடு மலைந்தான். அடுத்து அவனுக்கும் அனுமனுக்கும் இடையே நடந்த மோதலில், ஒருவரை மற்றொருவர் மார்பில் குத்தித் தங்கள் வலிமையை உணர்த்தினர். பின்னர் இராவணன், இலக்குவனை வீழ்த்தித் தூக்கிச் செல்ல முயன்று முடியாமல் விட்டான். இறுதியில் இராமனால் மகுடம் சிதைக்கப்பட்டு 'இன்றுபோய் மீண்டும் வா' என்று கூறி அனுப்பப்பட்டான். ஆயினும் அன்றைய போர் முடியவில்லை.

இராவணன் கும்பகருணனை எழுப்பிப் போருக்கு அனுப்ப அவன் இராமனால் கொல்லப்பட்டான். அடுத்து இராவணன் பிள்ளைகள் திரிசிரா, தேவராந்தகன், நராந்தகன் அதிகாயன் ஆகியோர் களம் புகுந்தனர். அவர்களுக்குத் துணையாகத் தன் தம்பியர் போர்மத்தனையும் (யுத்தோன்மத்தன்) வயமத்தனையும் (மத்தன்) இராவணன் அனுப்பி வைத்தான். அவர்களுள் நராந்தகனை அங்கதனும், தேவராந்தகனையும் திரிசிராவையும் அனுமனும், அதிகாயனை இலக்குவனும் அழித்தனர். போர்மத்தன் நீலனாலும், வயமத்தன் இடபனாலும் வீழ்ந்தனர். இராவணன் கண்ணீர் சிந்தித் தனிமையில் தவித்தான். இந்திரச்சித்தன் போருக்குப் புறப்பட்டுச் சென்று, பிரமாத்திரத்தால் இராமலக்குவரை வீழ்த்தி நகருக்குத் திரும்பினான்.

> *"அந்த வீரர்களான அனுமனும், அரக்கருள் சிறந்தவனான வீடணனும் சேர்ந்து அப்பொழுது இரவில் கொள்ளிக் கட்டைகளைக் கைக்கொண்டவர்களாய்ப் போர்க்களத்தில் திரிந்தனர்"* *(யு.74:9)*

*"உறுதிபடைத்த அறுபத்தேழு கோடி வானரர்கள்
பகலின் ஐந்தாவது பகுதியான மாலையில் பிரமதேவனின்
உகப்புக்குரிய இந்திரசித்தால் வீழ்த்தப்பட்டார்கள்" (யு.74:14)*

ஆகிய குறிப்புகளால் அஃது இரவின் தொடக்கம் என்பது தெளிவாகிறது. அனுமன் மருத்துமலை கொண்டுவர எல்லோரும் உயிர்த்தெழுந்தனர். மீண்டும் அந்த முன்னிரவில் வானரர்கள் போரினைத் தொடர்ந்தனர். அவர்கள் இலங்கையைக் கொளுத்தினர்.

இராவணன் கும்பகருணன்மக்கள் கும்பனையும் நிகும்பனையும் போர்க்களம் செல்லப் பணித்தான். அது பின்னிலவு தோன்றிய நேரம். இதனை,

*"நிலவொளியும், அணிகலன்களின் ஒளியும், எரியும்
வீடுகளின் ஒளியும் வானர அரக்கப் படைகளை
விளக்கமாகக் காட்டின" (யு.75:52)*

என்னும் குறிப்புக் காட்டுகிறது. அந்த இரவுப்போரில் சுக்கிரீவனால் கும்பனும் அனுமனால் நிகும்பனும் கொல்லப்பட்டனர். அதனோடு அன்றைய போர் முடிந்ததாகத் தெரிகிறது.

கம்பநாடர் முதல்நாள் போரிலேயே பிரகத்தன் பங்கேற்று நீலனால் மடிவதாகக் காட்டியுள்ளார். அதில் இராமன் இராவணனை, 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று கூறி விடுப்பதோடு அன்றைய போர் முடிந்துள்ளது. முதல்நாள் இரவில் போர் நிகழவில்லை, மேலும் வான்மீகிமுனிவர் இரண்டாம்நாள் இரவில் நடந்தனவாகக் காட்டியுள்ள கும்பகருணன். தொடக்கமானவர்களின் போர்கள் இரண்டாம்நாள் பகலில் நடந்தனவாகவும், அவர்கள் மாலைக்குள் மடிய இந்திரசித்தன் மீண்டும் களம் புகுந்ததாகவும், இரவின் தொடக்கத்தில் இலக்குவன் மீது நாகக்கணையை எய்து திரும்பியதாகவும் தீட்டியுள்ளார். அன்று நள்ளிரவுக்குப்பின் படைத்தலைவர்கள் களம் புகுந்து விடியும்வரை போரிட்டு மாண்டனர் என்பது கம்பநாடரின் சித்திரிப்பு.

மூன்றாம்நாள் போர்

கம்பநாடர் மூன்றாம்நாள் போரைப் பின்வருமாறு தந்துள்ளார். இராவணன் படைத்தலைவர் வீழ்ச்சியைத் தூதர் சொல்லக் கேட்டு வருந்தினான். கரன்மகன் மகரக்கண்ணன் தன்னை ஏவினால் தன் தந்தையைக் கொன்ற இராமனைக் கொன்று பழிதீர்ப்பதாய்த் தெரிவித்தான். ஐந்து வெள்ளம் படையோடு புறப்பட்ட அவனுக்குத் துணையாக இராவணன் தன் படையுள் ஐந்து வெள்ளத்தை உடன் அனுப்பினான். அவனோடு குருதிக்கண்ணன், சிங்கன் ஆகிய இருவரும் களம் இறங்கினர். படைகள் ஏந்திச் சென்ற கொடிகளின்

வரிசையால் சூரியன் ஒளி மறைய நிழல் உண்டாயிற்று.

"பல்பெரும் பதாகைப் பந்தி
மீமிசைத் தொடுத்த பந்தர்
எல்லவன் சுடர்ஒண் கற்றை
முற்றஇன் நிழலை ஈய" *(8411)*

என்பதனால் அது நண்பகற்பொழுது என்பது விளங்குகிறது. மாயப் போர் புரிந்த மகரக்கண்ணனை இராமன் வீழ்த்தினான். குருதிக்கண்ணன் நளனாலும், சிங்கன் பனசனாலும் மாண்டனர். பத்துவெள்ளம் படையும் அழிந்தது.

அதனை அறிந்த இராவணன் இந்திரசித்தனை அழைத்தான். இந்திரசித்தன் அறுபது வெள்ளம் படையோடு களம்புக, வானர வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். அனுமன் தோளில் இராமனும், அங்கதன் தோளில் இலக்குவனும் ஏறிக்கொண்டனர். அரக்கர், கடவுளர் படைகளை ஏவினால் அவற்றைத் தாங்கும் வலிமை இல்லாதவர்கள் என்பதால் மற்றவர்களைப் பின்னால் நிறுத்தி இராமன் தன் தம்பியோடு முன்னால் நின்று இந்திரசித்தனை எதிர்த்தான். இலக்குவனும் இந்திரசித்தனும் ஒருவரை ஒருவர் கொல்வதாக வஞ்சினம் கூறிப் போரிட்டனர். இலக்குவன் அரக்கனின் கங்கணத்தையும் கவசத்தையும் தகர்க்க அவன் விசும்பில் மறைந்தான். அதுகண்டு இலக்குவன் அயன்படையை விடுவதற்கு எடுக்க இராமன் தடுத்து நிறுத்தினான். இந்திரசித்தன் தெய்வப் படையை விட எண்ணி மறைந்துசென்று இலங்கையை அடைந்தான். அவன் கருத்தறியாத இராமலக்குவர் போர்க்கோலம் களைந்தனர். சூரியனும் மறைந்தான். அஃது இந்திரசித்தன் இலக்குவன்மேல் அயன்படையைச் செலுத்துவதனைக் காண விழையாமல் அவன் மறைவது போல இருந்தது.

"ஆர்த்த சேனையின் அமலைபோய் விசும்பினை அலைக்க,
ஈர்த்த தேரொடும் கடிதுசென் றான்அகன்று இரவி;
தீர்த்தன் மேல்அவன் திசைமுகன் படைக்கலம் செலுத்தப்
பார்க்கி லேன்முந்திப் படுவல்என் பான்எனப் பட்டான்"
(8527)

இராமன் இரவும் பகலும் போர்புரிந்து சேனை சோர்ந்துள்ளதாய்க் கூறி அதற்கு உணவு கொண்டுவர வீடணனை அனுப்பினான். இலக்குவனைச் சேனைக்குப் பாதுகாப்பாக இருக்கச் சொல்லிவிட்டுத் தான் படைக்கருவிகளுக்குப் பூசனை செய்யப் போர்க்களம் விட்டுப் போனான்.

இந்திரசித்தன் அயன்படையை வீசி வானரப்படையினை அழிக்கத் திட்டமிட்டான். அதற்கு இசைந்த இராவணன், இராமலக்குவர்

இந்திரசித்தனை மறப்பதற்காக மகோதரனைப் போர்க்களத்திற்கு அனுப்பினான். மகோதரன், அகம்பனன் முதலிய அரக்கர்களைக் கொண்ட நூறு வெள்ளம் சேனையோடு சென்று கடும்போர் புரிந்தான். அனுமன் அகம்பனனைக் கொன்றான். மகோதரன் மாயையால் செறிந்த இருளை உண்டாக்கிப் போரிட்டான். வானர வீரர்கள் ஒருவரை ஒருவர் அறியாமல் கலங்கினர். இலக்குவன் முக்கணான் படையை ஏவ, இருள் அகன்றது. மாபெருந்தேரில் நின்ற மகோதரன் அவ்விடத்தை விட்டு மறைந்தான். அரக்கர் சேனை முற்றும் அழிந்தது.

தூதர் இர்ாவணனுக்குச் செய்தி தெரிவித்தனர். போர்க்களத்தில் அரக்கர்களின் மலை போன்ற உடலில் இருந்து எழுந்த குருதித்தாரை வானத்தையுற்றுத் தீப்போலக் காட்சியளித்தது. அக்காட்சி, இலக்குவனை அரசகுமாரன் என்று அறிந்து இரவுப்பொழுது கைவிளக்கு ஏந்தினாற்போன்று இருந்ததாகக் கூறப்படுவதால் (8588) அப்போர் இரவின் முற்பகுதியில் நிகழ்ந்தது என்பது தெளிவாகிறது.

இந்திரசித்தன் பிரமாத்திரத்தை ஏவுதற்காக வேள்வி இயற்றி வானில் மறைந்து போர்க்களம் நோக்கிச் சென்றான். மாயையில் வல்ல மகோதரன் இந்திரன் வடிவம் கொண்டு முனிவர், தேவர் முதலியவர்களோடு தோன்றி வானர வீரர்களோடு மோதி அவனுக்கு உதவினான். அப்போது இந்திரசித்தன் அயன்படையை விடுத்தான். தந்தையிடம் சென்று இலக்குவன் முதலியோர் மாண்டதாகக் கூறினான்.

படைக்கருவிகளுக்கு வழிபாடு செய்துவிட்டுப் போர்க்களம் புகுந்த இராமன் கொள்ளிக்கட்டை போன்ற அனலிப் படையினைக் கொண்டு இருளை அழித்தான். வீழ்ந்து கிடக்கும் இலக்குவன் முதலியோரைக் கண்டு ஒருநாழிகை மயங்கிக் கிடந்தான். அன்பு மிகுதியால் உயிர் உள்ளே அடங்கப் பெற்றான். தூதர் இராவணனிடம் இராமன் உள்ளிட்டோர் மாண்டதாகத் தெரிவித்தனர்.

இராவணன் மகிழ்ச்சி மிக்கவனாய் வெற்றி விழாக் கொண்டாடக் கட்டளையிட்டான். அரக்கியர்களைக் கொண்டு சீதையைக் களங்காணச் செய்வித்தான். அவள் ஆற்றாது அழுதாள். இதுவும் முன்னிரவு நிகழ்ச்சியே ஆகும்.

''இன்னும்இவ் இரவு முற்றும்
இருக்கின்றேன்; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்தது அன்றே'' *(8700)*

என்னும் சீதையின் பேச்சு இதற்குச் சான்றாய் இலங்குகிறது.

உணவு கொண்டு களம் புகுந்த வீடணன் கொள்ளிக்கட்டை ஒன்றைக் கையில் ஏந்தி அனுமனைத் தேடிக் கண்டான். சாம்பன்

அறிவுரைப்படி, அனுமன் மருத்துமலை கொண்டுவர விரைந்தான். அவன் கைலைமலையைக் கடந்து சென்று மருத்துமலையைக் கொண்டு வர, வீழ்ந்தவர் எல்லாரும் உயிர்த்தெழுந்தனர். நள்ளிரவுக்குள் மருத்து மலையைக் கொண்டுவரக் கருதியிருந்த அவன், வழியில் உத்தரகுருவைக் கண்ட போது சூரியன் உதித்துவிட்டதாக மயங்கிக் கலங்கினான் என்று குறிக்கப்பட்டுள்ளது.

"ஆதியான் உணரா முன்னம்
அருமருந்து உதவி, அல்லின்
பாதியால் அனைய துன்பம்
அகற்றுவான் பாவித் தேற்குச்
சோதியான் உதயம் செய்தான்" (8757)

இதனால் அனுமன் மருத்துமலையைக் கொண்டுவந்தது இரவின் நடுப்பகுதியில் என்பது தெளிவு.

அனுமன் நெடுந்தொலைவு சென்று மருத்துமலையைக் கொண்டுவர நெடும்பொழுது ஆகியிருக்கும் என்னும் நினைப்புத் தோன்றலாம். ஆனால் அச்செயல் சில நாழிகைக்குள் நடந்து முடிந்ததாகும்.

"பொழுதுஇறை தாழாது என்சொல்
நெறிதரக் கடிது போதி" (8725)

"அங்குஅது வேரொடும் அங்கை தாங்கினன்
பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான்" (8765)

"ஏ' எனும் மாத்திரத்து ஒருகை ஏந்தினான்
தாயினன் உலகெலாம் தவழ்ந்த கீர்த்தியான்" (8766)

என்னும் பாடற்பகுதிகள் முறையே சாம்பன் அனுமனிடம் விரைந்து செல்லப் பணித்தது. அனுமன் விரைந்து மலையை வேரொடும் பேர்த்துக் கொண்டு வந்தது, கையில் ஏந்தியவாறு நொடியில் பறந்தது ஆகியவற்றைக் கூறிச் செயல் நிகழ்ந்த வேகத்தினை உணர்த்துகின்றன.

இலக்குவனும் வானரர்களும் உயிர்த்தெழுந்தனர். இராமன் தன் தம்பியைத் தழுவி மகிழ்ந்தான். வானரசேனையின் ஆர்ப்பொலி களியாட்டத்தில் திளைத்த இராவணன் செவியில் புகுந்தது. அவன் முகங்களாகிய பத்துத் திங்களுக்கு அவ்விரவும் பகல் போல மாறியது. ஒற்றர்கள் களத்தில் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தனர்.

இராவணன் மந்திராலோசனை மண்டபம் சேர்ந்தான். மந்திராலோசனைக்குப் பின், இந்திரசித்தன் மாயாசீதையை வெட்டிவிட்டு அயோத்தி செல்வது போலப் போக்குக் காட்டிவிட்டு நிகும்பலைக்கு வேள்வி செய்யப் போனான். அதற்குள்

மருத்துமலையை உரிய இடத்தில் வைத்துவிட்டு மீண்ட அனுமன் அக்காட்சியைக் கண்டு அரற்றினான். வீடணன் வண்டுருவம் கொண்டு அசோகவனம் விரைந்து சீதை ஊறின்றி இருப்பதைக் கண்டு மீண்டான்.

வானரர்கள் நிமிர்கொள்ளி ஏந்தி நிகும்பலை சென்று வேள்வியைக் குலைத்தனர். இந்திரசித்தனுக்கும் இலக்குவனுக்கும் இடையே போர் தொடர்ந்தது. போரின் இடையே, இந்திரசித்தன் இராவணனைச் சென்று கண்டு அறிவுரை கூறினான். அது பயனின்றிப் போகவே மீண்டும் போர்வெறியோடு களம் புகுந்தான்.

"விரவியதுஅவ்,
இருள்பகல் உறவரு பகைஇரதம்" *(9134)*

என்று அவனது தேர் இரவைப் பகலாக்கிக் களம் புகுந்ததனைக் குறித்தலால், அஃது இரவின் கடைப்பகுதியாகத் தோன்றுகிறது. இலக்குவனால் உடன் இந்திரசித்தனைக் கொல்ல இயலவில்லை. அப்பொழுது பொழுது விடிந்தது. இலக்குவன் பிறைமுகஅம்பு எய்து இந்திரசித்தன் தலையை அறுத்தான்.

வான்மீகிமுனிவரும் மூன்றாம் நாள் போர் மகரக்கண்ணன் களம் புகுவதிலிருந்து தொடங்குவதாகவே காட்டியுள்ளார். அவன் மாண்டவுடன் இந்திரசித்தன் களம் புகுதல், போரின் இடையில் இந்திரசித்தன் இலங்கை நகருக்குத் திரும்பி மாயாசீதை உருவத்தைப் படைத்துத் தேரில் ஏற்றிச் சென்று அனுமன் முன்பு வெட்டுதல், வேள்வி செய்ய நிகும்பலை செல்லுதல், வீடணன் உண்மையை உணர்த்துதல், இலக்குவன் நிகும்பலை சென்று வேள்வியை அழிக்க மீண்டும் போர் தொடங்குதல் முதலிய நிகழ்ச்சிகள் அன்று நிகழ்ந்தனவாகக் கூறியுள்ளார். ஆனால் வீடணன் வண்டுருவம் கொண்டு செல்லாமல் தன் கூர்த்த அறிவினால் உண்மையைக் கண்டறிந்ததாகக் காட்டியுள்ளார். வான்மீகத்தில் இவை பகல் நிகழ்ச்சிகளாக இடம்பெற்றுள்ளன. வான்மீகம் அன்று (ஏகாதசி) முதல் மூன்று இரவுகள் போர் நடந்தது என்றும் மூன்றாம் நாள் (திரயோதசி) இரவு பிற்பாதியில் இந்திரசித்தன் வதம் நிகழ்ந்தது என்றும் காட்டியுள்ளது.

"மூன்று இராப்பகல்கள் பாடுபட்டு வீரன் இந்திரசித்தன்
வீழ்த்தப்பட்டான் *(யு.92:18)*

என்கிறது வான்மீகம்.

இதனால், வான்மீகத்தின்படி இந்திரசித்தன் முதல்நாள் நாகபாசத்தை வீசியும் இரண்டாம் நாள் பிரமாத்திரத்தைச் செலுத்தியும், மூன்றாம் நாள் மாயாசீதையை வெட்டியும், அதன்பின் மூன்று இரவு பகல்கள்

தொடர்ந்து போரிட்டும் போர் தொடங்கி ஆறு நாள்களுக்குப் பின் வீழ்ந்தான் என்று ஆகிறது. போர் நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு ஏதுமின்றி வறிதே மூன்று இரவு பகல்கள் போரிட்டதாகக் குறிப்பது சுவைக்குறைவாக அமைகிறது. இவ்வாறன்றிக் கம்பநாடர், இந்திரசித்தன் இரண்டாம்நாள் களம்புகுந்து பிற்பகல் முதல் இரவு வரையிலும் போரிட்டுத் திரும்பினான் என்றும், மூன்றாம் நாள் பிற்பகல் தொடங்கி நான்காம் நாள் விடியும் வரையிலும் போரிட்டு வீழ்ந்தான் என்றும் காட்டுவது செறிவும் தெளிவும் மிக்கதாக அமைந்துள்ளது. கம்பராமாயணப்படி இந்திரசித்தன் போரில் இரு பகல்களிலும் இரண்டு இரவுகளிலும் மட்டுமே ஈடுபட்டுள்ளான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நான்காம்நாள் போர்

நான்காம்நாள் காலையில் இந்திரசித்தன் வதம் நிகழ்ந்தது. அவன் மாண்ட நேரம் பற்றித் தெளிவாகக் கம்பராமாயணம் தெரிவிக்கிறது. மூன்றாம் நாள் இரவின் கடைசிப் பகுதியில் இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் இடையே கடுமையாகப் போர் நடந்தது. இருவரும் தீ அம்புகளைச் சொரியும் மேகங்களாகக் காட்சியளித்தனர். இந்திரசித்தன் தன்மார்பில் தைத்த அம்புகளைப் பறித்து அவற்றைப் பகைவர்மேல் செலுத்தினான். அவன் வீரம் கண்டு தெய்வப் பொற்பூக்களைத் தூவி அமரர் பாராட்டினர். இலக்குவனும் வியந்தான். அப்பொழுது வீடணன், ''இவன் பகலிலன்றி இரவில் சாகான்; இப்பொழுது மாயம் செய்து மறைந்தாலும் மறையலாம்; ஆதலின் உண்மை அறிந்து கருத்தோடு போர் செய்'' என்று இலக்குவனிடம் கூறினான்.

''தேரினைக் கடாவி, வானில்
செல்லினும் செல்லும்; செய்யும்
போரினைக் கடந்து, மாயம்
புணர்க்கினும் புணர்க்கும்; போய்அக்
காரினைக் கடந்தும் வஞ்சம்
கருதினும் கருதும், காண்டி,
வீர! மெய்; பகலின் அல்லால்
விளிகிலன் இருளின் வெய்யோன்'' *(9147)*

இதற்கு, ''வீடணன் இந்திரசித்தின் மாயச் செயல்களை எடுத்துக் காட்டியும், இரவு வந்தால் அவனை வெல்வதரிது என்பதைக் கூறியும் அப்பொழுதே அவனை முடித்திவிட வேண்டுமென்று இலக்குவனை வற்புறுத்துகின்றான்'' என்று உ.வே.சா. நூல் நிலையப் பதிப்பில் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. இது, போர் பகலில் நடந்தது போலவும், இரவு வர இருப்பது போலவும் தவறான எண்ணத்தைத்

தோற்றுவிக்கிறது. அஃது இரவுப்பொழுது கழிந்து விடியும் நேரம் என்பது பின்னே உள்ள பாடல்களால் ஐயத்திற்கு இடமின்றி விளங்குகிறது. சூரியன், இரத்தம் போன்ற செந்நிறத்தோடு கிழக்கே பொருந்தியிருந்தான்; அம்புகளைப் போன்ற ஆயிரம் கதிர்களோடு விளங்கினான்; வெம்புகின்ற பொன்தேரில் தோன்றினான். இவற்றால் அவன், தன் உடம்போடு விண்ணில் செல்லும் இந்திரசித்தனைப் போன்று காட்சி தந்தான்.

''செம்புனல் சோரிச் செக்கர்
திசைஉறச் செறிகை யாலும்
அம்புஎன உற்ற கொற்றத்து
ஆயிரம் கதிர்க ளாலும்
வெம்புபொன் தேரில் தோன்றும்
சிறப்பினும் அரக்கன் மெய்யோடு
உம்பரில் செல்கின் றான்ஒத்து
உதித்தனன் அருக்கன் உப்பால்'' *(9149)*

அப்பொழுது இலக்குவன், ''இராமன் நல்லற மூர்த்தி என்பது உண்மையானால் இவனைக் கொல்வாய்'' என்று கூறி இந்திரசித்தன் மீது அம்பு எய்ய, அஃது அவன் தலையைக் கொய்தது. தேவர்கள் உடுத்திருந்த ஆடையை விண்ணில்வீசி ஆரவாரம் செய்தனர். அப்பொழுது அவர்கள் ஆடை அணியாத அருகக்கடவுளர் போலக் காட்சியளித்தனர். அங்கதன், இந்திரசித்தன் தலையை ஏந்திவர இலக்குவன் இராமனை அடைந்தான். அவன் தம்பியைத் தழுவியும் வீடணனைப் பாராட்டியும் மகிழ்ந்தான்.

இந்திரசித்தன் இறப்பினைத் தெரிவித்த தூதர்களை இராவணன் வாளால் வெட்டி வீழ்த்தினான். அவன் பத்துத் தலைகளும் புலம்பின. போர்க்களம் சென்று தலையற்றுச் சிதைந்து கிடந்த மகன் உடலைத் தேடி எடுத்துக்கொண்டு இலங்கையுள் நுழைந்தான். மண்டோதரி, மகன் இறப்பினைத் தாங்கமுடியாமல் கதறினாள்.

இராவணன் தன்மகன் உடலைத் தைலத்தோணியில் இடப் பணித்தான். அமரர் அறிஞர் க.கு.கோதண்ட ராமக் கவுண்டர் நான்காம் நாள் இந்திரசித்தன் வதமும் ஐந்தாம்நாள் மூலபலவதை முதல் இராவணன்வதை வரை நிகழ்ந்தனவாய்க் கூறுகிறார். இதற்கு மாறாகவே கம்பநாடரின் நிகழ்ச்சிப்பகுப்பு அமைந்துள்ளது.

தன் அருமை மைந்தன் இந்திரசித்தன் உடலைத் தைலத்தோணியில் இட்டபின் அடுத்த நாள் வரை வாளா இருந்தான் என்பது பொருந்தாது. அதுபோழ்து இராவண்ன், ''என்மகன் தலையைக் கொண்ட பகைவர் தலையைக் கொண்டன்றித் திரும்பி வரமாட்டேன்'' என்று வஞ்சினம்

புகன்றுள்ளான். இதனால் அவன் உடனே போருக்குப் புறப்பட்டுள்ளான் என்பது தெளிவாகிறது. இச்செய்தியைத் தெரிவிக்கும் பாடலை அடுத்து,

''அத்தொழில் அவரும் செய்தார்;
ஆயிடை, அனைத்துத் திக்கும்
பொத்திய நிருதர் தானை
கொணரிய போய தூதர்
ஒத்தனர் அணுகி வந்து
வணங்கினர், இலங்கை உன்ஊர்ப்
பத்தியின் அடைந்த தானைக்கு
இடம்இலை; பணிஎன்? என்றார்'' (9247)

என்னும் பாடல் உள்ளது. இதில் வரும் 'ஆயிடை' என்னும் சொல் கருதத் தக்கது. ஆயிடை என்பது அதற்குள் (in the mean time) என்னும் பொருளைத் தருகிறது. இந்திரசித்தன் உடல் தைலத்தோணியில் இடப்படுவதற்குள் பல்வேறு திசைகளில்இருந்தும் படைகளைத் திரட்டிவரச் சென்ற தூதர்கள் படைகளோடு வந்து சேர்ந்தனர் என்பதனை அச்சொல் தெரிவிக்கிறது.

இராவணன் மூலமாத்தானையை இராமலக்குவரைக் கொன்று வருமாறு ஏவித் தான் வானரங்களை அழிக்கப் புறப்பட்டான். ஒரே சமயத்தில் இரு முனைகளில் போர் நிகழ்கிறது. ஒரு புறம் மூலமாத்தானைக்கும் இராமனுக்கும்இடையே போர்: மற்றொரு புறம் இராவணனுக்கும் வானரப்படைகளுக்கும்இடையே போர் (9301).

மூலமாத்தானையைக் கண்ட வானரங்கள் உயிருக்கு அஞ்சி, ''நமக்கு இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன!'' (9341) என்று கூறி ஓடின. அவற்றை அங்கதனும் சாம்பனும் தெருட்டிப் போர்க்களத்திற்கு அழைத்துவந்தனர். இராமன் தன் தம்பி இலக்குவனைச் சேனையினைக் காக்க அனுப்பினான். அவனுக்குத் துணையாகச் சுக்கிரீவனையும் மாருதியையும் அமைத்தான். தான் தன்னந்தனியனாய் நின்று அப்பெரும்படையைச் சந்தித்தான். இமையவர்கள் அக்கடும்போரில் இராமன் தோற்றுவிடுவானோ என்று அஞ்சிச் சிவபெருமானிடம் சென்று வணங்கி முறையிட்டனர். அப்பெருமான் ''இன்றைய கடும்பகலிலேயே சுக்கிரீவனை அடிமையாகக் கொண்ட புலிபோன்ற இராமன் இந்த அரக்கர்களைக் கொல்வான்'' என்றான்.

''இன்றுஒரு கடும்பகலிலே,
குரக்கின்முதல் நாயகனை ஆளுடைய
கோள்உழுவை கொல்லும் இவரை'' (9450)

இந்தப் போர் கடும்பகலில் ஏழரை நாழிகை நிகழ்ந்தது. அஃதாவது மூன்று மணிநேரம் நடந்தது. இதனை,

''பாறுஆ டுகளத்து ஒருவன், பகலின்
கூறுஆ கியநா லில்ஓர் கூறிடையே
நூறுஆ யினயோ சனைநூ ழில்கள்அம்
மாறாது உழல்சா ரிகைவந் தனனால்'' (9505)

''ஆனை ஆயிரம் தேர்பதி னாயிரம் அடல்பரி ஒருகோடி
சேனை காவலர் ஆயிரம் பேர்படின் கவந்தம்ஒன்று
எழுந்தாடும்;
கானம் ஆயிரம் கவந்தம்நின்று ஆடிடின் கவின்மணி
கணிலென்னும்;
ஏனை அம்மணி ஏழரை நாழிகை ஆடியது இனிதுஅன்றே''
(9513)

என்னும் பாடல்கள் தெரிவிக்கின்றன.

மூலபலஅழிவினை இராவணனிடம் அறிவித்த தூதர்கள் இப்போர் ஆறு நாழிகையில் முடிந்தது என்று தெரிவித்துள்ளனர்.

''இன்றுயார் விருந்துஇங்கு உண்பார்
இகல்முகத்து இமையோர் தந்த
வென்றியாய்! ஏவச் சென்ற
ஆயிர வெள்ளச் சேனை
நின்றுளார் புறத்தது ஆக
இராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினால் இரண்டு மூன்று
கடிகையின் உலந்தது என்றார்'' (9626)

என்பது சரியாகச் சொல்லப்பட்டதன்று; ஏறத்தாழச் சொல்லப் பட்டதாகும்.

மூலமாத்தானையின் அழிவுகண்டு தேவர்கள் துயர்தீர்ந்து இராமனை வாழ்த்தினர். இராமன் வானரச்சேனையைக் காத்துநின்ற இலக்குவனை நாடி வந்தான். இராமன் மூலமாத்தானையோடு போரிட்டுக் கொண்டிருந்தபோது, இராவணன் களம் புக, அவனை இலக்குவன் எதிர்த்துநின்றான். இராவணன் வீடணன்மீது செலுத்திய வேலினைத் தான் ஏற்று இலக்குவன் மாண்டான். இராவணன் இலங்கை திரும்பிப் போர்வீரர்களுக்கு விருந்தளிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். அனுமன், 'நினையும் அத்துணை மாத்திரத்துச்' (9569) சென்று முதல்நாள் கொண்டுவந்த மருத்துமலையை மீட்டும் அன்று கொண்டுவர, இலக்குவன் உயிர்பெற்று எழுந்தான். இஃது இராமன் மூலமாத்தானையோடு போரிட்டுத் திரும்புவதற்குமுன் நடந்து

முடிந்தது. இதனை அறிந்து இராமன் அனுமனை வாழ்த்தினான்; இலக்குவனைக் கொண்டாடினான்; தன் வில்லினை அனுமனிடம் கொடுத்துவிட்டுக் குன்றம் ஒன்றில் இளைப்பாறினான். மூலப்படையின் அழிவினை வானரர்கள் காணச் சென்றனர். இலக்குவன் உயிர்பெற்றதைத் தூதர் சொல்லக் கேட்ட இராவணன் கோபுரத்தில் ஏறிக் களத்தைக் கண்டான். அரக்கியர் அழுகையொலியைக் கேட்டான். அங்கிருந்து இறங்கி அரசியல்இருக்கை சேர்ந்தான்.

இந்த அளவில் அன்றைய போர் முடிந்தது. சூரியன் மறைவு பற்றிய குறிப்பு யாதும் இல்லை. எனினும், இராமன் மேற்கே குன்றில் தன் அயர்வு போக்கிக்கொண்டிருந்தான் என்பதும், இராவணன் களங்கண்டு அரசியல் இருக்கை புக்கான் என்பதும், சுக்கிரீவன் முதலான வானரர்கள் அரக்கர்படை அழிந்துகிடந்த களத்தினைக் காணச் சென்றனர் என்பதும் போரின் முடிவை உணர்த்துகின்றன. மேலும் கடுமையாகப் போரிட்டுப் பெரிய சேனை அழிந்த நிலையில், அன்று இலக்குவனோடு போரிட்டுச் 'சிதைந்தது என் சேனை' (9542) என்று கலங்கி அவன்மீது வேலினை எறிந்து திரும்பிய இராவணனால் உடன் போருக்கு எழ முடியாமல் போய்விட்டது.

வான்மீகம் மூலமாத்தானை ஆறாம்நாள் காலையில் தேய்பிறைச் சதுர்த்தசியில் இராமனோடு போரிட்டதாகக் கூறுகிறது. அன்று விடிவதற்கு முன்பே இந்திரசித்தனை இழந்த இராவணன், விடியற்காலத்தில் சீதையை வெட்டித் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள முயன்றான். அப்பொழுது அவனைத் தடுத்து நிறுத்திய மகோதரன் (சுபார்சுவன்),

> *"தாங்கள் தேய்பிறைச் சதுர்த்தசியாகிய இன்றே வெற்றியின் பொருட்டுப் படைகள் சூழப் போருக்கு எழுந்து அமாவாசையில் வெளிப்படுவீராக"* *(யு. 93:68)*

என்றான்.

இதனால் அன்று தேய்பிறைச் சதுர்த்தசி என்பது தெளிவாகிறது. இராவணன் அரசவையை அடைந்து படைத்தலைவர்களைப் பார்த்து இராமனைக் கொல்லச் செல்லுமாறு வேண்டினான். அன்று அவர்கள் கொல்லவில்லை என்றால் மறுநாள் தான் அச்செயலைச் செய்வதாகவும் அறிவித்தான் (யு.94:3,5). மூலபலம் போருக்கு எழுந்தது.

> *"கதிரவன் தோற்றம் முதல் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும்இடையே நடந்த அந்தப் போர் மிகவும் அஞ்சத்தக்கதாகவும், குழப்பம் மிக்கதாகவும் இருந்தது"* *(யு.94:9)*

என்னும் குறிப்பால் அப்போர் காலை முதல் நிகழ்ந்தது என்பது வெளிப்படை. அப்படை மிக விரைவிலேயே அழிக்கப்பட்டது. அதனை,

தி$_3$வஸஸ்ய அஷ்டமே பா$_4$கே$_3$ சரை: அக்$_3$னி சிகோ$_2$பமை:
ஹதா ஏகேந ராமேண ரக்ஷஸாம் காமரூபிணீம் (யு.94:33)

என்று குறிக்கிறார் வான்மீகிமுனிவர்.

இதற்கு, ''நினைத்த உருவம் எடுக்கவல்ல அரக்கர்களின் படையும் ஸ்ரீராமர் ஒருவரால் அக்னி ஜ்வாலையை நிகர்த்த பாணங்களால் ஒரு முகூர்த்த நேரத்தில் அழிக்கப்பட்டது'' என்று பொருள் கூறியுள்ளார், திரு. பி.எஸ். கிருஷ்ணஸ்வாமிஐயர். இதனைத் திரு. எஸ். சாம்பமூர்த்தி சாஸ்த்ரி, ''ஸ்ரீராமர் ஒருவரே ஒருமுகூர்த்த நேரத்தில் அழித்தார்''* என்று மொழி பெயர்த்துள்ளார். 'தி$_3$வஸஸ்ய அஷ்டமே பா$_4$கே' என்பதற்கு 'ஒருநாளின் எட்டில் ஒரு கூறு' என்று பொருள் கொள்வதே சிறப்பு. ஒருநாள் அறுபது நாழிகைகளைக் கொண்டது. அதன் எட்டில் ஒருபகுதி ஏழரை நாழிகையாகும். இதனால்தான் கம்பநாடர் இப்போர் ஏழரை நாழிகை நடந்ததாகக் குறித்துள்ளார்.

இராமாயண சார சங்கிரகம் மூலப்படை அழிந்தபின், ''இலங்கையில் உறையும் அரக்கர்கள் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தமையால் அன்று எஞ்சிய பகலிலும் இரவிலும் போர் நடைபெறவில்லை''

ததோ லங்காநிவாஸிநாம் ராகூஷஸாநாம் அதிது$_3$:க$_2$தயா,
தத் தி$_3$வஸ சேஷம்அபி ராத்ரிம்அபி யுத்$_3$த$_4$ம் ந'' (ப.48)

என்று குறிப்பிடுகிறது. இராவணன் மறுநாள் போர்க்களம் செல்லத் திட்டமிட்டிருந்தாலும், அரக்கியர் அழுகையொலி கேட்டுச் ''சிறிது நேரம் சிந்தையில் ஆழ்ந்தவனாய் இருந்து (முஹூர்த்தம் த்$_4$யாநம் ஆஸ்தி$_2$த: யு.96:2) அன்றே (தேய்பிறைச் சதுர்த்தசி) புறப்பட்டான் என்று கருதும்வகையிலேயே அமைந்துள்ளது.

இராவணன் விருபாக்கன், மகோதரன், மாபெரும்பக்கம் ஆகிய்வர்களோடு களம்புகுந்தான். அப்பொழுது 'கதிரவன் ஒளி குன்றினான்' (யு.96:39) என்று குறிப்பதால் அது பகல்வேளை என்பது தேற்றம். சுக்கிரீவனால் நெற்றியில் அறையப்பட்டு விருபாக்கனும், தலைவெட்டப்பட்டு மகோதரனும் வீழ, அங்கதனால் குத்துண்டு மாபெரும்பக்கன் மடிந்தான். இராமராவணப் போர் தொடங்கிற்று. போரிடையே வீடணனைப் பாதுகாத்துவந்த இலக்குவன்மீது சீற்றங்கொண்டு இராவணன் சத்தி என்னும் வேலினை வீசினான்.

---

* *ஸ்ரீ வால்மீகி ராமாயணம் மொழிபெயர்ப்பு, யு.ப.211.*

இராமன் தன்னுடைய அம்புக்கு ஆற்றமாட்டாமல் இராவணனை ஓடச் செய்து, இலக்குவனிடம் வந்தான். அனுமன் விரைந்து சென்று மருத்துமலை கொண்டுவர இலக்குவன் பிழைத்தெழுந்தான். அவன் இராமனிடம்,

> *"யான் ஆற்றல்மிக்க இப்பகலவன் மறைவதற்கு முன்பே*
> *விரைந்து இத்தீயோன் கொல்லப்படுவதனை விழைகிறேன்"*
> *(யு.102:53)*

என்று கூறுவதால் இலக்குவன் வேலேற்ற நிகழ்ச்சி மாலைக் காலத்துக்கு முன்பு நிகழ்ந்ததாகும்.

இலக்குவன் கருத்தினை ஏற்று இராமன் போரினைத் தொடர்ந்தான். இந்திரன் அனுப்பிய தேரில் ஏறி இராமன் அம்பு தொடுக்க இராவணன் சோர்வடைந்தான். இராவணன் தேரோட்டி தேரினைக் களத்தினின்றும் அப்பால் ஓட்டி நிறுத்தினன். அவன்மீது வெகுண்ட இராவணன் அவன் உரைத்த சொற்களால் தெளிந்து அவனுக்குத் தங்கக் காப்புப் பரிசளித்தான்.

இதற்கிடையில் போரைக் காண வந்த அகத்தியன், "போரிட்டுக் களைத்துக் களத்தில் கவலையுடன் நின்று கொண்டிருக்கும் இராவணனை முன்னே கண்டு" (யு.117:1) இராமனுக்கு வெற்றியுண்டாக 'ஆதித்ய ஹிருதய' மந்திரத்தை அவனுக்குச் சொல்ல, அவன் அதனைத் தியானித்தான்.

> *"ஆற்றல் மிக்க இராமன் மும்முறை நீரால் தூய்மை*
> *செய்துகொண்டு வில்லைக் கையில் ஏந்திக் கதிரவனை*
> *நோக்கி மந்திரத்தை உருவேற்றி மிக்க மகிழ்ச்சி*
> *கொண்டான்" (யு.107:29)*

என்பதால் அது மாலைச்சந்தி நிகழ்ந்த வேளை என்பது தெரிகிறது. சூரியன் இராமனிடம் போரை விரைவுபடுத்தப் பணித்தான்.

இராவணன் மீண்டும் களம் புகுந்தபோது (பதிதா வேகே₃ ந மஹதா புந: யு.108:10) தீய நிமித்தங்கள் ஏற்பட்டன.

> *"செம்பருத்திப் பூவைப் போன்ற சிவந்த சந்திவேளை*
> *ஒளியால் சூழப்பட்ட இலங்கை பகலிலேயே பற்றி எரியும்*
> *பூமித்தலம் போன்று காணப்பட்டது" (யு.108:24)*

> *"இராவணன் உடலில் சிவப்பும், மஞ்சளும், வெளுப்புமாக*
> *விழுந்த சூரியக்கதிர்கள் மலையில் கிடக்கும் தாதுக்கள்*
> *போலக் காணப்பட்டன" (யு.108:28)*

இவையும் அந்திவேளை என்பதற்குச் சான்று பகர்கின்றன.

இருபக்கச் சேனைகளும் அசைவற்று நிற்க, இராமனும் இராவணனும் மட்டும் தனியே போரிட்டனர். இராமன் இராவணனின் தேர்க்கொடியை வீழ்த்தினான். இராவணன் இராமனின் தேரோட்டி மாதலியின்மேல் அம்புகளை ஏவினான். இராமன் கணையொன்றினால் இராவணன் தலையை அறுத்தெறிந்தான். அவன் தலையை அறுக்க அறுக்க அது மீண்டும் முளைத்துக்கொண்டே இருந்தது. இந்த மோதல் இரவெல்லாம் நடந்தது.

> *''தேவர்களும் தானவர்களும் இயக்கர்களும் பிசாசர்களும் அரக்கர்களும் பார்க்கும்போதே இரவு முழுவதும் அந்தப் பெரும்போர் நிகழ்ந்தது'' (யு.110:38)*

என்கிறார் வான்மீகிமுனிவர்.

வான்மீகத்தில் காலையிலேயே மூலப்படை அழிந்ததாகக் காட்டப்படுவதால் பிற்பகலில் இராவணன் களம்புகுந்து தொடர்ந்து போரிடுவதாகக் காட்டியுள்ளமை பொருத்தமாக உள்ளது. கம்பராமாயணத்தில் மூலபலம் பிற்பகலில் வீழ்ந்தது என்பதால் அன்று இரவுப் போர் நடைபெறவில்லை என்பது அது சொல்லிச் செல்லும் முறைக்கு ஏற்பவே அமைந்துள்ளது. வான்மீகத்தில் இடம் பெற்றுள்ள மூலப்படைப்போரில் புட்கரத்தீவின் தலைவன் வன்னி பற்றியோ அவன் இராவணனிடம் நிகழ்த்தும் உரையாடல் பற்றியோ எக்குறிப்பும் இல்லை. கம்பநாடர் மூலப்படையின் ஆற்றலினை வான்மீகிமுனிவரினும் மிகுத்தும் கற்பார் உளங்கொள்ளும் வகையிலும் காட்டியுள்ளமை இருநூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நன்கு விளங்கும்.

ஐந்தாம்நாள் போர்

கம்பநாடர், மூலப்படை அழிந்த மறுநாள் இராவணவதம் நிகழ்ந்ததாகச் சித்திரித்துள்ளார். அன்று பௌர்ணமி. இராவணன் சிவபெருமானுக்கு முறைப்படி பூசனைகள் செய்து வழிபட்டுத் தக்கவர்களுக்குத் தானம் வழங்கிப் போர்க்கோலம் பூண்டான். தேருக்கு அருச்சனை நிகழ்த்தித் தொழுது அதன்மேல் ஏறினான். ''சீதை வயிற்றில் அடித்துக்கொண்டு துன்பத்தில் மூழ்குவாள்; இல்லையேல், மண்டோதரி அந்நிலை அடைவாள். இன்று இரண்டில் ஒன்று நிகழுமாறு செய்வேன்'' என்று வஞ்சினம் உரைத்தான்.

> *'' மன்றல் அம்குழல் சனகிதம் மலர்க்கையான் வயிறு*
> *கொன்று அலந்தலைக் கொடுநெடுந் துயரிடைக் குளித்தல்;*
> *அன்றுஇது என்றிடின் மயன்மகள் அத்தொழில் உறுதல்;*
> *இன்று இரண்டின்ஒன்று ஆக்குவென், தலைப்படின் என்றான்''*
> *(9667)*

இராமனும் தேரேறிப் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான். ''சீதையின் துயரத்திற்கும் தேவர்களின் பெருந் துயரத்திற்கும் இன்று முடிவு ஏற்பட்டுவிடும்'' என்றான். சிவபெருமான் அன்றோடு போர் முடியும் என்று கூறி இராமனுக்குத் தேர் அனுப்புமாறு இந்திரனிடம் தெரிவித்தான். அவன் மாதலி என்பவனைத் தேரோட்டிச் செல்லுமாறு கட்டளையிட்டான்.

''மடக்கொடி துயர்க்கும்நெடு வானில்உறை வோர்தம்
இடர்க்கட லினுக்கும் முடிவு இன்றுஎன இசைத்தான்''
(9678)

''முண்டசெரு இன்றுஅளவில் முற்றும்;இனி வெற்றி
ஆண்டகையது; உண்மைஇனி அச்சம்அகல் வுற்றீர்'' (9681)

இப்பாடற்பகுதிகளில் வரும் 'இன்று' என்னும் சொல் அது பிறிதொரு நாள் என்பதனைக் காட்டுகிறது.

இராவணனோடு களம் புகுந்த மகோதரன் முதலில் இராமனோடு போரிட்டு மாண்டான். இராமனுக்கும் இராவணனுக்கும் நேரடி மோதல் உண்டாயிற்று. இராவணன் தீய நிமித்தங்களைக் கண்டான். ஒளியிழந்த ஞாயிற்றை ஊர்கோள் சூழ்ந்துகொண்டது (9722) என்பதால் அது பகற்போர் என்பது வெளிப்படுகிறது. 'நாள்மலர்ப் பூவின் மாலை'யில் (9723) புலால்நாற்றம் வீசியது என்னும் குறிப்பும், அது மூலமாத்தானை அழிந்த மறுநாள் நிகழ்ச்சி என்பதனைக் காட்டும். இராவணன் விடுத்த தாமதப்படை முதலான பல்வேறு படைகளைத் தக்க மாற்றுப்படைகளால் இராமன் தகைந்தான். இறுதியில் இராமன் எய்த அயன்படையால் அந்த முறை துறந்த இராவணன் உயிர் துறந்தான்.

இராமன், வீடணனிடம் இராவணனுக்கு இறுதிக்கடன் செய்யப் பணித்துத் தம்மைக் காண வந்துகொண்டிருந்த தேவர்களைக் காண அவர்கள்பால் சென்றான்.

''அவ்வகை அருளி வள்ளல்
அனைத்துஉல கங்க ளோடும்
எவ்வகை உள்ள தேவர்
யாவரும் இரைத்துப் பொங்கிக்
கவ்வையின் தீர்ந்தார் வந்து
வீழ்கின்றார் தம்மைக் காணச்
செவ்வையின் அவர்முன் சென்றான்
வீடணன் இதனைச் செய்தான்'' (9918)

இராவணன் மறைவுக்கு வீடணன் வருந்தினான். மண்டோதரி கணவன் உடலைக் கண்டு புலம்பித் துயரம் தாங்காமல் உயிர்விட்டாள்.

வீடணன் மாண்ட அரக்கர்கள் அனைவருக்கும் இறுதிக்கடன் செய்து இராமனை அடைந்தான்.

இராமன் ஆணைப்படி இலக்குவன், அனுமன் முதலிய வானரவீரர்களோடு சென்று வீடணனுக்குச் சுக்கிரீவன் முடிசூட்டினான். முடிசூட்டப்பட்ட வீடணன் இராமனைச் சந்தித்தான். வீடணனுக்கு முடிசூட்டும் இந்நிகழ்ச்சி ஒரு சில சுவடிகளில் காணப்படவில்லை என்பது கருதத்தக்கது. முன்பே அடைக்கலம் தந்த போது அவனுக்கு முடிசூட்டி இலங்கைக்கு அரசனாக இராமன் ஆக்கியுள்ளமையாலும் ஏனைய நிகழ்ச்சிகளின் ஓட்டத்திற்குத் தடையாக அமைந்துள்ளமை யாலும் இது மிகையாகத் தோன்றுகிறது.

அரக்கர்களுக்கு இறுதிக்கடன் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதில் பங்கேற்காமல் தேவர்களோடு இருந்த இராமன் சீதைக்குச் செய்தி சொல்லிவர அனுமனை விடுத்தான். வீடணனுக்கு முடிசூட்டும் நிகழ்ச்சி இடம்பெற்றதாகக் கொண்டால் அதன்பின் சீதையிடம் அனுமனை விடுத்தான் என்று அமையும். அனுமன் சீதையிடம் இராமன் வெற்றி பெற்ற செய்தியைச் சொல்ல, அவள் மகிழ்ச்சியால் ஒன்றும் உரைக்காமல் இருந்தாள். பின்னர் அவனை வாழ்த்தினாள். அவன் அரக்கியர்களைக் கொல்ல விழைந்தான். சீதை அது முறையற்ற செயல் என்று தடுத்தாள். அப்பொழுது இராமனால் சீதையை அழைத்துவருமாறு பணிக்கப்பட்ட வீடணன் அங்குத் தோன்றினான். அவன் சீதையை அலங்கரித்துக்கொண்டு வரச் சொன்னான். அவ்வாறே சீதை வர, அவளை இராமன் சீற்றத்தோடு ஏசினான். அவள் தீப்புகுந்து தன் தூய்மையை நிலைநாட்டினாள். அக்கினிதேவன் அவள் பெருமையை எடுத்துரைத்து, அவளை இராமன் அருகில் சேர்க்க அவனும் ஏற்றுக்கொண்டான்.

பின்னர்ப் பிரமனும் சிவனும் இராமனுடைய உண்மைநிலையினை அவனுக்கு உணர்த்தினர். சிவபெருமான் ஏவலால் தசரதன் வானிலிருந்து அங்குப் போந்து இராமனையும் சீதையையும் கண்டு சீதைக்குத் தேறுதல் உரைத்தான். இராமனுக்குக் கைகேயியும் பரதனும் தாயும் தம்பியும் ஆகும் வரம் தந்து துறக்கம் சென்றான். இவையனைத்தும் ஒருநாள் நிகழ்ச்சிகளாகும்.

வான்மீகத்தில் சதுர்த்தசியன்று களம்புகுந்த இராவணன் அன்றிரவு முழுதும் இராமனோடு போரிட்டான். இரவுப்பொழுதின் இறுதியில் தேரோட்டி மாதலி இராமனிடம் இராவணன்மீது பிரமாத்திரத்தை எய்யச் சொன்னான். இராமன் ஏவிய அந்தப்படை இராவணன் மார்பில் பாய்ந்து அவன் உயிரைக் கவர்ந்து இராமன் அம்பறாத் தூணிக்குள் வந்து சேர்ந்தது. இராவணன் வச்சிராயுதத்தால்

மாய்க்கப்பட்ட விருத்தாசுரன் போல மண்ணில் வீழ்ந்தான். இஃது அமாவாசை காலையில் நிகழ்ந்தது என்பதனை,

> *"அப்பொழுது சூரியனும் குறையாத ஒளிகொண்டு*
> *தோன்றினான் (ஸ்திரப்ரப: அபூவத் திவாகர: (யு.111:32)*

என்னும் பாடலும்,

மண்டோதரி புலம்பலில் வரும்

> *"இன்றுதான் பகலவன் கதிர்கள் அச்சமின்றி*
> *இலங்கைக்குள் புகுந்தன" (யு.144:193)*

என்னும் பாடற்பகுதியும் உறுதிசெய்கின்றன.

வீடணன் துயரம், மண்டோதரி புலம்பல், வீடணனுக்கு முடிசூட்டுதல், சீதை தீக்குளிப்பு, பிரமன் இராமனுக்கு அவனுடைய உண்மை இயல்பை வெளிப்படுத்துதல், தசரதன் வருகை ஆகியவை தொடர்ந்து அமைந்துள்ளன. இடையில் நாள் முடிந்தமைக்கான குறிப்பு ஏதுமில்லை. இராமன் அயோத்தி மீளுவதற்காகப் புட்பகவிமானத்தில் புறப்படுவது மட்டும் மற்றொரு நாளில் நடந்ததாகத் தெளிவாகத் தெரிகிறது. இரவு உறங்கி எழுந்த இராமனை வீடணன் சந்தித்துப் புட்பகவிமானத்தில் செல்லலாம் என்று தெரிவிக்க இராமன், அங்கிருந்து வீடணன், சுக்கிரீவன் உள்ளிட்டவர்களோடு புறப்பட்டுப் பரத்துவாசமுனிவன் தவக்குடிலை அடைந்தான் என்றும் அன்று வளர்பிறைப் பஞ்சமி என்றும் வான்மீகம் தெரிவிக்கிறது.

இராமாயண சார சங்கிரகம், ''அமாவாசை இரவு பிற்பாதியில் இராவணன் வதம், சைத்ர சுக்ல ப்ரதமையில் மண்டோதரி அழுகை, இராவண ஸம்ஸ்காரம் முதலியன. த்விதீயை விபீடண பட்டாபிஷேகம், திருதீயை ஸீதாசுத்தி, பிரம்ம ஸ்துதி, தேவர்கள் கூடினது, தசரதரைக் கண்டது, சதுர்த்தி வெகுமானம், அயோத்திக்குப் புறப்பட்டது, கிஷ்கிந்தைக்குச் சென்றது, பஞ்சமி பரத்வாஜாச்ரமம் சேர்ந்தது, அப்பொழுதே ஸ்ரீராமன் வரவை ஹனுமான் பரதனுக்கு அறிவித்தது'' என்று பகுத்துக் கூறுகிறது.

இப்பகுப்புக்குப் போதிய அடிப்படைகள் இல்லை. போர் முடிந்து பாடிவீட்டிற்குத் திரும்பியவுடனேயே இராமன் இலக்குவனிடம் வீடணனுக்கு முடிசூட்டுமாறு கட்டளையிட்டுள்ளான். அந்நிகழ்ச்சியும் எளிமையாகச் சிறிது நேரத்தில் நிகழ்ந்ததாகவே காட்டப்பட்டுள்ளது. கிட்கிந்தையில் விமானம் இறங்கித் தாரை முதலியோரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுள்ளதே தவிர அங்கு இரவு தங்கியதற்கான குறிப்பு ஏதுமில்லை. இராவணவதத்திற்குப் பின்னைய நிகழ்ச்சிகளான

மண்டோதரி புலம்பல் முதல் அயோத்திக்குப் புறப்படுவதற்கு முன்பு வரை உள்ள நிகழ்ச்சிகள் ஒரே நாளில் (அமாவாசையில்) நடந்தன என்றும், அதன்பின்னர்ச் சித்திரை மாத வளர்பிறைச் சதுர்த்திவரை அங்கேயே தங்கியிருந்து பஞ்சமியில் புறப்பட்டான் என்றும் கொள்வதே சிறப்பு. கம்பநாடர் இவ்வாறே அமைத்துள்ளார். சீதையின் பிரிவால் ஏங்கித் தவித்த இராமன் இராவண வதத்திற்குப் பின் உடனே அவளைக் கண்டான் என்பதே அவன் இயல்புக்குப் பொருத்தமாக இருக்கும்.

சீதை சிறையிருந்த கால அளவு

அனுமன் அசோகவனத்தில் சீதையைச் சந்தித்த போது அவள் தன்னை ஒரு திங்களுக்குள் சிறையிலிருந்து மீட்கவில்லை என்றால் தான் அதன்பின் உயிரைவிட்டுவிடப் போவதாகத் தெரிவித்தாள். இருநூல்களிலும் இதுபற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

''திங்கள் ஒன்றின்என் செய்தவம் தீர்ந்ததால்;
இங்கு வந்தில னேஎனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரைஅடி யேற்கும்தன்
செங்கை யால்கடன் செய்கென்று செப்புவாய்'' (5373)

வான்மீகத்தில் அனுமனிடம் பேசும் சீதை,

''ஓராண்டுகாலம் நிறைவுறாதவரையிலேயே
யான் உயிர்வாழ முடியும். ஆதலால் 'விரைந்து
செயலை முடித்திடுக' என்று அவர் (இராமர்)
சொல்லப்பட வேண்டியவர்''

''வானரனே, கொடிய இராவணனால் எனக்கு
விதிக்கப்பட்ட காலத்தில் (ஓராண்டில்) பத்தாவது
மாதம் நடந்துவருகிறது'' (சு.37:7,8)

என்று தெரிவித்துள்ளாள். மேலும் தான் ஒருமாதம் மட்டுமே இருக்கப் போவதாகவும், அதற்குள் தன்னை இராமன் சிறைமீட்க வேண்டும் என்றும் குறித்துள்ளாள்.

''தசரதன் மைந்தனே, சத்தியம் புகல்கின்றேன்;
ஒருமாதம் உயிரை வைத்திருப்பேன்; அதற்குமேல்
உயிர்வாழேன். தீய இராவணனால் சிறைவைக்கப்
பட்டிருக்கும் என்னை மீட்க அருள்புரிவாய்'' (சு.38:67,68)

இவ்வாறு சீதை ஒருமாதம் மட்டும் வாழ்வதாகச் சொல்வதற்குக் காரணம் அவளிடம் இராவணன் இரண்டு மாதங்களுக்குப் பின் அவளைக் கொன்றுவிடுவதாகத் தெரிவித்தமையே ஆகும், இதனை,

"ஈதுஉரைத்து-அழன்று பொங்கி,
எரிகதிர் வாளை நோக்கித்
'தீதுஉயிர்க்கு இழைக்கும் நாளும்
திங்கள்ஓர் இரண்டின் தேய்ந்தது;
ஆதலின் பின்னை நீயே
அறிந்தவாறு அறிதி' என்னா
போதுஅரிக் கண்ணி னாளை
அகத்துவைத்து உரப்பிப் போனான்" (5218)

என்று கம்பநாடரும்,

"பெண்மணியே, உனக்கு என்னால் விதிக்கப்பட்டதும் யான் காத்திருக்க வேண்டுவதுமான காலக்கெடு இரு மாதங்களே ஆகும். ஆகையால் என்படுக்கையில் ஏறுவாய். இருமாதங்களுக்குமேல் என்னைக் கணவனாக ஏற்காவிட்டால், உன்னை என் காலைஉணவுக்காகச் சமையற்காரர்கள் துண்டுதுண்டாக வெட்டுவார்கள்"(சு.22:9)

என்று வான்மீகிமுனிவரும் குறித்துள்ளனர்.

சீதை தெரிவித்ததற்கு ஏற்ப, அவள் ஒருமாத கால எல்லைக்குள் இராமனால் மீட்கப்பட்டாள். கம்பராமாயணம் முப்பதாம்நாள் பௌர்ணமியில் சிறைமீட்கப்பட்டாள் என்றும், வான்மீகம் பதினைந்தாம் நாள் அமாவாசையில் சிறைமீட்கப்பட்டாள் என்றும் கூறுகின்றன.

கம்பராமாயணப்படி, சீதை சித்திரை முழுநிலவுக்கு மறுநாள் (தேய்பிறைப்பிரதமை) சிறையெடுக்கப்பட்டாள். அனுமன் அவளை மாசி முழுநிலவுநாளன்று சந்தித்தபோது அவளுக்குப் பத்துமாதச் சிறைவாசம் முடிந்தது. அவள் பங்குனி முழுநிலவு நாளன்று பதினொரு மாதச் சிறை வாழ்க்கைக்குப்பின் விடுவிக்கப்பட்டாள். வான்மீகத்தின்படி, வைகாசி மாத அமாவாசைக்கு மறுநாள் (வளர்பிறைப் பிரதமை) ஆனி முதல்நாள் சிறையெடுக்கப்பட்டாள். பங்குனி முழுநிலவுக்கு இருநாள் முன்பு (வளர்பிறைத் திரயோதசி) தன்னைச் சந்தித்த அனுமனிடம் தான் சிறைப்பட்டுப் பத்துமாதம் நடைபெறுவதாகச் சொல்வதால் பங்குனிப் பௌர்ணமியோடு ஒன்பதரை மாதம் முடிந்தது என்பது தேற்றம். அதிலிருந்து பதினைந்தாம்நாள் அவள் பங்குனி நிறையிருள் நாளன்று (அமாவாசை) பத்துமாதச் சிறையிருப்புக்குப்பின் விடுவிக்கப்பட்டாள்.

அயோத்தி திரும்புதல்

காப்பியக்கவிஞர் இருவரும் சந்திர ஆண்டுக் கணக்கிலேயே (Lunar Year) காலஅளவினைக் குறித்துள்ளனர். திதியைக் குறித்தலே இதற்குச் சான்றாக அமைந்துள்ளது. பிரித்தானிகா கலைக்களஞ்சியம்,

''வங்காளம், ஒரிசா, தமிழ்நாடு, மலையாளநாடு ஆகியவற்றில் சமூக நடவடிக்கைகளுக்குச் சூரிய ஆண்டு (Solar Year) பயன்படுத்தப்படுகிறது. மற்ற இடங்களில் எல்லாம் சந்திர ஆண்டு (Lunar Year) பின்பற்றப்படுகிறது. ஆனால் எல்லா இடங்களிலும் சமயச்சடங்குகளும் விழாக்களும் சந்திரஆண்டினையொட்டியே நிகழ்த்தப்படுகின்றன. திருமணத்திற்கு நல்லவேளை, பயணத்திற்கு உகந்த நாள் போன்ற சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளும் சந்திர ஆண்டினை யொட்டியே கணிக்கப்படுகின்றன. சூரிய ஆண்டுக்கணக்கில் அமைந்த பஞ்சாங்கங்கள்கூடச் சந்திர ஆண்டு பற்றிய தகவல்களைத் தருகின்றன'' என்று தெரிவிக்கும் கருத்து மனங்கொள்ளத்தக்கது. (ப.569)

சந்திரமானப்படி ஒரு மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் அமாவாசை முடிய இருக்கும் நாள்கள் ஆகும். ஒரு மாதம் 29.5305 நாள்களையும். ஓர் ஆண்டு 12 பௌர்ணமி அமாவாசைகளைக் கொண்டவை. இதன்படி பதினான்கு ஆண்டுகளுக்கு 168 பௌர்ணமி அமாவாசைகள் ஆகும்.

சீதை சிறைமீட்கப்பட்ட போதிலும் கானக வாழ்க்கை முடியவில்லை. சில நாள்கள் மீதம் இருந்தன. வான்மீகிமுனிவர், இராமன் தன்பிறந்த நட்சத்திரமான புனர்பூசத்திற்கு மறுநட்சத்திரமான பூசத்தோடு கூடிய சித்திரை வளர்பிறைப் பஞ்சமியில் கானகம் புகுந்து பதினான்கு ஆண்டுகள் கழித்துத் தன்பிறந்த நட்சத்திரமான புனர்பூசத்தோடு கூடிய சித்திரை வளர்பிறைப் பஞ்சமியில் (யு.129:56) இலங்கையிலிருந்து புறப்பட்டான் என்கிறார். இதனால் வான்மீகத்தின்படி இராவணவதத்திற்குப்பின் ஐந்தாம் நாளும் கம்பராமாயணத்தின்படி முப்பத்தைந்தாம் நாளும் இராமன் இலங்கையினின்று புறப்பட்டான் என்பது தெளிவாகிறது. கம்பநாடர், இராமன் சித்திரைத் தேய்பிறைப் பஞ்சமியில் கானகம் புறப்பட்டான் என்று காட்டியுள்ளதற்கு ஏற்ப வனவாசம் முடிந்து சித்திரைத் தேய்பிறைப் பஞ்சமி அன்று புறப்பட்டான் என்கிறார். இருவரும் அன்றே பரத்துவாசமுனிவன் தவச்சாலையை அடைந்தான் என்றும், மறுநாள் பரதனைச் சந்தித்து அன்றே அயோத்தி அடைந்தான் என்றும், அன்றே வசிட்டன் இராமனிடம் மறுநாள் முடிசூடுவதற்குத் தக்க நாள் என்றான் என்றும், அவ்வாறே சப்தமியில் முடிசூட்டுவிழா நடந்தது என்றும் குறித்துள்ளனர். வான்மீகத்தின்படி முடிசூட்டுவிழா வளர்பிறைச் சப்தமியிலும், கம்பராமாயணத்தின்படி தேய்பிறைச் சப்தமியிலும் நடந்ததாகும். இராவண வதம் நிகழ்ந்த அன்றே வீடணன் முடிசூட்டுவிழா, சீதை தீக்குளித்தல் அனைத்தும் நிகழ்ந்து முடிந்தன. அதன் பின்னர் முப்பத்தைந்தாம் நாள் இராமன் இலங்கையிலிருந்து

புறப்பட்டான். இந்தக் கால இடைவெளியைக் கம்பநாடர் அழகுறக் காட்டியுள்ளார். இராவணவதத்திற்குப் பின் இராமனைக் கண்ட தேவர்கள் மீண்டும் தேய்பிறைப் பஞ்சமியன்று வந்து கண்டு வனவாசம் முடிந்ததனைத் தெரிவித்தனர்.

''கோட்டு வார்சிலைக் குரிசிலை அமரர்தம் குழாங்கள்
மீட்டும் நோக்குறா'' (10084)

என்று கம்பநாடர் குறித்தல் காணலாம். 'மீட்டும்' என்னும் சொல்லால் அஃது இரண்டாம் முறை நிகழ்ந்த சந்திப்பு என்பது உணர்த்தப்படுகிறது. அன்று அமரர்கள் தந்த வரங்களால் போரில் இறந்த குரங்குகள் எல்லாம் உயிர்பெற்று எழுமாறும், அவற்றிற்குத் தேவையான காய்கறிகள் நிறையுமாறும் இராமன் செய்தான். மூன்றாம் நாள் போரில் அனுமன் கொண்டு வந்த மருத்துமலையால் மாண்ட குரங்குகள் எல்லாம் உயிர்பெற்று எழுந்தன என்று கூறப்பட்டுள்ளதால் இங்கு உயிர்பெற்று எழுந்த குரங்குகள் அதன் பின்னர் நடந்த போரில் வீழ்ந்த குரங்குகள் என்று கொள்ள வேண்டும்.

கம்பராமாயணக் காலக்குறிப்புப் பாடல்கள்

கம்பராமாயணத்தில் மீட்சிப்படலத்தில் இராவணன் வனவாச முடிவுபற்றித் தேவர்கள் கூறுவனவாக இருபாடல்கள் உள்ளன:

''இடைஉ வாவினில் சுவேலம்வந்து இறுத்துஎயில் இலங்கைப்
புடைஉ வாவுறும் சேனையை வளைப்புறப் போக்கி
படைஅ வாவுறும் அரக்கர்தம் குலம்முற்றும் படுத்துக்
கடைஉ வாவினில் இராவணன் தன்னையும் கட்டு'' (10089)

''வஞ்சகர் இல்லைஇவ் அண்டத்தின் எனும்படி மடித்த
கஞ்ச நாள்மலர்க் கையினாய் அன்னைசொல் கடவா
அஞ்சொடு அஞ்சுநான்கு என்றுஎணும் ஆண்டுபோய் முடிந்த
பஞ்ச மிப்பெயர் படைத்துள திதிஇன்று பயந்த'' (10090)

இப்பாடல்களுக்கு, ''கிருஷ்ணபட்சத்து இடையில் (அஷ்டமி திதியில்) இலங்கா நகரமுள்ள இடமான சுவேலமலையில் வந்து தங்கி, (அன்றைக்கே) மதில்கள் சூழ்ந்த இலங்கையின் சுற்றுப்பக்கத்தில் வானர சேனைகளை விரும்பி முற்றுகை செய்யும்படி செலுத்தி, ஆயுதங்களை விரும்புகின்ற (அல்லது) போர் செய்தலில் உற்சாகமுள்ள இராக்கதர்களுடைய வமிசமுழுவதையும் கொன்றொழித்து, (அந்தக் கிருஷ்ண பக்ஷத்தின்) கடைசி நாளில் (அமாவாசையில்) அரக்கர் தலைவனான இராவணனையும் கொன்று, இவ்வுலகில் இனி வஞ்சகர்களான அரக்கர்கள் இல்லையென்று சொல்லும்படி யொழித்த அன்று பூத்த தாமரை மலர் போன்ற கைகளையுடையவனே! நீ தாயான

கைகேயியின் வார்த்தையை மறுக்காமல், 'எப்பொழுது பதினான்கு வருஷமும் முடியும்' என்று நினைக்கின்ற வருஷங்கள் சென்று கழித்துவிட்டன; இன்றைத் தினமானது, பஞ்சமியென்னும் பெயர்கொண்ட திதியை உண்டாக்கிற்று'' என்பது அறிஞர் வை.மு.கோ. தந்துள்ள பொழிப்புரை. இச்செய்திகளையே ஓரிரு சொல் மாற்றங்களோடு டாக்டர் உ.வே.சா. நூல் நிலையப்பதிப்பும் குறித்துள்ளது.

இப்பாடல்களுக்கு இவ்வாறு பொருள் காண்பதற்கு அவர்களுக்குத் துணையாய் அமைந்தது இராமாயண சாரசங்கிரகம் என்னும் வடநூலாகும். இதனை அவர்கள் தங்கள் விளக்கவுரையில் குறித்துள்ளனர். இவ்விளக்கம் வான்மீகத்திற்குப் பொருந்துமேயன்றிக் கம்பராமாயணத்திற்கு முற்றும் பொருந்தாது; மாறுபாடாகவும் அமைகிறது.

வான்மீகத்தில், வளர்பிறைச் சதுர்த்தசியன்று அனுமன் சீதையைச் சந்தித்தான்; பௌர்ணமியன்று கிட்கிந்தையினின்றும் புறப்பட்ட வானரப்படைகள் மறுநாள் பிரதமையன்று கடற்கரையை அடைந்தன; அன்றுமுதல் மூன்று நாள்கள் (பிரதமை, துவிதீயை, திருதியை) இராமன் புல்லணைக் கிடத்தலும் அதன்பின் ஐந்துநாள்கள் (சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி) அணைகட்டுதலும் நிகழ்ந்தன; அன்றே (அஷ்டமி) அணையைக் கடந்து இராமன் முதலியோர் இலங்கையை அடைந்தனர்; நவமிமுதல் ஏழுநாள்கள் போர் நிகழ்ந்து, ஏழாம்நாள் அமாவாசையன்று இராமனால் இராவணன் கொல்லப்பட்டான். வான்மீகம் அனுமன் சீதையைச் சந்தித்தது முதல் இராவணவதம்வரை நடந்த நிகழ்ச்சிகள் பதினாறு நாள்களில் நடந்தனவாகக் காட்டியுள்ளது.

ஆனால், கம்பராமாயணத்தில், பௌர்ணமியன்று அனுமன் சீதையைச் சந்தித்தான்; பிரதமையன்று படைகள் புறப்பட்டுப் பன்னிரண்டாம் நாள் கடற்கரையை அடைந்தன; பதிமூன்றாம்நாள் வீடணன் சரணாகதி அடைந்தான்; பதினான்காம் நாள் முதல் ஏழுநாள்கள் புல்லணையில் கிடந்தான். அஃதாவது சதுர்த்தசி, அமாவாசை, பிரதமை, துவிதீயை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி ஆகிய நாள்கள் ஆகும்; அடுத்த மூன்று நாள்களில் (சஷ்டி, சப்தமி, அஷ்டமி) அணை கட்டப்பட்டது; மறுநாள் நவமியன்று வளர்பிறை அஷ்டமி எச்சத்தில் படைகள் கடல் கடந்து சுவேலமலையில் தங்கின; தசமியில் இராவணன் மகுடபங்கம் நிகழ்ந்தது; ஏகாதசியில் போர் தொடங்கியது; அன்றுமுதல் ஐந்து நாள் போர் நடந்து பதினைந்தாம் நாள் பௌர்ணமியன்று இராவணவதம் நிகழ்ந்தது. கம்பராமாயணம்

அனுமன் சீதையைச் சந்தித்தது முதல் இராவணவதம் வரையிலான நிகழ்ச்சிகள் முப்பது நாள்களில் நடந்தனவாக விரித்துக் கூறியுள்ளது.

எனவே, இப்பாடல்களுக்கு, ''வளர்பிறைப்பக்கத்து இடையில் (அட்டமிதிதியில்) இலங்கை நகர் உள்ள சுவேலமலையில் வந்து தங்கிப் பின்பு மதில்கள் சூழ்ந்த இலங்கையின் பக்கங்களை வானரப்படைகள் சூழ்ந்து நிற்கும்படி அணிவகுத்து, போரினை விரும்பும் அரக்கர்களின் குலத்தை முற்றும் அழித்துக் கடைசிநாளான பௌர்ணமியில் அரக்கர் தலைவனான இராவணனையும் கொன்று, இவ்வுலகில் இனி வஞ்சக அரக்கர்கள் இல்லையென்னும்படி ஒழித்த, அன்று அலர்ந்த தாமரை மலர் போன்ற கைகளையுடையவனே, நீ தாயான கைகேயியின் சொற்களை மறுக்காமல், 'எப்பொழுது பதினான்கு ஆண்டுகளும் முடியும்' என்று எண்ணிக்கொண்டிருந்த ஆண்டுகள் சென்று கழிந்தன; இன்றைய நாள் சித்திரைத் தேய்பிறைப் பஞ்சமி என்னும் பெயர்கொண்ட திதியை உண்டாக்கிற்று'' என்று பொருள்கொள்வதே தகும்.

கம்பநாடர் இராவணவதம் கடையுவாவில் நிகழ்ந்தது என்றே குறித்துள்ளார். உரையாசிரியர்களே அதற்கு அமாவாசை என்று பொருள்கொண்டுள்ளனர். 'உவா' என்பது 'முழுமையுற்ற நாள்' என்னும் பொருள்தரும் சொல்லாகும். 'உவவுற்ற திங்கள் முகத்தாளை' (சிலம்பு, கானல்வரி, 52) என்னுமிடத்தில் இப்பொருளில் பயிலுதல் காணலாம். கடையுவா என்பது முழுமையுற்ற கடைசி நாள் (உவாவின் கடை) என்று பொருள்படும். வளர்பிறையாயின் ஒளி முழுமையுற்ற கடைசிநாள் பௌர்ணமி; தேய்பிறையாயின் இருள் முழுமையுற்ற கடைசி நாள் அமாவாசை. ஆதலின் அச்சொல் பௌர்ணமியையும் அமாவாசையையும் குறிக்கும் பொதுச்சொல் ஆகும்.

''முந்நீர்,
ஒல்கிளர்ந்து உவாஉற் றென்ன
ஒலிநகர் கிளர்ந்தது அன்றே'' (702)

என்னுமிடத்தில் 'உவா' என்னும் சொல் கடல் ஆரவாரத்தோடு இருக்கும் பௌர்ணமி, அமாவாசை இரண்டினையும் குறிக்கும்வகையில் அமைந்துள்ளது. ஏனெனில், அவ்விருநாள்களிலும் கடல் கிளர்ந்து ஒலிப்பது இயற்கை. 'கலையுவா மதியே கறியாக' (2085) என்னும் பாட்டிற்கு, ''உவா – அமாவாசை பௌர்ணமி இரண்டிற்கும் உரியது. மதி எனத் தொடர்ந்து வந்ததால் அது பௌர்ணமியைச் சுட்டிற்று'' என்று கோவைக் கம்பன் அறநிலைப் பதிப்பில் வரையப்பட்டுள்ள குறிப்புரையும், ''நிறைநாள் என்னும் பொருளுடைய உவா என்னும் சொல் மதிநிறைவாகிய பூரணை

நாளையும் இருள்நிறைவாகிய அமாவாசையையும் குறித்து வழங்குவது. அச்சொல் பதினைந்துநாள் கொண்ட பக்கம் என்ற பொருளில் இங்கு ஆளப்பெற்றது'' என்று அண்ணாமலை பல்கலைக்கழகப் பதிப்பில் காணப்படும் குறிப்புரையும் (யுத்த காண்டம் ஆறாம் பகுதி, ப.496) இதற்குப் போதிய சான்றுகளாகும். இடையுவா என்பதும் எட்டாம்நாள் (உவாவின் இடைப்பகுதி) என்று பொருள் படுமேயன்றித் தேய்பிறையின் எட்டாம் நாள் என்று மட்டும் பொருள் படாது; அது வளர்பிறை எட்டாம் நாள் என்றும் பொருள் தரும்.

இதுகாறும் கண்டவற்றால் கம்பநாடரின் காலக்குறிப்பினைச் சுட்டும் பாடலில் 'இடையுவா' என்பது வளர்பிறை அட்டமியையும், கடையுவா என்பது பௌர்ணமியையும் சுட்டுவதனைத் தெளிவாக உணரலாம்.

கம்பநாடர் நிகழ்ச்சிகளை மனத்தில் காட்சிப்படுத்திக்கொண்டு, அவை நிகழ்ந்த காலம் இடம் ஆகியவற்றோடு கற்பார் நெஞ்சில் அப்படியே இறக்கிவைக்க மேற்கொண்டுள்ள கைவண்ணம் வியப்பினையும் மகிழ்ச்சியினையும் ஒருசேர விளைவிக்கிறது; அவர்தம் வானவியல் அறிவினையும், அவர் இயற்கையைக் கூர்ந்து கண்டுணர்ந்த பாங்கினையும் உணர்த்துகிறது. புதிய வெளிச்சத்தில் கம்பராமாயணத்தில் புதைந்து கிடைக்கும் கலையழகுகள் துலங்கும்போது, நம்மையறியாமல் வாய் 'கல்வியிற் பெரியவர் கம்பநாடர்' என்று முணுமுணுக்கிறது.

7. கால நிரல்கள்

1. இறுதியாண்டு வனவாசம்

(வான்மீகத்தின்படி)

மாதம்	முதல்	வரை	நாள்	
சித்திரை	வளர்பிறை 5	அமாவாசை	26	சீதை இராமனோடு பஞ்சவடியில் இருந்த நாள்கள் 56
வைகாசி	பிரதமை	அமாவாசை	30	
ஆனி	பிரதமை	அமாவாசை	30	சீதை சிறையிருந்த காலம் (பத்துமாதம்)
ஆடி	பிரதமை	அமாவாசை	30	
ஆவணி	பிரதமை	அமாவாசை	30	
புரட்டாசி	பிரதமை	அமாவாசை	30	
ஐப்பசி	பிரதமை	அமாவாசை	30	
கர்த்திகை	பிரதமை	அமாவாசை	30	
மார்கழி	பிரதமை	அமாவாசை	30	
தை	பிரதமை	அமாவாசை	30	
மாசி	பிரதமை	அமாவாசை	30	
பங்குனி	பிரதமை	அமாவாசை	30	
சித்திரை	பிரதமை	வளர்பிறை4	4	அயோத்திக்குப் புறப்படும் வரை இருந்த நாள்கள்

2. இறுதியாண்டு வனவாசம் (கம்பராமாயணப்படி)

மாதம்	முதல்	வரை	நாள்கள்
சித்திரை	தேய்பிறை 5	அமாவாசை	10
வைகாசி	பிரதமை	அமாவாசை	30
ஆனி	பிரதமை	அமாவாசை	30
ஆடி	பிரதமை	அமாவாசை	30
ஆவணி	பிரதமை	அமாவாசை	30

புரட்டாசி	பிரதமை	அமாவாசை	30
ஐப்பசி	பிரதமை	அமாவாசை	30
கார்த்திகை	பிரதமை	அமாவாசை	30
மார்கழி	பிரதமை	அமாவாசை	30
தை	பிரதமை	அமாவாசை	30
மாசி	பிரதமை	அமாவாசை	30
பங்குனி	பிரதமை	அமாவாசை	30
சித்திரை	பிரதமை	தேய்பிறை 5	20

3. சீதை சிறையிருந்த காலம் (கம்பராமாயணப்படி)
(11 மாதம்)

சித்திரை பௌர்ணமியை அடுத்த பிரதமை முதல் அமாவாசை வரை	15
வைகாசி வளர்பிறைப் பிரதமை முதல் தை அமாவாசை வரை (9 x 30)	270
மாசி வளர்பிறைப் பிரதமை முதல் பௌர்ணமி வரை	15
மாசிப்பௌர்ணமி முதல் பங்குனிப்பௌர்ணமி வரை	30
	330

சீதை இறுதியாண்டு வனவாசம் தொடங்குவதற்கு நான்கு நாள் முன் சித்திரைத் தேய்பிறைப் பிரதமையில் சிறைப்பட்டாள். சிறைமீட்கப்பட்டபின் பங்குனிப் பௌர்ணமியிலிருந்து சித்திரைப் பௌர்ணமி வரை 30 நாள்கள் + இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன் தேய்பிறை நான்காம் நாள் வரை 4 நாள்கள்; மொத்தம் 34 நாள்கள். இந்த 34 நாள்கள் இராவணவதத்திற்குப்பின் மூவரும் இலங்கையில் தங்கியிருந்த நாள்களாகும்.

4. இராமன் கிட்கிந்தைக்குச் சென்று தங்கிய காலம்
(கம்பராமாயணப்படி)

	ஆ	மா	நா
1. சீதையைத் தேடாமல் தண்டகவனத்தில் இருந்த காலம்	0	1	14
2. கிட்கிந்தையை அடைந்து வாலியைக் கொன்றது வரை	0	0	6
3. கிட்கிந்தையில் மாலியவானில் தங்கியது	0	8	10
மொத்தம் =	0	10	0

5. வனவாசக் காலப்பகுப்பு

(இராமன் வனவாச வாழ்க்கை - கம்பராமாயணபடி)

	ஆ	மா	நா
1. அயோத்தி–சித்திரகூடப் பயணம்	0	0	4
2. சித்திரகூடத்தில் தங்கியது	0	0	26
3. சித்திரகூடத்திலிருந்து தண்டகாரணியம் அடைதல்	0	0	2
4. தண்டகாரணியத்தில் தங்குதல்	10	0	0
5. பஞ்சவடியில் தங்கியது	2	10	24

தண்டகாரணியத்தில் தங்கியது வரை	10	1	2
சீதையின் சிறைவாசம்	0	11	0
சிறைமீட்புக்குப்பின் இலங்கை வாசம்	0	1	4
மொத்தம் =	11	1	6

(14 0 0 – 11 1 6 = 2 10 24)

6. சீதையைத் தேடாமல் இருந்தது	0	1	14
7. சீதையைத் தேடியது	0	0	6
8. மாலியவானில் தங்கியது	0	8	10

பஞ்சவடியில் தங்கியது வரை	12	11	26
சீதையைத் தேடாமல் இருந்தது	0	1	14
தேடிக் கிட்கிந்தை அடைந்தது	0	0	6
போரிட்டது	0	1	0
பின் இலங்கையில் இருந்தது	0	1	4
மொத்தம்	13	3	20

(14 0 0 – 13 3 20 = 0 8 10)

9. இலங்கையில் போரிட்டது	0	1	0
10. பின் இலங்கையில் தங்கியது	0	1	4
மொத்தம்	14	0	0

கம்பநாடர் - புதிய வெளிச்சம்

முனைவர் தெ. ஞானசுந்தரம்

இந்நூல் கம்பராமாயணத்தில் உள்ள காலக்குறிப்புகளை ஆராய்ந்து எந்த எந்த நிகழ்ச்சி எந்த எந்தக் காலத்தில் நடந்தது என்பதனை முதன்முதலாகத் தெளிவாக்குகிறது. இதில் வான்மீகத்தின் காலநிரலினும் கம்பநாடரின் காலநிரல் வேறானது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. விசுவாமித்திரனோடு இராமலக்குவர் வேள்விகாக்கப் புறப்பட்ட நாள்; திருமணத்தின்போது இராமன், சீதை ஆகியோர் வயது; யோசனை, காதம் என்னும் அளவுகளின் வரையறை; இராமன் வனவாசம் புறப்பட்ட காலம்; தசரதன் மறைந்த நாள்; காட்டில் வெவ்வேறு இடங்களில் மூவரும் தங்கியிருந்த காலம்; சீதை சிறையிருந்த மாதங்கள்; இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பின் இராமன் முயற்சியின்றிக் கிடந்த நாள்கள்; இராமலக்குவர் கிட்கிந்தையை அடைந்த காலம்; அனுமன் சீதையைச் சந்தித்த நாள்; போர் நடந்த நாள்கள்; சீதை சிறை மீட்கப்பட்ட நாள் அமாவாசையா,பௌர்ணமியா? இத்தகைய செய்திகள் கதிரவன், நிலவு இவற்றின் இயக்கம் பற்றிய கம்பநாடரின் புனைந்துரைகளைக்கொண்டு வரையறுத்துக் கூறப்படுகின்றன. கம்பராமாயணத்தில். இராவணவதம் வான்மீகத்தில் உள்ளது போல அமாவாசையில் நிகழ்ந்தாகக் காட்டப்படாமல் பௌர்ணமியில் நிகழ்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது என்பது இந்நூல் காட்டும் அரிய முடிவுகளில் தலைமையானதாகும். பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ச்சிகளை அவை நிகழ்ந்த காலக்குறிப்புகளோடு செம்மையாக அமைத்த கம்பநாடரின் மேதைமையை விளக்கிட்டுக்காட்டும் இந்நூல் கம்பராமாயண அன்பர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் புதிய வெளிச்சத்தில் கம்பராமாயணத்தைக் காண உதவும் என்பது உறுதி.

விலை ரூ. 60/-

விற்பனை உரிமை

தாயம்மை பதிப்பகம்